## அர்ப்பணம்...

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' வானொலி மற்றும் தொலைக்காட்சியில் வெளிவந்த தேவ செய்திகளை ஐந்தாவது புத்தகமாக வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். இப்படிப்பட்ட புத்தகங்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தின்பணிக்குத் தேவை என்பதை முன்னமே அறிந்த நம் தேவனாகிய கர்த்தர் J.C.Choate அவர்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தார். இவர் உலகமுழுவதும் உன்னதரின் பணியை தன் மனைவி Betty அவர்களோடு சேர்ந்து செய்துகொண்டுவந்தபோது World Evangelism பணியில் எங்களையும் தேவன் இணைத்தார். இது கர்த்தருடைய தீர்மானம் என்று அதை நாங்கள் ஏற்று அன்று முதல் தொடர்ந்து பணியாற்றிவருகிறோம்.

J.C.Choate அவர்கள் தேவனாகிய கர்த்தர் ஏற்படுத்தியுள்ள இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திருக்கிறார். அவர் எமது அலுவலகத்திற்கு வந்த சில மணி நேரங்கள் எங்களோடு இருந்ததின் நினைவாக இப்புத்தகத்தை அவருடைய புகைப்படத்துடன் வெளியிடுவதில் சந்தோஷமடைகிறோம். இவர் அநேக புத்தகங்களை எழுதிய ஆசான், உலகளாவிய ஊழியத்தில் அநேகரால் பாராட்டப்பட்டவர், ஒரு சிறப்பான எழுத்தாளர். அவரால் உருவாக்கப்பட்ட பல எழுத்தாளர்களில் நானும் ஒரு எழுத்தாளன். இப்படி பல எழுத்தார்களை உருவாக்கிய World Evangelism பணிக்கு எங்கள் நன்றி.

இப்புத்தகத்திற்கு ஒய்வு வேண்டாம். உலக அளவில் உள்ள கிறிஸ்தவ நண்பர்கள் பயன்பெறும் வகையில் இப்புத்தகத்தை கொடுத்து உதவிடுங்கள் மேலும் பிரதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

ஆண்டவரின் பணியில்,
B.Arjunan & Glory

**Order From**

World Literature Publications
P.O.Box.5, Batlagundu -624 202, South India.
E-mail:arjunanglory@gmail.com
Our Phone:04543 263278 Mobile :9443558041

Sharon Print System, Madurai -2 Phone 99439-33377


ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள் 2010

கிறிஸ்துவின் சபையார் வழங்கும்

# கிறிஸ்துவின் வசனம்

ரேடியோ மற்றும் டெலிவிஷன்
தேவச் செய்திகள்

2010



செய்தியாளர்
B.அர்ஜுனன்

**Published by**
The Word of Christ

Vol.5

# THE WORD OF CHRIST

God's Message of Radio & Television is
Presented by
Church of Christ

**2010**

Preacher
**B.ARJUNAN**

Published by
**THE WORD OF CHRIST**

**Copyright: 2019**
**The Word of Christ Publications**
**First Printing, Tamilnadu - 2019**
**This Printing - 1000 Copies**



# செய்தியாளரைப் பற்றி...!

பல அனுபவங்களினூடே, இருபத்தைந்து ஆண்டுகளாக அர்ஜூனன் மற்றும் குளோரி இவர்களுடன் ஊழியஞ்செய்யத் துவக்கிய நாளிலிருந்து, மிகவும் அர்ப்பணிப்புடன் கணவன் – மனைவியாக இணைந்து பணியாற்றும் இவர்களுக்காக நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர் களாகத் தொடர்ந்து இருந்து வருகிறோம்.

நாங்கள், தனிப்பட்ட முறையில், பெருமளவு எண்ணிக்கையிலான மக்களைச் சென்றடைந்து விரும்பிய பலனை வெற்றிகரமாக உண்டாக்குகிற பத்திரிக்கைகள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நம்பிக்கை கொள்கிறோம். அர்ஜூனன் குளோரியும் கூட இதைச் செய்கின்றனர்.

இவர்கள் (தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்) மாத இதழைப் பதிப்பிற்கு ஆயத்தம் செய்து, அச்சிட்டு வெளியீடு செய்வதோடு, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டும், தமிழ்நாடு முழுவதும் மிகையளவாய் பயணம் மேற்கொண்டு சபைகளையும், பின்தொடர் பணிகளில் தனி நபர்களையும் சந்தித்து, தொலைக்காட்சி தகவல் தொகுப்பு மற்றும் சுவிசேஷக் கூட்டங்களினால் கிடைக்கும் தொடர்புகள் மூலம் நற்பலனை உருவாக்கி உள்ளனர்.

இவர்கள் ஒரு குழுவாக இணைந்து பணியாற்றுகின்ற இந்த இருபத்தைந்து வருடங்களில் எண்ணற்ற ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்வதிலும், ராஜ்யத்திற்கடுத்தவைகளைப் பரப்புவதிலும் கருவியாக இருந்து வருகின்றனர்.

தேவன் தாமே இறைப்பணியில் அதிகமதிகமான வருடங்கள் இவர்களோடிருந்து இவர்களை ஆசீர்வதிப்பாராக!

**பெட்டி பர்ட்டன் சோட்**

**Betty Burton Choate**
**24th July 2019**

# பொருளடக்கம்


1. சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள் - Love the Truth and Peace
2. அவிசுவாசம் - Unbelief
3. ஓய்வுநாள் - The Sabbath Day
4. பொறுமையோடே ஓடக்கடவோம் - Let us Run With Endurance
5. யாரை சேவிப்பீர்கள்? - Whom Will You Serve?
6. கர்த்தர் நம்மோடிருக்க நாம் செய்யவேண்டுவதென்ன? - What Should We do to the Lord be with us?
7. பரிசேயன் வீட்டில் கர்த்தர் - The Lord Was In Pharisee`s House
8. பவுல் கர்த்தரை சேவித்த விதம் - The Way Paul Served the Lord
9. நாம் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? - How Often We Forgive?
10. கண்விழித்திரு - Open Your Eyes
11. இயேசுவின் சீஷர்கள் எப்படியிருக்கவேண்டும்? - How Should Be The Disciples of Jesus?
12. பிரதான கற்பனை - The Great Commandment
13. கடினமுள்ள இருதயம் - The Hardened Heart
14. உண்மையாயிரு - Be Faithful
15. ஜாக்கிரதையாயிரு - Be Diligent
16. நம்பிக்கையாயிரு - Be Confident
17. மனத்தெளிவுள்ளவனாயிரு - Be Watchful
18. உன் விசுவாசம் பெரியது - Your Faith Is Great
19. இடறல் - Offense
20. ஆகானின் பாவம் - Sin of Achan
21. ஆத்தும ரட்சிப்பு - Salvation of Souls
22. கடிந்துகொள் - Rebuke
23. ஒரே இருதயமும் ஒரே மனமும் - One Heart and One Soul
24. கடைசி நாட்களில்... - In The Last Days...
25. சிலுவையைப் பற்றிய உபதேசம் -The Preaching of the Cross
26. ஒபதியா - Obadiah

27. பாவங்களை மறைக்கிறவன் - He That Covers His Sins
28. கிறிஸ்துவினிடத்தில்... - In Christ...
29. சிலுவையில் இயேசு ஆறு மணிநேரம் - Jesus Is On The Cross For Six Hours
30. என் நாமத்தினிமித்தம்... - For My Name's Sake
31. நியாயாதிபதி - The Judge
32. வேறொரு நாமம் இல்லை - There Is No Other Name
33. அவருடைய நாமத்திற்காக... - For His Name's Sake...
34. அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம்- An Evil Heart of Unbelief
35. மேன்மைபாராட்டுதல் - Commend
36. தேவனுடைய சந்ததி - Offspring of God
37. எங்களுடைய போராயுதங்கள் - The Weapons of Our Warfare
38. உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள் - Examine Yourselves
39. ஊக்கமான ஜெபம் - Constant Prayer
40. வலது மற்றும் இடது - Right & Left
41. ஐசுவரியவான்கள் - Rich Men
42. சாமுவேல் - Samuel
43. எங்களுக்கு என்ன கிடைக்கும்? - What Shall We Have?
44. சகல அதிகாரம் - All Authority
45. தேவனுடைய ராஜ்யம் - The Kingdom of Heaven
46. ஒரு கிறிஸ்தவன் எப்படியிருக்கவேண்டும்? - How Should Be A Christian?
47. கள்வனின் அறிக்கை - Confess of Thief
48. இச்சையடக்கம் - Self - Control
49. ஞானம் மற்றும் புத்தி - Wisdom and Understanding
50. கிறிஸ்துவுக்குள் சுதந்திரம் - Freedom In Christ
51. மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? - What Will A Man Give In Exchange For His Soul?
52. சரீரம் - Body




## 1. சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள்

## Love the Truth and Peace

**உ**ங்கள் யாவருக்கும் சமாதானத்தின் ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள் என யூத மக்களுக்கு சேனைகளின் கர்த்தர் சொல்லியிருந்தார் என்று சகரியா 8:19-ல் வாசிக்கிறோம். இன்று சத்தியத்தையும் சமாதானத்தையும் தேடுகிற தேவஜனமே நீங்கள் எதை சிநேகிக்கிறீர்கள்? உலகத்தையா, உலகத்திலுள்ளவைகளையா, "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" என்று 1யோவா.2:15-ல் படிக்கிறோம். ஆனாலும் உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலுமே அதிகமான ஜனங்கள் அன்பு உள்ளவர்களாக இருக்கின்றார்கள். உலகம் அந்த அளவு அவர்களை பற்றிக்கொண்டிருக்கிறது. என்னசெய்வது உலகத்தில் தானே இருக்கிறோம் என்று சொல்லுவார்கள். இச்செய்தியை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே நீ முதலாவது சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகிக்க கற்றுக்கொள். அப்பொழுது சத்தியபரராகிய ஆண்டவர் இயேசுகிறிஸ்து உம்மோடு இருப்பார்.

"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறதை நாம் யோவா.14:6-ல் வாசிக்கிறோம். அவரே உலகத்தின் வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவுமிருக்கிறார். இன்றைக்கு வழிதெரியாமல் திரிகின்ற ஆட்டைப்போல, அநேகர் வழிதவறிபோய் கொண்டிருக்கிறார்கள். இயேசு உலகத்தின் வழியாகவும், சத்தியமாகவுமிருக்கிறார்.

அவருடைய பிறப்பு முதல் அவருடைய சிலுவை மரணம் வரை நாம் அவரைக்குறித்து பரிசுத்த வேதாகமத்தில், குறிப்பாக புதிய ஏற்பாட்டில் உள்ள நான்கு சுவிசேஷ புத்தகத்தில் வாசிக்கிறோம். அநேகருடைய பாவத்தைப் போக்கும் பழுதற்ற ஆட்டுக்குட்டியாக கடந்துவந்தார். உலகத்தில் எத்தனையோ மகான்கள் தோன்றினார்கள் பின்பு மரித்தார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. ஆனால் உன்னதமான கர்த்தர் வானத்திற்கும் பூமிக்கும் மேலானவர். அவர் பாவமில்லாதவராயும், பரிசுத்தமுள்ளவராயும் சகலஜனங்களையும் சத்தியத்தில் வழிநடத்தும் சத்தியபரராயிருந்தார். ஆகையால், யோவான் அவரைக்குறித்துச் சொல்லும்போது "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும்

சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது'' என்று குறிப்பிடுகிறார் (யோவா.1:14). அந்த சத்தியபரரை நீ சிநேகிக்கின்றாயா?

ஆண்டவருடைய ஊழியத்தில் சந்திக்கப்பட்ட பேதுரு மூன்றரை வருட காலங்கள் இயேசுவோடு உண்டு உறங்கி, சென்ற இடங்களிலெல்லாம் ஆண்டவருடைய சத்தியத்தை கேட்டு கற்று வளர்ந்தவன். மீன்பிடித்துக் கொண்டிருந்த அவனை மனிதர்களை பிடிக்க கர்த்தர் தெரிந்துகொண்டார். அவனையும் அவனோடு இருந்த பதினொரு சீஷர்களையும் இயேசு அதிகமாக நேசித்தார். ஆகையால் அவர்களைப் பார்த்து சொல்லும்போது; ''இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்'' என்றார் (யோவா.15:15). இப்படி ஒரு சிநேகிதனோடு பழகுவதுபோல கர்த்தர் தம்முடைய சீஷர்களோடு இருந்தார்.

அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பு பேதுரு; ஆண்டவர் தன்னை எதற்காக தெரிந்துகொண்டாரோ அக்காரியத்தை விட்டுவிட்டு, மீண்டும் நான் மீன்பிடிக்கப்போகிறேன் என்னோடு வருகிறீர்களா என்று மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு சென்றான். ஆனால் அவனுடைய பிரயாசத்தின் பலன், ஒன்றும் அகப்படவில்லை. வருத்தத்தோடு இருந்த அவர்களைப் பார்த்த கர்த்தர், நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப்போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால் அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள்.

அதன்பின்பு ''இயேசு சீமோன் பேதுருவை நேக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்'' (யோவா.21:15). பேதுருவை குறித்து படிக்கும்போது அவன் காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன் என்று சொன்னவன். அந்தசமயத்தில் ஆண்டவர் அவனை நோக்கி: இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அந்தப்படியே அவன் ஆண்டவரை மறுதலித்து, பின்பு அவர்



சொன்னதை நினைவுகூர்ந்து மனங்கசந்து அழுதான். இதையெல்லாம் அறிந்தபேதுரு, மூன்றாந்தரம் அவர் தன்னை நோக்கி: ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான்;'' (யோவா.21:17).

மேலும், ''ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்'' என்கிறார் (யோவா.14:23). எத்தனை ஆசீர்வாதமான காரியம் என்று பார்த்தீர்களா? நாம் அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளும்போது நம்மை சிருஷ்டித்த பிதா அன்பாயிருக்கிறார். ஒன்றாயிருக்கிற தெய்வீகமே நம்மோடு இருக்கும். சத்தியமும் சமாதானமும் நம்மோடு வாசம்பண்ணினால் எத்தனை ஆசீர்வாதமான காரியம்!

இப்பேர்பட்ட ஆசீர்வாதத்திற்கு பாத்திரவான்களாக வேண்டுமானால் நாம் சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகிக்க வேண்டும். எனக்கு சத்தியம் வேண்டாம், சமாதானமும் வேண்டாம் என் நண்பர்கள் போதும், என்னுடைய உறவினர்கள் போதும், எனக்கு இருக்கும் சம்பத்துக்கள் போதும், என்பிள்ளைகள் போதும், நான் வளர்க்கிற நன்றியுள்ள நாய்போதும் என்னை நேசிக்க என்று சொல்வீர்களானால், ஒரு நாளில் ஏமாற்றப்படுவீர்கள். சத்தியம் என்றும் உங்களை நேசிக்கும். ''உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்'' (யாக்.4:4). நீங்கள் உலகத்துக்கு சிநேகிதனாயிருக்கப்போகிறீர்களா? அல்லது தேவனுக்கு பகைஞனாயிருக்கப் போகிறீர்களா? இன்றே தீர்மானம்செய்யுங்கள்.

சகலமும் கற்ற ஞானி சாலொமோன் சொல்லுகிறார்; ''என் மகனே, நீ உன் சிநேகிதனுக்காகப் பிணைப்பட்டு, அந்நியனுக்குக் கையடித்துக் கொடுத்தாயானால், நீ உன் வாய்மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய். இப்பொழுது என் மகனே, உன் சிநேகிதனுடைய கையில் அகப்பட்டுக் கொண்டபடியால், நீ உன்னைத் தப்புவித்துக்கொள்ள ஒன்று செய். உன் கண்ணுக்கு நித்திரையும், உன் கண்ணிமைக்குத் தூக்கமும் வரவிடாமல், உன் சிநேகிதனிடத்தில் போய், உன்னைத் தாழ்த்தி, அவனை வருந்திக் கேட்டுக்கொள். வெளிமான் வேட்டைக்காரன் கைக்கும், குருவி வேடன் கைக்கும் தப்புவதுபோல, நீ உன்னைத் தப்பிவித்துக்கொள்வாய்''

என்று மிக அழகாக நேர்த்தியாக ஆவியானவருடைய உதவியோடு எழுதிவைத்திருக்கிறார் (நீதி.6:1-5).

நீங்கள் சத்தியபரராகிய இயேசுவையும் அவருடைய வசனத்தையும் சிநேகிப்பீர்களானால், அவர் உங்களை சிநேகிப்பார், ஆபத்து காலத்தில் உதவிசெய்வார், வியாதியாய் இருக்கும்போது வைத்தியராயிருப்பார். காவலில் அடைபட்டு கிடந்தால் உங்களை விடுதலையாக்குவார். சத்தியத்தை கச்சையாக நீங்கள் போட்டுக் கொண்டால் காலமெல்லாம் உங்களைக் காக்கும் காவலாளியாயிருப்பார். சத்தியம் இன்றும் ஜீவிக்கிறது. சத்தியத்தை ஒருவரும் அழித்துவிடமுடியாது. யாக்கோபு தன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கும்போது ''சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்'' என்று ஆதி.49:10-ல் சொல்லப்பட்டபடி சமாதான கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்வரை நியாயப்பிரமாணம் ஜனங்களை வழிநடத்தியது. ''நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின'' என்று யோவா.1:17-ல் படிக்கிறோம். நீங்கள் இந்த உண்மையைப் புரிந்துகொண்டீர்களா?

''தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்'' (சங்.101:6). நீங்கள் எந்த தேசத்தில் வாழ்ந்தாலும் உண்மையாய் வாழவேண்டும் அதுவே முக்கியம். அநேகர் உலகத்திற்கு ஒத்தாற்போல வேஷம்போடுகிறார்கள். ''அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையால் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்'' என வேதம் மிகத்தெளிவாய் போதிக்கிறது 1யோவா.4:5-ம் வசனம்.

சத்தியத்தை நேசிக்கிற நீங்கள் அப்படியல்ல; ''பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்'' (1யோவா.4:4). ஆம், நம்மில் இருக்கிறவர் பெரியவர். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தர், வல்லமையுள்ளதேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு. அவர் பூமியிலே சமாதான வார்த்தைகளை கூறி ''சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்'' என்றார் (மத்.5:9). இந்த சமாதானத்தை நீங்கள் சிநேகிப்பீர்களானால் நீங்கள் தேவனுடைய புத்திரராயிருப்பீர்கள். அவருடைய பிறப்பின்போது பரமசேனையின் திரள்தோன்றி; ''உன்னதத்திலிருக்கிற



தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்'' என்று லூக்.2:14-ல் வாசிக்கிறோம்.

ஆண்டவர் பூமியிலே சமாதான கர்த்தராக வெளிப்பட்டார். ஆகையினாலே உயிர்த்தெழுந்த பின்பு தம்முடைய சீஷர்களை வாழ்த்தும்போது உங்களுக்கு சமாதானம் என்றார். பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும்போது; ''தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்'' என்கிறார் (1கொரி.14:33). இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு வாசகரே, சகோதரனே, சகோதரியே நீ சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகித்து உன் ஆவி ஆத்துமா சரீரத்தை பாதுகாத்துக்கொள். அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார்.

**கேள்வி**

**உங்களுடைய சிநேகம் எப்படிப்பட்டது?**

உலகசிநேகத்தைப்போல் இருக்கக்கூடாது, ஏனெனில், ''சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன், உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக'' என்று சொல்லியிருக்கிறார் (யோவான் 14:27). அப்படிப்பட்ட சமாதானத்தோடு, பயப்படாமலும், கலங்காமலும் அன்பு நிறைந்த சிநேகத்தோடிருக்கிறேன் என்று சொல்லுங்கள். கர்த்தரோடுள்ள உங்களுடைய சிநேகம் பெலப்பட நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 2. அவிசுவாசம்
## Unbelief

**இ**து நம்பிக்கையில்லாமையைக் குறிக்கிறது. இன்றைக்கு அநேகர் நம்பிக்கையில்லாமல் இருப்பதைப்போல, இயேசுவின் நாட்களிலும் நம்பிக்கையில்லாதவர்கள் இருந்தார்கள். குறிப்பாக இயேசுகிறிஸ்து வளர்ந்த ஊராகிய நாசரேத்திலும் இப்படிப்பட்டவர்கள் காணப்பட்டார்கள். ''இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு யோசே யூதா சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும்

கனவீனமடையான் என்றார். அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக்கூடாமல், அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு, கிராமங்களிலே சுற்றித்திரிந்து, உபதேசம்பண்ணினார்'' (மாற்.6:3-6).

இயேசுவின் உபதேசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டு, இவ்விதமான ஞானம் இவருக்கு எப்படிவந்தது என்று ஆச்சரியப்பட்டார்களே தவிர அவருடைய உபதேசத்திற்குக் கீழ்ப்படியவுமில்லை, அவரை விசுவாசிக்கவுமில்லை. ஆகையால், அநேக இடங்களில் அற்புதங்களைச் செய்து கொண்டு வந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்தில் அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினதேயன்றி வேறொரு அற்புதமும் அங்கே செய்யவில்லை என்று காண்கிறோம். அவரால் அற்புதம் செய்யமுடியாமல் அல்ல. அவர்களுடைய அவிசுவாசத்தினாலே அவர் அங்கே மேலும் அற்புதம் செய்யவில்லை. அவரால் கூடாதது ஒன்றுமில்லை என பரிசுத்தவேதம் நமக்கு போதிக்கிறது. எப்பேர்பட்ட வியாதியஸ்தனாயிருந்தாலும் அவனை அவர் சுகபடுத்தவல்லவராயிருக்கிறார். அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்து அவர் ஆச்சரியப்பட்டார். உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கிறது?

ஒருமுறை அவர் உபதேசித்துக்கொண்டிருக்கிறபோது, சில மனுஷர் திமிர்வாதக்காரனை படுக்கையோடே எடுத்துக்கொண்டுவந்து ஜனக்கூட்டம் மிகுதியாயிருந்தபடியால் அவனை இயேசுவின் முன்பாக கொண்டுபோக இயலாமல் தட்டோடுகள் வழியாய் ஜனங்களின் மத்தியில் இயேசுவுக்கு முன்பாக அவனைப் படுக்கையோடே இறக்கினார்கள். அவர்களுடைய விசுவாசத்தை அவர் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மனுஷனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் யோசனைபண்ணி, தேவதூஷணம் சொல்லுகிற இவன் யார்? தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார் என்றார்கள். ''இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: உங்கள் இருதயங்களில் நீங்கள் சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொல்வதோ, எழுந்து நடவென்று சொல்வதோ, எது எளிது? பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, தேவனை மகிமைப்படுத்தி, தன் வீட்டுக்குப்போனான்'' (லூக்.5:22-25).



அதினாலே எல்லாரும் ஆச்சரியப்பட்டு, தேவனை மகிமைப் படுத்தினார்கள்; அல்லாமலும், அவர்கள் பயம் நிறைந்தவர்களாகி, அதிசயமான காரியங்களை இன்று கண்டோம் என்று சொல்லிக்கொண்டார்கள். ஆம், பிரியமானவர்களே இயேசு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற பூமிக்கு வந்தார். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என அறிகிறோம்.

மோசேயை கர்த்தர் தெரிந்துகொண்டு அனுப்பும்போது; அவன், அவர்கள் என்னை நம்பார்கள், என் வாக்குக்குச் செவிகொடார்கள் என்று சொன்னான். அப்பொழுது கர்த்தர் உன்னிடத்தில் இருக்கிறது என்ன என்றார். கோல் என்றான். அதை கீழேபோடு என்றார் அது சர்ப்பமாயிற்று, பின்பு உன் கையை உன் மடியிலே போடு என்றார். அவன் தன் கையைத் தன் மடியிலே போட்டு, அதை வெளியே எடுக்கும்போது, இதோ, அவன் கை உறைந்த மழையைப்போல வெண்குஷ்டம் பிடித்திருந்தது. திரும்பவும் மடியிலே போடும்போது மற்ற கையைப்போலானது, நதியின் தண்ணீரை மொண்டு நிலத்தில் ஊற்று என்றார். ஊற்றும்போது தண்ணீர் வெட்டாந்தரையிலே இரத்தமாயிற்று இந்த மூன்று அற்புதங்களையும் பார்வோனுக்கு முன்பாக செய் என்று சொல்லி அனுப்பினார். அவன் போய் ஆரோனிடத்தில் கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட சகல அடையாளங்களையும் தெரிவித்தான். பின்பு இருவரும் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர் எல்லாரையும் கூடிவரச் செய்தார்கள்.

''கர்த்தர் மோசேக்குச் சொல்லிய சகல வார்த்தைகளையும் ஆரோன் சொல்லி, ஜனங்களின் கண்களுக்கு முன்பாக அந்த அடையாளங்களையும் செய்தான். ஜனங்கள் விசுவாசித்தார்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைச் சந்தித்தார் என்றும், அவர்கள் படும் உபத்திரவங்களைக் கண்ணோக்கிப்பார்த்தார் என்றும், அவர்கள் கேட்டபொழுது, தலைகுனிந்து தொழுதுகொண்டார்கள்'' (யாத்.4:30,31). மோசேயினிடத்தில் காணப்பட்ட அற்புதமான செயல்களைக் கண்ட இஸ்ரவேலர் தேவனை விசுவாசித்து தொழுதுகொண்டார்கள் என்று பார்த்தோம். ஆனால் நாசரேத் ஊரில் வளர்ந்து தேவனுடைய உபதேசத்தை ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லி ஜனங்கள் மத்தியில் பிணியாளிகளை சுகமாக்கி அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து கொண்டு வந்த இயேசுவை அந்த ஊரார் விசுவாசிக்காமல் இவன் தச்சன் அல்லவா, யாக்கோபு யோசே இவன் சகோதரர் அல்லவா? என்று சொல்லி இடறிப்போனார்கள்.

பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக்

கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்'' (எபி.1:1,2). அந்த அன்பின் ஆண்டவர் இயேசுவை, நாசரேத்து மக்களில் அநேகர் அறியாமல் அவிசுவாசிகளானார்கள்.

யோவான் 9:39-ல் சொல்லப்பட்டபடி ''காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்'' என்ற வசனத்தின்படி இன்றும் காணாதவர்கள் காண்கிறார்கள். அன்று இயேசுவை தன் கண்களாலே பார்த்து, அவரோடு உண்டு. உறங்கின தோமா, இயேசுவின் உயிர்த்தெழுந்த செய்தியை சொன்ன சீஷர்களை நம்பாமல்; ''அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்தில் என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான். அந்த தோமாவை கர்த்தர் சந்தித்து; ''நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். ...பின்பு தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்'' (யோவா.20:27-29).

ஆம், காணாததை நம்புவதே நம்பிக்கை. ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது'' என எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி.11:1). நாம் இயேசுவை பாக்கவில்லை. ஆனாலும் அவர் நமக்காக மரித்தார் என விசுவாசிக்கிறோம். இயேசு செய்த அநேக அற்புதங்களைக் கண்ட பட்டணங்களில் சிலவற்றைக்குறித்து நாம் இப்படியாக படிக்கிறோம். ''கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள். நியாயத்தீர்ப்புநாளிலே உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும். நியாயத்தீர்ப்புநாளிலே உனக்கு நேரிடுவதைப் பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (மத்.11:21-24).



இவ்வளவு அற்புதங்களையும் கண்களாலே பார்த்த இந்த நாட்டு ஜனங்கள் விசுவாசியாமலும், மனந்திரும்பாமலும் பழைய வாழ்க்கையிலே நிலைத்திருந்தார்கள். ஆகையால், கர்த்தர் இத்தனை அற்புதங்களையும் கண்ட பட்டணங்களைப் பார்த்து, உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், நியாயத்தீர்ப்பு நாளிலே தீருவுக்கும், சீதோனுக்கும், சோதோமிற்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்றார்.

கர்த்தருடைய வார்த்தையை கேட்டு மனந்திரும்பாமல் பாவத்திலே நிலைத்திருந்தால் என்னநடக்குமென்று மேற்கண்ட வசனத்திலே தியானித்தோம். நீங்கள் தேவ கோபாக்கினைக்கு தப்பிக்கொள்ள, இன்றே கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுங்கள். அவர் உங்களை அற்புதவிதமாக சிருஷ்டித்திருக்கிறார். அவர் உங்களுக்காக ஏற்படுத்தியுள்ள ஒவ்வொன்றும் அற்புதவிதமானதே. இயேசு தேவனுடைய குமாரன் என்பதை அறிந்துகொள்ளவும், அவரை விசுவாசித்து நித்திய ஜீவனைப்பெற்றுக் கொள்ளவும் ஆண்டவர் அற்புதங்களைச் செய்தார். ''இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது'' என்று யோவான் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிறார் (யோவா.20:30,31). அற்புதர் இயேசுவை உங்கள் இருதயத்தில் விசுவாசித்து அளவில்லா ஆசீர்வாதம் பெறுங்கள்.

**கேள்வி**

**இன்றைக்கும் அநேகர் அவிசுவாசிகளாகிப்போவதற்கு என்ன காரணம்?**

பல காரணங்கள் உண்டு. கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமை, பிசாசுக்கு இடங்கொடுப்பது, தீய காரியங்களைக் குறித்து பேசுவது, நம்பிக்கையற்று வாழ்வது போன்ற அநேக காரணங்களை சொல்லலாம். இதற்கு கர்த்தருடைய பதில்: ''பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது'' என்கிறார் (மத்.11:25,26).

ஞானிகள் தங்களுடைய ஞானத்தினால் வஞ்சிக்கப் படுகிறார்கள். பாலகர் வாயில் துதி உண்டாகும்படி செய்கிறார். ''எதிர்பேசுகிறவர்கள்

சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்'' அப்பொழுது அவர்களுடைய அறியாமை அகற்றப்படும். நீங்கள் ஒரு அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 3. ஓய்வுநாள்

## The Sabbath Day

**ஓ**ய்வு நாள் யூதருக்கு கொடுக்கப்பட்டது என்பதை நாம் அறிவோம். இந்த ஓய்வுநாளை எப்படிக் கைக்கொள்ளவேண்டும் என்ற போதனையை ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் பேசிய வசனங்களை இன்றைய நாளில் தியானிப்போம். ''என் பரிசுத்த நாளாகிய ஓய்வு நாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படிபண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று'' என்று ஏசா.58:13,14 வசனங்களில் படிக்கிறோம்.

இப்போதனையை யூதர்கள் கைக்கொண்டு அதன்படி நடந்தார்களா என்று பார்க்கும்போது சிலர் அப்போதனையின்படி நடக்காமல் தங்களுடைய சொந்தக்காரியங்களுக்கு முதலிடம் கொடுத்தார்கள். இன்றைக்கு சில கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு ஞாயிற்று கிழமையையும் முக்கியமான நாளாக கருதாமல் அந்த நாளிலே தங்களுடைய சொந்தக்காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகிறார்கள். ஞாயிற்றுக்கிழமை அப்படி என்ன விசேஷம் என்று நீங்கள் கேட்கலாம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதனை மீட்கும்படியாக, தன்னை சிலுவையில் தியாகபலியாக ஒப்புக்கொடுத்து, உயிர்த்தெழுந்த அந்தநாள் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுகிழமை. அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் உயிர்த்தெழுதலின்



பிள்ளைகளாயிருக்கிறார்கள். ஆகையால் அந்த நாளிலே பிதாவாகிய தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்.

ஓய்வுநாளைக் கைக்கொள்ளும்படியான போதனையில் முதலில் அவர்களுக்கு சொல்லப்பட்டது என்னவென்றால்; 'உன் காலை விலக்கி' என்று சொல்லப்பட்டது. அவர்கள் அந்த அளவுக்கு ஓய்வுநாளை மீறி வேலைக்கு முக்கியத்துவம்கொடுத்து வேலைசெய்திருக்கிறார்கள் என்று நாம் காண்கிறோம். இதைக்குறித்து நெகேமியா சொல்வதைக் கவனியுங்கள்: ''அந்த நாட்களில் நான் யூதாவிலே ஓய்வுநாளில் சிலர் ஆலைகளை மிதிக்கிறதையும், சிலர் தானியப் பொதிகளைக் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறதையும், திராட்சரசம், திராட்சப்பழம், அத்திப்பழம் முதலானவைகளின் பற்பல சுமைகளை ஓய்வுநாளிலே எருசலேமுக்குக் கொண்டுவருகிறதையும் கண்டு, அவர்கள் தின்பண்டம் விற்கிற நாளைப்பற்றி அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டேன்.

மீனையும் சகலவித சரக்குகளையும் கொண்டுவந்து, ஓய்வுநாளிலே யூதா புத்திரருக்கும் எருசலேமில் இருக்கிறவர்களுக்கும் விற்கிற சில தீரியரும் (Man of Tyre) உள்ளே குடியிருந்தார்கள். ஆகையால் நான் யூதாவின் பெரியவர்களைக் கடிந்துகொண்டு; நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கையென்ன? உங்கள் பிதாக்கள் இப்படிச் செய்ததினாலல்லவா, நமது தேவன் நம் மேலும் இந்த நகரத்தின்மேலும் இந்தத் தீங்கையெல்லாம் வரப்பண்ணினார்; நீங்களோவென்றால் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறதினால், இஸ்ரவேலின்மேலிருக்கிற உக்கிரத்தை அதிகரிக்கப்பண்ணுகிறீர்கள் என்று அவர்களுக்குச் சொன்னேன்'' என்கிறான் (நெகேமி.13:15-18). அன்றைக்கு இருந்த சில யூதர்கள் தேவனை அறியாத புறஜாதிமக்களால் கர்த்தருடைய கட்டளையை மீறிநடக்கக் காரணமாயிருந்தார்கள்.

இவர்கள் ஓய்வுநாளில் பலவிதமான சரக்குகளை கொண்டுவந்து யூதபுத்திரர்களுக்கு விற்பனை செய்தார்கள். அந்த நாட்களில் பெலவீனமாக இருந்த யூதபுத்திரர்கள் ஓய்வுநாளிலே கொள்வனையும் கொடுப்பனையும் செய்ய ஆரம்பித்தார்கள். இன்றைக்கும் சில இடங்களில் ஞாயிற்றுகிழமை சந்தை நடக்கிறது. அன்றைய நாளில் சில பொருட்கள் மிக மலிவான விலைக்குக் கிடைக்கும். ஆனபடியால் சபை ஆராதனைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அந்த பொருட்களை வாங்கும்படியாக கடந்து செல்வதில் சில பெயர் கிறிஸ்தவர்கள் கவனமாயிருக்கிறார்கள். அதைப்போல யூதர்களிலும் சிலர் இருந்திருக்கிறார்கள் என்று அறிகிறோம்.

மேலும், ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதே என்று சொல்லப்பட்டு இருந்தது. ஆனால் யூதர்கள் தங்களுக்கு இஷ்டமானதை அந்த நாளிலே செய்தார்கள். எதைச் செய்யாதே என்று கர்த்தர் சொல்லுகிறாரோ அதைத்தான் செய்வார்கள். இது ஒன்றும் புதிது அல்ல. முற்பிதாக்கள் காலந்தொடங்கி அது இன்றுவரை தொடர்ந்துகொண்டேயிருக்கிறது.

ஆனால், புதுஉடன்படிக்கை நிறைவேறும்முன்பாக இயேசுவோடு இருந்த கலிலேய ஸ்திரீகளில் சிலர் ''கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்'' என்று லூக்.23:56-ல் வாசிக்கிறோம். இவர்கள் இயேசுவின் கல்லறையைப் பார்க்க வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள் என காண்கிறோம். வாரத்தின் கடைசி நாளான சனிக்கிழமையில் அவர்கள் கற்பனையின்படியே ஓய்ந்திருந்தார்கள். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா?

மேலும், உன் சொந்தப்பேச்சை பேசாமலும் என்று படிக்கிறோம். யூதர்களில் சிலர் சொந்தப்பேச்சை அன்றைய நாளிலே துவக்கினார்கள். இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமையில் நிச்சயதார்த்தம் செய்கிறார்கள், சிலர் திருமணம் வைக்கிறார்கள். ஞாயிற்றுகிழமைதான் விடுமுறைநாள் இந்த நாளிலும் ஓய்வு இல்லையா என்று பிள்ளைகள் கேட்கிறார்கள். ஆகையால் நாமெல்லாரும் பிக்னிக் சென்றுவருவோம் என்று சொல்லி பல இடங்களுக்குச் சுற்றிப் பார்க்கும்படியாக கடந்து செல்லக்கூடிய நாளாக ஞாயிற்றுகிழமையை மாற்றிவிட்டார்கள். உலகமுழுவதும் ஞாயிற்று கிழமை விடுமுறை நாளாக இருக்கிறது அதற்காக நம்தேவனை ஸ்தோத்திரிக்கவேண்டும்.

மேலும், ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்று கருதவேண்டும். அநேகருக்கு மனமகிழ்ச்சி என்றாலே திருமணநாளைத்தான் மனமகிழ்ச்சியின் நாளாக கருதுவார்கள். கர்த்தரோடு இணைந்து இருக்கும் மனுஷன் கர்த்தருடைய நாளை மனமகிழ்ச்சியின் நாளாகக் கொள்ள வேண்டும். தேவாலயத்தின் அலங்கார வாசல் என்னப்பட்ட வாசலண்டையிலே சப்பாணியாய் உட்கார்ந்துகொண்டு பிச்சை கேட்டுக் கொண்டிருந்த சப்பாணி, பேதுரு மற்றும் யோவானால் தூக்கிவிடப்பட்டபோது குதித்தெழுந்து தேவனைத் துதித்துக்கொண்டு அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். அவன் அந்த நாளை மனமகிழ்ச்சியின் நாளென்று கருதினான். ''நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்'' (சங்.97:12).

நீங்கள் கர்த்தருடைய நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை



மனமகிழ்ச்சியின் நாளென்றும், அவரையும், அவருடைய மரணத்தையும் நினைவு கூரும்படியாக கூடி வரும் நாளென்றும் எண்ணுகிறீர்களா? கர்த்தருடைய பரிசுத்தநாளை மகிமையுள்ள நாளென்று கருதவேண்டும். இஸ்ரவேலர்கள் பல வருடங்களாக ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரித்தார்கள். கட்டளையின்படி ஓய்ந்திருந்தார்கள் அதை மகிமையுள்ள நாளாக கருதினார்கள். நாளடைவில் புறஜாதி மார்க்கங்களைக் கற்றுக்கொண்டு அந்நாளை பரிசுத்த குலைச்சலாக்கிப்போட்டார்கள். இன்றைக்கும் அநேகர் அதை மகிமையுள்ள நாளாக கருதாமற்போவதற்கான காரணம். தேவனை அறியாத மக்களோடு உள்ள உறவுதான். அதினிமித்தம் அதை அசட்டைசெய்கிறார்கள். ஒரு நாளைக்கு ஆராதனைக்கு போகாவிட்டால் என்ன ஆகப்போகுது. அடுத்த வாரம் போய்க்கொள்ளலாம். நாம் முக்கியமான வேலைக்குப்போய் வருவோம் என்று அவர்களை இழுத்துக்கொண்டு சென்றுவிடுவார்கள். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை எழுதின யோவான் ''கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்'' என்று எழுதுகிறார் (வெளி.1:10). பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்ட சூழ்நிலையில் இருக்கும்போது கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானார். அதை அவர் பரிசுத்தநாளாக கருதினார். புதுஉடன்படிக்கையின் கீழ்வாழ்கின்ற நாம் கர்த்தருடைய நாளான ஞாயிற்றுகிழமையை பரிசுத்த நாளாக எண்ணுவோமானால். தேவன் நாம்மோடு கூட இருப்பார்.

ஆண்டவராகிய இயேசு தாம் உயிர்த்தெழுந்து ஞாயிற்றுக் கிழமையில் தம்முடைய சீஷர்கள் கூடியிருந்த இடத்திற்கு வந்து உங்களுக்கு சமாதானம் என்றார். எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். அந்த நாளை அவர் மகிமையாய் எண்ணினபடியால் அவர்களோடு காணப்பட்டார். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை கூடி ஆராதித்து வந்தார்கள் என்று அப்.20:7 வசனங்கள் மூலம் அறிகிறோம்.

ஓய்வுநாளை கைக்கொள்ளும்போது நீ மனமகிழ்ச்சியாயிருப்பாய் என்று சொல்லப்பட்டிருந்தது. அவர்களோ அதை மீறி தங்களுடைய சொந்த காரியங்களுக்கு முதலிடம் கொடுத்தபடியால் தேவனுடைய ஆசீர்வாதத்தை சிலர் இழந்தார்கள். புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களோ கர்த்தருடைய வார்த்தையின்படி ஞாயிற்றுக்கிழமை தேவனை ஆராதித்து ''அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணினார்கள்'' என்று அப்.2:46-ல் வாசிக்கிறோம்.

இந்த மனமகிழ்ச்சியை முதல்நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் பெற்று அநுபவித்தார்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு நேயரே, நீ

கர்த்தருடைய கட்டளையைக் கைக்கொண்டு அதை மகிமையாக எண்ணுவாயானால் அவர் உன்னை பூமியின் உயர்ந்த இடங்களில் ஏறியிருக்கும்படி செய்வார். ‘‘தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்’’ என்கிறார் (சங்.101:6). மேலும் உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப்போஷிப்பேன் என்கிறார். சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நம்மையுங் குறைவுபடாது.

இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ‘‘அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்’’ என்ற சங்.147:14-ன் படி உங்களை யாக்கோபின் சுதந்தரத்தால் உசிதமான கோதுமையினால் போஷிப்பார். இது கர்த்தரால் சொல்லப்பட்டது.

**கேள்வி**

**நாம் ஓய்வுநாளைக் கைக்கொள்ளவேண்டுமா?**

ஓய்வு நாள் யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளை. அதிலே அவர்கள் ஓய்ந்திருந்தார்கள். புதுஉடன்படிக்கையின் கீழ் வாழ்கின்ற நாம் புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவின் உபதேசத்திற்கு செவிகொடுக்கவேண்டும். இயேசு பழைய உடன்படிக்கையின் கட்டளைகளை நிறைவேற்றும்படியாக வந்தார். அதை அவர் சிலுவையில் நிறைவேற்றினார். இப்பொழுதும் புதிதும் ஜீவனுமான உடன்படிக்கைக்கு திருப்பப்பட்டுள்ளோம். இந்த உடன்படிக்கையைக் குறித்து பவுல் எழுதும்போது; ‘‘புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது.’’ என்கிறார் (2கொ.3:6). இந்த உடன்படிக்கையின் படி தேவனை ஆராதியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 4. பொறுமையோடே ஓடக்கடவோம்

## Let us Run With Endurance

**பொ**றுமை ஒவ்வொருவருக்கும் மிக அவசியம். ஏனெனில் பொறுமையில்லாமல் அநேக நலமான காரியங்களை இழந்துவிடுகிறார்கள்.



ஒரு கிறிஸ்தவனை வேதாகமம் பொறுமைக்கு நேரே வழிநடத்துகிறது. ‘‘மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்’’ என எபிரெய கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார் (எபி.12:1). மேகம்போன்ற திரளான சாட்சிகள் நமக்கு உண்டு என்பதை நினைப்பூட்டுகிறார்.

நம்முடைய முற்பிதாக்கள், விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். இவைகளையெல்லாம் விசுவாசத்தினாலே செய்து, விசுவாசத்தினாலே வெற்றிகொண்டார்கள். ஒரு கிறிஸ்தவன் பொறுமையோடிருக்க அவனுக்கு விசுவாசம் மிக அவசியம். உங்களுக்கு அப்படிப்பட்ட விசுவாசம் இருக்கிறதா? ஒவ்வொருநாளும் உங்களை நெருக்குகின்ற பாரமான யாவற்றையும், உங்களைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிடவேண்டும். இதைச்செய்யாது நம்முடைய வாழ்க்கையில் பொறுமை உண்டாகாது. அநேகர் போன்மூலமாகவும் கடிதங்கள் மூலமாகவும் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கக் கேட்டுக் கொள்கிறார்கள்.

நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் முதலாவது மேற்கண்ட காரியங்களை நாம் தள்ளிவிடவேண்டும். பாவத்தை தண்ணீரைப்போல ஒருவர் பருகிக்கொண்டு எனக்காக ஜெபியுங்கள் என்று கேட்டுக்கொண்டால் அந்த ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பாரா? கர்த்தருடைய வசனம் நம்மை சரிசெய்யும்படியாக எவைகளைக் களைய வேண்டுமென்று சொல்லுகிறதோ அவைகளை உடனே களைந்துபோடவேண்டும். அப்பொழுதே நம்முடைய வேண்டுதலுக்கு கர்த்தர் செவிகொடுப்பார். ‘‘நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி’’ என்று நீதி.14:34-ல் படிக்கிறோம்.

நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓட சோர்ந்துபோகாதிருக்கவேண்டும். ‘‘நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால்

செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்'' (எபி.12:3). நாம் ஒவ்வொரு நாளும் ஆண்டவருடைய பாடுகளை எண்ணிப்பார்க்க வேண்டும். அப்பொழுது பொறுமையோடே ஓட நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோம். அவரை உமிழ்ந்து துப்பினார்கள், கன்னத்தில் அறைந்தார்கள், குட்டினார்கள், முள்முடி சூட்டி இகழ்ந்தார்கள், உன்னை நீயே இரட்சித்துக்கொள், சிலுவையில் இருந்து இறங்கிவா என்றெல்லாம் அவரை ஏளனம் செய்தார்கள். இவைகளையெல்லாம் உன்னதத்தின் குமாரன் பொறுமையோடிருந்து சகித்தார். அவர் ஒருவேளை உங்களைப்போலவும் என்னைப்போலவும் கோபப்பட்டிருப்பாரே யானால் என்ன நடந்திருக்கும், உங்களுக்கும் எனக்கும் ஆன்மீக இரட்சிப்பு இல்லாமற்போயிருக்கும்.

அவர் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற சிலுவைபாடுகளை ஏற்றார். பிதாவாகிய தேவன் அவரை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினார். நீ சோர்ந்துபோகாமல் பொறுமையோடு இருப்பாயானால் அவர் உனக்கும் பெலன் கொடுப்பார். ''சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்'' (ஏசா.40:29-31). கர்த்தரை நம்பி பொறுமையோடிருக்கிறவர்கள் மட்டுமே கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். நீங்கள் கர்த்தருக்கு பொறுமையோடு காத்திருக்கிறீர்களா? அப்படி காத்திருக்கிற நீங்கள் அவரையே நினைத்துக்கொண்டிருக்கவேண்டும்.

அநேகர் நான் ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லுவார்கள். ஆனால் கிறிஸ்துவுக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லாது வாழ்ந்துகொண்டிருப்பார்கள். அப்படியில்லாது நீங்கள் அவரையே நினைத்துக்கொள்ளவேண்டும். அவர் நமக்கு மாதிரியை விட்டு சென்று இருக்கிறார். அதைக்குறித்து பேதுரு எழுதுகிறார்; ''இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்'' என்று எழுதுகிறார் (1பேது.2:21).

ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவினுடைய அடிச்சுவடுகளைத் தொடரவேண்டும். இன்றைக்கு கிறிஸ்தவம் கிறிஸ்துவை விட்டுவிட்டு உலகத்தை உள்ளே வைத்திருக்கிறது. உலகத்திற்கு ஒத்தாற்போல



வேஷம்போடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை கர்த்தர் அறியேன் என்பார். இச்செய்தியை வாசிக்கிற அன்பு நேயரே நீ உன் வாழ்க்கையில் பொறுமையோடு ஓடிக்கொண்டிருக்கிறாயா? என் ஓட்டத்தை பொறுமையோடு ஓடி முடிப்பேன் என்ற நம்பிக்கையோடிருக்கிறாயா? ''கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்'' என்று எபிரெய கிறிஸ்தவர்களுக்கு பவுல் நினைப்பூட்டுகிறார் (எபி.12:6). ஆகையால் கர்த்தருடைய சிட்சையை அற்பமாய் எண்ணாதிருங்கள். உங்களிடத்தில் அன்பு செலுத்துகிறபடியால் உங்களை சிட்சிக்கிறார். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார் என்று அறிந்துகொள்ளுங்கள்.

தகப்பன் நன்மைக்கு ஏதுவாக மகனை சிட்சிப்பதுபோல தேவன் நம்மை சிட்சிக்கிறார். தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? என வேதம் கேள்வி எழுப்புகிறது. ''நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து, மனந்திரும்பு என்று லவோதிக்கேயா சபைக்கு எழுதுகிறதை வெளி.3:19-ல் வாசிக்கிறோம். இன்றைக்கு கடிந்துகொள்ளுதலை அநேகர் அலட்சியப்படுத்துகிறதை பார்க்கிறோம். ''கண்டனையை வெறுக்கிறவனோ மோசம்போகிறான்'' என நீதி.10:17-ல் படிக்கிறோம்.

நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே கடிந்து கொள்ளப்படுகிறோம். ஆகையால் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன் என்று கர்த்தர் வெளிப்படுத்தலில் திருவுளம்பற்றுகிறார். பவுலும் தீமோத்தேயுவுக்கு சொன்ன ஆலோசனை அதுதான். ''சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு புத்திசொல்லு'' என்கிறார் (2தீமோ.4:2).

பொதுவாக பெற்றோர்கள் தங்களுக்கு எப்படித் தோன்றுகிறதோ அதற்கு ஏற்றார்போல சிட்சிப்பார்கள். ''அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சகாலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார்'' என குறிப்பிடுகிறார் (எபி.12:10). நாம் பரிசுத்தத்தில் பங்குபெறவேண்டும். ஆகையால் நம்மை முற்றிலும் பரிசுத்தமாக்கும்படியாக கறைதிறை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள ஜனங்களாக இருக்கும்படியாக

நம்முடைய பிரயோஜனத்துக்காவே நம்மை சிட்சிக்கிறார் என்கிறார். ஐயோ, தேவன் என்னை சோதிக்கிறாரே என்று அநேகர் சொல்லக் கேள்விப் பட்டிருப்பீர்கள். ''தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்'' என யாக்கோபு சொல்லுகிறார் (யாக்.1:13,14).

சோதனை வேறு சிட்சை வேறு இதை நாம் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். சோதிக்கிறவன் பிசாசு. அவனுக்கு மற்றொரு பெயர் சோதனைக்காரன். தேவன் நல்லவர், அன்புள்ளவர். அவர் ஒருவனையும் சோதிக்கிறவரல்ல. ஏனென்றால் மனுஷனை அவரே உண்டாக்கினவர். ஆகையால் அவனை அவர் சோதிக்கவேண்டிய அவசியமில்லை. நம்முடைய நன்மைக்காக அவர் நம்மை சிட்சிக்கிறார் என்பதை அறிந்து மனந்திரும்ப அவர் எதிர்பார்க்கிறார். ''இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல'' என்று ஆண்டவர் இயேசு சொன்னவார்த்தையை நினைவுகூருங்கள் (மத்.18:14).

நம்முடைய ஓட்டத்தில் பொறுமையோடு ஓடும்போது மிகுந்த ஆசீர்வாதத்தை அது கொண்டுவரும். ''எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்'' (எபி.12:11). பெதஸ்தா குளத்தில் முப்பத்தெட்டு வருடங்களாக காத்திருந்த வியாதியஸ்தனின் நம்பிக்கை வீண்போகவில்லை. கர்த்தர் அவனை சந்தித்து அவன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடக்கும்படியாக கட்டளை கொடுத்தார். அவன் நடந்துசென்றான். பலவருடங்களாக காத்திருந்து என்ன பலன் என்று உங்கள் விசுவாசத்தை தளரவிட்டுவிடாதிருங்கள்.

பொறுமையோடிருந்து பழக பழக அது நமக்கு நீதியாகிய சமாதான பலனைத்தரும் என்ற நம்பிக்கையோடிருங்கள். பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; ''நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்'' என எழுதுகிறார் (ரோம.8:22,23).

ஒரு ஸ்திரீயானவள் ஒரு குழந்தையை பெற்றெடுக்க எவ்விதமான வேதனையை அநுபவிப்பாளோ அதைப்போல சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப் படுகிறது என்கிறார். அவரோடேகூடப் பாடுகளைச்



சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் என்ற நம்பிக்கையோடு இருந்து விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம்.

**கேள்வி**

**நம்முடைய வாழ்க்கைக்கு பொறுமை மட்டும் போதுமா?**

கிறிஸ்தவ வாழ்க்கையில் நமக்கு தேவையானவைகளில் பொறுமையும் ஒன்று. இதைப்போல இன்னும் சிலவற்றையும் நம்முடைய வாழ்கையில் கூட்டிக்கொள்ளவேண்டும். பேதுரு சொல்கிறார்; ''நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்'' என்கிறார் (2பேது.1:5-7). இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. வளர்ந்து தேவஆசீர்பெறுங்கள்.

## 5. யாரை சேவிப்பீர்கள்?

## Whom Will You Serve?

**இ**ந்தக் கேள்வியை மோசேக்குப் பின்பு இஸ்ரவேல் மக்களை வழிநடத்திக்கொண்டு வந்த யோசுவா என்ற தேவ மனிதன் தேவ ஜனங்களைப் பார்த்துக்கேட்டான். இது ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? ஆம், நமக்கு அது ஆச்சரியமாகத்தானிருக்கிறது. நாற்பது வருடங்களாக வனாந்தர பயணத்தில் அவர்களை அற்புதவிதமாக வழிநடத்திக்கொண்டு வந்த தேவனை அவர்கள் சேவிக்காமல் எமோரியரின் தேவனை சேவிக்க ஆரம்பித்தார்கள். ஆகையால் யோசுவா அவர்களை சீகேமிலே கூடிவரப்பண்ணி, இஸ்ரவேலின் மூப்பரையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், அதிபதிகளையும் வரவழைத்தான் அவர்கள் தேவனுடைய சந்நிதியில் வந்து நின்றார்கள்.

அப்பொழுது யோசுவா சகல ஜனங்களையும் நோக்கி; கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்; பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன், நதிக்கு

அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள். கர்த்தர் நதிக்கு அப்புறத்தில் இருந்த உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமை அழைத்துக்கொண்டுவந்து, அவனைக் கானான் தேசமெங்கும் சஞ்சரிக்கச் செய்து, அவன் சந்ததியைத் திரட்சியாக்கி, அவனுக்கு ஈசாக்கைக் கொடுத்தேன். ஈசாக்குக்கு யாக்கோபையும் ஏசாவையும் கட்டளையிட்டு, ஏசாவுக்குச் சேயீர் மலைத்தேசத்தைச் சுதந்தரிக்கும்படி கொடுத்தேன். யாக்கோபும் அவன் பிள்ளைகளுமோ எகிப்துக்குப் போனார்கள் என்று இஸ்ரவேல் சந்ததி உருவான விதத்தையும் நதிக்கு அப்புறத்தில் யார் வேறே தேவர்களைச் சேவித்தார்கள் என்ற சம்பவத்தையும் அவர்களுக்கு எடுத்துச்சொன்னான்.

பின்பு, "கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்" (யோசு.24:15). ஆறு லட்சம் பேரில் யோசுவாவும் காலேபும் கர்த்தரையும், அவருடைய வாக்குதத்தங்களையும் உறுதியாகப் பற்றிக்கொண்டவர்கள். எகிப்திலே புறப்பட்டதில் இந்த யோசுவாவும் காலேபும் தவிர ஒருவரும் கானானுக்குள் பிரவேசிக்கவில்லை. அப்படியானால் மற்றவர்களுடைய சவங்கள் வனாந்தரத்தில் மடிந்துபோயின. இவ்விருவரும் எகிப்திலே புறப்பட்ட நாளில் கொண்ட நம்பிக்கையை கடைசி வரை காத்துக்கொண்டனர்.

ஆறு லட்சம் பேருக்கு வந்த சோதனை போராட்டங்கள் இவர்களுக்கும் வந்திருக்கும். ஆனாலும் இவர்கள் சோர்ந்துபோகாமல், அழைத்த தேவனின் மீது தங்களுடைய நம்பிக்கையை வைத்திருந்தனர். ஆறு லட்சம் பேர் வனாந்தரத்தில் மாண்டுபோனபோதிலும் அவர்களுடைய சந்ததியார் கானானுக்குள் பிரவேசித்தனர். இருந்தபோதும் அவர்கள் கர்த்தரை பற்றிக்கொள்ளாமல் அந்நிய தேவனை நமஸ்கரிக்க ஆரம்பித்தனர். அந்த வேளையில் யோசுவா யாரைச் சேவிப்பீர்கள் என்று கேட்டான்.

இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு நேயரே, கிறிஸ்தவ சகோதரனே, சகோதரியே நீ யாரை சேவித்துக்கொண்டிருக்கிறாய். உன்னை உண்டாக்கினவரை மறந்து அந்நிய தேவனை சேவித்துக் கொண்டிருக்கின்றாயா, அல்லது மனிதர்களுடைய கற்பனையின்படியும் உபதேசங்களின்படியும் நடந்து உன் இஷ்டப்படி ஆராதித்து வருகின்றாயா? உன்னோடு பேசும் தேவன் ஒருவர் இருக்க, பேசமாட்டாத, நடக்கமாட்டாத தேவனை சேவிப்பானேன். யோசுவா சொன்னதைப்போல; நீங்கள்



கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமமும் உண்மையுமாய்ச் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு, கர்த்தரைச் சேவியுங்கள் என்று ஆலோசனை சொன்னான். இந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்ட இஸ்ரவேலர் வேறே தேவர்களைச் சேவிக்கும்படி, கர்த்தரை விட்டு விலகுகிற காரியம் எங்களுக்குத் தூரமாயிருப்பதாக என்றார்கள்.

அதைப்போல நீங்களும் உங்கள் பிதாக்களும் சேவித்து வந்த அந்த வீணான தேவர்களையும் தேவிகளையும் தள்ளிப்போடுங்கள். அவைகள் உங்களை இரட்சிக்கமாட்டாது. அது எப்படி முடியும் என்று சொல்லுகிறீர்களா? நாம் ஜீவனுள்ள தேவனை உண்மையாய் சேவிப்போமானால் வீணானவைகளை நம்மைவிட்டு தள்ளிப்போட வேண்டும். அவைகளை தள்ளிப்போடுவதால் அது உங்களை மோசம்போக்கிவிடாது.

ஏனெனில் "அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்கு கண்களிருந்தும் காணாது, அவைகளுக்கு காதுகளிருந்தும் கேளாது, அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது, அவைகளுக்கு கைகளிருந்தும் தொடாது, அவைகளுக்கு கால்களிருந்தும் நடவாது, தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது" என சங்கீதம் 115:5-7 வசனங்களில் படிக்கிறோம். இப்படிப்பட்டவைகளை நம்பி ஏமாற்றப்பட்டு போய்விடாதபடி அநுதினமும் உங்களோடு அவருடைய வார்த்தைகள் மூலம் பேசும் தேவனை சேவியுங்கள்.

யோசுவாவின் விண்ணப்பத்தைக்கேட்டு சூரியனையும் சந்திரனையும் கர்த்தர் நடுவானத்தில் நிறுத்தினார். "அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டும் மட்டும் சூரியன் தரித்தது, சந்திரனும் நின்றது; இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா; அப்படியே சூரியன் அஸ்தமிக்க தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒருபகல்முழுவதும் நடுவானத்தில் நின்றது. இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப் பின்னுமில்லை; கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார்" என்று யோசு.10:13,14 வசனங்களில் வாசிக்கிறோம்.

நீதிமானுடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கும் தேவனை நீங்கள் சேவிப்பீர்களானால் உங்களுடைய வாழ்க்கையிலும் அநேக நன்மைகளை காண்பீர்கள். யோசுவா 40 வருட வனாந்தர பயணத்தின் போது கர்த்தரால் செய்யப்பட்ட அநேக காரியங்களை கண்ணாரக் கண்டவன். கானானை வேவு பார்த்து வரும்போது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி; நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம். நாம் அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம் என்றான். அவனோடேகூடப் போய்வந்த மனிதரோ,

நாம் போய் அந்த ஜனங்களோடே எதிர்க்க நம்மாலே கூடாது, அவர்கள் நம்மைப் பார்க்கிலும் பலவான்கள் என்றார்கள்.

மேலும் நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்துவந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம். நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள். அங்கே இராட்சதப்பிறவியான ஏனோக்கின் குமாரராகிய ராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம். அவர்கள் பார்வைக்கு அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்துவந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்தார்கள். ஆனால் யோசுவாவும் காலேபும் கர்த்தர் நமக்கு அந்த தேசத்தை நிச்சயமாக தருவார் என்ற நம்பிக்கையில் அசையாதவர்களாயிருந்தனர்.

இங்கே நாம் இயேசுவானவர் சொன்ன வசனத்தை நினைத்துப்பார்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். "முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத்.24:13). அநேகர் விசுவாசிக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய விசுவாசத்தில் முடிவுபரியந்தம் நிலைத்திருக்கிறார்களா என்று பார்க்கும்போது அவர்கள் நிலைநிற்பதில்லை. நாளடைவிலே சோர்ந்துபோய் பின்வாங்கிப் போகிறார்கள் அல்லது தேவனை மறுதலித்தவர்களாக போய்விடுகிறார்கள். கர்த்தருக்குள் உங்களுடைய ஜீவியம் எப்படிப்பட்ட தாயிருக்கிறது? இந்த யோசுவா, காலேப் போன்றோரைப்போல உறுதியுடனிருக்கிறீர்களா அல்லது மற்ற ஜனங்களைப் பார்த்து அவர்கள் நம்மிலும்மேலானவர்கள் என்று பயந்துபோய், மற்றவர்களையும் சோரப்பண்ணுகிறீர்களா, கர்த்தர் மீது நம்பிக்கையுடனிருங்கள்.

யோசுவா யாரைச்சேவிப்பீர்கள் என்று இஸ்ரவேலரைக் கேட்ட கேள்விக்கு அவர்கள் சரியான பதிலைக் கொடுத்து உடன்படிக்கை பண்ணினார்கள்.

**முதலாவது,** கர்த்தரையே சேவிப்போம் அவரே நம்முடைய தேவன் என்று உறுதியுடன் சொன்னார்கள். இருந்தபோதிலும் யோசுவா அவர்களை நோக்கி; நீங்கள் கர்த்தரை சேவிக்கமாட்டீர்கள், அவர் பரிசுத்தமுள்ள தேவன், அவர் எரிச்சலுள்ள தேவன், உங்கள் மீறுதலையும் உங்கள் பாவங்களையும் மன்னியார் என்றான். இதைக்கேட்ட இஸ்ரவேல் ஜனங்கள் அப்படியல்ல நாங்கள் கர்த்தரையே சேவிப்போம் என்றார்கள். எத்தனை அருமையான பதில் என்று பார்த்தீர்களா. உங்களுடைய பதிலும் இதுவாகவே இருக்கட்டும். கர்த்தரை சேவிக்கும்போது கணக்கிலடங்கா நன்மைகளை அவரிடம் பெற்றுக்கொள்வீர்கள்.



**இரண்டாவதாக,** யோசுவா ஜனங்களை நோக்கி; அப்படியானால் இப்பொழுதும் உங்கள் நடுவில் இருக்கிற அந்நிய தேவர்களை அகற்றி விட்டு, உங்கள் இருதயத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு நேராகத் திருப்புங்கள் என்றான். அப்பொழுது ஜனங்கள் யோசுவாவை நோக்கி; நம்முடைய தேவனாகிய கர்த்தரையே சேவித்து, அவர் சத்தத்திற்கே கீழ்ப்படிவோம் என்றார்கள். இப்படிப்பட்ட கீழ்ப்படிதலை நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மிடமும் எதிர்பார்க்கிறார். அவர் ஒருவருக்கே கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தைக்கு செவிகொடுங்கள். பின்பு யோசுவா ஜனங்களோடே உடன்படிக்கைபண்ணி, அதைப்பிரமாணமும் நியாயமுமாக ஏற்படுத்தினான்.

இந்த வார்த்தைகளை யோசுவா தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதி, ஒரு பெரிய கல்லை எடுத்து, அதை அங்கே கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தின் அருகில் இருந்த கர்வாலி மரத்தின்கீழ் நாட்டி எல்லா ஜனங்களையும் நோக்கி; இதோ, இந்தக் கல் நமக்குள்ளே சாட்சியாயிருக்கக்கடவது; கர்த்தர் நம்மோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் இது கேட்டது, நீங்கள் உங்கள் தேவனுக்கு விரோதமாகப் பொய்சொல்லாதபடிக்கு, இது உங்களுக்குச் சாட்சியாயிருக்கக்கடவது என்று சொல்லி யோசுவா ஜனங்களை அவரவர் சுதந்தரத்திற்கு அனுப்பிவிட்டான். அன்பரே, நீங்கள் கர்த்தரையே சேவிப்பீர்களா? அவரையே சேவிக்கும்படியாக இயேசுகிறிஸ்துவின் உடன்படிக்கையின் இரத்தத்தினால் நீங்கள் விலைக்கு வாங்கப்பட்டவரா? இல்லையேல் அவருடைய இரத்தத்தினால் கழுவப்படுங்கள்.

### கேள்வி

**வேறே தேவர்களை சேவித்தால் என்ன நடக்கும்?**

யோசுவாவின் நாட்களில் இருந்த அந்தச் சந்ததியார் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டபின்பு, கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று.

"அவர்கள் கர்த்தரைவிட்டு, பாகாலையும் அஸ்தரோத் என்னும் கடவுளையும் சேவித்தார்கள். அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமூண்டவராகி, அவர்கள் அப்புறம் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதபடி கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போட்டார்" என்று நியா.2:13,14 வசனங்களில் படிக்கிறோம். தேவனை அறிந்து அவரை தொழுது சேவியாமற்போனால் இவ்விதமாக

உங்களையும் விற்றுப்போடுவார். ‘‘கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது’’ (சங்.144:15). நீங்கள் பாக்கியமுள்ள ஜனமாக இருக்க கர்த்தரைசேவியுங்கள்.

## 6. கர்த்தர் நம்மோடிருக்க நாம் செய்ய வேண்டுவதென்ன?

## What Should We do to the Lord be with us?

இக்கேள்விக்கு பலர் பலவிதமாக பதில் அளிப்பார்கள். ஒருவர் சொல்லுவார் நீங்கள் காலை எழுந்தவுடன் நன்கு குளித்துவிட்டு பின்பு வேலைகளை செய்யவேண்டும் அப்பொழுது கர்த்தர் உங்களோடிருப்பார் என்று, மற்றொருவர் சொல்லுவார் தீட்டான ஒன்றும் தொடக்கூடாது அப்பொழுது கர்த்தர் உங்களோடிருப்பார். இந்த விதமான போதனைகள் மாம்சத்தை பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றுக்கும் பயன்படாது. கர்த்தர் நம்மோடிருக்க நாம் செய்யவேண்டியது என்ன என்பதைப் பற்றித்தெரிந்துகொள்ள நாம் முதலாவது வேதாகமத்திற்குச் செல்லவேண்டும். வேதமே எல்லாவிதமான கேள்விகளுக்கும் பதிலாக இருக்கிறது.

ஈசாக்கை நீங்கள் அறிவீர்கள். அவனோடு கர்த்தர் இருந்தார். பலமுறை உபத்திரவம் கொடுத்தால் யாருக்கும் கோபம் வந்துவிடும். ஆனால் ஈசாக்குக்கு அந்தவிதமான கோபம் எழும்பவில்லை. அவன் தான் தங்கியிருந்த தேசத்தில் விதை விதைத்தான் கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான். இதை பார்த்த யாருக்குத்தான் பொறாமை எழும்பாமல் இருக்கும். அத்தேசத்து ஜனங்கள் ஈசாக்கின் மீது பொறாமை கொண்டு அவன் வெட்டின துரவுகளையெல்லாம் தூர்த்துப்போட்டார்கள்.

இதனால் அவன் அவர்களோடு வாக்குவாதம் பண்ணாமல் வேறே இடத்திற்கு கடந்துசென்று அங்கே ஆபிரகாம் மரித்தபின்பு பெலிஸ்தர் தூர்த்துப்போட்ட துரவுகளை மறுபடியும் தோண்டி பண்படுத்தினான். கேராரூர் மேய்ப்பர் இந்தத் தண்ணீர் தங்களுடையது என்று சொல்லி, ஈசாக்குடைய மேய்ப்பருடனே வாக்குவாதம் பண்ணினார்கள். இதனால் அங்கிருந்து சென்று வேறே துரவுகளை வெட்டினான். அங்கும் வந்து வாக்குவாதம் பண்ணினார்கள். பின்பு வேறொரு துரவை வெட்டி ரெகொபோத் என்று பேரிட்டான் அங்கு அவர்கள் வாக்குவாதம் பண்ணவில்லை. கேராரூர் மக்கள் ‘‘நிச்சயமாய் கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார் என்று கண்டோம்; ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடு உண்டாக



வேண்டும் என்று நாங்கள் நிர்ணயம் பண்ணினோம்’’ என்று சொல்லி அவனிடம் சென்றார்கள் (ஆதி.26:28). கர்த்தர் நம்மோடு இருப்பாரானால் சத்துருக்களும் நம்மோடுகூட சமாதான உடன்படிக்கை பண்ணுவார்கள் என்ற வசனப்படி ஈசாக்குடன் வாக்குவாதம் செய்யாமல், சமாதான உடன்படிக்கை பண்ணினார்கள். கர்த்தர் ஈசாக்குடன் இருந்தார். அதைப்போல யோசேப்பை பாருங்கள். அவனுடைய சகோதரர்கள் அவனைத் தூக்கி 20 வெள்ளிக்காசுக்கு மீதியானியரிடம் விற்றுப்போட்டார்கள். அவனோ எகிப்துக்கு கொண்டு போகப்பட்டான். பார்வோனுடைய பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் அவனை அவ்விடத்திற்குக் கொண்டுவந்த இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கினான். இப்படி அடிமையாக விலைக்கு விற்கும்போது யோசேப்பின் மனது என்னபாடுபட்டிருக்கும் என்பதை யோசித்துப்பாருங்கள்.

சிலருக்கு சில பாடுகள் வந்தவுடன் எங்கே கர்த்தர் என்னை கைவிட்டுவிட்டார் என்று சொல்லி அங்கலாய்த்துக்கொள்வார்கள். ஆனால் யோசேப்பு கர்த்தர் மீது நம்பிக்கையாயிருந்தான். ஆகையால் ‘‘கர்த்தர் யோசேப்போடே இருந்தார். அவன் காரியசித்தியுள்ளவனானான்; அவன் எகிப்தியனாகிய தன் எஜமானுடைய வீட்டிலே இருந்தான். கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு; யோசேப்பினிடத்தில் தயவுவைத்து அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்’’ என்று ஆதி.39:2-4 வசனங்களில் வாசிக்கிறோம்.

கர்த்தர் அவனோடிருக்கிறார் என்பதை அந்த எகிப்து தேசத்து மனிதனாகிய போத்திபார் எப்படி அறிந்திருப்பான். அவனுடைய கிரியைகளை பார்த்திருப்பான். அவனுடைய பேச்சை கவனித்திருப்பான், அவனுடைய வேலையைக் கவனித்திருப்பான் இப்படி அவனுடைய நடபடிகளை கவனித்து பார்த்ததில் அவனுடைய உண்மையை அறிந்து அவன் ஒரு பக்தியுள்ள மனிதன், அவனோடு கர்த்தர் இருக்கிறார். அவன் காரியசித்தியுள்ளவாய் இருக்கிறான் என்று கண்டறிந்திருப்பான் அல்லவா? பாவத்துக்கு பங்காளியாக யோசேப்பு இருந்திருப்பானேயானால் அவனோடு கர்த்தர் இருந்திருக்கமாட்டார்.

ஆனால் தான் விற்கப்பட்ட விதத்தை நினைத்து கலங்காதவனாயும், நம்பிக்கையில் உறுதியுள்ளவனாயுமிருந்தான். இவனுடைய பக்தியின் வாசனை போத்திபாருக்கு தெரியவந்திருக்கிறது என்றால் இவன் கர்த்தருக்கு எப்பேர்பட்ட தாசனாக இருந்திருப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள்.

மோசே சிறுபிள்ளையாயிருக்கும்போது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன். இஸ்ரவேல் மக்களை வழிநடத்தும்படியாக தேவன் அவனை தெரிந்துகொண்டார். ஆரோனும், மிரியாமும் மோசேயின் உடன்பிறந்தவர்கள். இவர்கள் கர்த்தர் மோசேயைக் கொண்டுமாத்திரம் பேசினாரோ எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்று மோசே விவாகம்பண்ணியிருந்த எத்தியோப்பிய ஸ்திரீயினிமித்தம் மோசேக்கு விரோதமாக பேச ஆரம்பித்தனர். இதனால் கோபம் கொண்ட கர்த்தர் ஆரோனையும் மிரியாமையும், மோசேயையும் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வரும்படி அழைத்தார்.

‘‘கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரவாசலிலே நின்று, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார், அவர்கள் இருவரும் போனார்கள். அப்பொழுது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன். நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்படியிருக்க நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச, உங்களுக்குப் பயமில்லாமற்போனதென்ன என்றார்’’ (எண்.12:4-8).

இங்கே மோசேயோடு கர்த்தர் இருக்கிறதை அவரே அவருடைய வாய்மொழிகளைக்கொண்டு சொல்கிறதை படிக்கிறோம். மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் என கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது. ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார். சாந்தகுணமுள்ளவர்கள் பூமியை சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று ஆண்டவர் இயேசு தமது மலைப்பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார். நீங்கள் சாந்தகுணமுள்ளவர்களாக இருப்பீர்களானால் கர்த்தர் உங்களோடு இருப்பார்.

மோசேக்கு பின்பு இஸ்ரவேலை வழிநடத்தின யோசுவாவோடும் கர்த்தர் இருந்தார். ஆறு லட்சம் பேரில் யோசுவாவும் காலேபும் கர்த்தரையும் அவருடைய வாக்குதத்தங்களையும் உறுதியாகப் பற்றிக்கொண்டவர்கள். எகிப்திலே புறப்பட்டதில் இந்த யோசுவாவும் காலேபும் தவிர ஒருவரும் கானானுக்குள் பிரவேசிக்கவில்லை என்று வேதம் போதிக்கிறது. கர்த்தரைப் பற்றிக்கொண்டதில் யோசுவா மிகவும் உறுதியானவன். அவன் ஜனங்களைப் பார்த்து ‘‘கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள்



வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்’’ (யோசு.24:15). தானும் தன் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்ற உறுதியோடிருந்தான்.

இந்தவிதமான உறுதிப்பாடு நமக்குள் இருக்கிறதா? குடும்பத்தில் கணவன் ஒரு வழியிலும் மனைவி ஒருவழியிலும் சென்றால் எப்படியிருக்கும். அநேக குடும்பங்கள் இப்படித் தான் இருக்கிறது. இப்படியிருக்கும் வேளையில் அவர்கள் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெறமுடியாது. வீட்டில் எப்பொழுது பார்த்தாலும் சண்டையும் சச்சரவுமாயிருக்கும். வாழ்க்கையில் நிம்மதியை இழந்தவர்களாயிருப்பார்கள். இதிலிருந்து விடுபட யோசுவாவைப்போல நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்ற உறுதியோடிருங்கள். அப்பொழுது கர்த்தர் யோசுவாவோடு இருந்ததுபோல உங்களோடும் இருப்பார்.

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுலோடு கர்த்தர் இருந்தார் என காண்கிறோம். அநேக சீஷர்களை கர்த்தர் தமது ராஜ்யத்தில் பயன்படுத்தினார். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுலை விசேஷவிதமாக பயன்படுத்தியதை நாம் அவருடைய நிருபங்களின் வாயிலாகவும் குறிப்பாக அப்போஸ்தலநடபடிகள் புஸ்தகத்திலிருந்தும் அறிகிறோம். ஒருமுறை ஆலோசனை சங்கத்தில் பவுல் விசாரிக்கப்படும்போது மிகுந்த கலகம் உண்டானது. அப்போது சேனாபதி பயந்து, பவுலைக் கோட்டைக்குள்ளே இழுத்துக்கொண்டுபோகும்படி கட்டளையிட்டான்.

‘‘அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று; பவுலே, திடன்கொள் நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார்’’ (அப்.23:11). பவுலுடைய வாழ்க்கையில் அநுதினமும் போராட்டம் இருந்தது. அவனை கொலைசெய்து போடும்படி யூதரில் சிலர் ஒருமித்து, தாங்கள் பவுலைக் கொலைசெய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம்பண்ணிக் கொண்டார்கள். இப்படிக் கட்டுப்பாடு பண்ணிக்கொண்டவர்கள் நாற்பதுபேருக்கு அதிகமாயிருந்தார்கள். இச்செய்தியைக் கேள்விப்பட்ட சேனாபதி நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டுபேரை அழைத்து, செசரியாபட்டணத்திற்குப் போகும்படி இரு நூறு காலாட்களையும், எழுபது குதிரை வீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும் இராத்திரியில் மூன்றாம்மணி வேளையிலே ஆயத்தம்பண்ணுங்களென்றும் பவுலை ஏற்றி, தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்குப் பத்திரமாய்க் கொண்டுபோகும்படிக்குக் குதிரைகளை ஆயத்தப்படுத்துங்களென்றும் சொன்னதுமன்றி, ஒரு நிருபத்தையும்

எழுதினான். பவுலுக்கு இப்படிப்பட்ட பாதுகாப்பு இருந்ததற்கு காரணம் அவனோடு கர்த்தர் முன்னமே பேசியிருந்தார். நீ என்னைக் குறித்து ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டுமென்று. இப்படியாக கர்த்தர் பவுலோடு இருந்து பெரிய காரியங்களைச் செய்தார்.

**கேள்வி**

**இன்று கர்த்தர் நம்மோடிருக்க நாம் என்ன செய்யவேண்டும்?**

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" என்கிறார் (வெளி.3:20). உங்களுடைய இருதயக்கதவை தட்டிக்கொண்டிருக்கும் இயேசுவின் சத்தத்திற்கு செவிகொடுத்து, கதவை திறவுங்கள் அப்பொழுது அவர் உங்களோடிருப்பார். கர்த்தருடைய சத்தம் கேட்டும் அதற்கு நீங்கள் கீழ்ப்படியாமல் இருப்பீர்களானால், அவர் உங்களோடிருக்கும் ஆசீர்வாதத்தை இழப்பீர்கள்.

முதல் நூற்றாண்டு காலத்தில் இருந்த அப்போஸ்தலர்கள் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உலகமெங்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி தங்களை அர்ப்பணித்தனர். கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி அவர்களோடிருந்து கிரியை நடப்பித்தார். அவர்களால் அறிவிக்கப்பட்ட சுவிசேஷம் இன்றும் பலன் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் ஆசிய முழுமைக்கும் அப்பொழுதே சுவிசேஷம் அறிவித்தேன் என்கிறார். இன்று கர்த்தர் உங்களோடிருக்க அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுங்கள்.

## 7. பரிசேயன் வீட்டில் கர்த்தர்

## The Lord Was In Pharisee`s House

**ஆ**ண்டவர் இயேசு இப்பூமியில் தம்மை ஏற்றுக்கொண்ட எல்லா இடங்களுக்கும் சென்றார் என நான்கு சுவிசேஷ புத்தகங்களிலும் படிக்கின்றோம். பரிசேயர்கள் தங்களை நீதிமான்களாக எண்ணக் கூடியவர்கள். இயேசுவின் உபதேசத்தில் குற்றம்பிடிக்கிறவர்கள். ஆகையால் பரிசேயர்களுடைய உபதேசத்தை கர்த்தர் புளித்தமாவோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். மேலும் இவர்கள் மோசேயினுடைய சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொள்ளுங்கள், அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள். ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள் சொல்லியும்



செய்யாதிருக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறதை நாம் மத்.23:3-ம் வசனத்தில் வாசிக்கிறோம்.

இப்படிப்பட்ட பரிசேயனுடைய அழைப்பை ஏற்று ஒரு முறை கர்த்தர் அவனுடைய வீட்டில் பந்தியிருந்தார் என லூக்.7:36-ம் வசனத்தில் படிக்கிறோம். பரிசேயர்கள் யார்? அவர்கள் எப்படிப்பட்டவர்? என்பதை அறிந்தும் அவர் அவனுடைய அழைப்பை ஏற்றார். கர்த்தர் ஒருவரையும் புறம்பே தள்ளாதவர் அல்லவா! ஆகையால், பரிசேயனுடைய அழைப்பை ஏற்று அவன் வீட்டிற்குச் சென்றார். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு; கதவைத் திறந்தால், அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" என்கிறார் (வெளி.3:20).

ஆண்டவருடைய சத்தம்கேட்டு இருதய கதவை யார் திறக்கிறார்களோ அவர்களோடே கர்த்தர் போஜனம்பண்ணும்படியாக வருவார். இன்று நீங்கள் கர்த்தருடைய சத்தம்கேட்பீர்களானால், உங்களுடைய இருதயத்தை தட்டிக்கொண்டிருக்கும் இயேசுவின் சத்தத்திற்குச் செவிகொடுங்கள். அவர் உங்களோடு வந்து போஜனம்பண்ணுவார். பரிசேயனுடைய அழைப்பை ஏற்று அவனுடைய வீட்டிற்குச் சென்ற இயேசுகிறிஸ்து உங்களுடைய அழைப்பையும் ஏற்றுக்கொள்வார்.

இயேசுவானவர் பரிசேயனுடைய வீட்டில் பந்தியிருக்கும் போது; "பாவியாகிய ஒரு ஸ்திரீ ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டு வந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்" (லூக்.7:37,38). இந்த பாவியாகிய ஸ்திரீ பரிசேயனுடைய வீட்டிற்கு மற்ற நாட்களில் வந்திருக்க முடியாது. ஏனெனில் அவன் இவளை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டான்.

பரிசேயர்கள் தங்களை நீதிமான்களென்றும் மற்றவர்களை பாவிகள் என்றும் கருதக்கூடியவர்கள். இயேசுவானவர் பரிசேயனுடைய வீட்டில் இருந்தபடியால் இவள் துணிந்து பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்தாள் என அறிகிறோம். பரிசேயனுடைய வீட்டிற்குள் பிரவேசித்த இவள் பரிசேயனையோ, மற்றவர்களையோ சந்திக்காமல் இயேசுவின் பின்னாக வந்து, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் பாவங்களை கண்ணீரால் சொல்லி அறிக்கையிட்டு, அவருடைய பாதத்தை முத்தஞ்செய்தாள்.

அப்போஸ்தலனாகிய யோவான் இப்படியாக எழுதுகிறார்;

‘‘நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்’’ (1யோவா.1:9). மேலும், பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் என்ற வசனத்திற்கேற்ப இவள் இயேசுவின் சமூகத்தில் தன்னுடைய பாவங்களை கண்ணீரால் அறிக்கையிட்டாள்.

இச்சம்பவத்தை பார்த்துக்கொண்டிருந்த அந்த வீட்டு பரிசேயன் தனக்குள்ளே முறுமுறுத்து இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். அநேகர் இவ்விதமாகத்தான் மற்றவர்களைப் பார்க்கிறார்கள். கர்த்தர் அவ்விதமாக பார்ப்பாரேயானால் நீதிமான் ஒருவனாகிலும் இல்லை என அறிகிறோம். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; ‘‘பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்’’ என்று எழுதுகிறார் (1தீமோ.1:15).

ஆண்டவர் இயேசு உலகத்தில் வந்ததின் நோக்கமே பாவிகளை இரட்சிக்கவும் பரலோகம் கொண்டுசேர்க்கவுமே. இதை அறியாத சீமோன் என்ற அந்த பரிசேயன் முறுமுறுத்தான். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக; ‘‘சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும் என்றார். அதற்கு அவன்; போதகரே, சொல்லும் என்றான். அப்பொழுது அவர்; ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார். சீமோன் பிரதியுத்தரமாக; எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான்; அதற்கு அவர்; சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி, ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி; இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே, நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசவிலை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள். ஆதலால் நான்



உனக்குச் சொல்லுகிறேன்; இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது;’’ என்றார் (லூக்.7:40-48).

பரிசேயனிடத்தில் ஒரு சம்பவத்தைச் சொல்லி அவனிடத்திலிருந்தே அதற்கான பதிலை பெற்று அவனை சிந்திக்கும்படியாக வைத்தார். எத்தனை அருமையான காரியம்! நாமும்கூட சிலவேளைகளில் பாவஞ்செய்கிற ஜனங்களைத் தவறாக நினைக்கிறோம். சிலர் அதிகமாக பாவஞ்செய்திருந்தாலும் அவர்கள் தேவனிடத்தில் அதிக அன்பாய் இருக்கும்போது பாவமன்னிப்பைப் பெறுவார்கள். ஆகையால் நாம் செய்ய வேண்டுவதென்ன? அதிகமாய் தேவனிடத்தில் அன்பு செலுத்தவேண்டும். ‘‘நமக்குள் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர் களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது’’ (1யோவா.1:8).

பரிசேயனுடைய வீட்டில் இயேசுவின் பாதத்தில் கண்ணீர் விட்டு, தன்னுடைய மகிமையான கூந்தலால் அவருடைய கால்களைத்துடைத்த அந்த பாவியான ஸ்திரீயின் அன்பு எவ்வளவு பெரிது என்று பார்த்தீர்களா? ஒரு ஸ்திரீக்கு முக்காடாக கொடுக்கப்பட்டிருப்பது அவளுடைய கூந்தல். அதுமட்டுமல்ல ஒரு ஸ்திரீக்கு மகிமையாக இருப்பதும் அவளுடைய தலைமுடிதான். அதை இயேசுவின் கால்களைத் துடைக்க பயன்படுத்தினாள். ஸ்திரீகளுடைய சரீரத்தில் மிக உயர்வாக மதிக்கக்கூடியதும் அவர்களுடைய கூந்தல்தான். ஸ்திரீகளுக்கே மகிமையாக இருக்கிற அவளுடைய கூந்தலினால் பரிசுத்தமான ஆண்டவருடைய கால்களைத் துடைக்க அவள் தயங்கவில்லை.

ஆண்டவரை அழைத்த பரிசேயனோ! அவருடைய கால்களை கழுவ தண்ணீர் தரவில்லை, அவரை முத்தஞ் செய்யவில்லை, அவருடைய தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ, இவையெல்லாம் செய்தாள். ஆண்டவரின் மீது எந்த அளவு அன்பு கொண்டிருந்தாள் இப்படி விலையேறப்பெற்ற பரிமள தைலம் வாங்கிக்கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசியிருப்பாள் என்பதை எண்ணிப்பாருங்கள். நீங்கள் இயேசுவின் மீது அன்புள்ளவர்களாயிருக்கிறீர்களா? அப்படியானால் இயேசுவுக்காக இதுவரை நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? அவர் உங்களுடைய பாவங்களை மன்னிக்கும்படியாக சிலுவையில் தன்னுயிரை கொடுத்தார். அவருடைய இரத்தத்திற்கு நீங்கள் விலைகொடுக்கமுடியாது பின்பு எதைக்கொடுக்கப்போகிறீர்கள்?

உங்களுடைய இருதயத்தில் அவருக்கு முதலிடம்கொடுங்கள். பரிமளதைலம் பூசின அந்த ஸ்திரீயானவள் இயேசுவுக்கு முதலிடம் கொடுத்தாள். பரிசேயன் வீட்டில் எத்தனைபேர் இருந்தார்களோ நாம் அறியோம்

ஆனால் இயேசுவுக்கு அவள் பரிமளதைலம் கொண்டு சென்று பூசினாள். வசதிபடைத்த அந்த பரிசேயன் செய்யாத காரியத்தை இவள் செய்து இயேசுவின் அன்பை பெற்று பாவமன்னிப்பின் நிச்சயத்தைப்பெற்றாள். அழைத்த பரிசேயன் அவருக்கு, சரீரத்திற்கு வேண்டிய உணவுதான் கொடுக்கமுடிந்தது. அவரை தொடவும், அவர் கொடுக்கும் பாவமன்னிப்பையும் அவனால் பெறமுடியாமற்போனது.

ஆனால் நடந்தது என்ன? அழைக்கப்படாத பாவியாகிய ஸ்திரீ, இயேசு பரிசேயனுடைய வீட்டில் பந்தியிருக்கிறார் என்பதை அறிந்து அவருக்கு பரிமளதைலம் வாங்கி வந்து, அவருடைய பாதங்களில் பூசி, தன்னுடைய பாவங்களை நினைத்து பரிசுத்தரின் பாதங்களை தொட கிடைத்த பாக்கியத்தை எண்ணி அழுது, தன்பாவங்களை கண்ணீராக ஊற்றி, அவரிடத்திலிருந்து பாவமன்னிப்பைப்பெற்றாள். ஆகையால், ஆண்டவர் இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான் என்று சொல்லி; ''அவளை நோக்கி; உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்''.

''அப்பொழுது கூடப் பந்தியிருந்தவர்கள்: பாவங்களை மன்னிக்கிற இவன் யார் என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள்'' (லூக்.7:49). இதை அறிந்த கர்த்தர் ஒருமுறை பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை அறிய வேண்டுமென்று சொல்லி திமிர்வாதக்காரனை சுகப்படுத்தியதை நாம் லூக்.5:24,25 வசனங்களில் வாசிக்கிறோம். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட அவரில் அன்பு கூர்ந்து அவர் கட்டளைகளைக் கைக்கொள்.

**கேள்வி**

**பாவியாகிய அந்த ஸ்திரீயின் பாவங்கள் எப்படி மன்னிக்கப்பட்டது?**

ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால் அவளுடைய விசுவாசமே அவளுடைய பாவத்தை நீக்கியது. அதைத்தான் இயேசு இறுதியில் சொன்னார். ''அவர் ஸ்திரீயை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்'' (லூக்.7:50). **முதலாவது,** அவள் பாவங்களை மன்னிக்கும் இயேசுவிடம் வந்தாள். **இரண்டாவது,** அவள் இயேசுவின் பாதங்களை பிடித்துக்கொண்டு கண்ணீரால் நனைத்தாள்.

அதாவது தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்தாள். **மூன்றாவது** இயேசுவானவர் அவளை அனுப்பும் வரை விசுவாசத்துடன் அவரை விட்டு செல்லாமலிருந்தாள். அதுதான் அவளுடைய நம்பிக்கை. இந்த



நம்பிக்கையை உடையவளாக இருந்தபடியால் இயேசு அவளை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது சமாதானத்தோடே போ என்றார். அழைத்த பரிசேயனுக்கு சமாதானம் கிடைத்ததா? அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதா?

ஆனால் ஆண்டவர் இருக்கும் இடம்தேடி வந்த பாவிக்கு இவை இரண்டும் கிடைத்தது. நீங்கள் பாவமன்னிப்பைப் பெற இயேசுவண்டைவந்து, பரிசேயர்களைப்போல கேள்விகளைக்கேட்டு, காலத்தை வீணாக்காமல் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிந்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு, பரிசுத்தவான்களாக மாறுங்கள். நாங்கள் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம்.

## 8. பவுல் கர்த்தரை சேவித்த விதம்

## The Way Paul Served the Lord

**இ**ன்றைக்கு இருக்கிற ஜனங்கள் தேவன் எங்களுக்கு ஏதாவது உதவி செய்தால்தான் அவரை சேவிப்போம் என்று சொல்கிறார்கள். பொதுவாக ஜனங்கள் சபைகளுக்கும், தேவாலயத்திற்கும் செல்வது, கர்த்தர் எங்களுக்கு நன்மை செய்திருக்கிறார். ஆகையால் அவரை தொழுதுகொள்ளப்போகிறோம் என்பார்கள். கர்த்தர் எல்லோருக்கும் நல்லவராகவும் யாவரையும் நேசிக்கிறவராயும் இருக்கிறார். அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் நன்மைகளை பெற்று அநுபவிக்கும்போது எவ்விதமாக கர்த்தரை சேவிக்கிறோமோ அந்தப்படியே துன்பத்தின் வேளையிலும் கர்த்தரை சேவிக்கவேண்டும். அப்படிசெய்கின்றோமா?

**முதலாவது** அப்போஸ்தலனாகிய பவுல் துன்பத்தின் மத்தியிலும் கர்த்தரை சேவித்தார். ''வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன்'' என்கிறார் (அப்.20:19). நாம் கர்த்தரை சேவிக்க வெகு மனத்தாழ்மை இருக்கவேண்டும். சிலருக்கு மனத்தாழ்மையாய் இருப்பது பிடிக்காது. ஏன் மனத்தாழ்மையாய் நடக்கவேண்டும். தேவன் நம்மை உயர்த்தி வைத்திருக்கிறார் என்று சொல்லி மேட்டிமையாய் நடந்துகொள்வார்கள். ஆண்டவர் இயேசு வானத்தையும் பூமியையும் சகலத்தையும் சிருஷ்டித்தவர். அவர் இப்பூமிக்கு வரும்போது தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் என பிலிப்பியர் புத்தகத்தில் வாசிக்கிறோம்.

உன்னதமானவரே தம்மை தாழ்த்தியிருக்கும்போது நாமும் ஏன்

மனத்தாழ்மையாய் நடக்கக்கூடாது? ஆகையால் பவுல் சுவிசேஷ ஊழியத்தில் தம்மைத் தாழ்த்தினார். ''நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்'' என்கிறார் (1கொரி.9:19). பவுல் கமாலியேலின் பாதத்தருகே கற்றுக்கொண்டவர். அநேகரால் அறியப்பட்டவர். அவர் யாருக்கும் அடிபணிய வேண்டிய அவசியமில்லை. அப்படியிருந்தபோதும் அவர் அதிகமான ஜனங்களை ஆதாயப்படுத்த வேண்டும் என்பதற்காக தன்னைத்தானே அடிமையாக்கினார்.

அப்படி அடிமையாக்கி தன்னை தாழ்த்தினபடியால் ஆசிய முழுமைக்கும் கர்த்தருடைய ஊழியத்தை அவரால் செய்யமுடிந்தது. மேட்டிமையாக இருந்திருப்பாரேயானால் ஏழ்மையான ஜனங்களை அவர் சந்தித்து இருக்கமுடியாது. பவுலுக்கு அநேக இடங்களில் தங்க இடமில்லாமலும், சரியான வசதி வாய்ப்புகள் இல்லாமலும், இருந்தபோதிலும் கர்த்தருடைய பணியை மனத்தாழ்மையோடு செய்து மனத்தாழ்மையோடு தேவனை தொழுதுகொண்டு வந்திருக்கிறார். அநேகர் பரிசேயனைப்போல தேவனை தொழுது கொண்டு வருகிறார்கள்.

பரிசேயன் தேவாலயத்திலே நின்று: தேவனே நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் என்றான். தன்னை ஒரு நீதிமானாக பாவித்து மற்றவர்களை அற்பமாக எண்ணி, மனத்தாழ்மையாய் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணாமல் மற்றவர்களை குற்றப்படுத்தியும், தன்னை மேன்மைப் படுத்தியும் ஜெபம்பண்ணினான். நடந்தது என்ன? அவனுடைய ஜெபத்தைக் கர்த்தர் கேட்கவில்லை. ஆகையால், பவுலைப்போல வெகு மனத்தாழ்மையோடு கர்த்தரை சேவியுங்கள்.

**இரண்டாவது** பவுல் மிகுந்த கண்ணீரோடும் கர்த்தரை சேவித்தேன் என்கிறார். அன்பு வாசகரே, உன் வாழ்க்கையில் கண்ணீர் இல்லாமல் கர்த்தரை கண்டடைய முடியாது. வாழ்க்கையில் நாம் ஏன் கண்ணீர் சிந்தவேண்டும். கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் என்று அநேகர் சொல்வார்கள். ஆனால், கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுப்பார்கள்.

பவுல் பட்ட பாடுகளுக்கு அளவே இல்லை. அந்த அளவுக்கு இயேசுவின் நிமித்தம் நொறுக்கப்பட்டார். ஒரு முறை பவுலுடைய சுவிசேஷபயணத்தின்போது ஜனங்கள் பவுலுக்கு விரோதமாக எழும்பி



''ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள். அப்பொழுது ஜனங்கள் கூட்டங்கூடி, அவர்களுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போடவும், அவர்களை அடிக்கவும் சொல்லி; அவர்களை அநேக அடி அடித்த பின்பு, சிறைச்சாலையிலே வைத்து அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள்.

அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டிவைத்தார்கள். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்'' (அப்.16:21-25). சிலருக்கு ஒரு சிறிய பிரச்சனை வந்துவிட்டால் போதும் அதை பெரிதுபடுத்தி அதை சாக்காக வைத்துக்கொண்டு சபைக்கு வரமாட்டார்கள். அதனால் கர்த்தரை தேட மாட்டார்கள். ஆராதனைக்குச் செல்லாமல் அதையே பெரிதாக பேசிக்கொண்டு திரிவார்கள். அல்லது எங்களுக்கு வந்த பிரச்சனையை தேவன் கண்டும் காணாதவர்போலிருந்து விட்டார். அந்த தேவனை நாங்கள் ஏன் ஆராதிக்க வேண்டும்? என பல விதமான சாக்குபோக்குகளைச் சொல்லிக்கொண்டு, கர்த்தரை ஆராதிக்காமலும், கர்த்தரை விட்டு பின்வாங்கிப்போகிற ஜனங்களை பார்க்கிறோம்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நண்பரே, அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய ராஜ்யத்தினிமித்தம் பட்ட பாடுகளை அறிகிறோம். யாராவது கர்த்தர் நிமித்தம் அடியை வாங்கிக்கொண்டு கர்த்தரை துதித்துப்பாடுவார்களா? அவர்களோ கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அநேக அடிகள் அடிக்கப்பட்டு தங்களுடைய கால்கள் தொழுமரத்தில் கட்டப்பட்டு இரணவேதனை இருந்தபோதும் நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் கர்த்தரை துதிக்கிறதை நாம் வாசித்தோம்.

உங்களுக்கு இவ்விதமான பாடுகள் என்றாவது வந்து அதை நீங்கள் மறந்தவர்களாக கர்த்தரை சேவித்திருக்கிறீர்களா? இவ்வளவு அடிகள் அடிக்கப்பட்ட பவுல் கண்ணீர் விடாது இருந்திருப்பாரா? அவர் கண்ணீரோடு கர்த்தரை சேவித்திருப்பார் அல்லவா? நீங்களும் நானும் கண்ணீரோடும் கர்த்தரை தேட வேண்டும். நான் ஏன் கண்ணீரோடு கர்த்தரை சேவிக்கவேண்டும் என்று உன் வாழ்க்கையில் சொல்லாதே. அவர் உன் கண்ணீரைக் காண்கிற தேவன். உன் கண்ணீருக்கு பலன் உண்டு கலங்காதே!

**மூன்றாவதாக** பவுல் யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும் கர்த்தரைச் சேவித்தேன் என்கிறார். சோதனை வந்துவிட்டால் போதும் வேதனை தானாய் வந்துவிடும். அன்பானவர்களே, யாக்கோபு சொல்கிறார் சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான். சோதனை யாருக்குத்தான் வராமல் இருக்கிறது. ஆண்டவர் இயேசுவுக்கே சோதனை வந்தது. சோதனையைக் கொண்டுவந்த சாத்தனை, அப்பாலே போ சாத்தானே என்று சொல்லி ஆண்டவர் ஜெயித்தார். சோதனை வந்து விட்டால் கர்த்தரை மறந்துவிடக்கூடாது. அந்த சோதனையோடு தேவனை தேட வேண்டும் அவரை ஆராதிக்கவேண்டும்.

பவுலுக்கு வந்த சோதனை என்னவென்றால் பவுலை கொலை செய்யும்படியாக ஒரு முறை யூதர்கள் எத்தனிக்கும்போது பவுலை ஒரு சேனாபதியைக் கொண்டு கர்த்தர் விடுவித்தார். "அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று; பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சிகொடுக்கவேண்டும் என்றார். விடியற்காலமானபோது, யூதரில் சிலர் ஒருமித்து, தாங்கள் பவுலை கொலை செய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம்பண்ணிக் கொண்டார்கள். இப்படிக் கட்டுப்பாடு பண்ணிக்கொண்டவர்கள் நாற்பதுபேருக்கு அதிகமாயிருந்தார்கள்" என்று அப்.23:11-13-ல் வாசிக்கிறோம். அன்று யூதர்களின் இஷ்டத்திற்கு பவுலை ஒப்புக்கொடுத்திருந்தால் அவனை பீஸ் பீஸ்ஆக கொலைசெய்து போட்டிருப்பார்கள்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளையும், தம்மைநோக்கி வேண்டிக்கொள்ளுகிறவர்களையும் பாதுகாக்கிற தேவன். ஆகையால் அந்நாட்டு சேனாபதிக்கு இத்தகவல் கொடுக்கப்பட்டபோது அவன் பவுலை காப்பாற்ற நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டுபேரை அழைத்து, செசரியாபட்டணத்திற்குப் போகும்படி **இரு நூறு காலாட்களையும், எழுபது குதிரைவீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும், இராத்திரியில் மூன்றாம்மணி வேளையிலே ஆயத்தப்படுத்துங்களென்றும் சொன்னதுமன்றி, ஒரு நிருபத்தையும் கனம்பொருந்திய தேசாதிபதியாகிய பேலிக்ஸ்க்கு எழுதினான்.**

பவுல் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தபடியால், அவனுக்கு கர்த்தர் இக்கட்டு காலத்திலும் ஏற்படுத்தின பாதுகாப்பு எத்தனை பெரியது என்று பார்த்தீர்களா? ஆம், அன்பானவர்களே அவரை நேசிக்கிற, அவரை தொழுதுகொள்கிற அவரை ஆராதிக்கிற அனைவரையும் அவர் கண்ணின் மணியைப்போல பாதுகாத்து வழிநடத்துகிறார். நாம் மட்டும் எச்சூழ்நிலையிலும் கர்த்தரை சேவிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.



அப்போஸ்தலனாகிய பவுலுடைய மூன்றுவிதமான காலக்கட்டத்திலும் அவன் கர்த்தரை சேவிக்கிற விஷயத்தில் சோர்ந்து போகவில்லை என இச்செய்தியின் வாயிலாக அறிந்துகொண்டோம். மாம்சத்திலிருக்கிற நமக்கும் பல பாடுகள் பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். அதையெல்லாம் ஒரு பெரிய காரியமாக எடுத்துக்கொண்டு கர்த்தரை சேவியாமல் விட்டுவிடுவோமானால் எத்தனை பெரிய ஆசீர்வாதங்களை நாம் இழக்கிறோம் என்பதை எண்ணிப்பாருங்கள்.

நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் ஆதியிலே தேவன் அற்புதவிதமாக சிருஷ்டித்திருக்கிறார். ஆதாம் முதல் இன்று வரை மனிதன் இப்பூமியில் அநுதினமும் வேலை செய்து கொண்டு ஜீவிக்க வேண்டியவனாயிருக்கிறான். ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். வேலையாள் கூலிக்கு பாத்திரனாயிருக்கிறான். ஆகையால் நாம் கர்த்தருடைய கட்டளைபடி வாரத்தின் ஆறு நாட்களிலும் ஏதோ ஒரு வேலை செய்து ஞாயிற்றுக்கிழமை கர்த்தருடைய நாளாயிருக்கிறபடியால் அதில் நாம் அவரை ஆவியோடும் உண்மையோடும் சேவித்து அவருடைய கட்டளைகளை கைக்கொள்ளவும், அதை நிறைவேற்றவும் பிரயாசப்படவேண்டும்.

**கேள்வி**

**எந்த சூழ்நிலையிலும் சோர்ந்துபோகாமல் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருந்து அவரை சேவிக்க முடியுமா?**

முடியும். ஏனெனில் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. அவரால் எல்லாம் கூடும். சோர்வு எப்பொழுது வருகிறதென்றால் நம்மிடம் கொடுக்கப்பட்ட பொருள் எடுபடும்போது சோர்ந்துபோகிறோம். கொடுக்கப்பட்ட பொருளைப்போல பன்மடங்கு அதிகம் கொடுக்க வல்லவரை நாம் நினைப்போமானால் நாம் இழந்தது ஒன்றுமில்லை என்ற முடிவுக்குவருவோம்.

தாவீது பாடியதை ஆபகூக் நினைவுபடுத்துகிறார். "அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும, நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" என்கிறார் (ஆபகூக் 3:17,18).

நம்மிடம் இருக்கும் அனைத்தும்போய் விட்டாலும். கர்த்தர் நம்மோடு இருக்கிறார். அவர் ஒருபோதும் நம்மைவிட்டு போய்விடமாட்டார்.

அவர் நம்மோடு இருக்கும்வரை நாம் இழந்ததை நூறத்தனையாக பெற முடியும் இதை நீங்கள் நம்புகிறீர்களா? நம்புங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 9. நாம் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்?

## How Often We Forgive?

இந்தக் கேள்வியை அப்போஸ்தலனாகிய பேதுரு ஆண்டவர் இயேசுவைப் பார்த்துக்கேட்டான். ''என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபதுதரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (மத்.18:21,22). இன்றைக்கு இந்தவிதமான கேள்வி எல்லோருக்குள்ளுமே இருக்கிறது. ஏனெனில் என்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமானால் நான் மற்றவர்களை எத்தனை முறை மன்னிக்க வேண்டும்.

இங்கே பேதுரு ஏழுதரம் மட்டுமோ? என்று ஆண்டவர் இயேசுவைப் பார்த்துக் கேட்டான். அப்படியானால் அவன் கேட்டதில் ஒரு உண்மை என்னவென்றால் ஏழு என்பது பூரணமான எண்ணாக இருப்பதால், ஏழுமுறை தன் சகோதரனை மன்னித்துவிட்டால் பூரணமாக மன்னித்துவிட்டதாக அர்த்தம் என எண்ணி இப்படிக் கேட்டிருப்பானோ என்று நினைக்கத்தோன்றுகிறது. அதற்குக் கர்த்தருடைய பதில்: ஏழெழுபதுதரம் மட்டும் என்றார். அப்படியானால் ஏழெழுபதுதரம் ஒருவரை மன்னித்துவிட்டால் போதுமா? என்று நீங்கள் நினைக்கலாம். ஏழெழுபதுதரம் என்பது அதற்கு முடிவே இல்லை என்பதுதான் சரியான பதிலாக இருக்கும். எல்லாவற்றிற்கும் எல்லையுண்டு. ஆனால் மன்னிப்புக்கு எல்லையில்லை. மன்னித்துக்கொண்டே இருக்கவேண்டும். அது எப்படி முடியும் என்பீர்கள்.

அதற்கு கர்த்தர் கொடுக்கும் பதில் ''மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்'' (மத்.6:14,15). நாம் மற்றவர்களுடைய தப்பிதங்களை மன்னிக்கும்போது நம்முடைய தப்பிதங்களும் மன்னிக்கப்படும்.

''பரலோக ராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது என்ற



உவமையில், அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன் பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக்கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான்.

அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து; நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத்தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய் அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரன் கண்டு, மிகவும் துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள்.

அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து; பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினாலே அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி; அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்'' (மத்.18:23-35).

கர்த்தருடைய மன்னிப்பைப் பெறவேண்டுமானால் அவர் நம்முடைய தப்பிதங்களை மன்னித்ததைப்போல நாம் மற்றவர்களை மன்னிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். நம்முடைய தவறுகளை

எண்ணிப்பார்ப்போமானால் அவைகள் நமக்கே அருவருப்பாக காணப்படும். அந்த தப்பிதங்களை கர்த்தர் மன்னித்திருக்கும்போது நம் சகோதரர்கள் நமக்கு விரோதமாகச் செய்த குற்றம் எம்மாத்திரம்?

சிலர் தாங்கள் தவறே செய்யாதவர்கள் போல நாங்கள் என்ன தவறு செய்தோம்? வாழ்க்கையில் நான் பிறந்ததுமுதல் யாருக்கும் எந்த கெடுதலும் நினைத்ததும் இல்லை. அவர்களுக்கு விரோதமாக தவறு செய்ததுமில்லை என்று சொல்வார்கள். உண்மை என்னவென்றால் அப்படிச் சொல்கிறவர்கள்தான் அதிகமாக தவறுசெய்திருப்பார்கள். கர்த்தருடைய வேதம் சொல்கிறது "நமக்குள் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1 யோவா.1:8).

ஒரு பாவமும் செய்யாதவன் பூமியிலில்லை. எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம் என வேதம் போதிக்கிறது. ஆகையால் அன்பு நேயரே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட மற்றவர்கள் நமக்கு விரோதமாக செய்யும் குற்றங்களை மன்னிக்கும் போது நம்முடைய பாவங்கள் அதாவது குற்றங்கள் மன்னிக்கப்படும். மேலும் வாசிக்கிறோம் "நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" (மாற்.11:25).

மன்னிப்பு என்பது மிகவும் மகத்தான செயல். இதற்கு மனம் வேண்டும். பிறர் சொல்லி மன்னிப்பதைக் காட்டிலும் தானாக முன்வந்து மன்னிக்கவேண்டும். மன்னிப்பைப் பற்றி பேசி விடலாம். ஆனால் நடைமுறையில் அதை கொண்டுவரவேண்டும் அதுவே அதன் தனிசிறப்பு. பல முறை ஒரு சகோதரன் உங்களுக்கு விரோதமாக குற்றஞ்செய்துகொண்டே வந்தால் அதை உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுவே உண்மை. ஆனால் அவனை நீங்கள் மன்னிக்க வேண்டுமென்பது அதைக்காட்டிலும் உண்மை. ஆண்டவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: இடறல்கள் வராமல் போவது கூடாதகாரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ! இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்தில் தள்ளுண்டுபோவது அவனுக்கு நலமாயிருக்கும்.

ஆகையால் "உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், அவனைக் கடிந்துகொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக. அவன் ஒருநாளில்



ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து; நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார்" (லூக்.17:3,4).

எவன் ஒருவன் ஒருவனுக்கு இடையூறு செய்கிறானோ, அவனோ அவனைக் கெடுத்துக்கொள்கிறான். அப்படிப்பட்டவனுக்குரிய தண்டனையை கர்த்தர் இங்கே சொல்லுகிறார். அவனுடைய கழுத்தில் எந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்தில் தள்ளுண்டுபோனால் நலமாயிருக்கும். ஆக, அப்படிப்பட்டவனுக்கு கிடைக்கும் தண்டனை அதைப்பார்க்கிலும் பெரிதாக இருக்கும். ஆகையால் எவனால் இடறல்கள் வருகிறதோ, அவனை நாம் முதலாவது மன்னிக்கவேண்டும். கர்த்தர் ஒவ்வொருவரையும் மன்னிக்க அவர் கிருபை பொருந்தின வராயிருக்கிறார்.

"பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" என அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் ரோம சபையாருக்கு தேவ ஆவியானவர் எச்சரித்து புத்திசொல்லுகிறதை நாம் ரோம.12:19-21 வசனங்களில் வாசிக்கிறோம். நீங்கள் உங்கள் சகோதரர்கள் செய்யும் தவறுகளை மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? அல்லது அவர்களை பழிவாங்கும்படியாக எத்தனித்துக் கொண்டிருக்கிறீர்களா?

என் அன்பு சகோதர சகோதரிகளே நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். ஏனெனில் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும். இது தேவனுடைய வெளிப்பாடாக இருக்கிறது. ஆகையால் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து மற்றவர்கள் செய்யும் தப்பிதங்களை மன்னிப்போம் மறப்போம்.

இயேசு கிறிஸ்துவானவர் சிலுவையில் தொங்கியபோது "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்" (லூக்.23:34). அவரை வாரினால் அடித்து, அவருடைய வஸ்திரங்களைக் கழற்றி சிவப்பான மேலங்கியை அவருக்கு

உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்.

இப்படி அவரைப் பரியாசம்பண்ணினபின்பு அவரைச் சிலுவையில் அறைந்து கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். இப்படி தன்னை பரியாசம்பண்ணின ஜனங்களுக்காக கர்த்தர் உருக்கமாக பிதாவை நோக்கி, பிதாவே தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள் என்று ஜெபித்தார். எப்படிப்பட்ட உருக்கமான வேண்டுதல் என்று பார்த்தீர்களா? சிலுவையில் தொங்கும்போதும் அவர்களை மன்னித்தார். நீங்களும் உங்கள் ஜீவன் போகும்வரை மற்றவர்களை மன்னிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

**கேள்வி**

**நாம் எப்படி மற்றவர்களை மன்னிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்?**

மற்றவர்களுடைய தீமையான செய்கைகளை நினைத்துக் கொண்டேயிருப்பீர்களானால் நீங்கள் அவர்களை மன்னிக்க முடியாது. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என்பதை ஒரு நாளும் மறந்துபோய் விடக்கூடாது. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதினால் நம்மிடம் தேவனுடைய குணாதிசயங்கள் காணப்படவேண்டுமல்லவா? அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுகிறார்; ''இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல'' என்கிறார் (1 யோவா. 3:10).

ஆகையால் ''ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்'' (எபே. 4:32). தேவன் நம்முடைய குற்றத்தை எப்படி மன்னித்திருக்கிறாரோ அப்படி நீங்களும் உங்களுடைய சகோதரர்களுடைய குற்றத்தை மன்னித்து, மகத்துவமானவருடைய வழி செல்லுங்கள்.

**"கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது; அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான்; தீமை அவனை அணுகாது"**

**நீதி. 19:23**



## 10. கண்விழித்திரு

## Open Your Eyes

**க**ண்விழித்திருப்பதால் வரும் ஆசீர்வாதம் என்னவென்பதையும், கண்விழித்திருந்து ஜெபித்தவர்களையும், துன்மார்க்கனின் கண்விழிப்பு எப்படியிருக்கிறது என்பதையும் இச்செய்தி வேளையில் நாம் தியானிக்கவுள்ளோம்.

**முதலாவது** கண்விழித்திருப்பதால் வரும் ஆசீர்வாதம் என்னவென்பதை தியானிப்போம். ஒரு காரியத்தை செய்யும் முன் அதனால் வரும் நன்மையை முதலாவது அறிய முற்படுவோம். சாலொமோன் குறிப்பிடுகிறார் ''தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திரனாவாய்; கண்விழித்திரு, அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய்'' என்று (நீதி.20:13). கண்விழித்திருந்து வேலைசெய்கிற மனிதன் ஆசீர்வதிக்கப் படுகிறான். ஒரு வேலையைச் செம்மையாய் செய்யவேண்டுமானால் அவ்வேலையை ஜாக்கிரதையாய்ச் செய்யவேண்டும் அதுவும் கண்விழித்திருந்து செய்யவேண்டும். அப்பொழுது தான் அதை சிறப்புடன் செய்து முடிக்க முடியும். ஒருவேளை தூக்கத்தை விரும்பி தன் வேலையில் ஒருவன் கண்விழித்திராமல், தூங்கிவிடுவானேயானால் அவன் அந்த வேலையில் நஷ்டம் அடைவான் அல்லது முழுவேலையையும் இழக்கவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுவான்.

ஆகையால், கண்விழித்திரு அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய் என பரிசுத்தவேதம் போதிக்கிறது. காட்டு புஸ்பங்களையும், ஆகாயத்துப்பறவைகளையும் கவனித்துப்பாருங்கள் என்று நம் ஆண்டவர் சொல்வதை சற்று கவனமாக நோக்குங்கள். அதனிடத்தினின்று நாம் அநேக பாடங்களை கற்றுக்கொள்ளமுடியும். ''அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார்'' (சங்.147:9). உலகத்தில் எண்ணிமுடியாத மிருகஜீவன்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறதை நாம் அறிவோம். இவைகளை கர்த்தர் ஒவ்வொரு நாளும் போஷிக்கிறார்.

கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் கண்விழித்திருந்து அவரை நோக்கி ஜெபிக்கும்போது, உங்களுடைய வேண்டுதலைகேட்டு உங்களுக்கு ஆகாரத்தை வருஷிக்கப்பண்ணாமல் இருப்பாரா? காக்கைக் குஞ்சுகளுக்கு ஆகாரங்கொடுக்க அறிந்த கர்த்தர் தமது சாயலில் உண்டாக்கப்பட்ட

உங்களையும் போஷிக்க அறிந்திருக்கிறார். அவைகளைப்போல நீங்களும் அவரை நோக்கி பாருங்கள், அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவீர்கள்.

''எஜமான் வரும்போது விழித்திருக்கிறவர்களாகக் காண்பப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள்'' என்று லூக்.12:37-ல் வாசிக்கிறபடி விழித்திருக்கிற ஊழியக்காரராயிருங்கள். சில ஊழியக்காரர்கள் எஜமான் வர காலதாமதமாகும் என்று மெத்தனமாக இருந்து தூங்கிவிடுவார்கள். அப்படியில்லாதபடி, எப்பொழுதுவருவார் என்று காத்திருக்கிற மனுஷனுக்கு ஒப்பாகவும், ஆயத்தமுள்ள ஊழியக்காரனாயும், விழித்திருக்கிற வேலைக்காரனாயும் செயல்படுங்கள். அப்பொழுது பாக்கியவானாயிருப்பீர்கள். கண்விழித்திருக்கிறவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நீங்களும் ஆசீர்வதிக்கப்பட கண்விழித்திருந்து ஜெபியுங்கள்.

தன்னுடைய வாழ்நாளெல்லாம் கர்த்தரை நோக்கிக்கொண்டிருந்த ராஜாவாகிய தாவீதை குறித்து நாம் வாசிக்கும்போது, அவர் ''என் கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கிறது; அவரே என் கால்களை வலைக்கு நீங்கலாக்கிவிடுவார்'' என்று சொல்வதை சங்.25:15-ல் வாசிக்கிறோம். மனுஷருடைய கண்கள் நாட்டை ஆளும் ராஜாவை நோக்கி இருக்கும். ஆனால் இங்கே இஸ்ரவேலை ஆண்டுவந்த ராஜாவாகிய தாவீதின் கண்களோ கர்த்தரை நோக்கி இருந்ததாக வாசிக்கிறோம்.

தாவீது **எப்போதும்** என்ற ஒரு வார்த்தையை சொல்லுகிறார், அப்படியானால் அவர் எப்போதும் கர்த்தரையே நோக்கியவராக இருந்திருக்கிறார். சிலர் காரியம் கைகூடிவர மனுஷனை நோக்கிப் போகிறார்கள். ஆனால் தாவீதோ, எல்லா காரியத்துக்கும் தேவனையே நோக்கிப்பார்த்தார். ஆகையால் இக்கட்டுவேளையிலும் கர்த்தர் தாவீதை காப்பாற்றினார். சவுலின் கைக்கு தப்புவித்தார் என்றெல்லாம் காண்கிறோம். மனுஷன் வலையில் சிக்கவைக்கப்பார்ப்பான் ஆனால் கர்த்தரோ, அவரை நோக்கி இருக்கிறவர்களை வலைக்கு நீங்கலாக்கி விடுவிக்கிறார்.

**இரண்டாவது,** உலகத்தில் இருக்கிற அனைத்து ஜீவன்களும் கர்த்தரை நோக்கி இருப்பதாக தாவீது குறிப்பிடுகிறார்; ''எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது; ஏற்ற வேளையில் நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்'' என்கிறார் (சங்.145:15). நாமும் கர்த்தரை நோக்கி இருக்கும்போது நமக்கு ஒத்தாசை கர்த்தரிடத்திலிருந்து வரும். அவரே காரியத்தை செய்ய வல்லவர். அவரை நோக்கியிருப்பவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. தாவீதை பெலப்படுத்திய கர்த்தர் உங்களையும் பெலப்படுத்த வல்லவராயிருக்கிறார். நீங்கள் அவரைநோக்கி ஜெபியுங்கள்.



அவரையே நோக்கிக்கொண்டிருங்கள். மேலும் சங்கீதக்காரன் இப்படியாக எழுதுகிறார்; ''உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்'' என்கிறார் (சங்.119:148).

உங்களுக்கு இந்தவிதமான பழக்கம் உண்டா? கண்விழித்து குறித்த ஜாமங்களுக்கு முன்னே எழுந்து ஆண்டவருடைய வசனத்தை தியானியுங்கள். வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்து சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஆகையால் வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்படியாக குறித்த ஜாமத்துக்கு முன்பாக எழுந்திருங்கள். கண்விழித்திருந்து ஜெபியுங்கள் அப்பொழுது கர்த்தர் உங்கள் காரியங்களை வாய்க்கப்பண்ணுவார்.

ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்துக்கொண்டு ஜெபிக்கும்படியாக சென்றபொழுது அங்கே அவர்கள் நித்திரை செய்ததை நாம் மத்.26:38-46 வசனங்களில் வாசிக்கிறோம். அவரோ, மிக உருக்கமாக பிதாவைநோக்கி ஜெபித்தார். சீஷர்களோ நித்திரை மயக்கமாயிருந்தார்கள் என காண்கிறோம். அவர்களாலே ஒரு மணிநேரங்கூட கர்த்தரோடு விழித்திருந்து ஜெபிக்க முடியவில்லை. இன்றும் அநேகர் இப்படிதான் இருக்கிறார்கள். ஜெபக்கூட்டங்கள் நடத்துகிறார்கள் ஆனால் அங்கே ஜெபிப்பவர்கள் சிலராகத்தான் இருப்பார்கள்.

மாம்சம் பெலவீனமுள்ளதாயிருக்கிறது. ஆனால் ஆவியோ உற்சாகமாக இருக்கிறது. இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாக செயல்படுகிறது. முதலாவது முறை ஆண்டவர் ஜெபித்து விட்டு சீஷர்களைப் பார்க்கும்போது; அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? என்று கேட்டு நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். இதற்கு பின்பாவது அவர்கள் நித்திரை பண்ணாது ஜெபித்திருக்க வேண்டுமல்லவா? ஆனால் அவர்களால் அதுகூடாமற்போனது. இரண்டாவது முறையும் அவர் அவர்களை வந்துபார்க்கையில் அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரை மயக்கம் அடைந்திருந்தது.

ஆகையால் அவர்களை விட்டுப்போய் மூன்றாம் முறையும் பிதாவைநோக்கி ஜெபித்தார். பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து; இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள் என்று சொன்னார். எதற்காக சீஷர்களை அழைத்துக்கொண்டு சென்றாரோ அந்த நோக்கத்தை அறிந்த

பேதுருவும் மற்ற சீஷர்களும் ஆண்டவரோடு அதை நிறைவேற்றாமற் போனார்கள். காரணமென்னவென்றால் மாம்ச பலவீனத்தினிமித்தம் அவர்கள் நித்திரை மயக்கமாயிருந்தார்கள். இயேசுவோடு இருந்த சீஷர்களே இப்படியிருந்திருக்கிறார்கள் என்றால் இன்று சரிவர கர்த்தரை பற்றிக் கொண்டிராதவர்கள் எப்படியிருப்பார்கள்? அவர்கள் கனநித்திரையின் ஆவியை உடையவர்களாக இருப்பார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

24 மணி நேரத்தை ஒவ்வொரு நாளும் கழித்துக்கொண்டு வருகிறோம். நாம் ஒரு மணிநேரமாவது விழித்திருந்து ஜெபிக்கக் கற்றுக்கொள்வோம். 23 மணி நேரத்தை நமக்காக செலவு செய்வோம். இருக்கக்கூடிய நாட்களிலாவது இந்த தீர்மானத்தோடு செயல்படுங்கள். அதை இன்றே துவக்கும்படியாக உங்களை வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

**மூன்றாவதாக** துன்மார்க்கருடைய கண்விழிப்பு எப்படிப்பட்டதாக இருக்கிறது என்று தியானிப்போம். ‘‘திக்கற்றவர்களைப் பிடிக்க அவன் கண்கள் நோக்கிக்கொண்டிருக்கிறது’’ என சங்.10:8-ல் படிக்கிறோம். ஆம், அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்வதை துன்மார்க்கன் தவிர்த்துவிட்டு, அவர்களை பிடிக்க அவன் வகைதேடுகிறான். திக்கற்றவர்களுடைய நிலங்களை அபகரிக்கிறான். மானை வேட்டையாடும் சிங்கத்தைப்போல வேட்டையாடுகிறான்.

ஆனால் பரிசுத்த வேதம் நமக்குப் போதிப்பது என்ன? திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது. இதை தவிர்த்துவிட்டு ‘‘மாறுபாடானவைகளை யோசிக்கும்படி தன் கண்களை மூடி, தீமையைச் செய்யும்படி தன் உதடுகளைக் கடிக்கிறான்’’ என்று நீதி.16:30-ல் சாலொமோன் குறிப்பிடுகிறார். துன்மார்க்கனுடைய நினைவுகள் எவ்வளவு மோசமாயிருக்கிறது என்று பார்த்தீர்களா? ஆகையால் தான் துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் என வேதம் போதிக்கிறது. மேலும் ‘‘கண்சாடை காட்டுகிறவன் நோவு உண்டாக்குகிறான்; அலப்புகிற மூடன் விழுவான்’’ (நீதி.10:10).

கண்களை கர்த்தர் உண்டாக்கியதின் நோக்கம் நலமான காரியங்களை பார்க்கவும், நலமான காரியங்களை செய்யவும், கண்விழித்திருந்து ஜெபிக்கவுமே. இதை விட்டுவிட்டு சிலர் கண்களால் பேசி



மற்றவர்களுக்கு நோவு உண்டாக்குகிறார்கள். இப்படிப்பட்டவர்களை கர்த்தர் அருவருக்கிறார். இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு நண்பரே, நீ கண்விழித்திருந்து கர்த்தரை நோக்கி ஜெபி. உன் வேண்டுதலைக் காத்தர் கேட்டு உனக்கு நலமானதைச் செய்வார்.

**கேள்வி**

**கர்த்தருடைய கண்கள் எவர்களை நோக்கிப் பார்க்கிறது?**

கண்விழித்து ஜெபிக்கிறவர்களை மட்டுமல்ல, ‘‘கர்த்தருடைய கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது’’ என்று சாலொமோன் குறிப்பிடுகிறார் (நீதி.15:3). ஆம், கர்த்தருடைய கண்கள் எல்லோரையும் பார்த்துக் கொண்டிருக்கிறது. அநேகர் நினைக்கிறார்கள் கர்த்தர் பாரார், கவனியார் என்று. ‘‘காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ? இவைகளை உண்டாக்கின தேவனுக்கு மறைவான சிருஷ்டி ஒன்று உண்டா?

அன்பானவர்களே, மனிதனுடைய நினைவுகள் வீணாயிருக்கிறது. அவன் புல்லின் பூவைப்போல ஒழிந்துபோகிறான். கர்த்தருக்கு பயந்திரு. அவர் ஒவ்வொரு காரியத்தையும் கவனித்துக்கொண்டிருக்கிறார். நாமெல்லாரும் ஒருநாளிலே அவருக்கு கணக்கு கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஒவ்வொருநாளும் நாம் கணக்குப் பார்க்காமல் வாழ்ந்துகொண்டிருக்கிறோமா? பணம்பெற்றுக் கொள்ளாமல் சும்மா வேலை பார்ப்போமா? கணக்குப்பார்த்து வேலை பார்க்கிறோம் அல்லவா? அப்படியிருக்க நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டதற்கு கணக்கு கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆகையால், கர்த்தருடைய கண்கள் எவ்விடத்திலுமிருந்து நம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது என்ற சிந்தையோடிருப்போம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 11. இயேசுவின் சீஷர்கள் எப்படியிருக்கவேண்டும்?

## How Should Be The Disciples of Jesus?

இன்றைக்கு அநேக சீஷர்களை நாம் காண்கிறோம். அவர்கள் எல்லோரும் இயேசுவின் சீஷர்களா? இயேசுவின் சீஷன் எப்படிப்பட்டவனாயிருக்க வேண்டும்? அப்படிப்பட்டவர்களைக் குறித்து வேதாகமம் போதிப்பது என்ன? எவர்கள் சீஷர்கள், எவர்கள் சீஷர்கள் அல்ல. புதிய ஏற்பாட்டு சீஷர்கள் எப்படியிருந்தார்கள் என்பதை இந்நாளில்

தியானிக்கவுள்ளோம். **முதலாவது எப்படிப்பட்டவர்கள் இயேசுவின் சீஷர்கள் என்று தியானிப்போம்.**

**இயேசு சொல்கிறார்:** "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்கிறார்" (யோவா.13:35). இயேசுவின் சீஷனுக்கு இருக்க வேண்டிய தகுதிகளில் ஒன்று அன்பு. அந்த அன்பு இயேசுவின் ஊழியக்காரர்களிடத்தில் காணப்படுகிறதா? நான் இயேசுவுக்காக நிலத்தை விட்டேன், வீட்டை விட்டேன், தேசத்தை விட்டேன் என்று சொல்லிக்கொண்டே போகலாம் ஆனால் நீ கண்ட சகோதரனிடத்தில் அன்பு செலுத்துகிறாயா? என்பதுதான் வேதாகமம் கேட்கும் கேள்வியாக இருக்கிறது.

கண்ட சகோதரனிடத்தில் அன்பு செலுத்தாத நீ தேவனிடத்தில் எப்படி அன்பு செலுத்துவாய்? கர்த்தருடைய ஊழியக்காரர்கள் இருவர் சண்டையிட்டுக்கொண்டு ஊழியம் செய்தால் அவர்கள் சண்டைக்காரர்கள். அவர்கள் இயேசுவின் சீஷர்களும் அல்ல. இயேசுவின் ஊழியக்காரர்களும் அல்ல என்பதே உண்மை. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்று ஆண்டவர் மிகத்தெளிவாக போதித்திருக்கிறார்.

மேலும், தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:31,32). ஆண்டவருடைய உபதேசத்தில் நிலைக்காத ஒருவர் இயேசுவின் சீஷராக இருக்க முடியாது. விசுவாசித்த யூதர்கள் மோசேயின் கட்டளைபடி நடந்தவர்கள். யேகோவா தேவனை அதாவது ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோர் ஆராதித்து வந்த தேவனை தொழுதுகொண்டு வந்தவர்கள். அவர்களைப் பார்த்து இயேசு சொல்லுகிறார் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்று.

நீங்கள் யூத கோத்திரத்தை சேர்ந்தவராக இருக்கலாம், அல்லது ஆபிரகாமின் சந்ததியராயிருக்கலாம், யாராயிருந்தாலும் நீங்கள் இயேசுவின் உபதேசத்தில் நிலைத்திருந்தால் தான் அவருக்கு சீஷராயிருக்க முடியும் என்பதே உண்மை. அப்பொழுது சத்தியத்தையும் அறிவீர்கள் அந்த சத்தியம் உங்களை விடுதலையாக்கும். உபதேசத்தில் நிலைத்திராத ஒரு நபர் சத்தியத்தை அறியமுடியாது. அந்த சத்தியம் அவரை விடுதலை செய்யவும் முடியாது. சீஷனாயிருப்பதற்கு மற்றொரு தகுதி என்னவென்றால், அவர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடி தேவனை ஆராதிக்கிறவர்களாக இருக்கவேண்டும்.



ஆதி சீஷர்கள் கூடிவந்தார்கள். முதல் முதல் அந்தியோகியா பட்டணத்திலே கூடிவந்த சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கப்பட்டது. வாரத்தின் முதல் நாளிலே அப்பம்பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில் பவுல் செய்தி கொடுத்தார் என அப்.20:7-ல் வாசிக்கிறோம். ஆக ஒரு உண்மை சீஷன் அன்பு செலுத்தவேண்டும், ஆண்டவருடைய உபதேசத்தில் நிலைத்திருக்கவேண்டும், வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்கும்படியாக கூடிவரவேண்டும். இவனே மெய்யான சீஷனாயிருப்பான் என வசன ஆதாரத்தோடு தியானித்தோம். நீங்கள் இயேசுவின் சீஷர்களா? அப்படியானால் மேற்கண்ட வசனத்தோடு உங்களை ஒப்பிட்டுப்பாருங்கள்.

**இரண்டாவது எவர்கள் சீஷர்கள் அல்ல என்று பார்க்கும்போது;** "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார் (லூக்.14:26). அப்படியென்றால், உன் தாயையும் தகப்பனையும் கனம்பண்ணுவாயாக என்று மோசேயின் கட்டளையில் சொல்லப்பட்டுள்ளதே என்று நீங்கள் கேட்பீர்கள்.

ஆம், உண்மைதான் தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொலைசெய்யப்பட வேண்டும் என்பதும் அவருடைய கட்டளையாயிருந்தது. இங்கே வெறுக்கவேண்டும் என்றால் அவர்களை துன்புறுத்துவது அல்லது தள்ளிவிடுவது, அவர்களை கவனிக்காமல் விட்டுவிடுவது என்பதல்ல. முதலாவது, பிள்ளைகளே உங்கள் பெற்றாருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் என்ற வசனப்படி அவர்களுக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியவேண்டும். ஒருவேளை அவர்கள் விக்கிரகாராதனைக்காரராக இருக்கலாம் அல்லது கிறிஸ்துவின் உபதேசத்தை அறியாதவர்களா யிருக்கலாம்.

அப்படிப்பட்டவர்களை நாம் இயேசுவுக்கும் மேலாக அதிகமாக நேசிக்கும்போது அவர்கள் கர்த்தருடைய உபதேசத்திற்கு விரோதமான ஆலோசனையைக் கொடுத்து நம்மை விசுவாசத்தை விட்டு மறுதலிக்கச் செய்துவிடுவார்கள். ஆகையால் தான் என்னிடத்தில் வருகிறவன் தன் ஜீவனையும் வெறுக்கவேண்டும் என்று இயேசு சொல்லுகிறார். அப்படியானால் அவருக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். மேலும் "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்றார் (லூக்.14:27).

இயேசுவின் நாட்களில் அவருடைய பிறப்பு முதல் மரணம் வரை

அநேக பாடுகள் இருந்தது. அதைப்போல இயேசுவை பின்பற்றுகிற ஒவ்வொரு சீஷனுக்கும் பலவிதமான பாடுகள் உண்டு. அவைகளோடு தான் இயேசுவைப் பின்தொடரவேண்டும். அநேகர் பாடுகள் வந்தவுடன் விசுவாசத்தை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள்.

உபத்திரவங்கள் உண்டு ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவரோடு நாம் பாடுகளை அநுபவிப்போமானால் அவரோடு ஆளுகையும் செய்வோம். பாடுகளை கண்டு பயந்து ஓடுகிறவன் இயேசுவுக்கு சீஷனாயிருக்க முடியாது. மேலும், ‘‘உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்’’என்றார் (லூக்.14:33).

அதாவது, தன்னிடத்தில் இருப்பவைகளில் அதிகமான அன்பு செலுத்துவது, இதுவும் நம்மை கிறிஸ்துவை விட்டு பின்வாங்க செய்துவிடும். உதாரணமாக, ஒரு நாய் உங்களுடைய வீட்டில் இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அது உங்களோடு மிகவும் நன்றாக பழகுகிறது, உங்களோடு விளையாடுகிறது, மிகவும் நன்றியுள்ளதாக இருக்கிறது. அதற்கு ஏதாவது ஒரு பிரச்சனை வந்துவிட்டால் உங்களால் பொருத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் நீங்கள் அதை அளவுக்கு அதிகமாக நேசித்தீர்கள். அது ஒருவேளை வியாதியாய் போய்விட்டால், நீங்கள் ஞாயிற்று கிழமை ஆராதனைக்குக்கூட போகாமல் அதை கவனித்துக்கொண்டிருப்பீர்கள்.

ஆகையால் தான் தனக்கு உண்டானவைகளையும் வெறுக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அதுவே உங்களுடைய வாழ்க்கையில் விக்கிரகமாக மாறிவிடும். சில வேளைகளில் சரிவர கர்த்தரை பின்பற்றாததற்கு பணம், சொத்து, கல்வி, பதவி இதையே காரணம் காட்டி சாக்குபோக்கு சொல்ல ஆரம்பித்து விடுகிறோம் அல்லவா! ஆகையால், நமக்கு உண்டாயிருக்கிறவைகளிடம் ஆண்டவருக்கு மேலாக அன்பு செலுத்தக்கூடாது. அப்படி அன்பு செலுத்துவோமானால் நாம் இயேசுவின் சீஷர்களாயிருக்க முடியாது.

**மூன்றாவதாக புதிய ஏற்பாட்டு சீஷர்கள் எப்படியிருந்தார்கள் என்று காண்போம்.** அவர்களுக்கு வாரத்தின் முதல் நாளில் கூடி தேவனை ஆராதிக்கும் பழக்கம் இருந்தது என்று காண்கிறோம். இயேசுவானவர் மரித்து பின்பு உயிர்த்து 40 நாளளவும் அப்போஸ்தர்களுக்கு தம்மை வெளிப்படுத்திக் கொண்டிருக்கையில், சீஷர்கள் வாரத்தின் முதல் நாளில் யூதர்களுக்கு பயந்தபடியால் வீட்டை பூட்டி அங்கு ஆராதித்துக் கொண்டிருந்தார்கள். ‘‘கதவுகள்



பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார்’’ (யோவா.20:19).

ஆக, முதல் நூற்றாண்டு சீஷர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடி தேவனை தொழுதுகொண்டு வந்தார்கள், மேலும், ‘‘அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்’’ என காண்கிறோம் (அப்.2:42). அப்போஸ்தலர்கள் இயேசுவினிடத்திலிருந்து கற்றுக்கொண்டு மற்ற சீஷர்களுக்கு கற்பித்தார்கள். அந்த உபதேசத்தில் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் நிலைத்திருந்தார்கள். அவர்களிடத்தில் அந்நியோந்நியம் காணப்பட்டது, இயேசுவின் மரணத்தை நினைவுகூர்ந்தார்கள், ஜெபத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள், மேலும், சுவிசேஷத்தை உலகமெங்கும் பரப்புவதில் தீவிர கவனம் செலுத்தினார்கள். அந்நாட்களில் சீஷர்களுக்கு மிகுந்த உபத்திரவம் உண்டான போது ‘‘சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷவசனத்தை பிரசங்கித்தார்கள்’’ (அப்.8:4).

ஆக முதல் நூற்றாண்டு சீஷர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடி தேவனை ஆராதித்து இருக்கிறார்கள். வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்டு இயேசுவின் மரணத்தை நினைவு கூர்ந்திருக்கிறார்கள். மேலும், சுவிசேஷ வசனத்தை எல்லா இடங்களுக்கும், உபத்திரவத்தின் மத்தியிலும் எடுத்துசென்று, சுவிசேஷம் பரவ உதவியாயிருந்திருக்கிறார்கள். இந்தவிதமான சிந்தையுள்ள இயேசுவின் சீஷர்கள் இந்நாட்களில் எழும்பவேண்டும்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே, நீ இயேசுவின் சீஷனாயிருக்கின்றாயா? அல்லது சீஷனாயிருக்க முயற்சித்துக்கொண்டிருக்கின்றாயா? அல்லது சீஷனாயிருந்தும் அவருடைய உபதேசத்தின்படி ஜீவிக்காத பெயர் கிறிஸ்தவனாயிருக்கின்றாயா? உன்னை நீ ஆராய்ந்து பார். வேதவசனங்களோடு உன்னை ஒப்பிட்டுப்பார். உன்னை நீயே ஏமாற்றிக்கொள்ளாதே!

**கேள்வி**

**கர்த்தருடைய சீஷர்களுக்கு நாம் செய்யவேண்டிய பணி என்ன?**

‘‘சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்’’ (மத்.10:42). சுவிசேஷகன் சுவிசேஷத்தினால் போஷிக்கப்பட வேண்டும். ஆகையால் அப்படிப்பட்டவர்களை நாம் முதலாவது

கனம்பண்ணவேண்டும். இயேசுவின் நாமத்தினிமித்தம் அவர்கள் அந்த பணியைச் செய்துகொண்டுவருகிறார்கள். அவர்களுக்கு நாம் கொடுக்கும் ஒரு டம்ளர் தண்ணீருக்கும் பலன் உண்டு.

இதிலே குறிப்பாக நாம் கவனிக்கவேண்டிய ஒன்று, அவர்கள் கர்த்தருடைய உபதேசத்தை கொண்டு வந்திருக்கிறார்களா என்பதுதான். இன்றைக்கு கர்த்தருடைய நாமத்தை தரித்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் உள்ளத்திலோ வேதம் சொல்வதைப்போல பட்சிக்கிற ஓநாய்களாயிருக்கிறார்கள். அவர்களை உள்ளே ஏற்றுக்கொண்டால் மந்தையை ஓநாய்கள் பீறிப்போட்டுவிடும். ஆகையால் தான் யோவான் இது குறித்துச் சொல்லும்போது "ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்" என்கிறார் (2யோவா.10).

ஆகையால் முகதாட்சணியம் பாராமல், உங்களுடைய ஆத்துமாக்களை பாதுகாத்துக்கொள்ள, அவர்கள் கர்த்தருடைய ஊழியர்களா என பரிசோதித்து அவர்களை ஏற்றுக்கொண்டு நன்மைசெய்யுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 12. பிரதான கற்பனை

## The Great Commandment

**ஆ**ண்டவர் பிரதான கற்பனையைக் குறித்து போதிப்பதற்குக் காரணம் இருந்தது. அது என்னவென்றால், முற்பிதாக்களுக்கு கர்த்தர் மோசேயின் மூலமாக கொடுத்த அந்த முதலாம் கட்டளையில் அவர்கள் நிலைத்திருக்கவில்லை. இதுகுறித்து எபிரெய ஆசிரியர் குறிப்பிடுகையில்; "அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலை நிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று எபி.8:9-ல் படிக்கிறோம்.

ஒரு ஆசிரியர் பாடம் படித்து வரச்சொன்னால் மாணவர்கள் ஆயத்தமாக படித்துவருகிறார்கள். இது எதைக் காண்பிக்கிறது ஆசிரியருக்கு மாணவர் கீழ்ப்படிந்து செயல்படுவதைக் காண்பிக்கிறது. ஆனால் இஸ்ரவேல் மக்களோ கர்த்தர் கொடுத்த உடன்படிக்கையில் நிலைநிற்கவில்லை. அதற்கு அநேகர் கீழ்ப்படியவுமில்லை. வணங்கா கழுத்துள்ள மக்களாக வழி



விலகிப்போனார்கள். மேலும், உடன்படிக்கையின் வார்த்தைகளை எழுதிக்கொடுத்த கர்த்தருக்கு எரிச்சலை மூட்டினார்கள். ஓசியா தீர்க்கன் மூலமாக கர்த்தர் பேசும்போது; "என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்" என்கிறார் (ஓசி.8:12).

யாருக்கோ, எவருக்கோ என்பதைப்போல அவர்கள், கர்த்தர் தன்னுடைய விரலினால் எழுதிக்கொடுத்த கட்டளைக்கு கீழ்ப்படியாமல் அதை அவமாக்கிப்போட்டார்கள். இஸ்ரவேலை உண்டாக்கின தேவன், கிருபையும், மகத்துவமும் உள்ள தேவன். அவர்கள் வெகுவாய் அவருக்கு விரோதமாக நடந்தபோதிலும் அநேக தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களை எச்சரித்து வழிநடத்திக்கொண்டுவந்தார். அவர் தமது கிருபையின்படி அவர்களை இரட்சிக்க இரக்கமுள்ளவரானார்.

"ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்" (எபி.9:15). இந்த புது உடன்படிக்கை புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில் ஏற்படுத்தப்பட்டது.

வேதபாரகரில் ஒருவன் இயேசுவிடம் வந்து கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்று கேட்டான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால், இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிதான கற்பனை, இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்" (மாற்.12:30,31).

இந்த கற்பனையை அறிந்த வேதபாரகனிடத்தில் ஆண்டவர் இப்போதனையை எடுத்துரைத்தார். அவனோ, ஒரு இஸ்ரவேலன். இஸ்ரவேலர்கள் கற்பனையைக் கைக்கொண்டு நடக்கவேண்டும். ஆனால் அந்த உடன்படிக்கையில் அநேகர் நிலைநிற்கவில்லை என்பதை நாம் முன்பு தியானித்தோம். ஆகையால் அவனைப் பார்த்து: இஸ்ரவேலே கேள், என்று சொல்லி தம்முடைய போதகத்தை துவக்கி. உன் தேவனாகிய கர்த்தரிடத்தில்

முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை என்பதை அவனுக்கு நினைப்பூட்டினார்.

அன்பு வாசகரே, நீயும் உன்னுடைய வாழ்நாட்களில் உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடு அன்பு செலுத்து, அவர் உன் சிருஷ்டிகர் என்பதை ஒருநாளும் மறந்துபோகாதே. மோசேக்கு கர்த்தர் கொடுத்த அந்த முதலாம் உடன்படிக்கையில் நாம் இப்படியாக வாசிக்கிறோம். "என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர் களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்" என்கிறார் (யாத்.20:6). அந்த கற்பனையை அன்று கைக்கொண்டவர்களுக்கு மட்டுமல்ல; ஆயிரந்தலைமுறைக்கும் அந்த இரக்கம் நீடித்தது.

இந்த இரக்கத்தை நாம் ஆபிரகாம் வழியில் விசுவாசத்தின் மூலமாகவும், மற்றும் இயேசுவை ஏற்றுக்கொண்டதின் மூலமாகவும் பெற்றுக்கொள்கிறோம். மேலும், அவருடைய இரக்கத்தை பெற நீங்கள் ஒவ்வொருநாளும் பரிசுத்த வேதாகமத்தை நாடுங்கள். அதில் சொல்லப்பட்ட புதிதும் ஜீவனுமான உடன்படிக்கைக்கு செவிகொடுத்து கீழ்ப்படியுங்கள். வேதபாரகனாகிய எஸ்றா; "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும் அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" என்று எஸ்.7:10-ல் வாசிக்கிறோம்.

இஸ்ரவேலிலே அநேகர் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போனபோதிலும் எஸ்றாவைப்போல சிலர் கர்த்தருடைய வேதத்தை ஆராயவும் அதின்படி செய்யவும் தங்களுடைய இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்ததை காண்கிறோம். அதைப்போல புதியஏற்பாட்டு காலத்திலும் குறிப்பாக முதல்நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அதாவது பெரோயா பட்டணத்தார்கள் "மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்" என அப்.17:11-ல் படிக்கிறோம்.

இன்றைக்கு அன்புகூருகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருடைய கற்பனைக்கும் கட்டளைக்கும் கீழ்ப்படிந்து செயல்படுகிறார்களா என்று பார்க்கும்போது, இல்லை. இது குறித்து யோவான் குறிப்பிடுகையில்; "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாம்; அவருடைய கற்பனைகள்



பாரமானவைகளுமல்ல" (1யோவா.5:3). அன்பு செலுத்துகிறேன் என்று ஒருவன் சொல்லி அவன் தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளாதவனாயிருந்தால் அவனிடத்தில் தேவ அன்பு குடிகொள்ளுவதெப்படி? ஆகையால் நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூருவதாகும். கொர்நேலியுவைப் பற்றி அப்.10-ம் அதிகாரத்தில் படிக்கிறோம்.

அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான். கற்பனையைக் கைக்கொள்ளுகிறவன் இந்த கொர்நேலியுவைப்போல இருக்க வேண்டும். கொர்நேலியு இத்தாலியா பட்டாளத்தில் நூற்றுக்கு அதிபதி. அதிபதியாக இருப்பது என்பது ஒரு சாதாரண விஷயமல்ல. ஒரு பொறுப்புள்ள வேலை. அந்த வேலையில் அவனுக்கு இடையூறுகள், எதிர்ப்புகள் இருந்திருக்கலாம். இன்றைக்கு ஒரு சிலர் சொல்வதைப்போல அங்கே எல்லாம் தேவனை தொழுதுகொள்ள முடியாது என்பார்கள். அப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு இருந்திருக்கலாம்.

ஆனால் அவன் தேவபக்தியுள்ளவானாயும், குடும்பத்துடன் பயபக்தியுள்ளவனாயும் மிகுந்த தானதர்மங்களை செய்து கொண்டு, தான் யார் என்பதையும், தன்னுடைய தேவன் யார் என்பதையும் ஜனங்கள் மத்தியில் கிரியை மூலம் எடுத்துச் சொல்லுகிறவனாகவும் ஜீவித்து வல்லமையுள்ள சாட்சியாக, இத்தாலியா பட்டாளத்தில் விளங்கியிருக்கிறான். இப்படிப்பட்ட அன்பு உங்களில் இருக்கிறதா? தேவனிடத்தில் முழு இருதயத்தோடு நீங்கள் அன்புகூருகிறீர்கள் என்றால் இந்த கொர்நேலியுவைப்போல குடும்பத்துடன் செயல்படுங்கள்.

ஆண்டவர் வேதபாரகனிடத்தில்; இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்; உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார். தேவனிடத்தில் அன்புகூருவதோடு நிறுத்திவிட்டால் போதாது; உன்னிடத்தில் நீ எப்படி அன்புகூருவாயோ அதைப்போல பிறனிடத்திலும் அன்புகூரவேண்டும் என்ற **ஒரு போதனையைக் கொடுத்தார்.** நமக்கு பசி வந்தால் உடனே சாப்பிடுகிறோம். அதைப்போல பிறன் சாப்பிட்டானா? அப்படிப்பட்டவனை நினைத்து, அவர்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு என்றாவது உண்டானதா? லூக்கா ஆசிரியர்; நியாயசாஸ்திரி ஒருவன் இயேசுவை சோதிக்கும்படி கேட்ட கேள்வியை லூக்கா10:25 முதல் குறிப்பிடுகிறார். "அவன்

தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி: எனக்குப் பிறன் யார் என்று கேட்டான்'' அவனுக்கு ஆண்டவர் ஒரு அருமையான சம்பவத்தை சொன்னார்; என்னவென்றால் ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்கு போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரித்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள்.

அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு,மனதுருகி, கிட்டவந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாளிலே தான் புறப்படும்போது இரண்டு பணத்தை எடுத்து, சத்திரத்தான் கையில் கொடுத்து; நீ இவனை விசாரித்துக்கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காகச் செலவழித்தால், நான் திரும்பி வரும்போது அதை உனக்குத் தருவேன் என்றான்.

இப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித்தோன்றுகிறது என்றார். அதற்கு அவன்: அவனுக்கு இரக்கஞ்செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய் என்றார். எப்படிப்பட்டபோதனை பார்த்தீர்களா? பிறன் யார் என்று கேட்காமல் உன்னிடத்தில் அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூர்ந்து பிரதான கற்பனையை நிறைவேற்றுங்கள்.

**கேள்வி**

**நாம் மற்றவர்களிடத்தில் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோமா?**

ஆம், ''நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம் என்று 1யோவா.4:11-ல் வாசிக்கிறோம்.

மேலும், என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம் என்கிறார்.



ஆகையால் கொர்நேலியுவைப்போல தானதர்மங்களை கிரியைமூலமாக காட்டுங்கள். ''ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்'' (ரோம.13:8).

நீங்கள் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு செலுத்தும்போது பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருப்பீர்கள். நாம் இப்பொழுது அன்பின் பிரமாணத்தின் கீழ் வாழ்கின்றோம் என்பதை நினைத்து. அன்புக்கு அடிமைகளாக உங்களை ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 13. கடினமுள்ள இருதயம்

## The Hardened Heart

**அ**நேகருடைய இருதயம் கடினமுள்ளதாக மாறுகிறது. இஸ்ரவேலர்களில் சிலர் தங்களுடைய இருதயத்தை கடினமாக்கினார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அதைப்போல ஆண்டவர் இயேசுவோடு இருந்த சீஷர்களுடைய இருதயம்கூட சிலவேளைகளில் கடினப்பட்டது. இதை அறிந்த கர்த்தர்; ''உங்களிடத்தில் அப்பங்கள் இல்லாதபடியினால் நீங்கள் யோசனைபண்ணுகிறதென்ன? இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா? இன்னும் உங்கள் இருதயம் கடினமாயிருக்கிறதா? உங்களுக்குக் கண்களிருந்தும் காணாதிருக்கிறீர்களா? காதுகளிருந்தும் கேளாதிருக்கிறீர்களா? நினைவுகூராமலுமிருக்கிறீர்களா? நான் ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பங்கிட்டபோது, மீதியான துணிக்கைகளை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்கள் என்று கேட்டார் பன்னிரண்டு என்றார்கள். நான் ஏழு அப்பங்களை நாலாயிரம்பேருக்குப் பங்கிட்டபோது, மீதியான துணிக்கைகளை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்கள் என்றுகேட்டார் ஏழு என்றார்கள். அப்படியானால், நீங்கள் உணராதிருக்கிறது எப்படி என்றார்'' (மாற்.8:17-21).

ஆண்டவர் செய்த அற்புதங்களை கண்ணாரக்கண்டவர்கள், தங்கள் காதுகளால் அவருடைய போதனையை நேரடியாக கேட்டவர்கள் இயேசுவின் சீஷர்கள். அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருப்பதை அறிந்த கர்த்தர் நீங்கள் இன்னும் உணராதிருக்கிறது எப்படி? என்று கேட்டார். அன்பானவர்களே, எரேமியா தீர்க்கன் சொல்லுகிறான்; ''எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது'' (எரே.17:9). இப்படிப்பட்ட இருதயத்தை ஆண்டவருக்கு முழுவதுமாக

ஒப்புக்கொடுங்கள். அவருடைய வசனம் அதில் தங்க இடங்கொடுங்கள். சகல அசுத்தத்தையும் உங்கள் இருதயத்தை விட்டு அப்புறப்படுத்துங்கள். ஆண்டவருக்கு ஏற்ற இருதயமாயிருக்க இடங்கொடுங்கள். சீஷர்களுடைய இருதயம் கடினமுள்ளதாயிருந்தபடியினால் அப்பங்களைக் குறித்து அவர்கள் உணராமற்போனார்கள் என்று காண்கிறோம்.

அதைப்போல இஸ்ரவேலரைக்குறித்து பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; "அப்படியானால் என்ன? இஸ்ரவேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றையதினம்வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள். கனநித்திரையின் ஆவியையும், காணாதிருக்கிற கண்ணையும் கேளாதிருக்கிற காதுகளையும், தேவன் அவர்களுக்குக் கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடியாயிற்று" (ரோ.11:7,8). நாம் ஒவ்வொருநாளும் தேவனுடைய அற்புதமான கிரியைகளைப் பார்க்கிறோம். அவருடைய அதிசயங்களைக் குறித்து கேள்விப்படுகிறோம். அவருடைய அற்புதவிதமான வழிநடத்துதலை உணர்கிறோம்.

இப்படியிருந்தும் நம்முடைய இருயத்தை நாம் கடினப்படுத்துவோமேயானால் அவர் நம்மை மேற்கண்ட வசனத்தின்படியான சிந்தைக்கு ஒப்புக்கொடுப்பார். ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருந்து உங்களுடைய இருதயத்தை கடினப்படுத்தாதிருங்கள். ஆண்டவர் இயேசு ஊழியம் செய்து வந்த நாட்களில் "அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை" என்று யோவான் எழுதுகிறார் (யோவா.12:37). ஆகையால் தான் தோமாவிடம் கர்த்தர் சொல்லும்போது தோமாவே நீ என்னை கண்டதினால் விசுவாசிக்கிறாய் காணாதிருந்து என்னை விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். அன்பு நண்பரே, நீ அவரைக் காணாதிருந்தும் உன் இருதயத்தில் நீ அவரை விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

சிலருடைய இருதயம் பொறுக்க மனதில்லாமற் போய்விடுகிறது. அதாவது, முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்ட விதையைப்போல போய்விடுகிறார்கள். "முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப்போவான்" என்று பார்க்கிறோம் (மத்.13:22). உங்களுடைய இருதயம் எப்படிப்பட்டதாயிருக்கிறது? நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே



காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். நீங்கள் அப்படிப்பட்டவர்களாக இருக்க உங்களுடைய இருதயத்தில் கர்த்தருடைய வசனத்தைக் காத்துக்கொள்ளுங்கள்.

அப்போஸ்தலர்கள் காலத்தில் வசனத்தை ஏற்றுக்கொள்ள மனமில்லாதவர்கள் இம்மார்க்கத்தை நிந்தித்ததாக அப்.19:9-ல் படிக்கிறோம். "சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது, பவுல் அவர்களை விட்டு விலகி, சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்துக்கொண்டுவந்தான்" என காண்கிறோம். இன்றைக்கும்கூட இந்த விதமான மக்கள் பெருகிக்கொண்டே போகிறார்கள். தாங்கள் செய்கிறது இன்னதென்றும் தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை தேவனே கடினப்படுத்துகிறார். சிலவேளைகளில் அவர்களை அவ்விதமாக ஒப்புக்கொடுக்கவும் செய்கிறார். "ஆதலால், எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார், எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார்" என பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (ரோம.9:18).

பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கும்போது எகிப்தின் ராஜாவாகிய பார்வோனை கடினப்படுத்தினார். ஒன்பது முறையும் அவனுடைய இருதயம் கடினப்பட்டது. ஒன்பது முறையும் பார்வோனுக்கு முன்பாக மோசே பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் கர்த்தருடைய நாமத்தினாலே அத்தேசத்திலே நடத்தினான். இவைகளையெல்லாம் தன்னுடைய கண்களாலே பார்த்த, தம்முடைய ராஜ்யத்தின் மக்களாலே, கர்த்தர் செய்த அநேக காரியங்களைக் குறித்து கேள்விப்பட்ட பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டது. என்ன காரணமென்றால், கர்த்தரே அவனுடைய இருதயத்தை கடினப்படுத்தினார் என்பதுதான் உண்மை.

இன்னும் ஒருசில இராஜாக்களின் இருதயங்கள்கூட கடினப்பட்டது என வாசிக்கிறோம். பெல்ஷாத்சார் என்னும் ராஜா தன் பிரபுக்களில் ஆயிரம்பேருக்கு ஒரு பெரிய விருந்துசெய்து, அந்த ஆயிரம் பேருக்கும் முன்பாகத் திராட்சரசம் குடித்தான். அத்தோடு அல்லாது எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டுவந்த பொன் வெள்ளி பாத்திரங்களில் அவனும் அவனுடைய வைப்பாட்டிகளும் திராட்சரசத்தை ஊற்றி குடித்து, பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தான். அப்பொழுது நடந்தது என்ன? ராஜ அரமனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று; எழுதின அந்தக் கையுறுப்பை ராஜா கண்டான். அப்பொழுது

ராஜாவின் முகம் வேறுபட்டது; அவருடைய நினைவுகள் அவரைக் கலங்கப்பண்ணினது; அவருடைய இடுப்பின் கட்டுகள் தளர்ந்தது, அவருடைய முழங்கால்கள் ஒன்றோடோன்று மோதிக்கொண்டது.

இது ராஜாவுடைய இருதயம் மேட்டிமையாகி, அவருடைய ஆவி கர்வத்தினாலே கடினப்பட்டபோது, அவர் தமது சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டார் அவருடைய மகிமை அவரை விட்டு அகன்றுபோயிற்று என்று தானியேல் 5:20ல் வாசிக்கிறோம். மனிதனுடைய இருதயம் மேட்டிமை அடையும்போது அவன் தள்ளப்படுவதற்கு அதுவே அறிகுறியாக இருக்கிறது. மேட்டிமையுள்ள கண்களையும், கடினமுள்ள ஆவியையும், கடினமுள்ள இருதயத்தையும் கர்த்தர் வெறுக்கிறார்.

"நீங்கள் உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பி, நான் உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டதும், என் ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளைக்கொண்டு உங்களுக்குச் சொல்லியனுப்பினதுமான நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளுங்கள் என்று கர்த்தர் தீர்க்கதரிசிகள் ஞானதிருஷ்டிக்காரர் எல்லாரையுங்கொண்டு இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும் திடச் சாட்சியாய் எச்சரித்துக்கொண்டிருந்தும் அவர்கள் செவிகொடாமல், தங்கள் தேவனாகிய கர்த்தர்மேல் விசுவாசியாமற்போன கடினக் கழுத்துள்ள தங்கள் பிதாக்களைப்போல், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, அவருடைய கட்டளைகளையும் அவர் தங்களுக்குத் திடச் சாட்சியாய்க் காண்பித்த அவருடைய சாட்சிகளையும் வெறுத்து விட்டு, வீணான விக்கிரகங்களைப் பின்பற்றி வீணராகி, அவர்களைச் சுற்றிலும் இருக்கிறவர்களைப்போல, செய்ய வேண்டாமென்று கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டு விலக்கியிருந்த ஜாதிகளுக்குப் பின்சென்று, தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் விட்டுவிட்டு, இரண்டு கன்றுக்குட்டிகளாகிய வார்ப்பித்த விக்கிரகங்களைத் தங்களுக்கு உண்டாக்கி, விக்கிரகத் தோப்புகளை நாட்டி, வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டு, பாகாலைச் சேவித்தார்கள். அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணி, குறிகேட்டு நிமித்தங்கள் பார்த்து கர்த்தருக்குக் கோபமுண்டாக்க அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறதற்குத் தங்களை விற்றுப்போட்டார்கள்" என்று 2இரா.17:13-17-ல் வாசிக்கிறோம்.

"தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான்" என்ற நீதிமொழிகளின் வசனத்திற்கேற்ப அவர்கள் தீங்கிலே விழுந்தார்கள். தேவனும் அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அன்பு நண்பரே, கர்த்தருடைய பரிசுத்தவான்களே உங்கள் இருதயத்தை கடினமுள்ளதாக



வைத்திருக்கிறீர்களா? அல்லது தேவன் தங்கும் ஆலயமாக, பரிசுத்த ஸ்தலமாக, கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக்கொண்டு வளரும் கனிமரமாக வைத்திருக்கிறீர்களா? சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொன்ன சாமுவேலைப்போல உங்கள் இருதயத்தை கர்த்தருடைய சத்தத்துக்கு திறந்துகொடுங்கள்.

**கேள்வி**

**இருதயம் கடினப்படும்போது என்னவாகும்?**

கர்த்தருடைய கணக்கில்லா ஆசீர்வாதத்தை இழக்க நேரிடும். தேவன் அப்படிப்பட்ட இருதயத்தை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்துவிடுவார். நாம் கர்த்தருடைய அதிசயங்களை பார்க்க அவர் நமக்குக் கண்களை கொடுத்திருக்கிறார். அவருடைய அன்பான வசனத்தைக் கேட்க காதுகளைக் கொடுத்திருக்கிறார். அவருடைய வார்த்தையை எடுத்துச்சொல்ல மான்கால்களைப்போல கால்களைக் நமக்குக் கொடுத்திருக்கிறார். வேறே என்ன வேண்டும் நண்பா? சிந்தியுங்கள் செயல்படுங்கள். "சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" என்கிறார் எபிரெய ஆசான் (எபி.3:12).

பிறப்பு முதல் ஓய்வில்லாமல் இயங்கிக்கொண்டு இருக்கும் இயந்திரம் உங்களுடைய இருதயம். இதை கர்த்தர் உண்டுபண்ணினார். அதை முழுமையாக அவருக்கு ஒப்புக்கொடுத்து, கடின இருதயம் கடுகளவும் உங்களில் இல்லாது பார்த்துக்கொள்ளுங்கள். எச்சரிப்பின் சத்தத்தை கொடுக்கும் எபிரெய ஆசான் பவுலுடைய அறிவுரைப்படி ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் உண்டாகி விடாதபடி நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். கர்த்தர் உங்கள் இருதயத்தை எல்லாவிதமான நல் வசனத்தினாலும் தேற்றி, அன்புக்கும், சத்தியத்திற்கும் நேரே வழிநடத்தும்படியாக நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 14. உண்மையாயிரு
## Be Faithful

**உ**ண்மையாயிருக்க எல்லோருமே முயற்சிக்கிறார்கள் ஆனால் அவர்களால் உண்மையாயிருக்க முடியவில்லை என்பதே பொதுவாக அனைத்துதரப்பினருடைய பதிலாயிருக்கிறது. அப்படியானால் ஒருவனும் உண்மையாயிருக்க முடியாதா? என்ற கேள்வி எழும்புகிறது அல்லவா!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவர் ஆசியாவில் உள்ள ஏழுசபைகளுக்கு எழுதும்போது; அதில் குறிப்பாக சிமிர்னா சபைக்கு இப்படியாக எழுதுகிறார். "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" என்கிறார் (வெளி.2:10). ஒருவன் மரணபரியந்தமும் உண்மையாயிருக்க முடியும். ஆண்டவர் இப்பூமியில் நம்மைப்போல பாடுள்ள மனுஷனாக பிறந்து தன் பிதாவுக்கு உண்மையுள்ளவராயிருந்தார்.

அவர் நம் ஒவ்வொருவருக்கும் மாதிரியை பின்வைத்துப் போயிருக்கிறார். அவருடைய அடிச்சுவடுகளை ஒருவன் பின்பற்றும்போது அவன் உண்மையாயிருக்க முடியும். எனவே நீ மரணபரியந்தமும் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் என்கிறார். நாம் நம்முடைய வாழ்க்கையில் மரணபரியந்தமும் உண்மையுள்ளவர் களாயிருக்கும்போது ஆண்டவர் வாக்குத்தத்தம் பண்ணின வாடாத ஜீவகிரீடத்தை பெறுவோம். "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான். அநீதியான உலகப்பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?" என்ற கேள்வியை ஆண்டவர் எழுப்புகிறார் (லூக்.16:10-12).

ஒரு எஜமான் கொஞ்சத்தில் உண்மையாயிருக்கிற தம்முடைய ஊழியக்காரனை அநேகத்திலும் ஊழியக்காரனாயிருக்கும்படி நியமிக்கிறான். கொஞ்சத்தில் உண்மையாயிராதவர்கள் தள்ளுண்டுபோகிறார்கள். இந்த உலகப்பொருளைப்பற்றி ஆண்டவர் இயேசு, அநீதியான உலகப்பொருள் என்று குறிப்பிடுகிறார். இந்த அநீதியான உலகப்பொருளிலே உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? என்கிறார். இதைக் கேட்ட பரிசேயர் அவரைப் பரியாசம்பண்ணினார்கள். இன்றைக்கும் உண்மையைப் பற்றிபேசினால் அநேகர் பரியாசம்செய்வார்கள். இப்படிப்பட்ட சமுதாயத்தில் நாம் கர்த்தர் வாக்குதத்தம் செய்ததைப் பெறும்படி நாம் உண்மையாயிருக்கும்போது விடிவெள்ளி நட்சத்திரத்தையும் பெற்றுக்கொள்வோம்.

"வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும். விதைக்கிறவனுக்கு விதையையும் புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார்" என்கிறார் பவுல் (2கொரி.9:9,10). இறைக்கிற கிணறு ஊறும் என்பார்கள். அதைப்போல வாரியிறைக்கும்போது



கர்த்தருடைய ஆசீர்வாதத்தை அளவில்லாமல் பெற்றுக்கொள்வோம். விதைக்கிறவனுக்கு விதை கொடுக்கப்படுகிறது. சிலர் விதையை விதைக்காமல் சோம்பலுள்ளவர்களாக கட்டி பத்திரமாக வைத்திருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு விதை எப்படிகிடைக்கும்? விதைக்கிறவனுக்கு கர்த்தர் விதையை அருளிச்செய்கிறார். கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுப்பார்கள் என்ற வசனத்தின்படி அறுவடைசெய்கிறார்கள்.

மேலும் "பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்" (நீதி.12:22). அப்படியானால் நீங்கள் அவருக்குப் பிரியமாயிருக்க உங்களுடைய வாழ்க்கையில் பொய்யைக் களைந்து மற்றவர்களோடு உண்மையைப்பேசுகிறீர்களா? உண்மையைப்பேசும்போது அவர் உங்களில் பிரியமாயிருப்பார். நீங்கள் உண்மையாயிருக்கிறீர்களா? "மனுஷர் பெரும்பாலும் தங்கள் தயாளத்தைப் பிரசித்தப்படுத்துவார்கள்; உண்மையான மனுஷனைக் கண்டுபிடிப்பவன் யார்? என்கிறார் சாலொமோன் (நீதி.20:6). ஆம், மனுஷர் தங்களை மிகவும் உயர்வாக காண்பித்துக்கொள்வார்கள். இதிலே உண்மையானவர்களை கண்டுபிடிப்பது அரிதாக இருக்கிறது. ஆனால் மனுஷனை உண்டாக்கின கர்த்தர் அவனவனுடைய இருதயத்தை அறிகிறார்.

மோசே என்ற தேவ மனுஷனை அறிவீர்கள்; அவன் "தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்" என்று எபி.3:5-ல் வாசிக்கிறோம். அவன் உண்மையாயிருந்தபடியாலே ஆறுலட்சம்பேரை வழிநடத்தக்கூடிய பொறுப்பை அவனிடத்தில் கர்த்தர் கொடுத்தர். அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டான். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா? நலமான வாழ்வை யாராவது விட்டுக்கொடுப்பார்களா! ஆனால் மோசேயோ அதை வேண்டாம் என்று தள்ளிவிட்டு தேவமக்களோடு துன்பத்தை அநுபவித்தான்.

அவன் தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ள வனாயிருந்தான் என வேதம் போதிக்கிறது. சிலர் உண்மையாயிருப்பார்கள். சிலவற்றில் மட்டுமே உண்மையாயிருப்பார்கள். நூற்றுக்கு எழுபத்தைந்து சதவீதம் உண்மையாயிருப்பார்கள். இருபத்தைந்து சதவீதம் உண்மையற்றவர்களாயிருப்பார்கள். ஆனால் மோசேயோ, எங்கும் எதிலும் உண்மையுள்ளவனாயிருந்தான் என காண்கிறோம். உண்மைக்கு மாதிரியாக பரிசுத்த ஆவியானவர் மோசேயை நமக்கு நினைப்பூட்டுகிறார்.

மேலும் மோசே தன் மாமனுடைய ஆலோசனைப்படி

உண்மையானவர்களை தேர்வு செய்தான். சகல காரியங்களையும் மோசேயே செய்துகொண்டுவந்ததை பார்த்த மோசேயின் மாமன்; ''ஜனங்கள் எல்லாருக்குள்ளும் தேவனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையை வெறுக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைத் தெரிந்து கொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பது பேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் ஏற்படுத்தும் என்றான்'' (யாத்.18:21).

இந்த ஆலோசனை நலமாகக் கண்டபடியால் மோசே அந்தப்படியே உண்மையுள்ளவர்களை அதிபதிகளாக ஏற்படுத்தினான். உண்மையாயிருக்கிறவன் எல்லாவற்றிலும் ஆசீவதிக்கப்படுவான். அவனை நம்பி ஜனங்கள் எதையும் ஒப்புக் கொடுப்பார்கள். மோசே உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவனுடனே மறைமுகமாக அல்ல முகமுகமாய் பேசுகிறேன் என்று மோசேயைப் பற்றி குறைவாக பேசிக்கொண்டிருந்த ஆரோனிடத்திலும் அவன் சகோதரியான மிரியாமினிடத்திலும் கர்த்தர் சொன்னார். இப்படி கர்த்தரோடு முகமுகமாய் பேசின தீர்க்கதரிசி ஒருவனும் இல்லை. அதுமட்டுமா? மோசே ஆண்டவர் மறுரூபமலையிலே பேசியிருக்கிறதை நாம் மத்.17:3-ம் வசனத்தில் படிக்கிறோம்.

பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை அழைத்துக் கொண்டு ஆண்டவர் ஜெபிக்கும்படியாக உயர்ந்த மலைக்குப்போனார். அவர்களுக்கு முன்பாக அவர் மறுரூபமானார். அவரது முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவரது வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள். இந்த மோசேயோடு அப்படி என்ன பேசினார்? தாம் நிறைவேற்றப்போகிற மரணத்தைக் குறித்து அவர்களோடு பேசினார் என்று பார்க்கிறோம். ஆக, இந்த மோசேயோடு கர்த்தர் பேசினாரானால், அவன் எந்த அளவு தேவகாரியங்களில் உண்மையுள்ள வனாயிருந்திருப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள்.

இயேசுவுக்கு முன் அதாவது பல வருடங்களுக்கு முன்பு இஸ்ரவேலை வழிநடத்தி பின்பு மோவாப் தேசத்திலே தேவனால் அடக்கம்பண்ணப்பட்ட இந்த மோசே, இயேசுவின் நாட்களில் இயேசுவோடு அவருடைய மரணத்தைக்குறித்து பேசியிருக்கிறார் என்றால் அவருடைய உண்மையை நாம் எப்படி அளவிடமுடியும். மோசே எந்த அளவு உண்மையாயிருந்தால் அவரை ஆண்டவர் இயேசு அழைத்து அவரோடு



பேசியிருப்பார்! அன்பானவர்களே, கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளுக்கு தம்முடைய காரியங்களை வெளிப்படுத்துகிறார் என அறிகிறோம்.

பவுல் உண்மையுள்ள மனுஷனாயிருந்தபடியால் கனமான ஊழியத்தை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார். அவர் சொல்லும்போது; ''என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்'' என்கிறார் (1தீமோ.1:12). மேலும் ''நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்'' என்கிறார் (அப்.24:16). பொதுவாக ஒன்று மனுஷனுடைய பார்வையில் சரியாய் இருப்பார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய பார்வையில் குற்றவாளிகளாயிருப்பார்கள். பவுல் இங்கு தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாகவும் எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன் என்கிறார். நீங்கள் எப்படியிருக்கிறீர்கள். எப்பொழுதும் பவுலைப்போல இருக்கப் பிரயாசப்படுகிறீர்களா? அப்படியிருக்க விரும்புகிறவர்களை தேவன் நேசிக்கிறார். பவுலுடைய ஆலோசனையும் அதுவாகத்தானிருந்தது. தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; ''நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு'' என்று எழுதுகிறார்.

ஆக, உண்மையுள்ள மனுஷன் நீதி.28:20-ல் சொல்லப்பட்டபடி பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வான். நீங்கள் பரிபூரணமான ஆசீர்வதங்களை கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்றுக்கொள்ள வாழ்நாளெல்லாம் உண்மையாயிருங்கள். அப்பொழுது ஜீவகிரீடத்தை பெற்றுக்கொள்வீகள்.

**கேள்வி**

**உண்மையாயிருக்கும்போது மட்டுமே கர்த்தரோடு வாழும் பாக்கியத்தை பெறுவோமா?**

ஆம், ''தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்'' (சங்.101:6). அவருடைய கண்கள் உண்மையானவர்களை நோக்கிக் கொண்டிருக்கிறது. கர்த்தர் பாரார், கர்த்தர் கவனியார் என்று சொல்லாதீர்கள். கண்ணை உண்டாக்கினவருக்கு தெரியாதா?

ஆகையால் அன்பு சகோதரனே, சகோதரியே உன் தேவனுக்கு பயந்து உண்மையாயிரு. மனிதன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயங்களை பார்க்கிறார். மோசேயைப்போலவும், அப்போஸ்தலனாகிய பவுலைப்போலவும் உத்தமகுமாரனாகிய தீமோத்தேயுவைப்போலவும் ஜீவிய நாட்களில் உண்மையுள்ள மனுஷனாயிருக்க பிரயாசப்படுங்கள். அப்பொழுது கர்த்தருடைய ஆசீர்வாதத்தை காண்பீர்கள்.

தேவனை அறியாதவர்களும், ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்படாதவர்களும் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் படிக்கிறோம். தேசத்தில் உண்மையானவர்களை அவர் இயேசுவின் இரத்தம் கொண்டு கழுவி அவருடைய நிலையான நித்தியமான வாசஸ்தலத்திற்கு பிரித்தெடுக்கிறார். அவருடைய தெரிந்துகொள்ளுதலுக்கு பாத்திரவானாக நடந்துகொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய ஜீவிய நாளெல்லாம் உண்மையாயிருந்து கர்த்தருடைய சமுகத்துக்கு வந்தடைய உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 15. ஜாக்கிரதையாயிரு
## Be Diligent

**ந**ம்முடைய வாழ்க்கையில் பல வகையில் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கின்றோம். அதினால் அநேக நன்மைகளை பெற்றுக்கொள்கிறோம். நாம் ஜாக்கிரதையாயிராத வேளையில் அநேக நஷ்டத்தை அடைகிறோம். ஆகையால் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாகவே இருக்கப்பிரயாசப்படுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயு என்ற உத்தம ஊழியக்காரனுக்கு எழுதும்போது "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என்று எழுதுகிறார் (2தீமோ.2:15).

நாம் என்ன செய்கிறோம், எதைப்போதிக்கிறோம், எப்படி ஜீவிக்கிறோம் என்பதை வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் கண்ணோக்கிப்பார்க்கிறார். ஆகையால் நாம் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக நிற்க ஜாக்கிரதையுள்ளவர்களாக இருந்து செயல்படவேண்டும். ஊழியத்தில் பொதுவாக சோம்பல் ஏற்படும். நமக்கு எதிராளியாகிய பிசாசானவன் நம்முடைய வாழ்க்கையில் சோர்வைக்கொண்டுவருவான், வெட்கத்தைக்கொண்டுவருவான். எனவே பவுல் தீமோத்தேயுவுக்கு நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயிரு என்று புத்திமதி சொல்கிறார்.



ஆண்டவர் சிலுவையில் நம்முடைய பாவங்களை போக்கும்படியாக பாடுபட்டபோது அவர் வெட்கப்படவில்லை, நாம் ஏன் வெட்கப்படவேண்டும்? நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பது என்பது எத்தனை ஆசீர்வாதம் நிறைந்த வாழ்க்கை. இதை நினைத்து நாம் எப்பொழுதும் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாகவே இருக்கவேண்டும். பவுல் சொல்லுகிறார்; "நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்" என்கிறார் (அப்.24:16).

பொதுவாக மனுஷனுடைய பார்வையில் குற்றமற்றவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய பார்வையில் துன்மார்க்கராயிருப்பார்கள். பவுல் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் என்ற வார்த்தையை சொல்லுகிறார். கொஞ்ச நாட்கள் மட்டுமல்ல எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன் என்கிறார். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற வானொலி நேயரே, நீங்கள் இவ்விதமான மனசாட்சியோடு ஜீவிக்கின்றீர்களா? நாம் இந்த உலகத்தில் குற்றவாளியாக ஜீவிப்பதால் அநேகரால் புறக்கணிக்கப்படுவோம், அல்லது அதற்குரிய தண்டனையை அனுபவிப்போம்.

நலமான காரியங்களைச் செய்து நற்பெயர் பெற்று வாழும்போதோ, நம்முடைய மனசாட்சியே நம்மை முதலாவது பாராட்டும். உலக மக்களும் நம்மைக்குறித்து சாட்சிகொடுப்பார்கள். தேவனும் நம்முடைய காரியங்களைப் பார்த்து நலமான காரியங்களை நமக்குச் செய்வார். இதையெல்லாம் அறிந்தபடியினாலே பவுல் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன் என்கிறார்.

"விதவையையும் பரதேசியையும் கொன்று, திக்கற்ற பிள்ளைகளைக் கொலை செய்து; கர்த்தர் பாரார், யாக்கோபின் தேவன் கவனியார் என்று சொல்லுகிறார்கள்" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங்.94:5,7). இவர்களுக்கு வேதம் கொடுக்கும் பதில் என்னவென்றால் "ஜனத்தில் மிருககுணமுள்ளவர்களே, உணர்வடையுங்கள்; மூடரே, எப்பொழுது புத்திமான்களாவீர்கள்? என்கிறது. மனிதநேயம் இல்லாமல் நடந்துகொள்ளுகிற இவர்களைப் பார்த்து ஜனத்தில் மிருககுணமுள்ளவர்களே என்கிறது.

ஏனென்றால் மிருகங்கள் தான் ஒன்றையொன்று அடித்து கொன்று தின்றுபோடுகிறது. இதைப்போல குணமுடையவர்களே உணர்வடையுங்கள் என்று வேதம் எச்சரிக்கிறது. மேலும் "காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ?" என கேள்வி எழுப்புகிறது

(சங்.94:9). நாம் காண்கிற கண்களையும், காதுகளையும் கர்த்தர் உண்டுபண்ணினார்.

இதை நீங்கள் அறியவில்லையா? அன்பானவர்களே சற்று சிந்தியுங்கள். இவைகளை மனிதனுக்கு உண்டாக்கினவர், கண்ணோக்கிப் பார்க்கிறார். திக்கற்றவர்களுடைய வேண்டுதலைக் கேட்கிறார். விதவைகளின் கண்ணீரைக் காண்கிறார். அவர்களுக்கு இடையூறுசெய்கிறவன் தண்டனைக்குத்தாப்பான். ஆகையால் நீ உன்னைக் குறித்து ஜாக்கிரதை யாயிரு.

மேலும், பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "நான் வருமளவும் வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு" என்கிறார் (1தீமோ.4:13). வேதம் வாசிப்பது நமக்கு அநேக நன்மைகளை கொண்டுவருகிறது. தாவீது சொல்லும்போது: "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என்கிறார்.

ஆண்டவர் இயேசு சொல்லும்போது; "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" என்கிறார். ஆகையால் வேதவாசிப்பு என்பது மிக அவசியம். அதைப்போல, புத்திசொல்லுகிறதிலும் நாம் சோர்ந்துபோகாமல் செயல்படவேண்டும். அவன் கெட்டுப்போனால் நமக்கென்ன என்று மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. அவனுடைய இரத்தபலி நம்மிடம் கேட்கப்படும். ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும் அதைச் செய்யாமற்போனால் அதுவே அவனுக்கு பாவமாயிருக்கும் என்ற வசனத்தை நினைத்துப்பாருங்கள்.

எனவே புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். உபதேசத்தை பொறுத்த மட்டில் நாம் என்ன போதிக்கிறோமோ அதை முதலாவது நாம் கைக்கொள்ள வேண்டும். ஊருக்குத்தான் உபதேசம் அது தனக்கல்ல என்று சொல்வதைப்போல நடந்துகொள்ளக்கூடாது. அதினாலே பவுல் "மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்கிறார் (1கொரி.9:27).

மற்றவர்களுக்குப் போதித்துவிடலாம் அது மிகவும் சுலபம். ஆனால் அதை நாம் கைக்கொள்கிறோமா? ஆகையால் என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்றார். நம்முடைய சரீரத்தையே நாம் கட்டுப்படுத்த



தவறிவிட்டால், மற்றவர்களுடைய தவறுகளை நாம் சுட்டிக்காட்ட தகுதியற்றவர்களாக போய்விடுகிறோம். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" என வேதம் மிகத்தெளிவாக போதிக்கிறது. நியாயாதிபதியாகிய கர்த்தர் ஒருநாளிலே வருவார். அவருடைய வருகையிலே குற்றமற்றவர்களாக, மாசில்லாதவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க நாடுங்கள்.

"ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" என்கிறார் பேதுரு (2பேது.3:14). அவருடைய சந்நிதியில் துன்மார்க்கன் சேரான். அவனை அவர் ஏற்றுக்கொள்ளார். எவர்கள் கறையற்றவர்களாயும், பிழையில்லாதவர்களாயும் அவருடைய சந்நிதியில் ஜாக்கிரதையாய் காத்திருக்கிறார்களோ அவர்களே கர்த்தரோடு என்றென்றும் நிலைத்திருப்பார்கள்.

"தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்" என்கிறார் சாலொமோன் ஞானி (நீதி.22:29). அதைப்போல, உத்தம ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவைப்போல இயேசுவுக்கு ஊழியம் செய்கிறவன் ராஜாதி ராஜாவாகிய அவர் வரும் வேளையில் அவர் சமுகத்தில் நிற்பான். அவனை கர்த்தர் ரட்சிப்பார். இஸ்ரவேலை வழிநடத்திக்கொண்டு வந்த மோசேக்குப் பின்பு அவர்களை வழிநடத்தும்படியாக யோசுவாவை தேவன் தெரிந்துகொண்டார் என்பதை அறிவீர்கள்.

அவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்த ஆலோசனை என்னவென்றால்; "இப்பொழுதும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தாம் உங்கள் சகோதரருக்குச் சொல்லியிருந்தபடியே, அவர்களை இளைப்பாறப்பண்ணினார்; ஆகையால் கர்த்தரின் தாசனாகிய மோசே யோர்தானுக்கு அப்புறத்திலே உங்களுக்குச் கொடுத்த உங்கள் காணியாட்சியான தேசத்திலிருக்கிற உங்கள் கூடாரங்களுக்குத் திரும்பிப் போங்கள். ஆனாலும் நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து, அவருடைய வழிகளிலெல்லாம் நடந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவரைப் பற்றிக்கொண்டிருந்து, அவரை உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் சேவிக்கிறதற்காக, கர்த்தரின் தாசனாகிய மோசே உங்களுக்குக் கற்பித்த கற்பனையின்படியேயும் நியாயப் பிரமாணத்தின்படியேயும் செய்யும்படிமாத்திரம் வெகு சாவதானமாயிருங்கள் என்றான்" (யோசு.22:4,5). அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்கூடாக பார்த்தவர்கள் இஸ்ரவேலர்கள்.

அவர்களுக்கு கர்த்தர் வாக்குத்தத்தம் செய்த கானான் தேசத்தைக் கொடுத்தார். அந்ததேசத்தில் அவர்கள் கர்த்தரை மறந்து அந்நிய தேவர்களை நாடி போய்விடக்கூடாது என்பதற்காக யோசுவா அவர்களைப் பார்த்து மோசேயின் கற்பனைகளையும், நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளின்படியும் செய்ய வெகு சாவதானமாயிருங்கள் என்கிறான். அப்படியானால் வெகு ஜாக்கிரதையாயிருங்கள் என்று அர்த்தம். ஒருவேளை ஜனங்கள் வழிவிலகிபோகக்கூடும் என்பதால் கர்த்தரில் அன்புகூர்ந்து முழு இருதயத்தோடும் கர்த்தரை சேவிக்கும்படியான ஆலோசனையைக் கொடுக்கிறான்.

இன்றைக்கும் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அதைப்போல நம்மை சார்ந்தவர்களையும் ஜாக்கிரதையாயிருக்கும்படி புத்திசொல்ல வேண்டியதும் அவசியமாயிருக்கிறது. "ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1பேது.5:8). ஆகையால் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருந்து அவனுக்கு எதிர்த்துநில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.

**கேள்வி**

**ஜாக்கிரதையாயிருக்கும்போது வரும் ஆசீர்வாதம் என்ன?**

"ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் செல்வத்துக்கும், பதறுகிறவனுடைய நினைவுகள் தரித்திரத்துக்கும் ஏதுவாகும்" என்று நீதி.21:5-ல் வாசிக்கிறோம். ஒருமனிதன் தன்னுடைய வாழ்க்கையில் ஜாக்கிரதையாயிருக்கும்போது அநேக நன்மைகளைப் பெற்று அநுபவிக்கிறான். அப்படிப்பட்டவனுடைய வீட்டில் செல்வம் குடிகொள்ளும். அதேவேளையில் தன்னுடைய வாழ்க்கையில் பதறுகிறவன். அதாவது நிதானமாய் செயல்படாமல், தேவமனிதர்களுடைய ஆலோசனையைக் கேட்காமல், தன்சொல்லாலும், செயலாலும் பதறி தன் ஆஸ்தியை இழக்கிறான். இப்படிப்பட்டவர்களை நாம் அநுதினஜீவியத்தில் காண்கிறோம்.

அன்பானவர்களே, நாம் தியானித்தபடியாக மனுஷருக்கு முன்பாகவும், தேவனுக்கு முன்பாகவும் குற்றமற்ற மனசாட்சியுடையவர்களாக இருக்கும்போதும் ஆசீர்வதிக்கப்படுவோம். அதைப்போல வேதத்தை வாசிக்கிறபோதும் அதை மற்றவர்களுக்கு உபதேசிக்கிறபோதும் ஜாக்கிரதை யாயிருப்போமானால் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவோம். தொடர்ந்து கறையில்லாதவர்களாக அவருடைய சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள். அப்பொழுது நிலையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வீர்கள்.



## 16. நம்பிக்கையாயிரு

## Be Confident

**ந**ம்பிக்கை நம்முடைய வாழ்க்கையில் அநேக நன்மைகளை கொண்டுவரும். விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது என்று படிக்கிறோம். நம்புகிறவர்கள் அன்றும் இன்றும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நம்பிக்கையை எதன் மீது வைப்பது? இது ஒரு நல்லகேள்வி. ஏனெனில் வீணானவைகளில் மக்கள் நம்பிக்கை வைத்து. ஏமாற்றப்பட்டுப்போய்விடுகிறார்கள். நான் நம்பிக்கையோடிருந்தேன் ஆனால் என்னுடைய நம்பிக்கையின்படி ஆகவில்லையே என்று சொல்லி நொந்துகொள்வார்கள்.

அன்பானவர்களே, பரிசுத்த வேதாகமத்தின் நம்பிக்கைக்கு உங்களை அழைத்துச்செல்ல விரும்புகிறோம். ஒரு நல்ல விவசாயி தன் நிலத்தில் விளைந்த அனைத்து தானியத்தையும் எடுத்து அடுத்த வருட விவசாயத்துக்கு வைத்துவைக்க மாட்டான். மாறாக சில நல்ல தானியத்தை பிரித்து அவைகளை அடுத்த வருட விவசாயத்துக்கு வைப்பான். அதைப்போல "உன் நடுவில் சிறுமையும் எளிமையுமான ஜனத்தை மீதியாக வைப்பேன்; அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பார்கள்" என்று செப்பனியாவைக் கொண்டு கர்த்தர் உரைத்தார் (செப்.3:12).

இன்றைக்கும் சிறுமையும் எளிமையுமான ஜனமே கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்கள். அநேகருக்கு பணம், கார், பங்களா என அனைத்து வசதிகளும் இருக்கிறது. ஆனால் அவர்கள் கர்த்தரை தேடுவதில்லை. காரணம் என்ன? எங்களுக்கு என்ன குறையிருக்கிறது, நாங்கள் எதற்காக கர்த்தரை தேடவேண்டும் என்று சொல்லுவார்கள். இயேசுவினுடைய நாட்களில் குறைவுள்ளோர், பிணியாளிகள் போன்றோர் இயேசுவிடம் வந்தனர். அவர்களுக்கு அவர் நன்மைகளை வழங்கினார். அப்படிப்பட்டவர்கள் அவர்மீது நம்பிக்கைவைத்து ஆசீர்வதிக்கப்பட்டனர். துன்மார்க்கரும், பரியாசக்காரரும், வேதபாரகரும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

"யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்" என சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங்.146:5). நீங்கள் இந்த யாக்கோபின் தேவனாகிய கர்த்தர் மீது உங்களுடைய நம்பிக்கையை வைத்திருக்கிறீர்களா? ஆடுகளின் பின்னே போன தாவீதை அரசனாக்கினார். அவன் கர்த்தர் மீது தன் நம்பிக்கையை வைத்திருந்தான். அரசனும் ஆண்டியாவான் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் ஆடு மேய்ப்பனாயிருந்த தாவீது அரசனான்

ஆண்டியாகவில்லை. கர்த்தர் அவனை உயர்த்தினார். நீங்களும் கர்த்தரால் உயர்த்தப்பட அவர்மீது உங்களுடைய நம்பிக்கையை வையுங்கள். பவுலுடைய நம்பிக்கையும் கர்த்தர் மீது இருந்தது.

“நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும். கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்” என்றார் (பிலி.1:20,21). இன்றைக்கு அநேகருடைய நம்பிக்கை எப்படிபட்டதாயிருக்கிறது என்றால், கர்த்தர் கொடுத்தால் நல்லவர். கொடாவிட்டால் அவர் கெட்டவர் என்று நினைக்கின்றனர். அவர் மனுஷனுக்கு கொடாதது எது? வானத்தையும் பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் கொடுத்து ஆண்டுகொள்ளுங்கள் என்றார்.

இனியும் அவர் என்ன கொடுக்கவேண்டும்? நிலத்தை பண்படுத்தும்போது அது கனிகளையும், மனிதனுக்கு தேவையான அனைத்தையும் கொடுக்கிறது. அவன் வேலை ஒன்றும் செய்யாமல் எல்லாம் எனக்கு கிடைக்கவேண்டும் என்றால், அது எப்படி கிடைக்கும்? கர்த்தர் மனிதனுக்கு வேண்டிய அனைத்து ஆசீர்வாதங்களையும் நேர்த்தியாக ஆதியிலே செய்துவிட்டார்.

மேலும், அவன் பாவத்தில் சிக்கிக்கொள்ளாமல் இருக்க அற்புதமான வேதாகமத்தை கொடுத்திருக்கிறார். அது அவனை அனுதினமும் வழிநடத்துகிறது. வேதாகமத்தை ஒருவன் நாடும்போது; அது அவனுக்கு நல்லாலோசனையையும், அவன் ஆத்துமாவுக்கு ஜீவனையும், அவனுடைய கழுத்துக்கு அலங்காரத்தையும் கொடுக்கும். அப்பொழுது அவன் பயமின்றி அவன் வழியில் நடப்பான். “கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார்” என சாலொமோன் குறிப்பிடுகிறார் (நீதி.3:26). கர்த்தரை நம்பும்போது கண்ணியிலிருந்து காக்கிறார்.

அதேவேளையில் மனுஷனை நம்பும்போது அவன் கண்ணியில் சிக்கவைப்பான். ஆகையால்தான் தாவீது சொல்லும்போது; “அகங்காரிகளையும், பொய்யைச் சார்ந்திருக்கிறவர்களையும் நோக்காமல், கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான்” என்கிறார் (சங்.40:4).

உங்களுடைய நம்பிக்கை யார் மீது இருக்கிறது? புல்லின் பூவைப்போல அழிந்துபோகும் மனிதன் மீது உங்களுடைய நம்பிக்கையை



வைக்காதிருங்கள். நம்புவதற்கு அவன் எம்மாத்திரம். கர்த்தர் மீதும் அவருடைய வசனத்தின் மீதும் உங்களுடைய நம்பிக்கையை வையுங்கள். “மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்” (எரே.17:5).

இந்தவிதமான நம்பிக்கை கொண்டு வழி விலகி சபிக்கப்பட்ட ஒருவனைக்குறித்து படிக்கிறோம். அவனே யூதாஸ். அவன் அவரை காட்டிக்கொடுத்தால் எனக்கு என்ன கொடுப்பீர்கள் என்று கேட்டு மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, தன் மாம்சம் இச்சித்த பணத்தை சுமக்கிறவனாயிருந்தான். முடிவில் நான்று கொண்டு செத்தான். சபிக்கப்பட்டவனை அடக்கம் பண்ணுவதுபோல் அவனை இரத்தநிலத்தில் அடக்கம்பண்ணினார்கள். கர்த்தரை அறிந்து அவர்மீது நம்பிக்கை வைக்காமல் வழி விலகுகிற மனுஷன் சபிக்கப்பட்டவனாயிருக்கிறான். அவன் செய்வது ஒன்றும் வாய்க்காது.

சபிக்கப்பட்ட நிலம் எப்படி ஒன்றும்விளைவியாதோ, அதைப்போல சபிக்கப்பட்டவனும் இருப்பான். “எப்படியெனில் தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற் கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு” என்று காண்கிறோம். நீங்கள் எப்படிப்பட்ட நிலமாக இருக்கிறீர்கள்? அடிக்கடி பெய்கிற மழைநீரைக்குடிக்கிற நிலமாக இருங்கள்.

அப்பொழுது தேவஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள். “மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்” என்று சங்.118:8-ல் வாசிக்கிறோம். சிலர் கஷ்டமான சூழ்நிலையில் வெந்தபுண்ணில் வேலைபாய்ச்சுகிற மக்களிடமும், எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுகிற மக்களிடமும் தங்களுடைய கஷ்டத்தை பகிர்ந்துகொள்வார்கள். இது எப்படியிருக்கிறது? “ஆபத்துக்காலத்தில் துரோகியை நம்புவது உடைந்து பல்லுக்கும் மொழிபுரண்ட காலுக்கும் சமானம்” என்பதைப் போலிருக்கிறது (நீதி.25:19). நமக்கோ ஆபத்து, துரோகியை நம்பலாமா? இதுதான் தக்க தருணம் என நினைத்து நமக்கு ஆழமான குழியை வெட்டுவான் அல்லவா? வேதம் நம்மை கர்த்தரிடத்தில் வழிநடத்தி, எச்சரித்து, நம்முடைய நம்பிக்கையை அதிகரிக்கப்பண்ணுகிறது.

யவீரு என்ற ஒரு மனிதன் இருந்தான். அவன் ஜெபஆலயத் தலைவனாயிருந்தான். அவன் இயேசுவின் அற்புதங்களையும்

அடையாளங்களையும் கேள்விப்பட்டு அவருடைய பாதத்தில் விழுந்து தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள் அவளை குணமாக்கும் என்று வேண்டிக்கொண்டான். இயேசுவானவர் போகையில் பெரும்பாடுள்ள ஸ்திரீயின் நிமித்தமாக தாமதம் ஆனது. "அவர் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், ஜெபஆலயத் தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருவன் வந்து, அவனை நோக்கி: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், போதகரை வருத்தப்படுத்தவேண்டாம் என்றான்.

இயேசு அதைக் கேட்டு: பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார். அவர் வீட்டில் வந்தபோது, பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் பெண்ணின் தகப்பனையும் தாயையும் தவிர வேறொருவரையும் உள்ளே வரவொட்டாமல், எல்லாரும் அழுது அவளைக்குறித்துத் துக்கங்கொண்டாடுகிறதைக் கண்டு அழாதேயுங்கள், அவள் மரித்துப்போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அவள் மரித்துப்போனாளென்று அவர்கள் அறிந்ததினால், அவரைப் பார்த்து நகைத்தார்கள். எல்லாரையும் அவர் வெளியே போகப்பண்ணி, அவளுடைய கையைப் பிடித்து பிள்ளையே எழுந்திரு என்றார். அப்பொழுது அவள் உயிர் திரும்பவந்தது; உடனே அவள் எழுந்திருந்தாள்; அவளுக்கு ஆகாரங்கொடுக்கக் கட்டளையிட்டார்" (லூக்.8:49-55).

தன் நம்பிக்கையில் சோர்ந்துபோன சூழ்நிலையில் நின்று கொண்டிருந்த அந்த யவீருவைப்பார்த்து கர்த்தர் பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு என்றார். ஒருவேளை என்ன ஆண்டவரே நான் கூப்பிட்டவுடனே நீங்கள் வந்திருந்தால் அவளை காப்பாற்றியிருக்கலாமே காலதாமதமானதினாலே அவள் மரித்துப்போனாளே என்று அவன் சொல்லியிருப்பானேயானால் அவனுடைய நம்பிக்கை வீணாய் போயிருக்கும். அவனோ தான் கர்த்தர் மேல் வைத்த நம்பிக்கையில் அசையாதவனாக நின்று கொண்டிருந்தபடியால் அவனை கர்த்தர் பார்த்து; பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு என்றார். உங்களுடைய நம்பிக்கையில் இப்படி அசையாதவர்களாயிருக்கிறீர்களா? பத்துவருடங்கள் ஆகிவிட்டது என் நம்பிக்கையெல்லாம் போய்விட்டது என்ற சூழ்நிலையில் நீங்கள் இருக்கலாம்.

நம்பிக்கையில் தளர்ந்துபோய்விடாதிருங்கள். கர்த்தருக்கு காத்திருக்கிறவர்கள் கழுகுகளைப்போல பெலனடைந்து செட்டைகளை அடித்து எழும்புவார்கள் என வேதம்போதிக்கிறது. கர்த்தருக்கு காத்திருங்கள். "ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார். இதோ, அவர் என் அருகில் போகிறார்,



நான் அவரைக் காணேன்; அவர் கடந்துபோகிறார், நான் அவரை அறியேன்" என்கிறார் யோபு (யோபு9:10,11).

**கேள்வி**

**நம்பிக்கையற்றவர்களுக்கு என்ன வைக்கப்பட்டிருக்கிறது?**

"இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள். இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்கிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரை தள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" என்று யூதா11-13-முடிய உள்ள வசனங்களில் படிக்கிறோம்.

ஆகையால் "உன் நம்பிக்கை கர்த்தர்மேல் இருக்கும்படி, இன்றையதினம் அவைகளை உனக்குத் தெரியப்படுத்துகிறேன்" என்கிறார் சாலொமோன் (நீதி.22:19). கர்த்தர் மீது நீங்கள் நம்பிக்கை வைக்கும்போது உங்களுடைய நம்பிக்கை வீண்போகாது. தாவீது, யோபு, யவீரு போன்றோருடைய நம்பிக்கை வீண்போகவில்லை என்று தியானித்தோம். உங்களுடைய நம்பிக்கையும் வீண்போகாதிருக்க அவரை நம்புங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 17. மனத்தெளிவுள்ளவனாயிரு
## Be Watchful

**வா**ழ்க்கையில் நாம் மனத்தெளிவுள்ளவர்களாயிருக்க வேண்டும். மனத்தெளிவு எப்படிவரும்? உறுதியான நம்பிக்கை மனத்தெளிவைக் கொண்டுவரும். கர்த்தரை சார்ந்திருக்கும்போது மனத்தெளிவு வரும். இவ்விதமான உறுதியைக் கொண்டிருந்தவர் அப்போஸ்தலனாகிய பவுல். ஆகையால் அவர் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "நீயோ, எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" என்கிறார் (2தீமோ.4:5).

பவுல் தன்னுடைய வாழ்க்கையில் மிகத்தெளிவானவராக இருந்தார். "நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை

அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன்'' என்கிறார் (1கொரி.9:26). அநேகரை பார்க்கும்போது, தாங்கள் என்ன செய்கிறார்கள். எதைக்குறித்து பிரசங்கிக்கிறார்கள் என்பதை அவர்களே மறந்து செயல்பட்டுக் கொண்டிருப்பார்கள். பவுல் தன்னுடைய வாழ்க்கையில் அப்படியல்ல. எதை பிரசங்கித்தாரோ அதன்படி தன்னுடைய வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொண்ட ஒரு வல்லமையான தேவ மனிதன். ஆதலால், அவர் சொல்லும் மிகத்தெளிவான மூன்று காரியங்களை உத்தமகுமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்திலிருந்து குறிப்பாக ஒரே வசனத்திலிருந்து நாம் காண்கின்றோம்.

**முதலாவது ''நல்ல போராட்டத்தை போராடினேன்''** என்கிறார் (2தீமோ.4:7). போராட்டம் இல்லாத வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கை அன்று. அதை முதலாவது நாம் புரிந்துகொள்ளவேண்டும். பவுலோ, தன்னுடைய வாழ்க்கையில் வந்த போராட்டத்தோடு கர்த்தருடைய ஊழியத்தை ஆசிய முழுமைக்கும் செய்து நிறைவேற்றியவர். முன்வைத்த காலை பின்வைக்காதவர் என்று சொல்லலாம். சுவிசேஷவசனத்தினிமித்தம் பக்திவைராக்கியம் கொண்டவர். அவருக்கு பல வகையில் போராட்டமானது இருந்தது. அவருடைய உயிருக்கே கூட ஆபத்து இருந்தது.

''சவுல் என்ற பவுல் அதிகமாகத் திடன்கொண்டு, இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான். அநேகநாள் சென்றபின்பு, யூதர்கள் அவனைக் கொலைசெய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள்'' என்று அப்.9:22,23 வசனங்களில் படிக்கிறோம். பவுல் மரணத்துக்கேதுவான குற்றம் ஒன்றும் செய்யவில்லை. யூதர்கள் அறியாமையினால் கொண்டுள்ள தங்களுடைய மார்க்கத்தினிமித்தம் பவுலுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் அவனை கொலை செய்துபோடும்படியாக திட்டமிட்டார்கள். இப்படிப்பட்ட காரியங்களிலிருந்து பவுலை அநேக வேளைகளில் கர்த்தர் காப்பாற்றினார். இப்படிப்பட்ட போராட்டம் இருந்தும் பவுல் தன்னைக் கொல்லுகிறவர்களுக்கு பயப்படாமல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தைரியமாய் எடுத்துரைத்தார்.

இயேசுவின் பிறப்பு முதல் மரணம்வரையும் அவருக்கு போராட்டம் இருந்தது என பரிசுத்தவேதம் நமக்குப் போதிக்கிறது. அவர் அற்புதமானவர், தேவனுடைய குமாரன், அவர் சொல்லஆகும், அவர் கட்டளையிட நிற்கும் என்றெல்லாம் வாசிக்கிறோம். இருந்தபோதிலும் ஆண்டவருக்கும் போராட்டம் இருந்தது. அவருடைய பிறப்பின்போது; ''கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத்



தேடுவான், ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரை அங்கே இரு என்றான்'' (மத்.2:13).

இந்த வார்த்தைக்கு கீழ்ப்படிந்த யோசேப்பு பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு நாசரேத்துக்கு கடந்துசென்றான். மேலும், அவர் ஊழியம் செய்து கொண்டு வந்த நாட்களில் ''பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி யோசித்து, ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினால், எவ்விதமாய் அப்படிச் செய்யலாமென்று வகைதேடினார்கள்'' (லூக்.22:2). ஆண்டவருக்குத்தான் எத்தனை பாடுகள் என்று பார்த்தீர்களா? அவர் சகலத்தையும் சகித்து பிதாவின் சித்தத்திற்கு தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தார். அதைப்போல பவுலும் நல்ல போராட்டத்தை போராடினேன் என்று சொல்லுகிறார்.

**இரண்டாவது, ''ஓட்டத்தை முடித்தேன்''** என்கிறார் (2தீமோ.4:7). ஓட்டத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது. பந்தையத்திற்கு போராடுகிறார்கள். ஓடி முடித்தால் தானே பந்தைய பொருளைப் பெற முடியும், ஆகையால் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள் என்கிறார். இன்றைக்கு அநேகர் ஓட்டத்தை துவக்குகிறார்கள் ஆனால் பாதியிலே சோர்ந்துபோய் ஆராதனைக்கு வராமலும், கிறிஸ்தவ ஜீவியத்தில் நிலைத்திராமலும் பின்வாங்கிப்போகிறார்கள். ஆனால், பவுல் இங்கு ஓட்டத்தை முடித்தேன் என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதை வாசிக்கிறோம். ஆண்டவர் இயேசு கடைசியில் தம்முடைய ஆவியை ஒப்புவிக்கும்போது; ''பிதாவே உம்முடைய கைகளில் என்னுடைய ஆவியை ஒப்பிவிக்கிறேன் என்று சொல்லி ஒப்புவித்தார்'' (லூக்23:46).

மரியாள் இயேசுவைப் பெற்ற தாயாக இருந்தபோதிலும் தன்னுடைய ஆவியை ஒப்புக்கொடுக்கும்போது தன்னை அனுப்பினவரிடத்தில் ஒப்புக்கொடுக்கிறதை பார்க்கிறோம். அதைப்போல, ஸ்தேவான் ஒரு அன்பான தேவ ஊழியன். அவன் ஆபிரகாம் முதல் கொண்டு இயேசுவின் மரணம் வரைக்குமாக பிரசங்கித்தான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த யூதர்கள் அதாவது தேவனுடைய ஜனங்கள் அவனுக்கு கொடுத்த பரிசு என்னவென்று தெரியுமா? கல்லால் அடித்து அவனைக் கொலைசெய்துபோட்டார்கள். அவனோ கல்லால் அடிக்கிற ஜனங்களை சபிக்கவும் இல்லை. திரும்ப அவர்களை அவன் கல்லால் அடிக்கவுமில்லை.

மாறாக ''கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள்''

என்று அப்.7:59-ல் வாசிக்கிறோம். இதையெல்லாம் வாசிக்கும்போது நாம் எப்படி ஜீவிக்கப்போகிறோம் என்ற பய உணர்வு ஏற்படுகிறதா? இப்படியெல்லாம் ஊழியத்தில் நடக்கும் என்பதை அறிந்த பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதிய நிருபத்தில்; ‘‘கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்றார்’’ (பிலி.1:21). ஓட்டத்தை முடித்தேன் என்று சொல்லுகிறார். மனத்தெளிவான வார்த்தையை நாம் இங்கு காணமுடிகிறது.

சாவுக்கு பயப்படக்கூடிய கோடாகோடி ஜனங்களை நாம் காண்கிறோம். ஆனால் பவுலுடைய தெளிவான பதில் **கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்.** கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். ஆகையால்தான் ஒருவன் கிறிஸ்துவுக்குள் மரிக்கும்போது நாம் துக்கப்படாதிருக்கிறோம். அவன் ஒரு நாளில் இயேசுவின் வருகையில் உயிர்ப்பிக்கப்படுவான். அவன் இயேசுவுக்காக மரித்தான். அவருடைய வருகையில் அவர் அவனை எழுப்புவார் என நம்புகிறோம்.

**மூன்றாவதாக, ‘‘விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்’’** என்கிறார் (2தீமோ.4:7). உங்களுடைய விசுவாசம் காக்கப்பட்டுள்ளதா? ஒரு மனிதன் விசுவாசத்திற்குள் வந்ததிலிருந்து அவனுக்கு வரும் போராட்டங்கள் எத்தனை எத்தனை. அத்தனை போராட்டங்களிலும் அவன் போராடி வெற்றியுள்ள கிறிஸ்தவனாக விசுவாசத்தை மறுதலிக்காதவனாக இருக்கவேண்டும். பவுல் இந்த மார்க்கத்திற்கு விரோதமாக இருந்தவர். கர்த்தர் அவரை சந்தித்ததிலிருந்து கர்த்தருடைய மார்க்கத்திற்காக இரவு பகலாக போராடி பிரயாசப்பட்ட தேவ மனிதன். விசுவாசத்திற்கு சோதனை வந்தவுடன் ஒன்று விசுவாசத்தை மறுதலிப்பார்கள் அல்லது பாவத்தின் கீழ் அடிமைப்படுவார்கள். இந்த இரண்டிலும் வெற்றி கொண்டவர் அப்போஸ்தலனாகிய பவுல்.

ஆண்டவர் இயேசுவுக்கும் அநேக சோதனைகள் வந்தது. பிசாசு அவரை சோதிக்கும்படி உயர்ந்த மலைக்கு கொண்டு சென்றான். ‘‘அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்’’ என பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.2:22,23). சில விசுவாச மக்களிடம் நீங்கள் என்றாவது தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ததுண்டா என்று கேட்டால் ஐயோ, நானெல்லாம் ஒரு பாவம் அறியாத அப்பாவி என்று சொல்வார்கள். ஆனால் அவர்களை யாராவது திட்டிவிட்டால் போதும் சரவெடிகள் போல் வெடித்து பின்பு அமைதியடைவார்கள்.

இயேசு அப்படியிருந்தாரா என்று நாம் தியானிக்கும்போது அவர்



வாய் திறவாத ஆட்டைப்போல இருந்தார். வையப்படும்போது பதில் வையாமலும் என்று வாசிக்கிறோம். ஆகையால் பிரியமானவர்களே, ‘‘பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப்போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது’’ என்கிறார் யூதா (யூதா3). அந்த விசுவாசத்திற்காக போராடுங்கள். ‘‘விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்’’ (எபி.10:38).

ஆண்டவருடைய அன்பையும், அவருடைய இரட்சிப்பையும் பெறவேண்டுமானால் பவுலைப்போல உங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டு மனத்தெளிவுள்ளவர்களாக இருந்து உங்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் அமைதலோடும் உத்தரவு சொல்ல ஆயத்தமாயிருங்கள். ஒருவேளை உங்களுக்கு வரக்கூடிய சோதனையில் வெற்றிகொள்ளாமல் பின்வாங்கிப் போவீர்களானால், உங்கள் மீது கர்த்தர் பிரியமாயிரார் என வேதம் மிகத்தெளிவாகபோதிக்கிறது. ஆகையால், அன்பான சகோதரனே, சகோதரியே அப்போஸ்தலனாகிய பவுலைப்போல பேச்சிலும், நம்பிக்கையிலும், மனத்தெளிவுள்ளவர்களாயிருங்கள். நல்ல போராட்டத்தை போராடுங்கள், ஓட்டத்தை முடியுங்கள், உங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களையும் இரட்சிப்பார்.

**கேள்வி**

**மரித்தோரைப்பற்றியதான தெளிவு என்ன?**

‘‘மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே, நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்....மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும் அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும், கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்.

ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்....இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம்

தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், இப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்'' என்ற மனத்தெளிவான நம்பிக்கையை பவுல் கொரிந்துசபையாருக்கு எழுதினநிருபத்தில் வாசிக்கிறோம் (1கொரி.15:35-51).

இந்தவிதமான தெளிவான புரிந்துகொள்ளுதல் உங்களுக்கு இருக்குமானால் நீங்கள் மரித்தோரைக்குறித்து கவலைப்பட தேவையில்லை. உங்களுக்கு வரக்கூடிய மரணத்தைக்குறித்தும் பயப்பட தேவையில்லை. நீங்கள் பவுலைப்போல மனத்தெளிவுள்ளவர் களாக இருக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 18. உன் விசுவாசம் பெரியது

## Your Faith Is Great

**உ**ன் விசுவாசம் பெரியது என்று தீரு சீதோன் கடற்கரை பட்டணங்களில் குடியிருந்த கானானிய ஸ்திரீயைப் பார்த்து கர்த்தர் சொன்னார். அப்படியானால் அவளுடைய விசுவாசம் அந்தஅளவு பெரியதாக இருந்தது இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற உங்களுடைய விசுவாசம் எத்தகையதாயிருக்கிறது? இந்த கானானிய ஸ்திரீ ஒரு புறஜாதி பெண். இவளுக்கு எப்படி இப்படிப்பட்ட விசுவாசம் வந்தது? என்று நீங்கள் நினைக்கலாம். ஆண்டவரைப் பற்றியும் அவருடைய உபதேசத்தைப் பற்றியும் தீரு, சீதோன் பட்டணத்தைச் சேர்ந்தவர்கள் நன்கு அறிந்திருக்கக்கூடும்.

எப்படியெனில் ''கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்'' என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார் (மத்.11:21). ஆகையால் இப்பட்டணத்தைச் சேர்ந்த இந்த கானானிய ஸ்திரீ இயேசுவிடம் வந்து ''ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக்கூப்பிட்டாள்'' (மத்.15:22). இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்ட இவள்: தன்னுடைய மகளை பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கும்படியாக இயேசுவை நோக்கி வேண்டிக்கொண்டாள்.

உலகத்திலே பிசாசு எதற்கு வருகிறானென்றால் ''திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்''



என்றார் இயேசு (யோவா.10:10). பிசாசு ஆதிமுதல் மனிதகொலைபாதகனாயிருக்கிறான். அவனிடத்தில் சத்தியமில்லை. பொய்யனும் பொய்க்கு பிதாவுமாயிருக்கிறான். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். ஆகையால் அவர் ஒருவரால் மட்டுமே பிசாசின் கிரியைகளை அழிக்கமுடியும். இதை அறிந்த கானானிய ஸ்திரீ, பிசாசினால் மிகவும் வேதனைப்படுகிற தன்னுடைய மகளை குணமாக்கும்படி இயேசுவிடம் வந்தாள். நாமும்கூட சில காரியங்களுக்காக தேவனை நோக்கி இயேசுவின் நாமத்தில் மன்றாடுகிறோம். அவைகளுக்கு உடனே பதில் கிடைத்துவிடுகிறதா? இல்லையே. அதைப்போல இந்தப்பெண்ணுக்கும் நடந்தது.

''அவளுக்குப் பிரதியுத்தரமாக அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து; இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்'' (மத்.15:23). அவள் இயேசுவை தொடர்ந்து கேட்டுக்கொண்டே வந்தபடியால் சீஷர்கள் கானானிய ஸ்திரீக்காக பரிந்துபேசினார்கள். சீஷர்களுக்கு இருந்த இரக்கம்கூட இயேசுவுக்கு இல்லையா என்பதைப்போல ஒரு நிலை ஏற்படுகிறது.

இயேசு ஒருவேளை, அவளுடைய விசுவாச பரீட்சைக்கு, அவளை ஒப்புக்கொடுத்திருக்கலாம். காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றபடியல்ல வென்றார். இந்த இஸ்ரவேலரை யாக்கோபின் நாட்கள் தொடங்கி அவர்களை அற்புதவிதமாக வழிநடத்திக்கொண்டு, தம்தோளில் சுமந்துவந்தார். ஆனால் அவர்களோ வணங்கா கழுத்துள்ளவர்களாக போனார்கள். ஆண்டவர் இயேசு இந்த மக்களைப்பார்த்துச் சொல்லும்போது ''எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று'' என்று சொல்லுகிறார் (லூக்.13:34).

இப்படி கீழ்ப்படியாமற்போன இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றபடியல்ல என்று ஆண்டவர் இயேசு சொன்னதைக்கேட்ட கானானிய ஸ்திரீக்கு கோபம் ஏற்படவில்லை. ஒருவேளை நீங்களாகவோ, நானாகவோ இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும். இவரை பின்தொடர்ந்து கூப்பிடுவதில் பிரயோஜனமில்லை என்று சொல்லி, ஆனபடி ஆகட்டும் என்று வீட்டுக்குச் சென்று இருப்போம். ஆனால் கானானிய ஸ்திரீயோ

அப்படியல்ல தன்னுடைய நம்பிக்கையில் அதாவது விசுவாசத்தில் தளர்ந்துபோகாதிருந்து இயேசுவை பணிந்துகொண்டாள். எப்படியென்றால், "அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்துகொண்டாள்" (மத்.15:25).

அவளுடைய பணிந்துகொள்ளுதலைப் பார்த்த கர்த்தர் அவளுக்கு உடனே இரங்கவில்லை. சிலர் என்ன நினைக்கிறார்கள், சபைக்கு சென்றவுடன் நன்மைகள் வீடுதேடி வரவேண்டும், அவரை விசுவாசித்தவுடன் அற்புதங்கள் நடைபெறவேண்டுமென நினைக்கின்றனர். அது தவறு அன்பானவர்களே. இந்த மகள் தொடர்ந்து ஓயாமல் கூப்பிட்டுக்கொண்டே வருகிறாள். அவள் இயேசுவை நோக்கி கூப்பிடுவதில் சலித்துப்போகவில்லை. ஆனால் ஆண்டவருடைய பதில் என்னவாயிருந்தது; "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார்" இதைக்கேட்ட அவளுக்கு எப்படியிருந்திருக்கும்.

அவள் கடுகளவும் கோபப்படவில்லை. சிலருக்கு இப்படிச்சொன்னால் போதும், என்னை என்ன நாய் என்றா சொல்லிவிட்டீர்கள். நீங்களும் வேண்டாம், நீங்கள் கொடுக்கும் சுகமும்வேண்டாம் என்று வெறுப்பாய் சென்றுவிடுவார்கள். இந்த பெண்ணோ மிகவும் ஞானமுள்ளவள், பொறுமையானவள். இயேசுவின் பாதத்தை விட்டு எடுபடாத நல்லபங்கை தெரிந்து கொண்ட மரியாளைப்போல இவள் இயேசுவை விடாது பற்றிக்கொண்டாள்.

ஆகையால் ஆண்டவரைப்பார்த்து "மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்" (மத்.15:27). தன்னை நாய்க்குட்டி என்று ஆண்டவர் சொல்லியிருந்தும் இவளும் தன்னை நாய்க்குட்டிபோல தாழ்த்தி மெய்தான் ஆண்டவரே, நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே, அப்படி விழும் துணிக்கையளவுள்ள ஆசீர்வாதத்தையாவது எனக்கு தாருங்கள் என்று தன் மனதில் நினைத்து அதற்காக காத்திருந்து ஆண்டவரோடு பேசினாள்.

எத்தனை ஆச்சரியமான காரியம் என்று பார்த்தீர்களா? முடிந்தவரை முயற்சிப்பார்கள், கிடைக்காத வேளையில் தூஷித்துவிட்டு சென்றுவிடுவார்கள் அல்லது மறுதலித்துவிட்டு சென்று விடுவார்கள். இவளோ தன் மகள் எப்படியாவது இயேசுவினால் சுகமாக்கப்படவேண்டும் என்ற விசுவாசத்தோடு இயேசுவைப் பின்தொடர்ந்து அவருடைய ஆசீர்வாதத்தை பெறக் காத்திருந்தாள். யாக்கோபு என்ற தேவமனிதனைப்பற்றி ஆதி.32-ம்



அதிகாரத்தில் படிக்கிறோம். அவன் தேவனோடு போராடி, அவனை அவர் மேற்கொள்ளாததைக் கண்டு, அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச் சந்து சுளுக்கிற்று. அவர் நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார்.

அதற்கு அவன்; நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான். அவர் உன் பேர் என்ன எனறு கேட்டார்; யாக்கோபு என்றான். அப்பொழுது அவர்; உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார். இப்படியாக யாக்கோபு தேவனுடைய ஆசீர்வாதத்தை போராடி பெற்றுக்கொண்டான்.

மேலும், கானானிய ஸ்திரீயின் விசுவாசத்தைப்போல விசுவாசத்தை உடைய நூற்றுக்கு அதிபதியை பற்றி லூக்.7-ம் அதிகாரத்தில் படிக்கிறோம். இவன் தன்னுடைய வேலைக்காரனுக்காக கர்த்தரைநோக்கி மன்றாடியவன். அவன் இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டபோது, அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்கவேண்டுமென்று, அவரை வேண்டிக்கொள்ளும்படி யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுப்பினான். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவரைக் கருத்தாய் வேண்டிக்கொண்டு நீர் இந்தத் தயவுசெய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான். அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான் என்றார்கள்.

அப்பொழுது இயேசு அவர்களுடனே கூடப்போனார் வீட்டுக்குச் சமீபமானபோது, நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி: நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே! நீர் வருத்தப்படவேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான் மற்றொருவனை வாவென்றால் வருகிறான்; என் வேலைக்காரனை இதைச் செய்யென்றால் செய்கிறான் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள் என்று அவர்களை அனுப்பினான்.

இயேசு இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி தமக்குப் பின்செல்லுகிற திரளான ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். இச்செய்தியை

வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு வாசகரே, ஆண்டவர் நூற்றுக்கு அதிபதியைக் குறித்து கொடுத்த சாட்சியைப் பார்த்தீர்களா? அதைப்போல கானானிய ஸ்திரீயின் விசுவாசத்தைக் கண்ட கர்த்தர் உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார் அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள். ஆசீர்வாதம் உடனே வந்துவிடாது.

நம்முடைய நம்பிக்கை அதாவது விசுவாசம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? இந்த கானானிய ஸ்திரீயின் விசுவாசத்தைப்போலவும், யாக்கோபு, மரியாள் மற்றும் நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைப்போலவும் இருக்கிறதா? கர்த்தர் மீது நம்பிக்கை வைக்கும்போது நாமும் கர்த்தரிடம் கேட்டவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையோடிருங்கள்.

**கேள்வி**

**தம்மிடம் வந்த எல்லோரையும் கர்த்தர் ஏற்றுக்கொண்டாரா?**

ஆம், அவர் ஒருவரையும் புறம்பே தள்ளவில்லை. அவரிடம் வந்த அனைவரும் சுகம்பெற்று சென்றனர். அவர் ஒருமுறை கெனேசரேத்து நாட்டில் சேர்ந்தபோது அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொடும்படி உத்தரவாகவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள். தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள் என்று மத்தேயு 14: 35,36 வசனங்களில் வாசிக்கிறோம். அவரிடம் வந்த அனைத்து நோயாளிகளும் பிசாசுபிடித்தவர்களும் சுகமானார்கள் என்று நான்கு சுவிசேஷ புஸ்தகங்களின் வாயிலாக அறிகிறோம்.

இயேசு சொல்கிறார்; "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்றார் (யோவா.6:37). உங்களையும் ஆண்டவர் நேசிக்கிறார். நீங்கள் அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய உபதேசத்தைக் கைக்கொள்ளும்போது மெய்யான சந்தோஷத்தையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்வீர்கள். அவர் ஒருபோதும் உங்களை கைவிடார். கானானிய ஸ்திரீயைப்போல அவர் உங்களை ஆசீர்வதிக்கும் வரை அவருடைய சமூகத்தை விட்டு எடுபடாதிருங்கள். கானானிய ஸ்திரீக்கு இரங்கின கர்த்தர் உங்களுக்கும் இரங்கத்தக்கதாக உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"அவர் எனக்குப் போதித்துச் சொன்னது; உன் இருதயம் என் வார்த்தைகளைக் காத்துக்கொள்ளக்கடவது; என் கட்டளைகளைக் கைக்கொள், அப்பொழுது பிழைப்பாய்"** நீதி. 4:4



# 19. இடறல்

# Offense

இடறல் எல்லோருக்குமே வருகிறது. இடறல் இல்லாத மனிதனே இல்லை என்று சொல்லலாம். ஏன், ஆண்டவர் இயேசுவுக்கே இடறல் உண்டாக்கினார்கள் என்று நாம் வேதத்திலிருந்து அறிகிறோம். இப்படி இடறல் உண்டாக்குகிற மனிதர்களைக் குறித்து கர்த்தர் மத்தேயு 18-ம் அதிகாரம் 6-ம் வசனத்தில் இப்படியாகச் சொல்லுகிறார் "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" என்றார்.

ஆண்டவர் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிற ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவனுக்கு இப்படிப்பட்ட தண்டனையை கர்த்தர் கொடுக்க அறிந்திருக்கிறார். கர்த்தர் எந்த அளவு அவருடைய பிள்ளைகளை நேசிக்கிறார் என்று பார்த்தீர்களா? உள்ளங்கைகளில் வரைந்து வைத்திருக்கிறேன் என்றும் உங்களுடைய தலையிலுள்ள முடிகளெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது என்றும் சொல்கிறார். பிறப்பு முதல் மரணம் வரை தன் தலையிலுள்ள முடிகளை எண்ணிப்பார்த்து கணக்கிட்டவன் உண்டா? அப்படியானால் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்களை எந்த அளவு கரிசனையுள்ளவராக இருந்து பாதுகாக்கிறார் என்று அறிகிறோம்.

முதல் நூற்றாண்டு காலத்தில் சவுல் கர்த்தருடைய சபையை பாழாக்கிக்கொண்டிருந்தான். இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான். அவன் தமஸ்குவுக்குச் சமீபித்தபோது ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது; அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான்.

அதற்கு அவன்; ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்; நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். தாம் சம்பாதித்த சபையின் ஆடுகளை துன்பப்படுத்திக்கொண்டு வந்த சவுலை கர்த்தர் சந்தித்து அவனை எச்சரித்தார். இதற்கு கீழ்ப்படிந்த சவுல் அத்துடன் அதை நிறுத்திவிட்டு, தானும் இயேசுவுக்கு உண்மை சீஷனாக, அப்போஸ்தலனாக மாற்றப்பட்டான். இந்த பவுலைப்போல

அநேகர் இன்றும் இயேசுவின் மெய்யான மார்க்கத்திற்கு விரோதமாக செயல்படுகிறார்கள். அவருடைய சபைக்கு இடறலாக வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பவேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார்.

சிலர் துணிந்து இடறல் உண்டாக்கிக்கொண்டே இருப்பதால்; "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்று வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் திருவுளம்பற்றுகிறார் (வெளி.22:12). அன்பு நண்பரே நீ அவருடைய ராஜ்யத்திற்கு உதவியாயிருக்கிறாயா அல்லது இடறலாயிருக்கிறாயா?

"இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!" என்று சொல்லுகிறார் (மத்.18:7). தீவிரவாதம் இன்று வரை தலைதூக்கி ஆடிவருகிறது. அதை ஒழிப்பதற்கு உலக நாடுகள் முழுகவனம் செலுத்திவருகிறது. இப்படிப்பட்ட இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ என்று அறிகிறோம். தேவனுடைய சித்தமில்லாமல் ஒன்றும் நடைபெறாது என்பதை நாம் அறிவோம். ஒரு விவசாயி நிலத்தில் நல்ல விதைகளை விதைக்கிறான், பின்பு களைகள் எப்படிவந்தது? அதைப்போல நல்ல உலகத்தில் தீவரவாதம் பெருகிவருகிறது. இப்படிப்பட்ட இடறல்கள் வந்தபோதிலும், அது எந்த மனுஷனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ என்று வேதம் எச்சரிக்கிறது.

அழிவைக்கொண்டு வருகிறவன் அல்லது அழிவை தூண்டுகிறவன் இதுவரை நன்கு வாழ்ந்ததாக சரித்திரம் உண்டா? இல்லையே, அதையே தான் வேதமும் எடுத்துச்சொல்லுகிறது. அவனுக்கு ஐயோ! இதை முதல் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த யூதாசுடைய வாழ்க்கையில் காண்கிறோம். "மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ! அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்" (மாற்.14:21).

யூதாஸின் முடிவை கேட்டிருக்கிறீர்களா! அவனோ நான்று கொண்டு செத்தான். உலகமெங்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக தெரிந்துகொண்ட அப்போஸ்தலரில் ஒருவனாயிருந்தவன் இந்த யூதாஸ். அவனோ, கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்திற்கு இடறலாக பணத்தை இச்சிக்கிறவனாக, பணப்பையை சுமக்கிறவனாக இருந்து இயேசுவை முத்தத்தினாலே காட்டிக்கொடுத்து, முடிவில் இரத்த நிலத்தை



சம்பாதித்தான். வேதம் அவன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்று சொல்லுகிறது. அப்படியென்றால் அவனுக்கு கிடைக்கும் தண்டனை எப்படிப்பட்டதாயிருக்கும்!

அதை எண்ணிப்பார்க்கும்போது நமக்கே மிக பயமாக இருக்கிறதல்லவா, இடறலாயிராமல் ஆவிக்குரிய விஷயத்தில் உதவியாயிருப்பது எத்தனை ஆசீர்வாதமான காரியம். கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள் என்று பவுல் எழுதுவதின் நோக்கமென்ன; அவர்கள் பவுலுடைய பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள். இப்படிப்பட்ட உதவி செய்கிறவர்களாக இருக்க பிரயாசப்படவேண்டும்.

ஒரு முறை ஆண்டவர் பேதுருவைப்பார்த்து நீ எனக்கு இடறலாயிருக்கிறாய் என்றார். ஏனென்றால்; "ஆண்டவர் தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பலபாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார். அப்பொழுது, பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்; ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதிலை என்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான். அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து; எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்" (மத்.16:21-23).

அநேகர் இந்த பேதுருவைப்போல சிந்திக்க ஆரம்பித்து விடுகின்றனர். இவைகள் மனுஷருக்கு ஏற்றவைகளாயிருக்கிறது. ஆனால், பிதாவின் சித்தமில்லாமல் ஒன்றும் தரையிலே விழாது என்று ஆண்டவர் குறிப்பிடுகிறார். இவ்விதமான நம்பிக்கை உங்களுக்குள் இருக்கிறதா? தாவீதை ஜனங்கள் கல்லால் அடிப்பதையும், தூஷிப்பதையும் படைத்தலைவன் அபிசாய் பார்த்து அவர்களுடைய தலையை வாங்க துணிந்தான். அப்பொழுது தாவீது அவர்கள் நம்மீது கல்லால் அடிக்கும்படி தேவன் அனுமதித்திருக்கிறார் என்று சொல்லி படைத்தலைவனை சாந்தப்படுத்தினான். அன்பானவர்களே இடறல் எல்லோருக்குமே வந்திருக்கிறது. அதைபோல நமக்கும் சிலவேளைகளில் வருகிறது. அதைக்கண்டு துவண்டுவிடாதீர்கள்.

சிலவேளைகளில் நம்முடைய சரீரமே நமக்கு இடறலாக மாறிவிடுகிறது அப்பொழுது நாம் என்னசெய்வது என்ற கேள்வி நமக்குள் எழும்பும். இதைக்குறித்து கர்த்தர் குறிப்பிடுகிறார்; "உன் கையாவது உன்

காலாவது உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தறித்து எறிந்துபோடு; நீ இரண்டு கையுடைவனாய், அல்லது இரண்டு காலுடையவனாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், சப்பாணியாய், அல்லது ஊனனாய், நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்'' என்றார் (மத்.18:8).

நாம் கைகளினால் நலமான காரியங்களைச் செய்கிறோம். அதேவேளையில் நம்முடைய கைகளே நமக்கு விரோதமாக மாறிவிடுகிறது. அந்த கைகளாலே பல தவறுகளை செய்துவிடுகிறோம் அல்லவா? அப்படி செய்யும்போது அந்த கைகளை நம்மைவிட்டு நீக்கிப்போடவேண்டும். அது எப்படிமுடியும் என்பீர்கள். நாம் இரண்டு கையுடையவர்களாக அல்லது இரண்டு கால் உடையவர்களாக நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும் ஊனனாய் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது நலமான காரியம் அல்லவா? இதை ஏற்றுக்கொள்ளும் காதுகள் ஞானமான காதுகள்.

நம்முடைய ஆதி தாய் தகப்பன். கர்த்தருடைய கட்டளைகளை மீறி அந்தக் கைகளினாலே விலக்கப்பட்ட கனியைப் பறித்து புசித்து பாவத்துக்குட்பட்டனர். ''அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்'' என்று ஆதி.3:6-ம் வசனத்தில் படிக்கிறோம். அந்த கை அவர்களுக்கு இடறலாக இருந்தது. அந்தக் கையை ஏவாள் தறித்துப்போட்டு இருந்திருப்பாளேயானால் பாவத்திற்கு உட்பட்டிருக்க மாட்டாள். அன்பு சகோதரனே, சகோதரியே உன் நிலைமை எப்படி உள்ளது? பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி கெட்டுப்போனான் என்று யூதா 11-ம்வசனத்தில் வாசிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் ''மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்'' என்கிறார் (1கொரி.9:27). களவு செய்யக்கூடாது என்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? விபசாரஞ்செய்யக்கூடாது என்று பிரசங்கிக்கிற நீ விபசாரஞ்செய்யலாமா? ஆகையால் நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்கிறார். இன்று ஒவ்வொரு பிரசங்கிமார்களும் தங்களுடைய சரீரத்தை ஒடுக்குவார்களேயானால் எப்படியிருக்கும். சுவிசேஷம் உலமெங்கும் பரவி மகிமைப்பட ஏதுவாயிருக்கும்.



மேலும் ''உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு இரண்டு கண்ணுடையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும் ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்'' என்றார் (மத்.18:9). மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் பிசாசு கொண்டுவருபவை இவைகளை உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள். யோபு சொல்கிறார்; ''என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி?'' (யோபு 31:1). இவரைபோல கண்களோடும், கர்த்தரோடும் உடன்படிக்கை பண்ணி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

**கேள்வி**

**சரீரத்தில் செய்த காரியங்களுக்கு தண்டனையுண்டா?**

ஆம், ''ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'' என்று பவுல் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் வாசிக்கிறோம் (2கொரி.5:10). அநேகர் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று எண்ணுகிறார்கள்.

பூமியிலே ஒருவன் தவறு செய்துவிட்டால் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்பட்டு அவன் செய்த குற்றத்திற்கு ஏற்ற தண்டனையைப் பெற்று சரீரத்தில் அநுபவிக்கிறான். பூமியிலே அவனுக்கு இப்படிப்பட்ட தண்டனைகள் வழங்கப்படும்போது, ஒருநாள் அனைவரும் ஆண்டவர் முன்பாக நிறுத்தப்படுவோம். இதில் யாரும் தப்பிக்கொள்ளமுடியாது; நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார். போக்குச்சொல்ல இடமிராது. ஆகையால் இடறல் அற்ற வாழ்க்கை வாழ பிரயாசப்படுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 20. ஆகானின் பாவம்
## Sin of Achan

**பா**வம் ஒரு மனிதனை பல வழிகளில் ஆண்டுவருகிறது. அவன் அதற்கு இடம்கொடுக்கும்போது அவனுக்குள் அந்த பாவம் வந்து தங்கி குடிகொள்ளும். இஸ்ரவேலிலே ஆகான் என்ற ஒரு மனுஷன் இருந்தான். **அவன் சாபத்தீடானதை இச்சித்து எடுத்துக்கொண்டான்.** அதினாலே இஸ்ரவேலர் ஆயி என்ற பட்டணத்தில் தோற்றுப்போனார்கள். எரிகோவை

வெற்றிகொண்ட இஸ்ரவேலர் ஆயி என்ற சிறிய பட்டணத்தில் தோற்றுப்போனதற்கு மிக முக்கியமான காரணம் இந்த ஆகானின் பாவம்தான். அப்படி என்ன பாவம் செய்தான் என்று நீங்கள் கேட்பீர்கள். "கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறுவெள்ளிச் சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன்; இதோ, அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்குள் புதைத்திருக்கிறது, வெள்ளி அதின் அடியிலிருக்கிறது என்றான்" (யோசு.7:21).

நாட்டைப்பிடிக்கச் சென்றவன் தன் கண்கள் இச்சித்தவைகளை எடுத்து தன் கூடாரத்தின் மத்தியில் யாருக்கும் தெரியாவண்ணம் பூமிக்குள் புதைத்துவைத்தான். அது தனக்கு பயன்படும் என்றுதானே புதைத்துவைத்தான். அவைகளை எடுக்காதீர்கள் என்ற கட்டளை கர்த்தரால் பிறபிக்கப்பட்டிருந்தது. ஏனெனில் அவைகள் சாபத்தீடானவைகள். இன்றும் எத்தனையோ சாபத்தீடான காரியங்கள் இருக்கிறது. அவைகளை தேவமக்கள் நாடிப்போகிறார்கள். அவைகளை இச்சித்து எடுத்துக்கொள்கிறார்கள். கர்த்தர் காண்கிறார் என்ற பயம் இல்லாமற்போகிறது. இதுவும் பாவமே.

ஆகானுடைய பாவம் அவனுடைய குடும்பத்தை மட்டுமல்ல இஸ்ரவேலுக்கே தோல்வியை கொண்டுவந்தது. இவைகளை அறிந்த யோசுவா "சேராகின் புத்திரனாகிய ஆகானையும், அந்த வெள்ளியையும் சால்வையையும் பொன்பாளத்தையும் அவன் குமாரரையும் குமாரத்திகளையும், அவன் மாடுகளையும் கழுதைகளையும், அவனுக்குள்ள யாவையும் எடுத்து, ஆகோர் பள்ளத்தாக்குக்குக் கொண்டுபோனார்கள். அங்கே யோசுவா; நீ எங்களைக் கலங்கப்பண்ணினதென்ன? இன்று கர்த்தர் உன்னைக் கலங்கப்பண்ணுவார் என்றான். அப்பொழுது இஸ்ரவேல ரெல்லாரும் அவன்மேல் கல்லெறிந்து, அவைகளை அக்கினியில் சுட்டெரித்து, கற்களினால் மூடி; அவன்மேல் இந்நாள்வரைக்கும் இருக்கிற பெரிய கற்குவியலைக் குவித்தார்கள்" (யோசு.7:24,25).

யோசுவா அவனையும் அவனுடைய உடைமைகளையும் இஸ்ரவேலிலே சேர்த்துக்கொள்ளவில்லை. அன்பு நண்பரே, கர்த்தருக்கு விரோதமான பாவத்திலே வீழ்ந்துபோகிறவர்கள். நியாயப்பிரமாணத்தின்படி தண்டிக்கப்பட்டார்கள். கிருபையின் நாட்களில் இருக்கிற நமக்கு ஒருவேளை இது எச்சரிப்பாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சாபத்தீடானதைக்குறித்த விஷயத்தில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டு காலத்தின் கீழ் அதாவது அந்த உபதேசத்தின்



கீழ்வாழ்ந்த மக்கள் கூட பாவத்தினால் வந்தவைகளை சுட்டெரித்துப்போட்டார்கள் என அப்.19:19-ல் வாசிக்கிறோம். "மாயவித்தைக் காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்". பாவத்தினால் வரும் ஆதாயம் சாபம். ஆகையால் அவைகளை சுட்டெரித்துப்போட தயங்கக்கூடாது.

**இரண்டாவதாக** நாம் பார்க்கும்போது **ஆகான் கர்த்தரின் உடன்படிக்கையை மீறினான்**. எப்படியென்றால் "சாபத்தீடானதை எடுத்தவனாய்க் கண்டுபிடிக்கப்படுகிறவன், கர்த்தரின் உடன்படிக்கையை மீறி, இஸ்ரவேலிலே மதிகேடான காரியத்தைச் செய்தபடியினால், அவனும் அவனுக்குள்ள யாவும் அக்கினியில் சுட்டெரிக்கப்படக்கடவது" என்று சொல்லப்பட்டது (யோசு7:15).

தேவனாகிய கர்த்தர் மனுஷனை மண்ணினாலே உருவாக்கி தமது ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். அவன் ஜீவாத்துமாவானான். இன்னும் அவனுக்கு தேவையான அனைத்தையும் ஏதேன் தோட்டத்தில் கொடுத்து இவைகளை எல்லாம் ஆண்டுகொள்ளுங்கள் என்றார். தேவன் மனிதனுக்காக கொடுக்காதது என்ன இருக்கிறது. இத்தனை ஆசீர்வாங்களைப் பெற்ற மனிதன் கர்த்தருக்கு எவ்வளவு உண்மையும் உத்தமுமாக இருக்கவேண்டும். இதை விட்டுவிட்டு பிசாசு கொண்டு வருகிற மாம்சத்தின் இச்சைக்கும், கண்களின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும் முக்கியத்துவம் கொடுத்து ஆகானைப்போல மதிகெட்ட காரியத்தை செய்ய துணிந்துவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இஸ்ரவேலுக்குள் இருப்பதை அறிந்த கர்த்தர் யோசுவாவுக்கு அவைகளைத் தெரிவித்தார். "இஸ்ரவேலர்கள் பாவம் செய்தார்கள்; நான் அவர்களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள்; சாபத்தீடானதில் எடுத்துக்கொண்டதும் களவுசெய்ததும், வஞ்சித்ததும், தங்கள் பண்டம்பாடிகளுக்குள்ளே வைத்ததும் உண்டே" என்றார் (யோசு.7:11). தேவனுடைய உடன்படிக்கையை மீறுவதும் பாவம். இதை அவர்களுக்கு எழுதிகொடுத்திருந்தார். அதையும் மீறி பாவம் செய்தார்கள்.

யாத்.20:15,17 வசனங்களில் வாசிக்கிறோம் "களவு செய்யாதிருப்பாயாக" "பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும்

இச்சியாதிருப்பாயாக'' என்ற கட்டளையை பெற்ற இஸ்ரவேலர் இக்கட்ளையை மீறினார்கள். புது உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்த முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களில் அனனியா சப்பீராளும் பாவம் செய்தார்கள். ''தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்க வில்லையோ? அதை விற்றபின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்க வில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங் கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான்'' (அப்.5:2-4).

பாவம் எப்படி வருகிறது என்று பார்த்தீர்களா? அனனியா தன் நிலத்தை விற்று அதில் ஒரு பங்கை வஞ்சிக்கவேண்டிய அவசியம் இல்லை. அதுவும் அனனியாவின் மனைவி சப்பீராளிடம் நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள் எனக்குச் சொல் என்று பேதுரு கேட்கும்போது அவள்: ஆம், இவ்வளவுக்குத்தான் என்று திட்டமிட்டபடியே, சத்தானுடைய ஏவுதலின்படியே இருவரும் ஒருமிக்க பொய் சொன்னபடியால் அப்போஸ்தருடைய பாதத்தில் விழுந்து ஜீவனைவிட்டார்கள். ஒரு மனிதன் பாவத்துக்கு அடிமையாகும்போது பாவம் அவனை பின்தொடர்வதை அறிகிறோம். பாவத்தின் பலன் அதாவது கூலி மரணம் என்று காண்கிறோம்.

**மூன்றாவதாக** நாம் ஆகானைக்குறித்து தியானிக்கும்போது **அவன் இஸ்ரவேலிலே மதிகேடான காரியத்தை செய்தான்** என அறிகிறோம். இன்றும் கூட சிலர் புத்தியை சீர்கொடுத்துவிட்டேன் என்பார்கள். அப்படியானால் மதிகேடாய் நடந்துவிட்டேன் என்பார்கள். தேவன் நமக்கு புத்தியை தந்திருக்கிறார். அவைகளை நாம் ஞானமாக பயன்படுத்த வேண்டுமல்லவா, கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும் என நீதிமொழிகளில் சாலொமோன் ஞானி குறிப்பிடுகிறார். ஆகானுடைய மதிகேடான காரியம் என்னவென்றால் அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன் என்றான். இச்சையை தூண்டுகிறவன் பிசாசு.

ஆதியிலே சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது. இதற்கு மயங்கிப்போன ஏவாளும் ஆதாமும் அதை புசித்து பாவத்திற்குட்பட்டனர். மதிகேடு இப்படித்தான் வரும். நம்முடைய



சிந்தையை பிசாசு மதிகேடாய் நடக்கும்படி கெடுத்துவிடுவான். நல்ல குடும்பங்களெல்லாம் இப்படித்தான் பிசாசின் உபதேசங்களுக்கு செவிகொடுத்து கெட்டுப்போய்விடுகின்றது.

எலிசாவிடம் கேயாசி என்ற ஒரு வேலைக்காரன் இருந்தான். அவன் ''சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையிலே வாங்காமல் அவனை விட்டுவிட்டார் நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன்மேல் ஆணையிட்டு. நாகமானை பின்தொடர்ந்து அவனிடத்திலிருந்து இரண்டு தாலந்து வெள்ளியையும் இரண்டு மாற்று வஸ்திரங்களையும் பொய் சொல்லி பெற்றுக்கொண்டு வந்து தன் கூடாரத்தில் வைத்தான். பின்பு கேயாசியோ எங்கும்போகாததுபோல எலிசாவின் முன்பு வந்து நின்றான்.

எலிசா அவனைப் பார்த்து கேயாசியே எங்கேயிருந்து வருகிறாய் என்று கேட்டதற்கு அவன் உமது அடியான் எங்கும் போகவில்லை என்றான். அப்பொழுது எலிசா கேயாசியைப் பார்த்து; அந்த மனுஷன் உனக்கு எதிர்கொண்டுவர தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிறபோது என் மனம் உன்னுடன்கூடச் செல்லவில்லையா? பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும் என்றான்.

அந்தப்படியாக உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி அவன் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டுபோனான்''. அதைபோல யூதாசும் பணப்பை வைத்து சுமக்கிறவனாயிருந்து இயேசுவை காட்டிக்கொடுத்து இரத்த நிலத்தை சம்பாதித்தான். இந்த ஆகானின் பாவமும் அவனை பற்றிப்பிடித்தது. ஒருவேளை நாமும் இந்த ஆகானைப்போல சாபத்தீடானதை எடுத்துக் கொண்டு தேவகோபத்திற்கு உட்படாமல் இருக்க அவைகளை நம்முடைய சரீரத்தில் உண்டுபண்ணுகிற அவயவங்களை அழித்துப்போடுவோம்.

**கேள்வி**

**பாவம் செய்கிற ஆத்துமா சாகுமா?**

ஆம், ''பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்'' (எசே.18:20). யார் பாவம் செய்கிறார்களோ அவர்களுடைய ஆத்துமாவே

சாகும் என வாசிக்கிறோம். ஆகானின் குடும்பம் அழிக்கப்பட்டதே என்று கேட்கலாம் அவனுடைய குடும்பத்தார் அதற்கு உடந்தையாக இருந்திருக்கலாம். மேலும் கேயாசி நாகமான் கொடுத்ததை அவன் வீட்டில் வைத்தான் அவர்களுக்கு அவைகள் நிச்சயமாக தெரிந்திருக்கும். அவனுடைய குடும்பத்தார் அவைகளை உடனே எலிசாவுக்கு தெரிவிக்கவில்லை ஆகையால் உன் சந்ததிக்கும் குஷ்டம்பிடிக்கும் என்றான்.

அதைபோல அனனியாவுக்கு உடந்தையாக அவனுடைய மனைவி செயல்பட்டபடியினால் அவளும் அழிக்கப்பட்டாள். ஆனால் யூதாசுக்கு அவனுடைய குடும்பம் உடந்தையாக இருந்ததாக எங்கும் நாம் வாசிக்க முடியவில்லை. அவனுடைய குடும்பத்தைப் பற்றி எங்கும் சொல்லப்படவும் இல்லை. அவனே தனித்து சென்று அவரைக்காட்டிக் கொடுத்தால் எனக்கு என்ன கொடுப்பீர்கள் என்று கேட்டான். ஆகையால் அவன் தேவசமுகத்திலிருந்து விலக்கப்பட்டான். உங்களுடைய ஆத்துமாவை பாவத்திற்கு விலக்கி காத்துக் கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 21. ஆத்தும ரட்சிப்பு

## Salvation of Souls

**ஆத்தும ரட்சிப்பு என்பது மிகவும் அருமையானது.** ஆத்துமா விலையேறப்பெற்றது. இந்த ஆத்துமாவுக்கு ஈடாக எதையும் நாம் ஒப்பிடமுடியாது. வேதம் போதிக்கிறது; ‘‘மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?’’ (மத்.16:26). மனிதர்கள் இந்த உலகத்தில் எதை எதையோ சம்பாதிக்க விருப்பம் கொள்கின்றனர். ஆனால் தன்னுடைய ஆத்துமாவைக்குறித்து கவலையற்றவர் களாகவே வாழ்ந்து முடிவில் இந்த ஆத்துமாவை கொடுத்தவரை அறியாமலும். அவருடைய கட்டளைகளையும் போதனைகளையும் தெரியாமலும், அறியாமலும் அநேகர் போய்விடுகிறார்கள்.

ஆத்துமாவை நமக்குக் கொடுத்தவர் தேவன். அவர் ஜீவாதிபதி. ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் செய்கிறவர். அவர் ‘‘மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்’’ என்று ஆதி.2:7-ம்வசனத்தில் படிக்கிறோம். மண்ணான மனுஷன் தேவனுடைய சுவாசத்தை பெற்றபடியால் ஜீவாத்துமாவானான். அவரைப்போல அழியாத ஆத்துமாவை மனுஷன் பெற்றான். எவ்வளவு பெருத்த ஆசீர்வாதத்தை மனுஷன் ஆதியிலே



தேவனிடத்திலிருந்து பெற்றான் என்று பார்த்தீர்களா! மற்ற எத்தனையோ உயிரினங்களை தேவனாகிய கர்த்தர் உண்டாக்கினார். அவைகள் எல்லாம் ஜீவித்து மாண்டுபோகிறது. ஆனால் மனிதன் மட்டும் தன் ஆத்துமாவில் என்றென்றும் உயிர்வாழ்பவனாக இருக்கின்றான்.

இந்த ஆத்துமாவை தேவன் மனுஷனுக்குக் கொடுத்தபடியால் ‘‘இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்’’ என்று எசேக்கியேல் தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் பேசியிருக்கிறார் (எசே.18:4). அந்த ஆத்துமா ரட்சிக்கப்பட வேண்டுமானால் நீங்கள் கர்த்தருடைய சத்தம்கேட்டு அதற்கு கீழ்ப்படிந்து உங்களுடைய ஆத்துமாவை தப்புவித்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் ‘‘பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்’’ என்று உரைத்திருக்கிறார்.

சிலர் இவனுடைய பெற்றார் என்ன பாவம் செய்தார்களோ இவனை இப்படி ஆட்டிப்படைக்கிறது என்பார்கள். சிலர் பிள்ளையை பெற்று இருக்கிறான் பாருங்கள், இவன் பிறந்தநேரம் இவனுடைய குடும்பத்தாரை ஆட்டுகிறது என்பார்கள். இப்படி ஒருவருக்கொருவர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். உண்மையென்னவென்றால், பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரனோ, தகப்பனோ அவரவர் செய்த அக்கிரமத்தை சுமக்கிறார்கள். தகப்பனுடைய அக்கிரமத்தை குமாரன் சுமப்பதில்லை அதைப்போல குமாரனுடைய அக்கிரமத்தை தகப்பனும் சுமக்கிறதில்லை. அவரவருடைய நீதி அவரவரோடு இருக்கும், அதைப்போல அவரவருடைய துன்மார்க்கமும் அவரவரோடு இருக்கும்.

**ஆத்துமாவிற்கான ஆகாரம் கர்த்தருடைய வசனமாயிருக்கிறது.** இதை ஒரு மனுஷன் ஏற்றுக்கொள்ளும்போது அவனுடைய ஆத்துமா வாழும். தாவீது சொல்கிறார்; ‘‘மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல், தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது’’ என்கிறார் (சங்.42:1). அவருடைய ஆத்துமாவின் வாஞ்சையை பார்த்தீர்களா, மான்கள் எப்படி நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுகிறதோ அதைப்போல என் ஆத்துமா உம்மை வாஞ்சித்து கதறுகிறது என்கிறார். இந்தவிதமாக உங்களுடைய ஆத்துமா ஆண்டவரை நோக்கி கதறுகிறதா? எனக்கென்ன எல்லாம் இருக்கிறது, எனக்கு என்ன கவலை என்று

சொல்லுகிறீர்களா?''ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளாயிருக்கிறது'' என்று நம் ஆண்டவர் குறிப்பிட்டுள்ளார் (லூக்.12:23).

இன்று ஒருவேளை போஜனத்திற்காக தன் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போல சிலர் இருக்கிறார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஜீவன் எப்படிப்பட்டது? அது ஆகாரத்தைப் பார்க்கிலும் மேன்மையானது. இந்த ஜீவன் இருந்து என்னத்திற்கு என்போமானால் ஏசாவைப்போல சீர்கெட்டுப்போய்விடுவோம். உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தது என்கிறார்.

ஆம் அன்பானவர்களே, நம்முடைய சரீரம் தேவன் கொடுத்தது, அது எவ்வளவு அருமையானது. அது வளர்ச்சியடையக் கூடியது, அழகானது, பாதுகாப்பானது, ஒருவராலும் வடிவமைக்க முடியாதது. என்ன விலையேறப்பெற்ற வஸ்திரங்களை நாம் சரீரத்தில் உடுத்தினாலும் சரீரத்திற்கு இணையாக அது இருக்க முடியுமா? முடியாதே அப்படிப்பட்ட சரீரத்தை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். அந்த சரீரத்தில் ஒரு சிறிய பிரச்சனை என்றால் என்னபாடுபடுகிறோம். அதை சரிசெய்ய எவ்வளவோ பணம் செலவு செய்தாலும் அதை சரிசெய்ய முடியாமல் போகிறது. உடை அப்படியல்ல ஒரு வஸ்திரம் பழையதாய் போய்விட்டால், வேறே வஸ்திரம் வாங்கிக்கொள்ளலாம். ஆகாரமும், உடையும் பூமிக்குரியவைகள் ஆனால் உங்களுடைய ஜீவன் பரலோக பிதாவுக்குச் சொந்தமானது, அது விசேஷமானது. ஆகையால் ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை'' (மாற்.12:30). இக்கற்பனையை உன் ஜீவிய நாட்களில் கைக்கொண்டு வருகிறாயா? இதுவே பிரதான கற்பனையாயிருக்கிறது.

இவைகளை அறியாது ஒருவன் வாழ்ந்துகொண்டிருந்தான். அவன் தன் ஆத்துமாவை நோக்கி; ''ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ, அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்துவைத்திறவன் இப்படியே இருக்கிறான்'' என்றார் (லூக்.12:19-21).



ஆத்துமாவிற்கு தேவையானது கர்த்தருடைய வசனம். இந்த ஐசுவரியவான் ஆத்துமாவிற்கு அநேக பொருள்கள் சேகரித்து வைத்து ஆத்துமாவைப்பார்த்து நீ இளைப்பாறி புசித்துக் குடித்து பூரிப்பாயிரு என்று சொன்னான். ஆனால் அந்த ஆத்துமா எப்பொழுது அவனை விட்டுபோகும் என்பதை அறியாதவனாக, மூடனாக, அறிவில்லாமல் சேர்த்துவைக்கிறவனாக இருந்தான். இப்படியே தனக்காகவே பொக்கிஷங்களை சேர்த்துவைக்கிறவர்களும் இருக்கிறார்கள் என வேதம் மிகத்தெளிவாக நமக்குப் போதிக்கிறது.

அன்பு சகோதரனே, சகோதரியே ''ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல'' என நீதி.19:2-ல் படிக்கிறோம். உங்களுடைய ஆத்துமா விலையேறப்பெற்றது, அது காக்கப்பட வேண்டும். ஆகையால் தேவனுடைய கற்பனையில் அன்புகூர்ந்து முழுமையுமாக உங்களுடைய ஆத்துமாவை அவருக்கு ஒப்புக்கொடுங்கள்.

**விசுவாசத்தின் பலன் ஆத்தும ரட்சிப்பாக இருக்கிறது.** அது உங்களுடைய விசுவாசத்தை பொறுத்ததாக இருக்கிறது. எப்படி பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும் என்று தியானித்தோமோ அதைப்போல உங்களுக்கு விசுவாசம் இருக்குமானால் நீங்கள் உங்களுடைய ஆத்துமாவை தப்புவித்துக்கொள்ளலாம். லூக்.8-ம் அதிகாரத்தில் யவீரு என்ற ஒரு ஜெபஆலயத்தலைவனைக் குறித்துப் படிக்கிறோம். அவன் தன்னுடைய ஒரே குமாரத்தி மரண அவஸ்தையாயிருந்தபடியால் ஆண்டவர் தன் வீட்டிற்கு வந்து அவளை குணமாக்கும்படி வேண்டிக்கொண்டான்.

அவர் போகையில் பன்னிரண்டு வருஷமாக பெரும்பாடுள்ள ஸ்திரீயின் நிமித்தமாக காலதாமதமானது. அதற்குள்ளாக யவீருவுடைய வீட்டில் இருந்து ஒருவன் வந்து, அவனை நோக்கி: உம்முடைய குமாரத்தி மரித்துப்போனாள், போதகரை வருத்தப்படுத்தவேண்டாம் என்றான். இச்செய்தியை கேட்ட அவனுக்கு எப்படியிருந்திருக்கும். ஒருவேளை அந்த இடத்தில் நீங்களோ, நானோ இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை சற்றுயோசித்துப்பாருங்கள். அவனோ அதைக்கேட்டு அமைதலோடு நின்று கொண்டிருந்தான்.

இயேசு அவனைப் பார்த்து பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார். அவர் வீட்டில் வந்தபோது அழாதேயுங்கள் அவள் மரித்துப்போகவில்லை நித்திரையாயிருக்கிறாள் என்று சொல்லி அவளுடைய கையைப் பிடித்து பிள்ளையே எழுந்திரு என்றார். உடனே அவள் எழுந்திருந்தாள்; என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா? யவீருவின்

விசுவாசத்தின் பலன் அவனுடைய மகள் உயிர் பிழைத்தாள். ஆகையால் தான் விசுவாசமுள்ளவனாயிரு என்று கர்த்தர் சொல்லியிருந்தார்.

அதைப்போல பேதுரு ஒருமுறை காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து அமிழ்ந்துபோகையில் ஆண்டவரே ரட்சியும் என்று கூப்பிட்டான் உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பார்த்து அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்றார் (மத்.14:30,31). நம்முடைய வாழ்க்கையில் சந்தேகம் நம்மை ரட்சிக்காது. நம்முடைய விசுவாசமே நம்மை ரட்சிக்கும். இதை ஆத்துமாவின் ஆழத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

“அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள்” என பேதுரு தமது நிருபத்தில் கூறுகிறார் (1பேது.1:8,9).

**கேள்வி**

**ஆத்தும ரட்சிப்பிற்கு விசுவாசம் மட்டும் போதுமா?**

போதாது என்பதே உண்மை. ஏனெனில் நம் முற்பிதாக்களைக் குறித்து எபிரெயர் 11-ம் அதிகாரத்தில் படிக்கிறோம். அது விசுவாசவீரர்களின் அட்டவணை என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு விசுவாசத்திலே நிறைந்தவர்கள். அவர்களைக்குறித்து பரிசுத்த ஆவியானவருடைய உதவியோடு எபிரெய ஆசான் எழுதியிருக்கிறார். ஆனால் அவர்களைக்குறித்து எபி.11:39-ல் வாசிக்கும்போது; “இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்” என்று எழுதுகிறார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமாகிய கானானை சென்றடையாமல் போனார்கள். அவர்களைப்போல நாமும் இழந்துபோகாமலிருக்க இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. பரம கானானை அடையவேண்டுமானால் வெறும் விசுவாசம் மட்டும் போதாது. “விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்” என யாக்கோபு சொல்லுகிறார் (யாக்.2:17).

ஆக, விசுவாசமும் அவசியம், கிரியையும் அவசியம். அப்பொழுது உங்களுடைய ஆத்துமா ரட்சிக்கப்படும். “நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்” என்ற வசனத்தின்படி இயேசுவை உங்களுடைய வாயினாலே தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்



அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வருகிறார். இன்றே நீங்கள் இரட்சிக்கப்பட பிரயாசப்படுங்கள் நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 22. கடிந்துகொள்
## Rebuke

**க**டிந்துகொள்ளுதலை பொதுவாக அநேகர் விரும்பமாட்டார்கள். ஆனால் **கடிந்துகொள்ளுதலைப் பற்றி வேதாகமம் போதிக்கிறது.** அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதும்போது “விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்துகொள்” என்று எழுதுகிறார் (தீத்து 1:14). விசுவாச குடும்பத்தார்கள் விசுவாச விஷயத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றால் ஊழியக்காரர்கள் அதாவது போதகர்கள் அவர்களை கண்டிப்பாய் கடிந்துகொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. கண்டிப்பு இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப்போய்விடுவார்கள். ஆகையால் அவர்களை கடிந்துகொள்வது அவசியம்.

மேலும், பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது “சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகும் காலம் வரும்” என எழுதுகிறார் (2தீமோ.4:2-4). சிலர் கடிந்துகொண்டு போதிக்க தவறிவிடுகின்றனர். ஆகையால் விசுவாசிகள் தவறான காரியங்களில் வளர்ந்துபெருகிவிடுவார்கள்.

ஆகையினாலே சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு என்கிறார் பவுல். ஒரு போதகனுக்கு உக்கிரான உத்தியோகம் கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தருடைய ஊழியத்தை அசதியாய் செய்யாமல் ஜாக்கிரதையுள்ளவனாக செய்ய வேண்டியவனாயிருக்கிறான். அவனைக் குறித்தும் அவனுடைய உபதேசத்தைக் குறித்தும் எப்பொழுதும் எச்சரிக்கையுள்ளவனாயிருக்க வேண்டும். “பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத்

தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்; கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்'' (யூதா 9).

பிரதான தூதன் பிசாசை குற்றப்படுத்த துணியாமல், கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொல்வதை வாசிக்கிறோம். கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலுக்கு விட்டுவிட்டான். நாமும் இந்தவிதமாக சிலரை வசனத்தின் மூலம் கடிந்துகொண்டு புத்திசொல்லவேண்டும் அல்லது கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலுக்கு விட்டுவிடவேண்டும். புதிய ஏற்பாட்டு காலத்தில் மனந்திரும்பிய மாயவித்தைக்காரனைக்குறித்து அப். 8-ம் அதிகாரத்தில் படிக்கிறோம். அவன் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதை மாயவித்தைக்காரனாயிருந்த சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து, நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான்.

பேதுரு அவனை நோக்கி; தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது என்று சொல்லி; உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால் இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் என்றான்.

அன்பானவர்களே, மனந்திரும்பிய மாயவித்தைக்காரனாகிய சீமோனின் துணிச்சலை பேதுரு கடிந்து கொண்டார். இல்லையேல் பணத்தினாலே பரிசுத்த ஆவியின் வரத்தை சம்பாதித்துவிடலாம் என்ற முடிவுக்கு வந்திருப்பான். ஆகையால் நீ துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள் ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் என்றார். இன்றைக்கும் இப்படிப்பட்ட தவறான எண்ணமுடையவர்களை நாம் காண்கிறோம். அப்படிப்பட்டவர்களை கடிந்துகொண்டு போதிக்கவேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு.

**கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளவேண்டுமா?** ஆம், ஞானமுள்ள காது கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும். ''ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம்'' என சாலொமோன் குறிப்பிடுகிறார் (பிர.7:5). மூடரின் பாட்டு என்னத்திற்கு ஒன்றுக்கும் உதவாமற்போகும் ஏட்டு சுரைக்காயைப்போல இருக்கும். ஆனால்



ஞானியின் கடிந்துகொள்ளுதல் நமக்கு நன்மையைக் கொண்டுவரும். மேலும், பரியாசக்காரனைக் கண்டிக்கிறவன் இலச்சையடைகிறான்; துன்மார்க்கனைக் கண்டிக்கிறவன் தன்னைக் கறைப்படுத்திக்கொள்ளுகிறான். ஆகையால் பரியாசக்காரனைக் கடிந்துகொள்ளாதே, அவன் உன்னைப் பகைப்பான்; ஞானமுள்ளவர்களைக் கடிந்துகொள், அவன் உன்னை நேசிப்பான் என்கிறார்.

உண்மைதான் பரியாசக்காரனைக் கடிந்துகொள்வதால் அவன் தன்னை மாற்றிக்கொள்ளான். மாறாக, நம்மையே பகைக்க ஆரம்பித்துவிடுவான், நாம் ஞானமுள்ளவர்களை கடிந்துகொள்ள வேண்டும். அப்படிப்பட்டவர்கள் ஞானத்தில் மேலும் தேறுவார்கள். ''மறைவான சிநேகத்தைப்பார்க்கிலும் வெளிப்படையான கடிந்துகொள்ளுதல் நல்லது'' எனக் காண்கிறோம் (நீதி.27:5). உங்களுடைய சிநேகம் எப்படிப்பட்டது? உங்களுடைய கடிந்து கொள்ளுதல் எப்படிப்பட்டது?

கடிந்து கொள்ளுதலை அலட்சியம் செய்கிறவர்கள் பின் நாட்களில் மிகவும் வேதனைப்படுவார்கள். எப்படியெனில்; ''முடிவிலே உன் மாம்சமும் உன் சரீரமும் உருவழியும்போது நீ துக்கித்து; ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்துகொள்ளுதலை என் மனம் அலட்சியம்பண்ணினதே! என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே! சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்சங்குறைய எல்லாத் தீமைக்குமுள்ளானேனே! என்று முறையிடுவாய்'' என நீதி.5:11-14 வரை உள்ள வசனங்களில் படிக்கிறோம்.

காலம்சென்ற நாட்களில் அநேகர் முறையிடுவது இவைகளைத்தான். நல்ல நாட்களில் அதாவது வயதுள்ள நாட்களில் ஞானவான்களின் கடிந்துகொள்ளுதலைக் கேட்டு தம்மை சரிசெய்து கொண்டு கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் செய்யவேண்டும். கடைசி நாட்களில் முறையிட்டு நாம் ஒன்றையும் சாதிக்கமுடியாது என்பதை அறியவேண்டும். பொதுவாக நாட்களை விரையம் செய்து விட்டு கடைசி நாட்களில் சிந்திப்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள்.

ஆகையால் அன்பு சகோதரனே, சகோதரியே இச்செய்தியை படித்துக் கொண்டிருக்கும் நண்பரே, கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டு உங்களுடைய ஜீவியத்தை மாற்றியமைத்துக் கொண்டு, கர்த்தர் கொடுத்த இந்த வாழ்க்கையை விரையம் செய்யாமல் அவருடைய மேய்ச்சலின் கீழ்வாழ்ந்து, மெய்யான மேய்ச்சலைக் கண்டடைந்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**வேதாகமம் நம்முடைய நன்மைக்காகவே நம்மை கடிந்துகொள்ளுகிறதா?** ஆம், நம்முடைய நன்மைக்காவே நம்மை கடிந்துகொள்ளுகிறது. “என் மகனே, நீ கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதே. தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல, கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்” (நீதி.3:11,12). அவர் நம்மிடத்தில் அன்புகூருகிறபடியால் அவர் நம்மை கடிந்துகொண்டு சிட்சிக்கிறார். நம்முடைய நன்மைக்காகவே அவைகளைச் செய்கிறார். ஆகையினாலே நீ சோர்ந்துபோகாதே.

நம்முடைய பெற்றோர்கள் நம்முடைய நன்மைக்காகவே சிலவேளைகளில் நம்மை கடிந்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட கடிந்து கொள்ளுதலை நாம் அலட்சியப்படுத்துகிறோமா? இல்லையே, அதற்கு கீழ்ப்படிகிறோமல்லவா, அதைப் போல கர்த்தர் அவருடைய வசனத்தின் மூலமாக நம்மை கடிந்துகொள்ளும்போது அவைகளை ஏற்றுக்கொண்டு மனந்திரும்பவேண்டும். மேலும், அவர் சொல்லுகிறார்; “நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு” என்கிறார் (வெளி.3:19). ஆண்டவர் நம்மை நேசிக்கிறார் என்பதை நாம் முதலாவது அறிந்துகொள்ளவேண்டும்.

ஒருவரும் கெட்டுப்போவது அவருடைய சித்தமல்ல எல்லோரும் மனந்திரும்பவேண்டும் என்று நீடிய பொறுமையோடிருக்கிறார் என வாசிக்கிறோம். நம்மை நேசித்து நமக்கு ஆலோசனை கொடுக்கிற ஒருவர் நமக்கு இருக்கும்போது நாம் ஏன் கலங்கவேண்டும். அவருடைய கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டு மனந்திரும்ப தேவன் எதிர்பார்க்கிறார்.

மனந்திரும்பாத வேளையில் நாம் நம்முடைய அறியாமையினாலே நம்முடைய ஆத்துமாவை இழக்க நேரிடும். பாதாளத்தில் இறங்குகிறவன் இனி ஏறிவரான் என காண்கிறோம். ஆகையால் பூமியில் இருக்கக்கூடிய நாட்களில் கர்த்தருடைய வேதத்திற்கு நம்முடைய செவியை சாய்த்து, நாம் எதில் தவறியிருக்கிறோமோ அவைகளில் இருந்து விடுபட்டு கர்த்தருடைய வழியை பற்றிக்கொண்டு செயல்படவேண்டும்.

இச்செய்தியை மிகவும் கவனத்துடன் வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு உள்ளங்களே, கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது ஜீவவழியில் இருப்பீர்கள். தேவன் நம்முடைய நன்மைக்காகவே நம்மை கடிந்துகொள்ளுகிறார். நீங்களும் தவறான வழியில் செல்லக்கூடிய மக்களை



பார்த்து கடிந்துகொள்ளுங்கள். நமக்கேன் வம்பு அது அவர்களுடைய பாடு என்று ஒதுங்கிப்போகாதிருங்கள். நாளைக்கு உங்களைப் பார்த்து அதே நபர் ஒருவார்த்தை எங்களுக்கு சொல்லியிருக்கலாமே, நாங்கள் எங்களை சரிசெய்திருப்போமே என்று சொல்லுவார்கள். ஆகையால் சமயம் உங்களுடைய வாழ்க்கையில் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், கடிந்து கொண்டு, கண்டம்பண்ணி, புத்திசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். அப்படி இல்லையேல் கர்த்தர் உங்களிடத்தில் கணக்குக் கேட்பார்.

**கேள்வி**

**புத்திமதிகளைக் காத்துக்கொள்ளுகிறவன் எவ்வழியில் இருப்பான்?**

மரணவழிக்கு விலகி ஜீவவழியில் இருப்பான் என்று திருமறை நமக்குப்போதிக்கிறது. “புத்திமதிகளைக் காத்துக்கொள்ளுகிறவன் ஜீவவழியில் இருக்கிறான்; கண்டனையை வெறுக்கிறவனோ மோசம்போகிறான்” (நீதி.10:17). கடிந்துகொள்ளுதலை ஒருவர் வெறுப்பாரேயானால் அவர் மோசம்போகிறார். கடிந்துகொள்ளும் போது அவருக்கு அது கசப்பாகவும், வெறுப்பாகவும் இருக்கும். ஆனால் நாட்கள் வரும்போது ஐயோ போதகத்தை வெறுத்தேனே, எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்குச் செவிகொடாமற்போனேனே என்று முறையிடுவார்கள்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே நீ மோசம்போவதை கர்த்தர் விரும்பவில்லை. ஆகையால், கடிந்துகொண்டு போதிக்கிறார். இந்த கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானமுள்ள காது. வேதாகமத்தில் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று வாசிக்கிறோம். காது இருந்தும் தங்களுடைய காதை அடைத்துக் கொள்ளுகிறவர்களும் உண்டு எனவே காதுள்ளவன் கேட்கக்கடவன், என்பதால் எப்பொழுதும் கர்த்தருடைய வசனம் தொனித்துக் கொண்டிருக்கிறது. ஞானமுள்ள பிள்ளைகளைப்போல புத்திமதிகளை ஏற்று, ஜீவவழியே நடக்கப்பிரயாசப்படுங்கள். நலமான காரியங்களைத் தெரிந்துகொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 23. ஒரே இருதயமும் ஒரே மனமும்

## One Heart and One Soul

**எ**ல்லோருக்கும் ஒரே இருதயமும் ஒரே மனமும் இருக்கிறதா? ஒரே இருதயம் மட்டுமே எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால் ஒரே இருயமும் ஒரே மனமுமாக அநேகர் இருப்பதில்லை. முதல் நூற்றாண்டு கர்த்தருடைய

சபையில் இப்படிப்பட்ட ஐக்கியம் காணப்பட்டது. "விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள் ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது" (அப்.4:32). இன்றைக்கு என்னுடையது உன்னுடையது என்று எங்கும் சொல்லக் கேள்விப்படுகிறோம்.

உன்னைப்போல பிறனையும் நேசி என்ற வேதவாக்கியத்தை கைக்கொண்டவர்களாக இருப்போமானால் என்னுடையது உன்னுடையது என்று சொல்லமாட்டோம். ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு சபையானது ஆவியில் வளர்ந்து பெருகினது. விசுவாசிகள் உற்சாகமுள்ளவர்களாக எங்கும்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கிக்கிறவர்களாக இருந்தார்கள். ஆனபடியினாலே அவர்களுக்குள்ளாக இந்த விதமான ஐக்கியம் காணப்பட்டது. ஊழியத்தை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எல்லாவற்றையும் பொதுவாக வைத்து அனுபவித்தார்கள்.

மேலும் "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள், இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டுவந்தார்" (அப்.2:46,47). அநுதினமும் கூடிஜெபிக்கிறவர்களாக இருந்தார்கள்.

இந்நாட்களில் வாரத்தின் முதல் நாளில் கூடி தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதித்துவருகிறோம். வாரத்தில் ஒரு நாள் கூடி வருவதிலே, அநேகர் ஒழுங்காக கூடிவருவதில்லை. நினைத்தபொழுது சபைக்கு வந்துபோகிறார்கள். இப்படி இருக்கும்போது ஒரு மனம் ஏற்படவாய்ப்பு இல்லை. முதல் நூற்றாண்டு சபையாரை நோக்கிப்பார்க்கவேண்டும். "காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்" (அப்.2:45).

ஒருவனுக்கு குறைச்சல் உண்டு என்று கண்டு அவனுக்கு கொடாவிட்டால் அவனுடைய விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கும். நன்மை செய்ய அறிந்தும் அதை செய்யாமற்போனால் அதுவே பாவமாயிருக்கும். ஒரே இருதயமும் ஒரே மனமும் உடையவர்களாக மாறவேண்டுமானால், சபையில் குறைச்சல் உள்ளவர்களை தாங்கவேண்டும். விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கு நன்மை செய்யக்கடவோம் என்று காலாத்தியர் புஸ்தகத்தில் வாசிக்கிறோம்.



**நாமும் ஒரே இருதயமும் ஒரே மனமும் உடையவர்களாக இருக்கவேண்டும் என வேதாகமம் போதிக்கிறதா?** என்று நீங்கள் கேட்கலாம். ஆம், நம்ஆண்டவர் "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்றார் (யோவா.13:35). நாம் ஆண்டவருடைய சீஷர்கள் என்பதற்கு அடையாளமோ, பட்டமோ, பதவியோ, உடையோ அல்ல மாறாக அன்பு நிறைந்தவர்களாக இருக்கவேண்டும். குறிப்பாக ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும்.

நான் ஒரு சபைக்கு பிரசங்கிக்கும்படியாக அழைக்கப்பட்டிருந்தேன். சபை ஆராதனை முடிந்தவுடன், அந்த திருச்சபையார் கண்மூடி கண்திறப்பதற்குள்ளாக எல்லோரும் களைந்து சென்று விட்டனர். அப்பொழுது புரிந்து கொண்டேன் அவர்களுடைய ஐக்கியத்தைப் பற்றி இவ்வளவுக்கும் அந்த சபையார் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். இன்னும் சொல்லப்போனால் ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள். இப்படியிருந்தால் ஐக்கியம் எப்படி ஏற்படும். ஆதிசபையார் இப்படியிருந்ததாக வேதாகமத்தில் நாம் வாசிக்கின்றோமா? ஆண்டவர் சொல்லுகிறதான அன்பு நமக்குள் ஏற்பட வேண்டும்.

ஆண்டவர் நம்மை மீட்கும்படியாக தன்னுடைய ஜீவனையே சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். நாமும் ஒருவருக்காக ஒருவர் ஜீவனை கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். அதை மறந்துவிடாதீர்கள். "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக, தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள். சகோதரசிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்" என்று பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதியிருக்கிறதை நாம் ரோம.12:9,10 வசனங்களில் வாசிக்கிறோம். உங்களுடைய அன்பு எப்படிப்பட்டதாயிருக்கிறது? ஆண்டவர் அன்பு செலுத்தியதைப்போல நீங்களும் சகோதரரில் அன்பு செலுத்துங்கள்.

ஒருவரும் உங்களை இந்தவிஷயத்தில் குற்றப்படுத்த இடம்கொடாதிருங்கள். மேலும், கலாத்தியர் புஸ்தகத்தில் வாசிக்கிறோம்; "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலா.6:2). கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவது என்பது சபைக்கு சென்றால் மட்டும்போதாது, மற்றசகோதரர்கள் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கவேண்டும். அவர்களுடைய பாடுகளில் நாமும் பங்குகொள்ளும்போது, அது அவர்களுக்கு சுமையைக் குறைப்பதாக இருக்கும். இது ஆண்டவருடைய பிரமாணமாக இருக்கிறது. வேதம் வாசிக்கிறோம், அதை மனப்பாடம் செய்கிறோம், அதன்படி பாவமில்லா

வாழ்க்கை வாழ்கிறோம். நல்லதுதான், அதேவேளையில் மற்றவர்களையும் நாம் நோக்கிப் பார்க்கவேண்டும்.

பவுல் தன்னுடைய வாழ்க்கையில் பிரசங்கிக்கிறவராக மட்டுமல்ல மாதிரி கிறிஸ்தவராக ஜீவித்தார். எடுத்துக்காட்டாக பாருங்கள்: அவர் பிலேமோனுக்கு எழுதியகடிதத்தில்; "அவன் உமக்கு யாதொரு அநியாயஞ்செய்ததும், உம்மிடத்தில் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும்" என்கிறார் (பிலே.18). ஓடிப்போன ஒநேசிமுக்காக பவுல் பிலேமோனிடம் மன்றாடுகிறார். நான் பெற்ற மகன் என்று சொல்லுகிறார். கிறிஸ்துவுக்குள்ளாக அவனைப் பெற்றெடுத்தார். ஒநேசிமுதானே தவறு செய்தான், நான் ஏன் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பிலேமோனோடு வாக்குவாதம் செய்யவில்லை. அதை தன் கணக்கிலே வைத்துக்கொள்ளும். நான் அதை செலுத்தித் தீர்ப்பேன் என்கிறார். இந்தவிதமாக மற்ற சகோதரர்கள் படக்கூடிய கடனை நாம் ஏற்கிறோமா? இதுதான் அன்பு பிரியமானவர்களே, இதுதான் கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவதற்கான வழி,

இதை இன்றைய கிறிஸ்தவம் செய்யுமேயானால் உலகமுழுவதும் கிறிஸ்தவர்கள்தான் இருப்பார்கள். நாம் பைபிள் வாசிக்கிறோம், சபைக்குப்போகிறோம், ஒரு கிறிஸ்தவகுடும்பமாக வாழ்கிறோம். யாருக்காவது உதவி செய்தால் குடும்பத்தில் சண்டை வந்துவிடும் என்ற பயம். இப்படியிருக்கிற ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ, கர்த்தரையும் அவருடைய கட்டளைகளையும் பற்றிக்கொள்ள இயலாது.

**மேலும் ஒரே இருதயமும் ஒரே மனமுமுடையவர்களாக இருக்க நாம் செய்யவேண்டுவதென்ன?** ஆண்டவருடைய சிந்தை முதலாவது நமக்குள் இருக்க வேண்டும். இதையே பவுல் பிலிப்பியருக்கு நினைப்பூட்டி எழுதுகிறார். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலி.2:5). அவர் தேவசித்தம் செய்கிறவராய் எங்கும் சுற்றித்திரிந்தார். இன்றைக்கு இருக்கிற ஊழியன் எதை வாங்கலாம், எதை விற்கலாம், எப்படி பணம் சம்பாதிக்கலாம், யாரை ஏமாற்றலாம் என்ற நோக்கத்தோடு வருவானேயானால் அவன் எப்படி தேவசித்தம் செய்யமுடியும்? அவனுக்குள்ளாக கிறிஸ்துவின் சிந்தை இருப்பது எப்படி? கிறிஸ்துவுக்கேற்ற சிந்தை நமக்குள் இருக்கும்போது அவருடைய கிருபை நம்மோடு இருக்கும். நாம் செய்வதை தேவன் வாய்க்கச்செய்வார்.

யாக்கோபு சொல்லுகிறார்; "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக



ஒருவர் ஜெபம்பண்ணுங்கள், நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்.5:16). ஒரே மனமுடையவர்களாக இருப்பதற்கு ஜெபம் மிகவும் முக்கியம். முதலாவது ஜெபிக்கிற பழக்கம் இருக்கவேண்டும். ஆண்டவருடைய நாமத்தினாலே நாம் ஒருமனப்பட்டவர்களாக கூடிவந்து ஜெபிக்க கற்றுக்கொள்ளவேண்டும். ஆதிசபையார் ஆற்றங்கரையில் கூடிஜெபித்தார்கள், விசுவாசிகளுடைய வீடுகளில் கூடிஜெபித்தார்கள். ஜெபஆலயங்களில் ஜெபித்தார்கள் என்றெல்லாம் வாசிக்கிறோம்.

நமக்கு கிடைக்கக்கூடிய நேரங்களில் ஒருமனப்பட்டவர்களாக ஜெபத்திற்கு அதிக நேரம் செலவு செய்யவேண்டும். ஜெபம் இல்லாத வாழ்க்கையும் கூரை இல்லாத வீடும் ஒன்றுதான். மேலும் மிகமுக்கியமான ஒரு வசனத்தை நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன்; "ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (கொலோ.3:13). இந்த சிந்தை ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும். அவனை நாம் மன்னிப்பதா? அவன் செய்த காரியத்தை மறக்க முடியுமா? இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் முடிவில் மன்னியாது போய்விடுவோம். கிறிஸ்து நம்மை மன்னித்ததைப்போல நாமும் மன்னிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

குறைபாடுகள் எல்லாருக்குள்ளும் இருக்கும். குறைபாடு இல்லாதவனே இல்லை. எல்லோரும் குறைவானவர்கள்தான். இதை மனதில் கொண்டு ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால் கிறிஸ்து உங்கள் குற்றங்களை உங்களுக்கு மன்னித்து உங்களை ஏற்றுக்கொண்டதைப்போல நீங்கள் அவரவர் குற்றங்களை மன்னித்து ஏற்றுக்கொள்ளவேண்டும். இது வேதாகமத்தின் போதனையாகவும், ஆவியானவருடைய வெளிப்படுத்தலாகவும் இருக்கிறது. இப்போதனைக்கு கீழ்ப்படிவீர்களா?

**கேள்வி**

**இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்குமா?**

ஒரே சாயலில் ஏழுபேர் இருப்பார்கள் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். அவரைப் பார்த்தால் என்னுடைய நண்பனைப்போல இருக்கிறதே என்று சொல்லுகிறோம் அல்லவா, அதைப்போல இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும் என வேதம் பதிலளிக்கிறது. "தண்ணீரில் முகத்துக்கு முகம் ஒத்திருக்குமாப்போல, மனுஷரில் இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும்"

(நீதி.27:19). இப்படிப்பட்ட இருதயமுள்ளவர்களாக தாவீது யோனத்தானும் இருந்தார்கள். முதல் நூற்றாண்டு சபையார் இப்படிப்பட்டவர்களாக இருந்து கர்த்தருடைய ஊழியத்தை செய்துவந்தார்கள். இயேசுசொல்கிறார்; ''உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (மத்.18:19).

ஒருமனம் இருக்கும்போது இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும். ஒரே காரியத்தை சிந்தித்து செய்வார்கள். ஒருமனப்பட்டவர்களாக தேவனை ஆராதிப்பார்கள். எங்கே இருதயம் ஒத்திராமற்போகும் என்றால், அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் விசுவாசிகள் பிணைக்கப்படும்போது, நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தம் ஏற்படும்போது, ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் ஏற்படும்போது, அவிசுவாசியுடன் விசுவாசி பங்குகொள்ளும்போது இருதயம் ஒத்துவராமல் ஆசீர்வாதக்குறைவு ஏற்படும். இதை தவிர்க்க அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருந்து, விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 24. கடைசி நாட்களில்...
## In the Last Days...

**அ**தாவது, இவ்வுலகத்தின் கடைசி நாட்களில் என்ன நடக்கும் என்பதை இச்செய்தியின் மூலமாக நாம் தியானிக்கவுள்ளோம். அப்போஸ்தலனாகிய பவுல் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபம் 3-ம் அதிகாரம் வசனங்கள் 1-5-ல் ''கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக...'' என்று சொல்லி 19 பாவங்கள் நிறைந்த மக்களைக்குறித்து தெரியப்படுத்துகிறார். நாம் வாழுகின்ற இக் கடைசி நாட்களில், 19 பாவங்கள் நிறைந்த மக்களை நாம் அநுதினமும் காண்கிறோம்.

**1.தற்பிரியராயும் என்று வாசிக்கிறோம்.** தற்பிரியர் என்று சொல்லும்போது தனக்காக வாழுகின்றவர்கள். மற்றவர்களைப் பற்றியும், நாட்டைப்பற்றியும் அக்கரை இல்லாதவர்கள். தன்னுடைய வயிறு நிறைந்தால் போதும் என நினைக்கக்கூடியவர்கள். வேதம் நமக்குப் போதிப்பது என்ன? ''அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக'' (பிலி.2:4). நம்மையே நாம் நோக்கிக்கொண்டிராமல் பிறருடைய தேவைகளையும் அறிந்து அவர்களுக்கு உதவ முன்வரவேண்டும்.



**2.பணப்பிரியராயும் இருப்பார்கள்.** பணஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. ஆனால் கொஞ்சங்குறைய எல்லோரும் பணஆசையுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். ''யூதாஸ் பணப்பையை சுமக்கிறவனாயிருந்தான்'' என்று யோவா.12:6-ல் வாசிக்கிறோம்.

**3.வீம்புக்காரராயும் இருப்பார்கள்.** வீணானவைகளில் பிடிவாதமாயிருப்பது. இஸ்ரவேலரைப் பாருங்கள். அவர்கள் சிலவேளைகளில் தேவனுக்கு விரோதமாக வீம்புபாராட்டினார்கள். ஆகையால் ஓசியா தீர்க்கன் மூலம் கர்த்தர்பேசும்போது; ''இஸ்ரவேல் அடங்காத கிடாரியைப்போல் அடங்காதிருக்கிறது;'' என்கிறார் (ஓசி.4:16). உங்களுடைய வாழ்க்கையில் வீணான காரியங்களில் பிடிவாதமாக இல்லாமல், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவைகளுக்கு அடங்குங்கள்.

**4.அகந்தையுள்ளவர்களாயும் இருப்பார்கள்.** ''அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும்'' என்று நீதி.13:10-ல் படிக்கிறோம். அகந்தை சண்டையைப் பிறப்பிக்கும் என்று அறிந்து அகந்தையை கைவிடவேண்டும். கூடுமானால் யாவரோடும் சமாதானமாயிருக்கவேண்டும் என்று காண்கிறோம்.

**5.தூஷிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.** தூஷணவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து பிறக்கக்கூடாது. அப்படியிருக்கும்போது இன்று துணிந்து தூஷிக்கிறவர்களைக் காண்கிறோம். அவர்கள் என்னை எப்படி திட்டினார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? என்று சொல்லி அவர்களை சரமாரியாக திட்டி தூஷிப்பார்கள். ''பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்; கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்'' என்று (யூதா 9). பிரதான தூதனே பிசாசை தூஷணமாக குற்றப்படுத்த துணியாதிருக்கும்போது நீங்களும் நானும் நம்மைப்போல தேவசாயலில் உண்டாக்கப்பட்டவர்களை தூஷணமாய்க் குற்றப்படுத்த துணியலாமா?

**6.தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும் இருப்பார்கள்.** இக்காலங்களில் நாம் அதிகமாக இப்படிப்பட்டவர்களை பார்க்கிறோம். முற்பிதாக்களின் காலங்களில் தாய் தகப்பனை மதித்து வந்தார்கள். இப்பொழுது இருக்கிற அநேக பிள்ளைகள் தாய் தகப்பனை மதிப்பதில்லை, ஆகையால் இது கடைசி காலங்கள் என்று அறிகிறோம். வேதம் ''பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் இது நியாயம்'' என போதிக்கிறது (எபே.6:1).

**7. நன்றியறியாதவர்களாயும் இருப்பார்கள்.** “இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து கோவில்களைக் கட்டுகிறான்;” என்று ஓசியா தீர்க்கன் மூலம் கர்த்தர் பேசினார் (ஓசி.8:14). அவர்களை 40 வருடகாலமாக வானத்தின் அப்பத்தினால் போஷித்தார். அவர்களுடைய பாதரட்சை தேய்ந்துபோகவில்லை. அந்த அளவுக்கு அவர்களை அற்புதவிதமாக வழிநடத்திவந்தார். கட்டாத வீடுகளிலும், நடாத திராட்சை தோட்டங்களிலும் அவர்களை குடியமரப்பண்ணினார். அதையெல்லாம் இஸ்ரவேலர் மறந்து கோவில்களை கட்டி விக்கிரகங்களை வழிபட ஆரம்பித்தனர். இப்படிப்பட்டவர்கள் இன்றும் இருக்கிறார்கள் ஆகையால் இக்கடைசி நாட்களில் நன்றியறியாதவர்களை நாம் விட்டு விலகும்படியாக கர்த்தர் இவ்வசனத்தின் மூலம் பேசுகிறார்.

**8.பரிசுத்தமில்லாதவர்களாயுமிருப்பார்கள்.** ஆம், பரிசுத்தத்தை விரும்பாமல் வருவது வரட்டும் என்று மக்கள் அசுத்தத்தையே தெரிந்து கொள்கிறார்கள். பரிசுத்தத்தில் அவர்களால் நிலைத்திருக்க முடியவில்லை. ஆகையால் போதனையின்றி வாழ்வதையே விரும்புகின்றனர். ஆனால், “பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே” என்று எபி.12:14-ல் வாசிக்கிறோம். ஏனெனில் தேவன் பரிசுத்தர். அவரை தொழுதுகொள்ளுகிற ஒவ்வொருவரும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.

**9.சுபாவ அன்பில்லாதவர்களாயுமிருப்பார்கள்.** அன்பே பிரதானம் என்று பார்க்கிறோம். ஆனால் இக்கடைசி நாட்களில் சுபாவ அன்பில்லாதவர்கள் நிறைந்து காணப்படுகிறார்கள். “அன்பில்லாதவன் தேவனை அறியான், தேவன் அன்பாகவே இருக்கிறார்” என்று யோவான் குறிப்பிடுகிறார் (1 யோவா.4:8). ஆகையினாலே தம்முடைய ஒரேபேறான குமாரனையே நமக்காக கொடுத்து இப்பூமியில் அன்புகூர்ந்தார். அன்பிலே நிலைத்திருக்கிற எவனும் தேவனாலே உண்டானவனாயிருக்கிறான்.

**10.இணங்காதவர்களாயும் இருப்பார்கள்.** தேவனுடைய வசனத்திற்கு இணக்கமாக போகாதவர்கள் இஸ்ரவேலுக்குள்ளும் இருந்தார்கள் என வேதத்தில் நாம் வாசிக்கிறோம். “என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள்; அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்றிருக்கிறார்கள்; வேசித்தன ஆவி அவர்களை வழி தப்பித் திரியப்பண்ணிற்று; அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம்போனார்கள்” என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஓசி.4:12). இன்றைக்கும் இந்தவிதமாக வேத சத்தியத்தை தெரிந்தும், அவைகளுக்குக்



கீழ்ப்படியாமல் அநேகர் சோரமார்க்கமாய் போகிறார்கள் அவர்களோடு எந்தவிதமான ஐக்கியமும் கூடாது. அவர்களை விட்டு விலக வேண்டும் என எச்சரிக்கப்படுகிறோம்.

**11.அவதூறு செய்கிறவர்களாயுமிருப்பார்கள்.** அதாவது உடன் இருந்துகொண்டே நமக்கு விரோதமாக பேசக்கூடியவர்கள். இப்படிப்பட்டவர்கள் சபையிலும், குடும்பத்திலும் இருக்கிறார்கள். மோசேயின் காலத்தில் “எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயை மோசே விவாகம்பண்ணியிருந்த படியினால், மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம்பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாய்ப் பேசி. கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம், பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார்” என்று எண்.12:1,2-வசனங்களில் படிக்கிறோம். இப்படி விரோதமாக முறுமுறுக்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

**12.இச்சையடக்கமில்லாதவர்களாயுமிருப்பார்கள்.** தேவனுடைய மனிதன் இச்சையடக்கமுள்ளவனாயிருக்கவேண்டும். குறிப்பாக புறஜாதிமக்களிலும் சொல்லப்படாத காரியத்தை செய்கிறவனாயிருக்கக்கூடாது. ஆனால் அம்னோன் என்ற மனுஷன் தன் சகோதரியாகிய தாமார் மீது ஆசையாயிருந்தான் என்று 2சாமு.13:4-ல் வாசிக்கிறோம். இவ்விதமான தவறான உறவுமுறை கொள்வதற்கு என்ன காரணம்? அவனுக்குள் இச்சையடக்கம் இல்லை.இப்படிப்பட்டவர்களை கர்த்தர் அருவருக்கிறார்.

**13.கொடுமையுள்ளவர்களாயுமிருப்பார்கள்.** பார்வோன் இஸ்ரவேலரை சாந்தும் செங்கலுமாகிய இவைகளைச் செய்யும் வேலையினால் அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கினான் என்று யாத்.1:14-ம் வசனத்தில் படிக்கிறோம். இந்தவிதமாக ஜனங்களை கொடுமைப்படுத்தக்கூடியவர்கள் இருக்கிறார்கள். விசுவாசிகளை உடைய எஜமான்கள் இந்தவிதமாக இருப்பார்கள் என்றால் அவர்களை விட்டு விலகி உங்களுக்கு விசுவாசவிஷயத்தில் உதவியாயிருக்கிற எஜமான்களிடம் வேலைக்குச் செல்லுங்கள்.

**14.நல்லோரைப் பகைக்கிறவர்களாயுமிருப்பார்கள்.** நல்லோரைப் பகைக்கிறவர்கள்தான் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறார்கள். இது கடைசி காலமாயிருக்கிறபடியால் இவைகள் எல்லாம் நடந்தேறுகிறது. பவுல்கூட தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; “கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக என்றார்” (2தீமோ.4:14). ஊழியத்தில் பவுலுக்கும் போராட்டம் இருந்தது. உடன்

இருந்தவர்களே நன்மைக்கு தீமைசெய்திருக்கிறார்கள். ஆண்டவருக்கு செய்ததைப்போல, அவருடைய பிள்ளைகளுக்கும் செய்கிறார்கள்.

**15. துரோகிகளாயும் இருப்பார்கள்.** தூரோகிகளை பற்றி நாம் அறிவோம். தூரோகியான யூதாஸ் என்று படிக்கிறோம். "ஆதாமைப்போல உடன்படிக்கையை மீறி, அங்கே எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணினார்கள்" என்று ஓசி. 6:7-ல் படிக்கிறோம்.

**16. துணிகரமுள்ளவர்களாயுமிருப்பார்கள்.** கோராகு தாத்தான் போன்றோர் மோசேக்கும் ஆரோனுக்கு எதிர்த்துநின்றதுபோல (எண்.16:3). இன்றைக்கும் ஊழியர்களுக்கு விரோதமாக எழும்புகிறார்கள் என அறிகிறோம்.

**17. இறுமாப்புள்ளவர்களாயுமிருப்பார்கள்.** "விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதி.16:18). இறுமாப்பாய் இருக்கிறவர்கள் மனமேட்டிமையானவர்கள். அவர்கள் ஒருநாளில் விழுந்துபோவார்கள்.

**18. தேவ பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும் இருப்பார்கள்.** யாக்கோபு இவர்களைப் பற்றி சொல்லும்போது; "பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்" என்கிறார் (யாக். 5:5).

**19. தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின்பெலனை மறுதலிக்கிறவர்களாயுமிருப்பார்கள்.** ஆம், ஆண்டவர் இப்படிப் பட்டவர்களைக் குறித்து எச்சரித்திருக்கிறார்; "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்" (மத்.7:15). ஆகையால் இது கடைசி நாட்கள் என்று அறிகிறோம். அன்பான சகோதரனே, சகோதரியே இப்படிப்பட்டவர்களை விட்டுவிலகு என 2தீமோ. 3:5-ல் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அவர்கள் நடுவிலிருந்து விலகி உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**கேள்வி**

**19 பாவங்கள் நிறைந்தவர்களை நாம் விட்டு விலகவேண்டுமா?**

இதற்கு பவுலுடைய விளக்கம்; "நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக் காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக் காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக் காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது;



அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவுங்கூடாது. புறம்பே இருக்கிறவர்களைக்குறித்துத் தீர்ப்புச் செய்கிறது என் காரியமா? உள்ளே இருக்கிறவர்களைக் குறித்தல்லவோ நீங்கள் தீர்ப்புச்செய்கிறீர்கள்? புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து தேவனே தீர்ப்புச்செய்வார். ஆகையால் அந்த பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்போடுங்கள்" என எழுதுகிறார் (1கொ. 5:11-13). உங்களை சுத்தவானாக காத்துக்கொண்டு தேவனுடைய இரக்கத்தைப்பெற காத்திருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 25. சிலுவையைப் பற்றிய உபதேசம்

## The Preaching of the Cross

**ப**லர் பலவிதமான உபதேசங்களையும், கோட்பாடுகளையும் உடையவர்களாக இருக்கிறார்கள். நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் உங்களுக்கு அறிவிக்கிறோம். இந்த உபதேசத்தைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**முதலாவது, சிலுவையைப் பற்றிய உபதேசம் இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு அது தேவபெலனாயிருக்கிறது.** இதைக் குறித்து பவுல் கொரிந்திய சபையாருக்கு எழுதின நிருபத்தில் நாம் காணலாம்; "சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" (1கொரி.1:18). சிலுவையைப்பற்றிய உபதேசத்தைக் குறித்து சொல்லும்போது எல்லோரும் அதை ஏற்றுக்கொள்ளுகிறார்களா? இல்லை. ஏனெனில் சிலருக்கு அது பைத்தியமாயிருக்கிறது.

ஆண்டவர் வந்து நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரிக்கவேண்டுமா? வேறுவகையில் அவர் நம்முடைய பாவங்களை போக்கமுடியாதா? அல்லது நாமே நம்முடைய பாவங்களை போக்க வழியில்லையா? என்றெல்லாம் பல கேள்விகளை கேட்டு குழப்பமடைகின்றனர். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு என்பது இல்லை என்பது உண்மை. மனிதனுக்காக பாவமில்லாத ஒருவர் இரத்தத்தை சிந்தவேண்டும். அப்படிப்பட்ட நபர் பூமியில் இல்லை. ஆகையால் தேவன் தம்முடைய குமாரனையே ஒப்புக்கொடுத்தார். அப்பொழுது இருந்த அதிகாரம் அவரை சிலுவையில் அறைந்து கொன்றது. அவரை பிதாவாகிய தேவன் மூன்றாம் நாளில் உயிரோடு எழுப்பினார். இது உலகமறிந்த உண்மை.

அழியாத வரலாற்று சுவட்டில் பதியபட்டுள்ளது. மேலும், வானமும் பூமியும் அதிலுள்ள அனைத்தும் குறிப்பாக ஆண்டவர் ஏற்படுத்தின

அப்போஸ்தலர்களும், அவர்களைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் எழுதின வேதமும் அதற்கு சாட்சியாயிருக்கிறது. எனவே சிலுவையைப் பற்றிய உபதேசம் இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு தேவனுடைய பெலனாயிருக்கிறது என காண்கிறோம். இந்த உபதேசத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்போது, அது தேவ பெலனுள்ளதாயிருக்கும்.

**இரண்டாவது, சிலுவையைப் பற்றிய உபதேசம் தேவனுடைய அன்பைப் போதிக்கிறது.** அன்பைப் பற்றி போதிக்கிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் ஆத்துமாவிற்கு செய்த காரியங்கள் என்ன என்று பார்ப்போமானால் ஒன்றுமிராது. ஆத்துமாக்களை நேசிக்கிறோம் என்று அநேக ஆசிரமங்களை நிறுவுகிறார்கள். நாளடைவில் ஆசிரமங்கள் அசிங்கங்களாக மாறுகிறது. தேவனுடைய திட்டத்தைப்பாருங்கள்; "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என வேதம் நமக்கு தெளிவாகப் போதிக்கிறது (யோவா.3:16).

பிதாவாகிய தேவன் தாம் உண்டாக்கின மனிதன் கெட்டுப்போகக் கூடாது என்பதற்காக, அவனை இரட்சிக்கும்படியாக தம்முடைய குமாரனையே பலியாக ஒப்புக்கொடுத்து அவரைக்கொண்டு இரட்சித்தார். இந்த அன்பு எப்பேர்பட்ட அன்பு! இது ஆகாப்பே அன்பல்லவா, எவன் தன்ஜீவனையே பலியாக ஒப்புக்கொடுக்க துணிவான். சமீபத்தில் மூன்று வனக்காவலர்கள் வனத்தை சுற்றிப்பார்க்கும்படியாக சென்று இருந்தபோது, ஒரு வனக்காவலர் ஒரு குகையின் மேல் கல்லில் ஏறி பார்த்துக்கொண்டிருக்கும்போது அந்த குகையில் தன்குட்டிகளுடன் படுத்திருந்த ஒரு புலி அவர்மீது பாய்ந்து அவரை கடித்து குதறிப்போட்டது.

இதை அருகாமையில் நின்றுகொண்டிருந்த இரண்டு வனக்காவலர்களும் பார்த்து ஓட்டம்பிடித்துவிட்டனர். ஊருக்குள் வந்து சொல்லி மக்களை திரட்டி சென்று பார்ப்பதற்குள் அவருடைய பாதி சரீரத்தை காணவில்லை. இந்த வனக்காவலாளரை உடன் நின்று கொண்டிருந்த இரண்டு காவலாளரால் காப்பாற்ற முடிந்ததா? முடியவில்லையே. அவரவர் தன் ஜீவன் தப்ப ஓடிப்போனார்கள் என்று காண்கிறோம். ஆம், அது தான் உலகம். ஆனால் நம்மை உண்டாக்கின தேவன் அப்படிப்பட்டவரல்ல, நம்மை இரட்சிக்கும்படியாக அதாவது பாவத்திலிருந்து மீட்கும்படியாக பாவபிசாசை ஒழிக்கும்படியாக தம்முடைய ஒரே பேறான குமாரனை ஒப்புக்கொடுத்தார்.

**மூன்றாவதாக, சிலுவையைப் பற்றிய உபதேசம்.**



**ஜீவாதிபதியை அடையாளம் காட்டுகிறது.** ஜீவன்களுக்கெல்லாம் அதிபதியாக இயேசு இருக்கிறார். அவரை இந்த உலகம் அறியாதிருந்தது. அவரோ உலகத்தில் இருந்தார். நம்மைப்போல மாம்சத்தில் வந்தபடியினாலே அவரை தச்சனுடைய குமாரன் என்றும், யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்களுக்குச் சகோதரன் என்றும் சொன்னார்கள். இன்றைக்கும் அநேகர் அவர் வெளிநாட்டு கடவுள் என்றும் ஒரு மதபோதகர் என்றும் சொல்லுகிறார்கள். பேதுரு தம்முடைய பிரசங்கத்தில் "ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்" என்றான் (அப்.3:15).

இந்த இயேசு ஜீவன்களுக்கெல்லாம் அதிபதி என்பதை தெரிந்துகொள்ளுங்கள். ஆகையினாலே அவர் சொல்ல மரித்து நான்கு நாட்கள் ஆன லாசரு அவருடைய சத்தம்கேட்டு உயிர்த்தெழுந்தான். கர்த்தர் மீனுக்கு கட்டளையிட யோனாவை மீன் கரையிலே கக்கினது. பிலேயாமுடன் கழுதை பேசி அவனுடைய மதிகேட்டைத் தடுத்தது. ஏன் இவர்கள் பேசாதிருந்தால் இந்தக் கல்லுகளே பேசும் என்று பரிசேயர்களைப் பார்த்து கர்த்தர் சொன்னார். ஆக, அவரை சகல ஜீவன்களும் வானமும் பூமியும் துதிக்கிறது, அவருக்குக் கீழ்ப்படிகிறது.

**நான்காவதாக, சிலுவையைப் பற்றிய உபதேசம், நம்முடைய பாவங்களை போக்கும்படி சிலுவையில் பாடுபட்டார் என்பதை எடுத்துரைக்கிறது.** இயேசுவானவர் சிலுவையில் மரிக்கவில்லை என்றால் நமக்கு பாவமன்னிப்பில்லை. பேதுரு சொல்கிறார்; "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" என்கிறார் (1பேது.2:24). நாம் நீதிக்குப் பிழைக்கும்படியாக இயேசு நம்முடைய பாவங்களை சிலுவையின்மேல் சுமந்து தீர்த்தார். நியாயப்பிரமாணத்தின் காலத்தில் மனிதனுடைய பாவங்களுக்காகவும், அக்கிரமங்களுக்காகவும் ஆடு பலியிடப்பட்டது, இப்பொழுது ஒரே பலியாக சிலுவையில் தம்முடைய குமாரனை ஒப்புக்கொடுத்து, நம்மை மீட்டுக்கொண்டார்.

நியாயப்பிரமாணத்தின் காலத்தில் வெண்கல சர்ப்பத்தை மோசே வனாந்தரத்திலே உயர்த்திவைத்தார் எதற்கென்றால் பாம்பு கடிபட்டவன் வெண்கல சர்ப்பத்தை நோக்கிப்பார்த்து பிழைப்பதற்காக. அதைப்போல சிலுவையில் நம்முடைய பாவங்களை போக்கியவரை நோக்கிப்பார்ப்பவன் பிழைப்பான். ஆகையால் அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம். இந்த உபதேசத்தை சிலுவை போதித்துக்கொண்டிருக்கிறது.

**ஐந்தாவதாக, சிலுவையைப் பற்றிய உபதேசம். பாவத்தை ஜெயித்தது.** பாவத்தை ஜெயிக்க பல வழிகள் இருப்பதாக அநேகர் சொல்லுகிறார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து பாவத்தின் அதிபதியாகிய பிசாசை தம்முடைய மரணத்தினாலே ஜெயித்தார் என காண்கிறோம். "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்" (கொலோ.2:15). முள்ளை முள்ளாலே எடுக்கவேண்டும் என்பார்கள். அதைப்போல மரணத்திற்கு அதிகாரியான பிசாசை தம்முடைய குமாரனுடைய மரணத்தினாலே ஜெயித்தார்.

அநேகர் பாவத்திற்கு விரோதமாக போராடுகிறார்கள். முடிவிலே பாவம் அவர்களை ஜெயித்துவிடுகிறது. எத்தனையோ துறவிகளைப் பார்க்கிறோம். கடும் தவமிருந்து யார் கண்களிலும் படாமல் இமயமலைகளுக்கும், கண்காணா இடங்களுக்கும் சென்று தவமிருந்து கடைசியில் மாம்ச இச்சைகளுக்கு இடம்கொடுத்து பாவத்திற்கு அடிமையாகிவிடுகின்றனர். நம் ஆண்டவர் பாவத்திற்கு எதிர்த்து நின்று அவனை ஜெயித்தார்.

40 நாட்கள் அவர் உபவாசம் இருந்தபின்பு சோதனைக்காரன் அவரை சோதித்தான். அவனுடைய சோதனையில் அவர் விழுந்துபோகவில்லை அப்பாலே போ சாத்தானே என்றார். அநேக தீர்க்கதரிசிகள் செய்யமுடியாத காரியத்தை, தேவனுடைய ஒரேபேறான குமாரன் இயேசு சிலுவையில் பிதாவின் சித்தம் நிறைவேற்றுகிறவராக செய்து முடித்து. பிதாவே என் ஆவியை உம்முடைய கைகளில் ஒப்புவிக்கிறேன் என்றார். இந்த சிலுவையின் உபதேசம் பாவத்தை சிலுவையில் ஜெயித்தது.

**ஆறாவதாக, சிலுவையைப் பற்றி உபதேசம். நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை மீட்டது.** ஏனெனில் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறது. ஆகையால் நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை என்பது வெளியரங்கமாயிருக்கிறது; ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். பின்வாங்கிப் போவானேயானால் அவன் மீது என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்.

"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா.3:13).



நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. ஆனால் சிலுவை நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு மீட்டது.

**ஏழாவதாக, சிலுவையைப்பற்றிய உபதேசம். மன்னிப்பை எடுத்துரைக்கிறது. மன்னிப்பு என்பது மகத்தான செய்தியாக இருக்கிறது.** சிறையில் அடைக்கப்பட்ட ஆயுள் கைதிக்கு விடுதலை என்றால் அவனுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகும். அதைப்போல பாவத்தில் அடைபட்டு, நியாயப்பிரமாணத்தின் சாபத்தின்கீழ் இருக்கிற ஒரு மனிதனுக்கு மீட்பு என்று சொல்லும் செய்தி சிலுவையைப் பற்றிய உபதேசம் மட்டுமே.

இதுவே அவனுக்கு சந்தோஷ செய்தி! இதை ஆண்டவர் இயேசு ஒருவரே கொடுக்க வல்லவராயிருக்கிறார். ஏனெனில் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார். ஆகையினாலே; அவர் சிலுவையில் தொங்கும்போது; "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்" (லூக்.23:34). சிலுவை மரணத்தினால் ஜனங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது. சிலுவையின் உபதேசம் மன்னிப்பை கொடுக்கிறது.

**கேள்வி**

**நாம் எதைக்குறித்து மேன்மை பாரட்டவேண்டும்?**

ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக்குறித்து மேன்மை பாராட்டுகிறார்கள். சிலர் வீட்டைக்குறித்தும், சிலர் நாட்டைக்குறித்தும், சிலர் படிப்பைக்குறித்தும், சிலர் தங்களுடைய அழகைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுலோ "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்" என்கிறார் (கலா.6:14).

அவருடைய மேன்மைபாராட்டல் எப்படிப்பட்டது என்று பார்த்தீர்களா? உங்களுடைய மேன்மைபாராட்டல் எப்படிப்பட்டது. சிலுவைதான் நமக்கு மீட்பைக்கொண்டுவந்தது. நாம் இரட்சிக்கப்பட்டிருப்பது அவருடைய சுத்த கிருபை. அதையே மேன்மையாக எண்ணுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது;**
**அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான்;**
**தீமை அவனை அணுகாது"** நீதி. 19:23

# 26. ஒபதியா

## Obadiah

**இ**ந்த ஒபதியாவைக்குறித்து பழைய ஏற்பாட்டு வேத புத்தகத்தில் படிக்கிறோம். இந்த ஒபதியா ஆகாப் ராஜாவின் காலத்தில் அரண்மனை விசாரிப்புக்காரனாயிருந்தான். **இவன் கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவனாயிருந்தான்** என்று 1இரா.18:3-ம் வசனத்தில் காண்கிறோம். இன்று கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவர்களை பார்ப்பதே அரிதாயிருக்கிறது. கர்த்தருக்குப் பயந்து நடக்கிறோம் என்று சொல்வார்கள் ஆனால் நடக்கமாட்டார்கள். மனிதர்களோ, நிர்வாகத்திற்குப் பயந்து நடப்பார்கள். இவன் ஒரு அதிகாரத்தின் கீழ் இருந்தும் கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவனாயிருந்தான் என பரிசுத்த ஆவியானவர் இவனைக்குறித்து சொல்கிறார்.

இவனைப்போல புதிய ஏற்பாட்டுகாலத்தில் வாழ்ந்த கொர்நேலியுவைக் குறித்துப்படிக்கிறோம். "இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்" என்று அப்.10:1,2 வசனங்களில் வாசிக்கிறோம். பட்டாளத்தில் இருப்பவர்கள் அதிகாரத்திற்குப் பயந்து சபைக்குக் கூட போகமாட்டார்கள். ஆனால் இந்த கொர்நேலியு அப்படியல்ல குடும்பத்துடன் தேவனை ஆராதிக்கிறவன். தானதருமங்களை செய்கிறவன். எப்படிப்பட்ட அதிகாரமாக இருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரம் ஆண்டவருடைய அதிகாரம் என்பதை அறிந்து அவரையும் அவருடைய காரியங்களையும் தொடர்ந்து செய்தான்.

இப்படிப்பட்ட விஷயத்தில் ஒபதியாவோ, சிறுவயதுமுதல் கர்த்தருக்குப் பயப்படுகிறவன் என்று தன்னைக்குறித்து எலிசாவிடம் சொல்வதை 1 இராஜா.18:12-ம் வசனத்தில் படிக்கிறோம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பார்கள். இவன் சிறுவயது முதல் கர்த்தரைப் பற்றிக் கொண்ட பிள்ளையாண்டான். வேதவசனங்களில் நன்கு கற்றுதேறியிருப்பான். சிறுவயது முதல் அநேகர் கற்றும் சத்தியத்தை அறியாது போகிறவர்களை குறித்து வேதம் போதிக்கிறது. இயேசுவின் நாட்களில்; ஒரு ஐசுவரியவான் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும்



என்றான். அதற்கு இயேசு, விபசாரம்செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக என்ற கற்பனையை சொல்லிக்கொண்டே வந்தார். அதற்கு அவன் இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

அவனைக் காத்தர் இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு என்றார். உனக்கு உண்டானதை விற்று தரித்திரருக்குக் கொடு என்றார். அவனோ மிகுந்த துக்கமடைந்தவனாய் போய்விட்டான். இவனும் சிறுவயது முதல் கர்த்தரையும், அவருடைய கற்பனைகளையும் அறிந்தவன்தான் ஆனால் தன்னிடத்தில் உள்ள குறையை அறியாது நித்தியஜீவனை அடைய வழிதேடினான். குறையை கர்த்தர் சுட்டிக்காட்டியவுடன் தன்னுடைய ஐசுவரியத்தை இழக்க விரும்பாமல் துக்கத்தோடே சென்றுவிட்டான். இப்படித்தான் அநேகர் இருக்கிறார்கள்.

**ஒபதியா தீர்க்கதரிசிகளை நேசிக்கிறவனாயிருந்தான்.** அரண்மனை விசாரிப்பு வேலை எவ்வளவு கடுமையான வேலை என்பதை அறிவீர்கள். அதுவும் ஆகாப் ராஜாவின் மனைவி யேசபேல் ஒரு புறஜாதிப்பெண் அவளுடைய தாயின் பேர் ஏத்பாகாலி. இந்த ஆகாப் ராஜா யேசபேலை விவாகம்பண்ணினதுமல்லாமல், அவன் போய் பாகாலையும் சேவித்து அதைப் பணிந்துகொண்டு, தான் சமாரியாவிலே கட்டின பாகாலின் கோவிலில் பாகாலுக்குப் பலிபீடத்தை எடுப்பித்தான். முழு ராஜ்யமும் கர்த்தருக்கு விரோதமாக செயல்பட்டுக்கொண்டு வரும்வேளை, அப்பொழுது சமாரியாவில் கடும்பஞ்சம். யேசபேல், தீர்க்கதரிசிகளை பிடித்து கொலைசெய்து வருகிறாள். இதை அறிந்த ஒபதியா "நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்து, அவர்களைக் கெபிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து, அவர்களைப் பராமரித்துவந்தான்" என்று 1இரா.18:4-ம் வசனத்தில் படிக்கிறோம். தான் கர்த்தருக்குப் பயப்பட்டபடியினாலே தீர்க்கதரிசிகளை யேசபேலின் கைக்கு தப்பிவித்து அவர்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து யாரும் அறியாத குகைக்குள் வைத்து அவர்களை பயமின்றி பராமரித்துவந்தான்.

இந்த விஷயம் ஆகாபுக்கும் அவன் மனைவி யேசபேலுக்கும் அறிவிக்கப்பட்டிருக்குமானால் என்ன நடந்திருக்கும்! தீர்க்கதரிசிகளை சங்கரிக்கிறதுபோல இவனையும் சங்கரித்திருப்பார்கள். இதையெல்லாம் அறிந்தும் பயமின்றி கர்த்தர் தம்மோடு இருக்கிறார் என்ற துனிவோடு அவர்களை நேசித்து பராமரித்தான். ஆண்டவர் சொல்கிறார்; "சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று,

மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்'' (மத்.10:42). எதைச் செய்தாலும் ஆண்டவர் நிமித்தமாக செய்யுங்கள். ஆண்டவருக்கு பயந்து செய்ய கற்றுக்கொள்ளுங்கள்.

மேலும் வேதம் என்ன சொல்லுகிறது, ''திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்'' (கலா.6:6). அப்படிச்செய்யும்போது தேவனுடைய கட்டளையை நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம். ''அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்'' என்று பவுல் கொரிந்திய சபையாருக்கு எழுதின நிருபத்தில் வாசிக்கிறோம் (1கொரி.9:14). முதல் நூற்றாண்டு சபையார் இவ்விதமாக ஊழியர்களை போஷித்திருக்கிறார்கள்.

அந்தந்த சபை ஊழியர்களை சபையார் போஷித்திருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, சபை உருவாகக் காரணமாயிருந்து, வந்து போகக்கூடிய மிஷனரிமார்களையும் போஷித்திருக்கிறார்கள். ''நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள்'' என்று பிலிப்பிய சபையாருக்கு பவுல் எழுதியிருக்கிறார் (பிலி.4:16). இப்படியாக ஊழியர்கள் அதாவது தேவமனுஷர்கள் தேவனுடைய பிள்ளைகளாலே போஷிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிகிறோம். உங்களுக்கு இந்த ஒபதியாவைப்போல தேவனுடைய தாசர்களை போஷிக்கும் பழக்கம் உண்டா?

**ஒபதியா தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவனாயிருந்தான்.** இன்று ஊழிக்காரர்களுக்கு விசுவாசிகள் கீழ்ப்படிகிறார்களா என்றால் மிக குறைவே. ஏனெனில் நாங்கள் என்ன அவர்களுக்கு கீழானவர்களா என்ற எண்ணம் இருக்கிறது. உனக்கு நன்மை உண்டாயிருக்கும் பொருட்டு அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான் என்று வேதம் போதிக்கிறது. ஒபதியாவை பார்த்து எலியா, ஆகாபுக்கு நான் வந்த செய்தியை சொல்லு என்று சொல்லும்போது, முதலாவது ஒபதியா சொன்னகாரியம், நான் போய் அறிவிப்பேன் பின்பு தேவன் உம்மை எங்கேயாவது கொண்டு சென்று விடுவார். பின்பு என்னைக் கொன்றுபோடுவார்களே என்று சொன்னான். மீண்டும் எலியா தன்னை ஆகாபுக்கு காண்பிக்க மனதாயிருக்கும்போது; அதை ஆகாபுக்கு அறிவித்தான்.

ஒருவேளை மூன்று வருடம் ஆறுமாதம் நீ தான் அவனை ஒளித்து வைத்திருந்தாயா என்று ஒபதியாவைப்பார்த்து கேட்கக்கூடும், இருந்தபோதும்



பயமில்லாமல் அதை ஆகாப் ராஜாவிடம் அறிவித்தான். எலியா தீர்க்கதரிசி சொன்னபடியே செய்தான் என்று காண்கிறோம். இந்த ஒபதியாவைப்போல மொர்தெகாய் என்ற தேவமனுஷனுக்கு கீழ்ப்படிந்த எஸ்தரை நாம் எஸ்தர் புஸ்தகத்தில் படிக்கிறோம். அவள் மொர்தெகாய்வுக்கு பிரதியுத்தரமாக; ''நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள்'' (எஸ்தர் 4:16).

சாவுக்கும் துணிந்து யூதருடைய ரட்சிப்பிற்காக மன்றாடின எஸ்தர் எப்படிப்பட்டவளென்று பார்த்தீர்களா? இவள் ராஜ அரண்மனையில் இருந்த போதிலும் தன்னை வளர்த்த தேவ மனிதனாகிய மொர்தெகாயின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடந்தாள். நீங்கள் உங்களை வழிநடத்துகிற தேவ மனிதர்களுக்கு கீழ்ப்படிந்து அடங்கிநடக்கிறீர்களா? ''உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர் களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே'' என்கிறார் எபிரெய ஆசான் (எபி.13:17).

எலியாவைப் போஷித்த ஆண்டவர் அவனை ஒரு விதவையின் வீட்டிற்கு அனுப்பினார். இந்த தீர்க்கன் யேசபேலுக்குப் பயந்துபோய் அங்குமிங்கும் ஒளிந்துகொண்டிருக்கிறவேளையில் அங்கே சென்றான். அந்த விதவை இந்த தீர்க்கனை ஏற்றுக்கொள்ள தயங்கவில்லை. பானையில் ஒரு பிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெயும் இருக்கிறது அதை அவளும் அவளுடைய குமாரனும் செய்து சாப்பிட்டு செத்துப்போகும்படியான வேளையிது. அந்த நேரத்தில் எலியா அங்குசென்று அவளை சந்தித்து, முதலாவது அடையை பண்ணி எனக்குக் கொண்டு வா என்றான். இப்படி கேட்டால் யாருக்குத்தான் கோபம் வராமலிருக்கும். ஏதோ கொடுத்ததை சாப்பிட்டு ஆசீர்வதித்துவிட்டு போகவேண்டும். அதை விட்டு முதலாவது எனக்கு கொடு என்றால் யாருக்கும் கோபம் வந்துவிடும்.

ஆனால் சாறிபாத் விதவை கோபப்படவில்லை ஏனென்றால் அவள் தீர்க்கதரிசியை ஒபதியாவைப் போல மதிக்கக்கூடியவள். அந்தபடியே செய்து கொண்டு வந்து கொடுத்தாள் அவன் சாப்பிட்டான் பின்பு அவர்கள் சாப்பிட்டார்கள். சமாரியாவிலே அப்பொழுது கொடிய பஞ்சம் கர்த்தர் தேசத்தில் மழையைக் கட்டளையிடும் வரை சாப்பிட்டார்கள் என்று வாசிக்கிறோம்

(1இரா.17:15). தேவ மக்களை போஷிக்கும்போதும், அவர்களுடைய வார்த்தைக்கு முதலாவது கீழ்ப்படியும்போதும் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். அன்பானவர்களே, இந்த ஒபதியாவைப்போல கர்த்தருக்குப் பயந்து, தேவ மனிதர்களை நேசித்து, அவர்களுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியுங்கள் அப்பொழுது ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**கேள்வி**

**எந்த ஜனத்தினாலாகிலும் அவருக்கு பயந்து நடக்கும்போது அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்களா?**

கர்த்தர் எல்லோரையும் நேசிக்கிறார். அவரே நம்முடைய சிருஷ்டி கர்த்தர். அவரால் நாம் உண்டாக்கப்பட்டோம். அவர் நம்முடைய தேவைகளை அறிந்திருக்கிறார். அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். ‘‘தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவைக்கொண்டு அவர் சமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின வார்த்தையை அறிந்திருக்கிறீர்களே’’ என்று பேதுரு தமது பிரசங்கத்தில் சொல்வதை அப்.10:34 - 36 வசனங்களில் படிக்கிறோம்.

ஆண்டவர் இயேசுவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் சபையின் தலைவர், இரட்சகர். அவருக்கும் அவரை அனுப்பிய பிதாவாகிய தேவனுக்கும் கீழ்ப்படிந்து பயந்து நடக்கும்போது ஒபதியாவைப்போல ஆசீர்வதிக்கப்படுவீர்கள். உங்களுடைய குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட நீதியைச் செய்ய பிரயாசப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 27. பாவங்களை மறைக்கிறவன்

## He That Covers His Sins

**இ**ப்பூமியில் தன்னுடைய பாவங்களை மறைக்கவே அநேகர் முற்படுகின்றனர். பணத்தை மறைத்து வைத்து பாதாளத்தில் கிடத்தப்படுகிறார்கள். அதைப்போல் பாவத்தையும் மறைத்துவைத்து பாதாளத்திற்கு போகவேண்டுமா? வேதம் போதிக்கிறது ‘‘தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்’’ என்று (நீதி.28:13). ஆதியிலே



நம்முடைய முற்பிதாக்களாகிய ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட கனியைப் புசித்து பாவத்திற்குட்பட்டனர். ஆகையால் இருவரும் கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே தங்களை ஒளித்துக் கொண்டார்கள். தங்களுடைய பாவங்களை மறைக்க தேவனுடைய பார்வையிலிருந்து தங்களை ஒளித்துக்கொண்டார்கள்.

இன்றும் பாவம் செய்கிற மனிதன் தன்னை ஒளித்துக்கொள்ளுகிறான். ஆனால் வெளிக்கு வராத மறைபொருளே இல்லை, என்றாவது ஒருநாள் அவனுடைய பாவம் வெளிப்படும், பின்பு தலை குனிந்துநிற்பான். எலிசாவிடம் ஒரு வேலைக்காரன் இருந்தான். அவன் நாகமானை பின்தொடர்ந்து என் ஆண்டவன் அவன் கையிலே ஒன்றும் வாங்காமல் அவனை அனுப்பிவிட்டார். நான் அவன் பிறகே ஓடி அவன் கையில் ஏதாகிலும் வாங்குவேன் என்று சொல்லி, நாகமானிடம் இரண்டு தாலந்து வெள்ளியையும் இரண்டு மாற்றுவஸ்திரத்தையும் பெற்றுக்கொண்டு வந்து தன் கூடாரத்தில் மறைத்து வைத்துவிட்டு, எங்கும் போகாததுபோல எலிசாவின் முன்வந்து நின்றான். தீர்க்கதரிசிகளுக்கு தேவன் வெளிப்படுத்தாமல் இருப்பாரா? கேயாசியைப் பார்த்து நீ எங்கேயிருந்து வந்தாய் என்று எலிசா கேட்டதற்கு, அவன் உமது அடியான் எங்கும் போகவில்லை இங்கேதான் இருக்கிறேன் என்று சொல்லி, தான் நாகமானிடம் வாங்கி வந்த பொருட்களை மறைத்து, பொய் சொன்னான்.

அதைப்போல, புதிய ஏற்பாட்டு காலத்தில் முதல் நூற்றாண்டு சபையில் இருந்த அனனியா சப்பீராள் ஆகிய இருவரும் தேவசமுகத்தில் பொய்சொல்லி மாண்டுபோனார்கள். ‘‘அவன் தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்துவைத்து ஒரு பங்கைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்’’ என அப்.5:2-ல் படிக்கிறோம். தங்கள் காணியாட்சியை விற்றதும் ஒரு பங்கை மட்டும் எடுத்து மறைத்து வைத்ததும் இருவருக்கும் நன்கு தெரியும். ஆனால் இருவருமே அப்போஸ்தலரிடத்தில் இதை மறைத்து வைத்தார்கள்.

இன்றைக்கும் அநேக குடும்பங்களில் இப்படிப்பட்ட காரியங்கள் நடந்துவருகிறது. ஒருவராவது உண்மையாயிருக்கலாம் அல்லவா, ஆனால் இருவருமே சேர்ந்து பொய்சொல்லுகிறவர்களாக இருப்பார்கள். இப்படி இருப்பார்களேயானால் எப்படி தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறமுடியும்.

**இரண்டாவது,** நீதி.28:13-ம் வசனத்தின் பிற்பகுதியில் ‘‘வாழ்வடையமாட்டான்’’ என காண்கிறோம். ஆம், பிரியமானவர்களே, தன் பாவங்களை மறைக்கிறவன் ஒருக்காலும் வாழ்வடையமாட்டான். இப்படி

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்து அதை அறிக்கையிடாமல் தங்களை ஒளித்துக்கொண்டபடியால் அவர்கள் தேவகோபத்திற்கு உள்ளானார்கள். பின்பு ஏதேன் தோட்டத்திலிருந்து தேவன் அவர்களை துரத்திவிட்டார். தேவனுடைய சாயலைப் பெற்ற ஆதாம் மரிக்கும் மனிதனாக மாறினான். ஆகையால் அந்த ''மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது;'' என காண்கிறோம் (ரோம.5:14). ஆதாம் பாவம் செய்தபடியால் வாழ்வடையாமறபோனான்.

நீங்கள் கேட்கலாம் அவன் 930 வருஷம் வாழ்ந்தானே என்று உண்மைதான் அவன் 930 வருடங்கள் வாழ்ந்தான் என வேதம் நமக்கு தெளிவாகபோதிக்கிறது. அதிகநாள் வாழ்ந்தபடியால் அவன் பாவியில்லை என்று நாம் சொல்லிவிடமுடியாது; ஏனென்றால், பிரசங்கி சொல்கிறான்; ''பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்'' (பிர.8:12). பாவத்தை எலிசாவிடம் மறைத்த கேயாசி வாழ்வடைந்தானா? என பார்க்கும்போது; அவன் தன்னுடைய பாவத்தை மறைத்தபடியால் எலிசா அவனைப் பார்த்து ''நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் பிடித்திருக்கும் என்றான்; உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவன் சமுகத்தை விட்டுப் புறப்பட்டுப்போனான்'' என்று 2இரா.5:27-ம் வசனத்தில் காண்கிறோம். பாவத்தை மறைத்த கேயாசிக்கு வந்த நோயைப் பார்த்தீர்களா? பாவத்தை மறைக்கும்போது அதிலிருந்து விடுதலையில்லை.

பாவம் அப்படிப்பட்டவர்களை பற்றிப்பிடிக்கும் அல்லது பாவம் அவர்களைத் தொடரும். அதைப்போல அனனியாவும் சப்பிராளும் பேதுருவிடம் பொய் சொன்னபடியால் வாழ்வடைந்தார்களா? அவர்கள் இருவரும் மாண்டுபோனார்கள் என காண்கிறோம். சபையில் கர்த்தரால் சேர்க்கப்பட்டவர்கள். அப்போஸ்தலருடைய அறிவிப்பைக்கேட்டு தங்களுடைய காணியாட்சியை விற்றார்கள். எல்லாம் சரியாய் செய்தார்கள். ஆனால் தங்களுடைய பணத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொன்னார்கள்.

இன்றைக்கு பொய் சொல்லுகிறவர்கள் யாரிடத்தில் பொய்சொல்லுகிறோம் என்று அறியாது சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த அனனியா சப்பீராளைப்போல பரிசுத்த ஆவியானவரிடம் பொய் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய பாவத்தில்



நீடிப்பார்களேயானால் அவர்கள் வாழ்வடையமாட்டார்கள் என வேதம் போதிக்கிறது.

**மூன்றாவதாக,** நீதி.28:13-ம் வசனத்தின் கடைசி பகுதியில் ''அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்'' என்று வாசிக்கிறோம். பாவம் செய்வதும், அதை மறைப்பதும் பெரிய குற்றம் ஆனால் அவைகளை அறிக்கை செய்துவிட்டுவிடும்போது இரக்கத்தைப் பெறுவோம். தாவீது ராஜாவை அறிவீர்கள். அவன் இஸ்ரவேலை 40 வருஷம் அரசாண்ட மாபெரும் வீரன், தேவனுடைய தாசன் என அழைக்கப்பபட்டான். எருசலேம் அவனுடைய நகரமாக இருந்தது. ஒருமுறை அப்படிப்பட்ட தாவீதே தவறு செய்துவிட்டான். அந்த தவறை மறைக்கவும் செய்தான். இக்காரியத்தைக் கண்ட கர்த்தர் அவனிடத்தில் நாத்தான் என்ற தீர்க்கதரிசியை அனுப்பி அவனுடைய பாவத்தை அவனுக்குத் தெரியப்படுத்தினார்.

எப்படியென்றால், ஒரு பட்டணத்தில் இரண்டு மனுஷர் இருந்தார்கள், ஒருவன் ஐசுவரியவான், மற்றவன் தரித்திரன். ஐசுவரியவானுக்கு ஆடுமாடுகள் திரளாயிருந்தது. ஆனால் தரித்திரனுக்கோ ஒரே ஒரு சின்ன ஆட்டுக்குட்டி இருந்தது அதைத்தவிர வேறொன்றும் அவனிடத்தில் இல்லை. அது அவனோடும் அவன் பிள்ளைகளோடும் அப்பத்தைத் தின்று, பாத்திரத்தில் தண்ணீர் குடித்து, அவன் மடியிலே படுத்துக்கொண்டும் ஒரு மகளைப்போல வளர்ந்தது. அந்த ஐசுவரியவானிடத்தில் வழிப்போக்கன் ஒருவன் வந்தான்; அவன் தன்னிடத்தில் வந்த அந்த வழிப்போக்கனுக்கு சமையல் பண்ண, தன் ஆடுமாடுகளில் ஒன்றைப் பிடிக்க மனதில்லாமல், அந்த தரித்திரனுடைய ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதைத் தன்னிடத்தில் வந்த மனுஷனுக்குச் சமையல் பண்ணுவித்தான் என்றான்.

இதைக்கேட்ட தாவீது; அந்த மனுஷன் யார், அவன் மரணத்திற்கு பாத்திரனாயிருக்கிறான் என்று கர்த்தருடைய ஜிவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான். அதற்கு நாத்தான் தாவீதை நோக்கி; நீயே அந்த மனுஷன் என்று சொல்லி, அவன் நீ உரியாவின் மனையியை உனக்கு எடுத்துக்கொண்டபடியால் பட்டயம் என்றைக்கும் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும் என்றான். இதைக்கேட்ட தாவீது; ''நான் கர்த்தருக்கு விரோதமாக பாவஞ்செய்தேன் என்றான்'' (2சாமு.12:13). இப்படி தாவீது தன்னுடைய பாவத்தை ஒத்துக்கொண்டு, பின்பு அந்தப் பாவத்தில் அவன் விழுந்துபோகாது தன்னைக் காத்துக்கொண்டபடியால் இரக்கம் பெற்றான்.

இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவானுடைய

பிரசங்கத்தைக்கேட்ட எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தாரும் யோர்தானுக்கு அருகாமையில் உள்ள சுற்றுப்புறத்தார் அனைவரும் அவனிடத்திற்குப்போய்; “தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்” என்று மத்.3:6-ல் படிக்கிறோம். இப்படி தேவனால் அனுப்பப்பட்ட யோவானுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் அக்காலகட்டத்தில் காக்கப்பட்டார்கள். இன்று கர்த்தர் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறவர்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொண்டு வருகிறார் என அறிகிறோம்.

இப்படி பேதுருவினால் குணமாக்கப்பட்ட ஒரு மாயவித்தைக்காரன். பரிசுத்த ஆவியின் வரம் தந்தருளப்படுகிறதைக் கண்டு, பணத்தைக்கொண்டு வந்து அதைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைத்தான். ஆகையால் பேதுரு அவனுடைய துர்குணத்தை அறிந்து, “நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன்; நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான்” (அப்.8:22-24).

பாவத்திலிருந்து மீட்கப்பட்ட இந்த மாயவித்தைக்காரனாகிய சீமோன் மீண்டும் பாவம் செய்ய துணிந்தான், பேதுரு அதை உணர்த்தும்போது நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு என்னக்காக வேண்டிக்கொள்ளுங்கள் என அறிக்கையிடுகிறதை காண்கிறோம். யாக்கோபு “நீங்கள் சொஸ்தமடையும் படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்; நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது” என்று (யாக்.5:16) சொல்கிறார்.

**கேள்வி**

**ஞானஸ்நானம் பெற்ற ஒருவர் பாவ அறிக்கை செய்யவேண்டுமா?**

இது ஒரு நல்லகேள்வி. சிலர் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுவிட்டோம். இனி எதற்கு பாவ அறிக்கை செய்யவேண்டும். இயேசு நம்முடைய பாவத்தை ஞானஸ்நானத்தின் மூலம் கழுவிவிட்டாரே என்பார்கள்.



உண்மைதான், ஞானஸ்நானம் பெற்ற ஒருநபர் மீண்டும் பாவம் செய்வாரேயானால் அவர் பாவத்தினிமித்தம் அவைகளை தேவனிடத்தில் அறிக்கையிட்டு இரக்கம் பெற காத்திருக்கவேண்டும். ஏனெனில் “சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல் நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்” என்கிறார் எபிரெய ஆசான் (எபி.10:26,27).

“நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்” (1யோவா.1:9). கர்த்தருடைய பிள்ளைகள் பாவம் செய்யாமல் தம்மை காத்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை அறியாமலோ அல்லது தெரியாமலோ பெலவீனத்தினாலோ பாவத்தை செய்யும்போது அவன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்து அதை அறிக்கையிட்டு மீண்டும் அவ்விதமான பாவத்தை செய்யாது காத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறான். உங்களை காத்துக் கொள்ளுங்கள், உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 28. கிறிஸ்துவினிடத்தில்...

## In Christ...

**அ**வரிடத்தில் என்ன இருக்கிறது என்று அநேகர் நினைக்கின்றனர். அவர் சொல்கிறார்; “குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்” (யோவா.6:40). **முதலாவது, அவரை காணவேண்டும்.** கடவுளைக் காண மனிதன் படும்பிரயாசத்திற்கு அளவே இல்லை. ஏறாத மலைகள் இல்லை, நடக்காத தூரமில்லை, கும்பிடாத கோயில் இல்லை. ஆனாலும் அவர்களால் கடவுளை கண்டு கொள்ளமுடியவில்லை.

பின்பு அவர் எங்கே இருக்கிறார்? எப்படியிருப்பார்? என்ற எண்ணம் அனைவருக்குள்ளும் இருக்கிறது. இச்செய்தியை வாசிக்கும் அன்பு நண்பரே, அவரை காண அவர் கொடுத்த வேதாகமத்திற்கு நாம் செல்ல வேண்டும். ஒரு நிலம் இருக்கிறது அது யாருடையது என்று எப்படி கண்டுபிடிப்போம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நபரை சொல்லுவார்கள் அது உண்மையிலே

யாருடையது என்பதை கண்டுபிடிக்க பத்திரத்தை வைத்து கண்டுபிடித்து விடலாம் அல்லவா? அதைப்போல ஆண்டவர் இயேசுவை கண்டுகொள்ள பரிசுத்த வேதாகமத்திற்கு செல்லவேண்டும்.

இயேசுவின் நாட்களில் பிலிப்பு என்பவன்; "நாத்தான்வேலைக் கண்டு; நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்" (யோவா.1:45). இயேசுவை பார்த்த பிலிப்பென்பவன் பெத்சாயிதா பட்டணத்தைச் சேர்ந்தவன். அவன் இயேசுவைப் பார்த்தவுடன் நியாயப்பிரமாண புத்தகத்திலும் தீர்க்கதரிசன ஆகமங்களிலும் அவரைப் பற்றி சொல்லப்பட்டிருந்தவைகளை நினைவுகூர்ந்து நாத்தான்வேலிடத்தில் இதை அறிவித்தான்.

பரிசுத்த வேதாகமம் அவரைப் பற்றியும் அவருடைய பிறப்பைப் பற்றியும் நமக்குப் போதிக்கிறது. இயேசுவின் நாட்களில் பிறவிக்குருடனை அவர் கண்டு உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி, நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான். ஒருமுறை பரிசேயர்கள் அவனை புறம்பாக்கினதை கர்த்தர் கண்டு; நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்; ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார். உடனே அவன்: ஆண்டவரே விசுவாசிக்கிறேன் என்றான். "அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார்" (யோவா.9:39).

**இரண்டாவது, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ என்று படிக்கிறோம்.** இயேசுவை கண்டு கொண்டால் மட்டும்போதாது அவரை விசுவாசிக்கவேண்டும். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என வாசிக்கிறோம் (யோவா.3:16). தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் கெட்டுப்போகாமல் இருக்கும்படியாக அவனை இரட்சிக்க வந்தார். அவர் ஒரு மத ஸ்தாபகர் அல்ல. உங்களையும் என்னையும் உண்டாக்கினவர். அவராலே நாம் வாழுகிறோம். அவர் இல்லாமல் பூமியில்



ஒரு அணுவும் அசையாது. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். சகலமும் அவருக்குக் கட்டுப்பட்டு இருக்கிறது. அவரை விசுவாசிக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் என்று குறிப்பிடுகிறார்.

இன்றைக்கு வாழ்க்கையில் தோல்வியையே சந்தித்துக்கொண்டும், நிம்மதியற்றும் வாழ்ந்துகொண்டு இருக்கிற கோடானகோடி ஜனங்களை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்களை கர்த்தர் ஓ தாகமாயிருக்கிறவர்களே தண்ணீர்களண்டைக்கு வாருங்கள் என்று அழைக்கிறார். அவரை விசுவாசிக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான். மேலும், "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்றார் (யோவா.11:25). இதை ஆண்டவர் இப்பூமியில் இருந்த நாட்களில் செய்து காட்டினார். மரித்து நான்கு நாட்களான லாசருவின் கல்லறைக்குச் சென்று கல்லை புறட்டிப்போடுங்கள் என்று சொல்லி லாசருவே வெளியே வா என்றார் மரித்தவன் உயிரோடு எழுப்பப்பட்டான். உலகத்தில் இதுவரை நடைபெறாத சம்பவங்கள் இயேசுவின் நாட்களில் நடைபெற்றது. அவரை விசுவாசிக்கிறவர்கள் மரித்தாலும் பிழைப்பார்கள் என காண்கிறோம். அன்பு நண்பரே, நீ அவரை விசுவாசிக்கிறாயா, அவர் உனக்காக தம் ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்.

**மூன்றாவதாக, அவன் நித்தியஜீவனை அடைவதும் என்று சொல்கிறார்.** அப்படியென்றால், கெட்டுப்போகாமல் அவனை காப்பாற்றி நித்திய வாழ்வுக்குள்ளாக கொண்டு சேர்க்கிறார். "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என யோவா.3:36-ல் காண்கிறோம். சீஷர்கள் கூட ஒரு முறை எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றனர். இன்றைக்கு தேவைகளுக்காக இயேசுவைப் பின்தொடர்கிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். கர்த்தர் தங்களுடைய வாழ்க்கையில் ஏதாவது செய்யவேண்டுமென விருப்பங்கொள்கின்றனர்.

உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் விலைகொடுத்து வாங்கிவிடலாம் ஆனால் நித்தியஜீவனை சுதந்தரிக்க இயேசுவை விசுவாசிக்கவேண்டும். அதைத்தான் மேலுள்ள வசனத்தில் தியானித்தோம். குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான் என்று நம் ஆண்டவர் குறிப்பிடுகிறார். நீங்கள் அவரில் விசுவாசமுடையவர்களாக இருக்கின்றீர்களா? அழிந்துபோகிற

காரியங்களுக்காக அவரில் விசுவாசம் கொள்ளாதிருங்கள். நிலைத்திருக்கிற காரியங்களுக்காக அவரை விசுவாசியுங்கள். பூமியிலுள்ளவைகளை அல்ல மேலானவைகளை நாடுங்கள். கர்த்தருடைய வாக்குத்தத்த வசனத்திற்காக காத்திருக்கிறோம் என்று அநேகர் சொல்லக் கேள்விப்பட்டிருப்பீர்கள். கர்த்தர் அவரை பின்பற்றுகிறவர்களுக்கு நிலையான வாக்குத்தத்தம் ஒன்றை கொடுத்திருக்கிறார்.

அது என்னவென்றால் "நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்" (1 யோவா.2:25). இந்த வாக்குத்தத்தத்தைப் பெறுவதற்கு பணம் இருந்து பிரயோஜனமில்லை, வசதிவாய்புகள் இருந்து பிரயோஜனமில்லை, கல்வி அந்தஸ்து இருந்து பிரயோஜனமில்லை மாறாக உங்களில் விசுவாசம் காணப்படவேண்டும். அது நீங்கள் நித்தியஜீவனை பெற உங்களை தகுதிப்படுத்தும். ஜெபிப்பதற்கு மற்றவர்களை நாடுகிறோம். மேலும் நம்முடைய தேவைகளுக்கு மற்றவர்களை நாடுகிறோம். இங்கே பேதுரு; ஆண்டவரை நோக்கி, "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்றான் (யோவா.6:68). உங்களுடைய நம்பிக்கையைக் கர்த்தரிடத்தில் வையுங்கள். கணக்கில்லா ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வீர்கள்.

**நான்காவதாக, "நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும்"** என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்படியானால் அவர் நம் எல்லோரையும் கடைசி நாட்களில் உயிரடையச் செய்வார். மனிதர்கள் மரித்தபின்பு எங்கே போகிறார்கள். மண்ணுக்குள் புதையுண்டு போகிறார்கள். அப்படி புதையுண்டு போகிறவர்கள் கர்த்தரில் விசுவாசமுள்ளவர்களாய் மரிப்பார்களேயானால் ஒரு நாளில் ஆண்டவர் வரும்போது அவர்கள் எழுப்பப்படுவார்கள் என வேதம் போதிக்கிறது.

"கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" என்று 1தெச.4:16-ல் படிக்கிறோம். மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள்? எப்படிப்பட்ட சரீரத்தோடு வருவார்கள்? என்றெல்லாம் கேள்விகள் எழும்புகிறதல்லவா! அதற்கு பவுலின் பதில் என்னவென்றால்; "புத்தியீனனே, நீ விதைக்கிற விதைசெத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே" என்கிறார் (1கொரி.15:36).

அதைப்போல கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் கிறிஸ்துவின் வருகையில் உயிர்ப்பிக்கப்படுவார்கள். "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய்



எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" (1கொரி.15:52). இந்த விதமான நம்பிக்கை உங்களுக்கு இருக்கின்றதா? அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் எழுப்பப்படுவார்கள்.

**ஐந்தாவதாக, "என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்".** இயேசுவினுடைய விருப்பம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறதாயிருந்தது. அவருடைய சித்தத்தை நிறைவேற்ற தம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தார். பேதுரு ஒருமுறை ஆண்டவருடைய வார்த்தைகளைகேட்டு இது உமக்கு நேரிடக்கூடாதே என்றான். அதற்கு அவர்; "பேதுவைப் பார்த்து; எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்" (மத்.16:23). பேதுருவோ மாம்சபிரகாரமாக சிந்தித்தான்.

ஆனால் ஆண்டவருடைய விருப்பமெல்லாம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறதாயிருந்தது. அவர் ஜெபிக்கும்போது கூட "உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்" (மத்.26:42). மூன்றுமுறையும் அப்படி ஜெபித்தார். நீங்கள் ஆண்டவராகிய இயேசுவை அவருடைய வசனத்தின் மூலம் கண்டுகொண்டு அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். அப்பொழுது அவர் உங்களுக்கு நித்திய ஜீவனை கொடுப்பார். அது மாத்திரமல்ல உங்களை அவருடைய வருகையின்போது உயிரோடு எழுப்புவார்.

**கேள்வி**

**இயேசு தம்மிடம் வருவோரை புறம்பே தள்ளுவாரா?**

புறம்பே தள்ளும் கூட்டம் இருக்கிறது. ஆனால் இயேசு தம்மிடம் வருவோரை புறம்பே தள்ளார். "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்கிறார் (யோவா.6:37). இச்செய்தியில் நாம் தியானித்தபடியாக பிறவிக்குருடனை பரிசேயர் புறம்பாக்கிப்போட்டார்கள். அதைக் கண்ட கர்த்தர் அவனிடம் சென்று நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார். அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படி அவர் யார் என்றான். நீ அவரை கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார் உடனே அவன்; ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று அவரைப் பணிந்துகொண்டான்.

அதைபோல பாவியாகிய ஒரு ஸ்திரீயை எல்லாரும்

புறம்பாக்கிப்போட்டார்கள். அப்பொழுது உங்களில் பாவமில்லாதிருக்கிறவன் முதலாவது இவள் மீது கல்லெறியக்கடவன் என்றார். உடனே எல்லாரும் அவளை விட்டுப்போய்விட்டார்கள். அவளை மன்னித்து அனுப்பினார். நாமெல்லாரும் பாவிகள் என்பதை கர்த்தர் அறிகிறார். நாம் அவரை நோக்கிப் போகும்போது அவர் நம்மை ஏற்றுக்கொள்கிறார். நீங்கள் அவரைக் கண்டு கொண்டு, அவரிடம் உங்களை ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 29. சிலுவையில் இயேசு ஆறு மணிநேரம்

## Jesus Is On The Cross For Six Hours

**நா**ம் ஒரு மணிநேரம் ஒரு வேலையைச் செய்வதற்கு படாது பாடுபடுகிறோம். ஆனால், ஆண்டவர் இயேசு ஆறு மணிநேரம் பாடுகளை அநுபவித்தார். யாருக்காக? உங்களுக்காகவும் எனக்காகவும், அவர் சிலுவையில் தொங்கினார். ஒரு மணிநேரம் பள்ளிமாணவர்களை நிற்கச்சொன்னால் சிலர் மயங்கி கீழே விழுந்துவிடுவார்கள். ஆண்டவர் இயேசு ஆறு மணிநேரம் சிலுவையில் தொங்கி இரத்தத்தை சிந்தினார். அவர் எத்தனை பாடுபட்டிருப்பார். நீங்கள் என்றாவது இதை சிந்தித்துப்பார்த்ததுண்டா? கர்த்தருடைய பிள்ளைகள் வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்கும்படி கூடிவரும்போது இதை நினைவு கூருகிறார்கள்.

அவ்வேளையில் அவர் எதற்காக சிலுவையில் இரத்தம் சிந்தினார் என்பதைக்குறித்து சற்று விளக்கமாக போதகர் போதிப்பார். கர்த்தருடைய மரணத்தை வாரத்தின் முதல் நாளில் அவர்கள் நினைவு கூருகிறபடியால் அவர்கள் அதை அறிந்துகொள்கிறார்கள். அன்பு நண்பரே, அவர் உங்களுக்காகவும் பாடுபட்டார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

**அவர் மூன்றாம் மணிவேளையில் சிலுவையில் அறையப்பட்டார் என மாற்கு 15:25-ம் வசனத்தில் படிக்கிறோம்.** அவரை சிலுவையில் அறைந்து யூதருடைய ராஜா என்று எழுதி சிலுவையின் மேல் அந்த வாசகத்தை கட்டிவைத்தார்கள். அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று; உலகமோ அவரை அறியவில்லை'' என்று யோவான் 1:10-ல் சொல்லப்பட்டபடி அவர்கள் அந்த உன்னதமான கர்த்தர் உலகத்தை இரட்சிக்க வந்தவர் என்பதை அறியாது சிலுவையில் ஆணி அடித்துக் கொலைசெய்தார்கள். அவரை பரியாசம்பண்ணும்படியாக யூதருடைய ராஜா என்று எழுதிவைத்தார்கள். உண்மை என்னவென்றால் அவர் யூதர்களுக்கு மட்டுமல்ல உலகத்திற்கே ராஜாதி ராஜா என்பதை அறியாத



அந்த மக்கள் அவரை இப்படியாக பரியாசம் செய்தனர்.

அவர் கிராமங்களில் ஊழியம் செய்து வந்தபோது கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள். ஆனால் மூன்றாம் மணிவேளையில் இயேசுவை சிலுவையில் அறைந்து பரியாசம்பண்ணினார்கள். மேலும், ''அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக, இரண்டு கள்ளரை அவரோடேகூடச் சிலுவைகளில் அறைந்தார்கள்'' (மாற்.15:27). இவரும் ஒரு கள்ளன் என்று சொல்லி கள்ளர்கள் மத்தியில் அவரை அறைந்தார்கள். அக்கிரமக்காரரில் ஒருவனாக என்னப்பட்டார் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக இப்படி செய்தார்கள்.

ஆண்டவர் சிலுவையில் மரிப்பதும், அக்கிரமக்காரர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவதும், தீர்க்கதரிசன ஆகமங்களில் சொல்லப்பட்டபடியே நடந்தது. ஆகையால் தான் வேதாகமம் சத்திய புத்தகம் என்றும் பரிசுத்தமான புத்தகம் என்றும் ஜனங்கள் அதை ஏற்றுக்கொள்கின்றனர். பிரியமானவர்களே, உலகத்திலே அநேக வேதங்கள் இருக்கிறது. இவ்விதமான ஒரு சம்பவத்தை உண்மை நிகழ்வுகளை நீங்கள் வேறு எந்த வேதத்திலும் காணமுடியாது. ஆகையினாலே இது பரிசுத்த வேதாகமம் என்று அழைக்கப்படுகிறது.

ஆண்டவர் சிலுவையில் தொங்கிய போது ''அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி; ஆ! ஆ! தேவாலயத்தை இடித்து, மூன்றுநாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவையிலிருந்திறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களுக்குள்ளே பரியாசம்பண்ணி; மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை. நாம் கண்டு விசுவாசிக்கத்தக்கதாக இஸ்ரவேலுக்கு ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது சிலுவையிலிருந்திறங்கட்டும் என்று சொல்லிக் கொண்டார்கள்.

அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டவர்களும் அவரை நிந்தித்தார்கள். இவ்வளவு பரியாசத்தையும் தாங்கிக்கொண்டு சிலுவையில் மூன்றாம் மணிவேளையில் தொங்கிக் கொண்டிருந்த ஆண்டவர் ,அவர்களுடைய பரியாசத்தைப் பார்த்து அவர்களை பூமி விழுங்கிப்போடும்படி செய்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. ஏனென்றால் பிதாவின் சித்தத்திற்கு தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தார். வேத

வாக்கியங்கள் நிறைவேறத்தக்கதாக தம்மை அர்ப்பணித்தார். நாம் சிலவேளைகளில் கோபப்பட்டு விடுகிறோம். அப்படிப்பட்ட நேரங்களில் சிலுவையில் ஆறு மணிநேரம் தொங்கிய ஆண்டவர் இயேசுவை நினைத்துப்பார்க்கவேண்டும். நம்முடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாது.

ஆண்டவரைப்போல தேவனுடைய சித்தம்செய்ய நம்மை அர்ப்பணிக்க வேண்டும். ‘‘ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும் படிக்கும் அப்படியானார்’’ என எபிரெய ஆசிரியர் குறிப்பிடுகிறார் (எபி.2:15). மரணத்தினின்று மனிதனை மீட்க ஒரே வழி தன்னை தியாக பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுப்பதே என்பதை அறிந்த ஆண்டவர். மரணபயத்தினாலே மரணத்திற்கு அடிமைப்பட்டு கிடந்த அனைவரையும் மீட்கும்படியாக, அதாவது விடுதலை பண்ணும்படியாக மரணத்திற்கு அதிகாரியான பிசாசானவனை தம்முடைய மரணத்தினாலே ஜெயித்தார். அவர் ஒப்புக்கொடுக்காவிட்டால் உங்களுக்கும் எனக்கும் பாவத்திலிருந்து மீட்பு இல்லை. நாமெல்லாரும் பாவிகளாகவும் பாவத்திற்கு அடிமைகளாகவும் இருந்திருப்போம்.

‘‘ஆறாம்மணி நேர முதல் ஒன்பதாம் மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று’’ என்று மாற்.15:33-ல் படிக்கிறோம். ஆதியிலே தேவன் ‘‘வெளிச்சம் நல்லது என்று கண்டார்; வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்’’ இரவு பகலை அவர் உண்டாக்கினார். அவர் சொல்ல இரவு பகல் உண்டாயிற்று. ஆனால் ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம் மணிநேரம்வரை பூமி இருளானது, அந்தகாரம் பற்றிக்கொண்டது.

யோவான் சொல்லும்போது; ‘‘அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை’’ என காண்கிறோம் (யோவா.1:4,5). கடைசிவேளையில் இயேசுவை பிதாவாகிய தேவன் முழுமையுமாக ஒப்புக்கொடுத்தார். எதற்காக; ‘‘இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கச் செய்யும்படியாக’’ அவரை ஒப்புக்கொடுத்தார்.

ஆகையால் பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று என்று அறிகிறோம். ‘‘உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை



நசுக்குவாய்’’ என்ற ஆதி.3:15-ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாக இயேசு பிசாசை சிலுவையில் நசுக்கும்படியாக ஒப்புக்கொடுக்கப்பட்டார்.

‘‘ஒன்பதாம் மணிநேரத்திலே, இயேசு: எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்’’ (மாற்.15:34). இந்த வார்த்தையை கேட்ட ஜனங்கள் தேவன் இவரை கைவிட்டுவிட்டார் என நினைத்திருப்பார்கள். ஆனால் உண்மை என்னவென்றால், மரணத்துக்கு அதிகாரியான பிசாசை ஜெயிக்கும்படியாக பிதாவாகிய தேவன் இயேசுவை சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்.

அப்பொழுது பல்வேறு சம்பவங்கள் நடந்தது. குறிப்பாக ‘‘தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாக கிழிந்தது’’.பொதுவாக திரைச்சீலை கிழிந்தால் கீழிருந்து மேல்வரை கீழிந்துபோகும். ஆனால் இது வித்தியாசமாக மேல்தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாக கிழிந்தது. இது இரண்டு உடன்படிக்கைகளை அடையாளம் காட்டுகிறது. இயேசு புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராகவும், புதிதும் ஜீவனுமான மார்க்கத்தையும் நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார். அவர் சிலுவையில் மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார். அதாவது தம்மை அனுப்பின பிதாவின் வேலைகளை அவருடைய சித்தத்தின்படி பூமியில் நிறைவு செய்து தம்முடைய ஆவியை ஒப்புவித்தார் எனக் காண்கிறோம்.

பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன். இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார் இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் என்றெல்லாம் படிக்கிறோம். இயேசு மகா சத்தமாய் கூப்பிட்டு ஜீவனை விட்டதையும், அங்கே நடந்த பல சம்பவங்களையும் பார்த்த நூற்றுக்கு அதிபதி மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன் என்றான். அவன் ஆச்சரியப்படும் அளவிற்கு மாபெரும் சம்பவங்கள் நடந்தது.

அன்பு வாசகரே, நீ ஆண்டவர் இயேசுவைப் பற்றியும் அவருடைய சிலுவை மரணத்தைப் பற்றியும் என்ன நினைக்கிறாய். அவர் உனக்காக சிலுவையில் ஆறுமணிநேரம் பாடுபட்டார். உன்னுடைய பாவங்களை போக்கும்படியாக, மரணபிடியிலிருந்து உன்னை விடுவிக்கும்படியாக, பாடுபட்டார். உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் ஆறு நாட்களில்

உண்டாக்கிய ஆண்டவர் இயேசுவுக்கு அந்த யூத ஜனங்கள் கொடுத்த தண்டனையை பார்த்தீர்களா? அவருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம்போலவும் ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறது. ''சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை'' என்று யோவான் குறிப்பிடுகிறார் (யோவா.1:3). அந்த உன்னதமான ஆண்டவருக்கு உன்னை ஒப்புக்கொடு.

**கேள்வி**

**கிறிஸ்துவின் சுவிசேஷம் என்றால் என்ன?**

சுவிசேஷம் என்றால் நற்செய்தி என்று கேள்விப்பட்டிருக்கிறோம். பவுல் சொல்கிறார்; ''நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்'' (1கொரி.15:3-5). இதுவே சுவிசேஷம். இந்த சுவிசேஷம் அடங்கிய புத்தகங்கள் நான்கு அவை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான். இந்த புத்தகத்தில் அவருடைய நடபடிகளைக்குறித்தும், அவருடைய அற்புதங்களை குறித்தும் அதிகமாக படிக்கிறோம்.

குறிப்பாக அவர் தாம் சம்பாதித்த சபையைக் குறித்து படிக்கிறோம். அவரை பின்பற்றும்போது ஒருவனுக்குக் கிடைக்கக்கூடிய ஆசீர்வாதங்களைப் பற்றியும்படிக்கிறோம். இயேசுவின் உபதேசத்தை கேட்டு, பரிசுத்த ஆவியானவருடைய உதவியோடு மேலும் 25 புத்தகங்களை அவருடைய சீஷர்கள் எழுதியிருக்கிறார்கள். அவைகள் சபையின் வளர்ச்சிக்கும், ஆத்தும வளர்ச்சிக்கும், கர்த்தருடைய உபதேசங்களை நாம் அறிந்துகொண்டு அவைகளின்படி ஜீவிப்பதற்கும் அவைகள் பிரயோஜனமுள்ளவைகளாக இருக்கிறது. இந்த சத்திய வசனங்கள் நம்மை சத்தியத்திற்கு நேராக வழிநடத்துகிறது.

ஆகவே வேதாகம சத்தியங்களை நோக்கிப் பார்த்து சத்தியபரரை அறிந்து கொள்ளுங்கள். கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று உங்களுடைய பாவங்கள்போக கழுவப்படுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"நீதியையும் தயையையும் பின்பற்றுகிறவன்**
**ஜீவனையும் நீதியையும்**
**மகிமையையும் கண்டடைவான்"** நீதி. 21:21



## 30. என் நாமத்தினிமித்தம்...

## For My Name's Sake

ஆண்டவர் இயேசுவின் நாமத்தினிமித்தம் வரக்கூடிய பாடுகளையும் உபத்திரவங்களையும் தம்முடைய சீஷர்களுக்கு போதித்தார். அவரை பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் இவ்விதமான பாடுகள் உண்டு. ஆண்டவர் ஒருவரையும் ஏமாற்றி அழைக்கவில்லை. என்னைப் பின்பற்றி வந்தால் அவனுக்கு பாடுகள் இருக்காது என்று சொல்லவுமில்லை. ''என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்'' என்றார் (லூக்.21:17). இயேசுவை ஏற்றுக் கொண்டவுடன் ஏற்றுக்கொள்ளாத ஜனங்கள் நம்மை பகைப்பார்கள்.

நாம் உண்மையாக நடக்க முயற்சிக்கும்போது அது சிலருக்குப்பிடிக்காது. ஒருவேளை அது அவர்களுக்கு இடையூராக இருக்கும். இப்படி பல காரியங்களினிமித்தம் உலகம் நம்மை பகைக்க ஆரம்பிக்கிறது. அப்போஸ்தலர்களை இயேசுவினிமித்தம் பிடித்து துன்பப்படுத்த ஆரம்பித்தனர். ''அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்'' (அப்.5:41,42).

அப்போஸ்தலர்கள் அவருடைய நாமத்தினிமித்தம் அவமானமடையும்போது அதை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்கள். சிலர் சின்ன அவமானத்தைக்கூட தாங்கிக்கொள்ள முடியாமல், கர்த்தர் என்னை இவ்விதமான அவமானத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டாரே என்று மனம் நொந்து பின்மாற்றமடைகின்றனர். பின்பு சபை கூடுகைக்கும் ஆராதனைகளுக்கும் செல்லாமல் வாழ்க்கையை வீணாக்கிப்போடுகிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு விரோதமாக இருந்தவன். அவனை கர்த்தர் சந்தித்து தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும் பாத்திரமாக தெரிந்துகொண்டார். இப்படி தெரிந்துகொண்ட அவனை வேதனைப்படாது அவர் பாதுகாத்துக்கொள்ளவில்லை.

அனனியா மூலம் கர்த்தர் பேசும்போது; ''அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்'' (அப்.9:16). அப்போஸ்தலர்களிலே அதிகமான பாடுகளை அநுபவித்தவர் அப்போஸ்தலனாகிய பவுலாகத்தானிருக்கமுடியும்.

அவ்வளவு பாடுகளை கர்த்தர் நிமித்தம் அநுபவித்தார். ''யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன். மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்'' என்றெல்லாம் சொல்லுகிறதை நாம் கொரிந்தியர் புத்தகத்தில் வாசிக்கிறோம்.

தேவனுடைய ஜனங்களே முதலாவது பவுலுக்கு விரோதிகளாக மாறினார்கள். எப்படி இயேசுவை கொலைசெய்வதற்கு யூதர்களே காரணமாக இருந்தார்களோ அதைப்போல பவுலுக்கும் இருந்தார்கள். ஆகையால் கர்த்தர் சொல்லும்போது; ''ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே என்றார்'' (மத்.10:36). பக்தியுள்ளவனுக்கு அவனுடைய குடும்பத்தாரே விரோதியாக மாறுகிறார்கள். இயேசுவை முதலாவது காட்டிக்கொடுத்தவன் பன்னிருவரில் ஒருவனாகிய யூதாசே என காண்கிறோம். தன் குடும்பத்தில் உள்ள ஒரு நபரைப்போல அவர்களோடு பேசிவந்தார். தாம் பிதாவிடம் கேள்விப்பட்ட அனைத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். ஆகையினாலே அவர்களை சிநேகிதர் என்றார். அவருடைய மார்பிலே சாய்ந்துகொண்டு அவருடைய உபதேசங்களைக் கேட்டனர். அப்படியிருந்தும் அவர்களில் ஒருவனே இயேசுவுக்கு துரோகியாக மாறினான். அது எவ்வளவு கொடூரமான செயல்!

இப்படி அவருடைய நாமத்தினிமித்தம் வரும் பாடுகளையும் துன்பங்களையும் மேலும் மற்றவர்கள் நம்மை பகைக்கிறதைக் குறித்தும் நாம் கவலைகொள்ளத் தேவையில்லை. ஏனென்றால்; ''உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது'' என்கிறார் (லூக்.21:18). அப்படியானால் அவர் எந்த அளவு நம்மில் கரிசனையுள்ளவர் என்று பார்த்தீர்களா. உங்களை உள்ளங்கைகளில் வரைந்து வைத்திருக்கிறேன் என்கிறார் அல்லவா? அவருடைய அனுமதியில்லாமல் ஒன்றும் நடைபெறாது. நம்முடைய தலையில் உள்ள முடிகளை நாம் அறிவோமா, அநுதினமும் குளிக்கிறோம், தலை மயிரை ஒழுங்குபடுத்துகிறோம். ஆனால் எத்தனை முடிகள் நம்முடைய தலையில் இருக்கிறது என்று அறிகிறோமா, ஆனால் கர்த்தர் அறிவார்.

ஆகையால் தான் அவைகளில் ஒன்றாகிலும் அழியாது என்கிறார். ''நாம் கிறிஸ்துவினுடையவர்கள் கிறிஸ்து தேவனுடையவர்'' என்று 1கொரி.3:23-ல் படிக்கிறோம். கிறிஸ்து அழியாதவர் ஆகையால் நாமும் அழியாமல் இருப்போம். மேலும், ''ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகள் விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள்



தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது'' என்கிறார் (மத்.10:29,30). இவ்வளவு தூரம் நம்மில் கரிசனையுள்ள கர்த்தர் இருக்கும்போது நாம் ஏன் கலங்கவேண்டும்.

அன்பான தேவ ஜனமே, நீ சோர்ந்துபோகாதே, உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஒருபோதும் கைவிடார். ஆண்டவர் நிமித்தமாக பலபாடுகள் வந்தாலும், அவர் நம்மோடு இருக்கும்போது நாம் கலங்வேண்டிய அவசியமில்லை. அடைக்கலான் குருவிகளுக்கு இரங்குகிற தேவன் உங்களுக்கு இரக்கம் செய்யமாட்டாரா? உங்களையும் என்னையும் அவருடைய சாயலில் உண்டாக்கியிருக்கிறார். உலகத்தில் உள்ள எல்லாவற்றைப் பார்க்கிலும் அவர் நம்மைத்தான் அதிகம் நேசிக்கிறார். ஆகையால் நமக்கென்று ஒரு பெரிய திட்டத்தை வைத்திருக்கிறார் அதை தம்முடைய குமாரனுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் அவைகளை நமக்கு சபைகள் மூலம் தெரியப்படுத்திக்கொண்டு வருகிறார்.

ஆகையால் பிரியமான தேவ ஜனங்களே, நீங்கள் சோர்ந்துபோகாதிருங்கள். ஒருவேளை நீங்கள் நினைக்கலாம் சபைக்காக வாழ்ந்த சகோதரனை இழந்து தவித்துக்கொண்டிருக்கிறோம். கர்த்தர் அவரை காப்பாற்றவில்லையே எனச் சொல்லக்கூடும். அப்போஸ்தலர்களை அநேக பாடுகளுக்கு ஒப்புக்கொடுத்த கர்த்தர் அவர்களில் சிலரை மரணத்திற்கும் ஒப்புக்கொடுத்தார். அத்தோடு அவர்களுடைய கதை முடிந்துவிட்டது என்று அர்த்தமல்ல. யூதர்கள் கூட இயேசுவை பிடித்து சிலுவையில் அறைந்துபோடும்படியாக ஒப்புக்கொடுத்தார்கள். அவரை சிலுவையில் அறைந்தவுடன் அவ்வளவு தான் முடிந்துவிட்டது என்று நினைத்தார்கள். பேதுரு தம்முடைய பிரசங்கத்தில் குறிப்பிடும்போது; ''நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சமாய் அறியக்கடவர்கள் என்றான்''.

மேலும், தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை மூன்றாம் நாள் எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது என்று சொல்கிறார். ஆகையால் பிரியமானவர்களே, மாம்ச மரணம் என்பது ஒரு நிரந்தர அழிவல்ல. இயேசுவை எழுப்பின தேவன் நம்மை எழுப்புவார். அந்த நம்பிக்கையிலே நிலைத்திருங்கள். பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய நிருபத்தில் இதுகுறித்துப் பேசும்போது; ''இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர்

அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்'' என்கிறார் (1கொரி.15:51,52). இந்தவிதமான நம்பிக்கை உங்களுக்குள் இருக்கிறதா?

ஆகையால் ''உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்'' (லூக்.21:19). தேவனுடைய மனுஷனுக்கு பொறுமை மிக அவசியம். இன்றைக்கு பொறுமையில்லாமல் அநேக ஆத்துமாக்கள் தங்களுடைய ஓட்டத்தில் தோல்வியை தழுவுகின்றனர். பொறுமையைப் பற்றி பேசச்சொன்னால் மணிக்கணக்காக பேசலாம். ஆனால் பொறுமையாக இருந்து கேட்பது என்பது கூடாத ஒன்றுதான். ஆனால் பொறுமையோடிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். ''நீண்ட பொறுமையினால் பிரபுவையும் சம்மதிக்கப்பண்ணலாம்'' என்று நீதி.25:15-ல் வாசிக்கிறோம்.

அரசனுடைய சம்மதத்தை பெறவேண்டுமானால் நீடிய பொறுமை அவசியம். அநீதியுள்ள நியாயாதிபதியிடம் ஓயாமல் முறையிட்ட ஒரு விதைவையைப் பற்றி ஆண்டவர் ஒரு உவமையாக கூறியதை லூக்காவின் புத்தகத்தில் படிக்கிறோம். அந்த அநீதியுள்ள நியாயாதிபதி இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் அல்லவா அதைப்போல சோர்ந்துபோகாமல் பொறுமையை இழந்துவிடாமல் இருக்கும்போது நம்முடைய ஆத்துமா காக்கப்படும். சிலர் நாட்டில் நடக்கின்ற காரியங்களைக் கண்டு சோர்ந்துபோய் பொறுமையை இழந்துவிடுவார்கள்.

லோத்தைக்குறித்து வேதம் சொல்லும்போது; ''நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு, கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்'' என்கிறார் பேதுரு (2பேது.2:8,9). அநுதினமும் தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டவன் லோத்து. அவனை கர்த்தர் கைவிட்டாரா, அவனை இரட்சித்தாரே, அதைப்போல உங்களையும் இரட்சிப்பார்.

மேலும், யோபை பொறுமைக்கு எடுத்துக்காட்டாக யாக்கோபு சொல்வதை யாக்கோபு 5:11-ல் படிக்கிறோம். ''இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும்



இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே'' என்கிறார். ஆகையால் என்ன பாடுகள் பிரச்சனைகள் வந்தாலும் அப்போஸ்தலர்களைப்போலவும், லோத்தைப் போலவும், யோபுவைப் போலவும் நீடிய பொறுமையோடிருந்து உங்களுடைய ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

**கேள்வி**

**என்ன பாடுகள் பிரச்சனைகள் வந்தாலும் முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவானா?**

ஆம், கொஞ்சகாலம் தோன்றி பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போல நம்முடைய விசுவாசம் இருக்கக்கூடாது. கற்பாறையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டவர்களாக காணப்படவேண்டும். பெருவெள்ளம் வந்தும் காற்றுஅடித்தும் அதை அசைக்கக்கூடாமற்போயிற்று ஏனெனில் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம்போடப்பட்டிருந்தது. அதைப்போல உங்களுடைய விசுவாசத்தை கன்மலையாகிய கிறிஸ்துவின் மீது வைத்து அவர் மீது நம்பிக்கையாயிருங்கள். ''என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்'' என்று நம்முடைய ஆண்டவர் சொல்லியிருக்கிறார் (மத்.10:22).

கொஞ்ச காலம் தோன்றி பின்பு காணாமற்போகிற புகையைப்போலத்தான் அநேகருடைய வாழ்க்கையானது இருக்கிறது. அவ்விதமாக இல்லாது நீடித்து நிலைத்திருங்கள். கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள். தேவன் உங்களை பொறுமைக்கு நேரே வழிநடத்தும்படியாக நாங்கள் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம்.

## 31. நியாயாதிபதி

## The Judge

**உ**லகத்திலே அநேக நியாயாதிபதிகளைக் குறித்துக் கேள்விப்படுகிறோம். வேதாகமத்திலும் அநேக நியாயாதிபதிகள் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். வானத்திற்கும் பூமிக்கும் ஒரே ஒரு நியாயாதிபதி இருக்கிறார் அவரைக்குறித்து இந்த நாளில் தியானிப்போம். யோசுவாவிற்கு பின்பு தேவன் அநேக நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார் என்று நியாயாதிபதிகள் புத்தகத்தில் படிக்கிறோம். இந்த நியாயாதிபதிகள் இஸ்ரவேலரை கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு நீங்கலாக்கி இரட்சித்தார்கள் என நியாயா.2:16-ம் வசனத்தில்

வாசிக்கிறோம். தேவன் தம்முடைய ஜனத்தை நேசித்தபடியால் அவர்களுக்கு நியாயாதிபதிகளைக் கொடுத்தார்.

இந்த நியாயாதிபதிகள் தேவனால் ஏற்படுத்தப்பட்டபடியால், தேவனுக்குப் பயந்து நியாயம் விசாரித்து தேவ ஜனங்களை வழிநடத்திக்கொண்டுவந்தனர். இன்றும் நியாயம் விசாரிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் நியாயம் இல்லை. நியாயம் தள்ளுபடியாகிவிட்டது. ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். நீதிமானை பார்ப்பது மிக அரிதான ஒன்றாகிவிட்டது. இதற்கெல்லாம் காரணம், ஜனங்கள் சத்தியத்தை விரும்பாமல் மாயைக்கு செவிகொடுத்து வழிவிலகிபோனார்கள். குறிப்பாக இவ்வுலக கலாச்சாரம் முற்றிலும் மாறுபட்டுப்போய்விட்டது. இனி இதில் விடிவுகாலம் வரும் என்பது கூடாத காரியம் ஏனெனில் தேவனே இப்பூமியை அழிக்க திட்டம் கொண்டுள்ளார். ஆகையால் நாம் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

கூடுமானவரை நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டு நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசுவின் வருகைக்கு காத்து அவருக்குப் பயந்திருக்கக்கடவோம். இஸ்ரவேலருக்கு கர்த்தர் நியாயாதிபதிகளை ஏற்படுத்திக்கொடுத்தும் ''அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக் கேளாமல், அந்நிய தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போய், அவைகளைப் பணிந்துகொண்டார்கள்; தங்கள் பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகி, அவர்கள் செய்தபடி செய்யாமற்போனார்கள்'' (நியாயா.2:17). இன்றைக்கும் கர்த்தருடைய ஊழியக்காரனின் சொல்லைக்கேளாமல் தாங்கள் விட்டுவந்த பாதக மார்க்கத்தினால் கெட்டுப்போகிறவர்களை பார்க்கிறோம். ''உங்களை நடத்துகிறவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்'' என எபி. 13:17ல் திருமறை போதிக்கிறது. ஆனால் அடங்குகிறார்களா, அடங்காத குதிரைகளைப்போல இருக்கிறார்கள்.

அந்தப்படியாக இஸ்ரவேலர் நியாயாதிபதிகளுக்கு கீழ்ப்படியாமல் சோரம்போனார்கள். அதுமாத்திரமல்ல; ''நியாயாதிபதி மரணமடைந்த உடனே, அவர்கள் திரும்பி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவும் சேவிக்கவும் பணிந்துகொள்ளவும், தங்கள் பிதாக்களைப்பார்க்கிலும் கேடாய் நடந்து, தங்கள் கிர்த்தியங்களையும் தங்கள் முரட்டாட்டமான வழியையும் விடாதிருப்பார்கள்''. இப்படியிருந்தபடியால் தேவன் அவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அக்காலத்தில் நியாயம் விசாரித்து வந்த கிதியோன்; ''நான்



உங்களை ஆளமாட்டேன்; என் குமாரனும் உங்களை ஆளமாட்டான்; கர்த்தரே உங்களை ஆளுவாராக என்றான்'' (நியா.8:23).

அந்தப்படியாக தேவன் எல்லோருக்கும் ஒரே நியாயாதிபதியாக இயேசுவை நியமித்தார். ''அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்'' என்று பேதுரு தமது பிரசங்க வாக்கியத்தில் குறிப்பிடுகிறார் (அப்.10:42). ஆகையால் பிதாவானவர் குமாரனைக் குறித்து சாட்சிகொடுக்கும்போது இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்றார். இன்றைக்கு உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் நியாயத்தீர்ப்புசெய்யும் அதிகாரத்தை உடையவராக கிறிஸ்துவானவர் இருக்கிறார்.

அவருடைய தீர்ப்பு ''சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம்'' ஆகையால் சத்தியவான் எவனும் அவருடைய சத்தம் கேட்பான். மேலும், ''அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்'' என பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.2:23). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமியில் தேவனுடைய சித்தம் செய்கிறவராக எங்கும் சுற்றிதிரிந்தார். அவரை சிலுவையில் அறைந்து பரியாசம் பண்ணும்போதும் அவர் ஒருவனையும் தூஷியாமலும் பயமுறுத்தாலும் நியாயமாய் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்முடைய ஆவியை ஒப்புவித்தார்.

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார். மேலும், ''பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்'' (யோவா.5:22).

இன்றைக்கு சின்ன சின்ன பதவிகளில் இருக்கிறவர்கள், தங்களுக்கு ஏதோ உலகத்தில் கிடைக்கக்கூடாத ஒரு பதவி கிடைத்துவிட்டதுபோல நடந்துகொள்வார்கள். மற்றவர்களைப் பார்க்கும்போது மிக அற்பமாக

எண்ணிக்கொண்டு, தலைக்கனம் நிறைந்தவர்களாக காணப்படுவார்கள். பிதாவாகிய தேவன் ஆண்டவராகிய இயேசுவை உயர்த்தி சர்வ உலகத்தையும் நியாயந்தீர்க்கக்கூடிய பொறுப்பை அவருக்குக் கொடுத்திருக்கிறார்.

இந்த நியாயாதிபதிக்கு முன்பாக நாமெல்லோரும் ஒரு நாள் நிற்கவேண்டும் என வேதம் போதிக்கிறது. குற்றவாளிகள் நியாயாதிபதிகளுக்கு முன்பாக நிறுத்தப்படுகிறார்கள் அல்லவா? அதைப்போல நாமெல்லாரும் ஆண்டவர் இயேசுவுக்கு முன்பாக நிறுத்தப்படுவோம். ஆகையால் ''நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்'' என்று மத்.7:1,2-ல் வாசிக்கிறோம்.

மற்றவர்களை குற்றவாளிகளாக தீர்ப்பதில் பலர் மிகவும் கண்ணுங்கருத்துமாக செயல்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சிந்திக்கவேண்டும். ஒரு நாளில் நாமும் குற்றவாளிகளாக தீர்க்கப்படுவோம். ஆகையால் மற்றவர்களை குற்றவாளிகள் என தீர்க்கக்கூடாது என்று உணர்வடையவேண்டும். பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார்; ''இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே'' என்று எழுதுகிறார் (ரோம.14:10).

நியாயத்தீர்ப்புக்கு ஒருவரும் தப்பமுடியாது. ஏனெனில் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கர்த்தர் திருவுளம்பற்றுகிறார். அவருக்கு மறைவாக ஒரு காரியமும் இல்லை. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார் என பிரசங்கி சொல்கிறான். ஆகையால் இதில் யாரும் போக்குசொல்ல முடியாது. நம்முடைய கிரியை நம்மோடு கூட வரும். நான் ஆவியில் வைராக்கியமாயிருந்தேன், பல வருடங்களாக தேவமனுஷனாக வாழ்ந்தேன். நான் அநேகருக்கு நலமான காரியங்களைச் செய்திருக்கிறேன் என்றெல்லாம் சொல்லிக்கொண்டே போகலாம். ''ஏனெனில், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'' (2கொரி.5:10). ஒருவேளை சரீரத்தில் அநேகர் தவறுசெய்துவிட்டு என்னுடைய தவறை யாரும் பார்க்கவில்லை என்று எண்ணிக்கொண்டிருக்கலாம். ஆனால் தேவன் அவைகளை கிறிஸ்துவின் நியாயாசனத்திறகு முன்பாக



கொண்டுவருவார். உலக மக்கள் முன் இவரா இந்த காரியத்தைச் செய்தது என்று அப்பொழுது வெளியாகும். வெளிக்கு வராத மறைபொருளே இல்லை.

இன்று மனிதர்களுடைய கண்களை கட்டி பல மாயாஜாலங்களை செய்கிறார்கள். அவர்கள் நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கொள்ளமுடியாது. உலக குற்றவாளிகளை உலக அரசு கண்டுபிடித்து அதற்கு தகுந்த தண்டனைகளை வழங்கிக் கொண்டிருக்கும்போது, சர்வத்தையும் ஆண்டுகொண்டிருக்கும் அவருடைய கண்களுக்கு குற்றவாளிகள் தப்பிவிடமுடியுமா? ஆகையால் பிரியமானவர்களே, நியாயாதிபதியாகிய கர்த்தருக்குப் பயந்து ஒவ்வாரு நாளும் வாழுங்கள்.

''அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது'' என்கிறார் (வெளி.22:11,12).

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற தேவ ஜனமே இதோ, நியாயாதிபதி வாசற்படியிலே நிற்கிறார். அவருடைய சத்தம் கேட்டு உங்கள் இருதய கதவை திறந்து அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படியுங்கள். அநியாயம் செய்கிற மக்களை பார்த்து நீங்களும் அநியாயம் செய்ய கற்றுக்கொள்ளாதிருங்கள். இன்றைய சமுதாயம் தவறான காரியங்களைக் கற்றுக்கொண்டு அதே தவறில் விழுந்துபோய்க்கொண்டிருக்கிறது.

நீங்கள் பரிசுத்தமாயிருந்தால் இன்னும் பரிசுத்தமாக முயற்சியுங்கள். அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும் அவனை பார்த்து நீங்களும் அசுத்தவானாக மாறாதிருங்கள். அவர் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தமாயிருங்கள் என வேதம் போதிக்கிறது. ஆகையால் நாம் நியாயாதிபதிக்கு முன்பாக நீதியுள்ள ஜனங்களாக நிற்க, அவருடைய வசனத்தைக் கைக்கொண்டிருப்போம்.

**கேள்வி**

**நியாயாதிபதியாகிய கர்த்தர் நியாத்தீர்ப்புக்கு பின்பு கொடுக்கும் பரிசு என்ன?**

நீதியின் கிரீடத்தைக் கொடுப்பார். உலகம் கொடுக்கும் பதவி, பட்டங்கள் எல்லாம் ஒருநாளில் மண்ணோடு மண்ணாய் போய்விடும். ஆனால் கர்த்தர் கொடுக்கும் நீதியின் கிரீடம் ஜீவகாலமெல்லாம் நம்மோடிருக்கும். ஆகையால் பவுல் இதுகுறித்துச் சொல்லும்போது; ''இதுமுதல் நீதியின் கிரீடம்

எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்'' என்கிறார் (2தீமோ.4:8).

இந்த நீதியின் கிரீடத்தை பெறத்தக்கதாக உங்களுடைய வாழ்க்கை பயணத்தில் ஓடுங்கள். அவருடைய வருகையை எதிர்நோக்கும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் என பவுல் சொல்லும் வசனத்தை உற்றுநோக்குங்கள். இப்பூமியிலே நம்முடைய முயற்சி தோல்வி அடைந்தது, பலர் நம்மை ஏமாற்றிவிட்டார்கள். ஆனால், வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவர். அவர் அந்தப்படியே செய்வார். ஆகையால் நியாயத்தீர்ப்பு நாளிலே நீதியின் கிரீடத்தை பெற்றுக்கொள்ளும்படியாக நியாயமாய் தீர்ப்பு செய்கிறவருக்கு உங்களை அர்ப்பணம்செய்யுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 32. வேறொரு நாமம் இல்லை

## There Is No Other Name

**உ**லகத்திலே உன்னதமான நாமம் இயேசுவின் நாமமே. **இந்த நாமம் உயர்வான நாமம்.** எப்படியெனில், ''இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்'' என்று பிலி.2:10,11 வசனங்களில் வாசிக்கிறோம்.

இதை அறியாத ஜனங்கள் காணாத நாமத்தையும், செவிகொடாத நாமத்தையும் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். வானத்திலும் சரி பூமியிலும் சரி ஒரே ஒரு நாமமே கொடுக்கப்பட்டுள்ளது. அது இயேசுவின் நாமம். அது மேன்மையான நாமம். எபிரெய ஆசான் சொல்லும்போது; ''இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்'' என்று சொல்லுகிறார் (எபி.1:4). சிலர் நாமத்தில் என்ன இருக்கிறது என்று கேட்கிறார்கள்.

இயேசு என்ற நாமம் பிதாவாகிய தேவனால் முன்னறிவிக்கப்பட்ட நாமம். தேவதூதனால் யோசேப்புக்கு சொல்லப்பட்டது; ''அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்''



(மத்.1:21). யோசேப்பும் மரியாளும் தேவதூதன் சொன்னபடியே அவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள். ''எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?'' என எபிரெய புத்தகத்தில் படிக்கிறோம்.

எத்தனையோ தீர்க்கதரிசிகளை பிதாவாகிய தேவன் அனுப்பிக்கொண்டு வந்தார். மற்றும் தேவதூதர்கள் மூலமாகவும் ஜனங்களை சந்தித்துக்கொண்டு வந்தார். இவர்களுக்கு மேலாக தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படியாக, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அதிகாரம் கொடுத்து அவரை தம்முடைய முதற்பேறான குமாரனாக்கினார். இத்தனை பெரிய ஆசீர்வாதத்தை இயேசுவானவர் எப்படி சம்பாதித்தார் என்று நீங்கள் நினைக்கக்கூடும். ''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்''. ஒரு மனிதனுக்கு உயர்வான இடத்தைக் கொடுத்துவிட்டு, பின்பு கீழான இடத்திற்குப் போகச்சொன்னால் அந்த உயர்வான இடத்திலிருந்து என்னை போகச் சொன்னதன் காரணம் என்ன என்று சண்டையிடுவான். ஆனால் ஆண்டவராகிய இயேசு தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார். ஆகையால் பிதாவாகிய தேவன் எல்லாவற்றிற்கு மேலாக உயர்த்தினார்.

**இயேசுவின் நாமம் குணமாக்கும் நாமம்.** இன்றைக்கு உலகமெங்கும் கர்த்தருடைய நாமத்தை அநேகர் பற்றிக்கொள்கிறார்கள் அதற்கு காரணம் என்ன? அவருடைய நாமத்தில் அநேகர் குணமாக்கப்படுகிறார்கள். உண்மையான வைத்தியனை ஜனங்கள் அடையாளம் கண்டுகொள்கிறார்கள். ஆகையால் அதிகமான ஜனங்கள் தங்களுடைய வீணான மார்க்கத்தை விட்டு ஜீவனுள்ள தேவனுடைய மார்க்கத்தில் வந்து இணைகிறார்கள். ஒருமுறை பேதுரு ஒரு சப்பாணியை கையைபிடித்து இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று தூக்கிவிட்டான் அவன் குதித்தெழுந்து நடந்து அவர்களோடு தேவாலயத்திற்கு சென்றான். இதைப் பார்த்த ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

அப்பொழுது பேதுரு; "அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது" என்றான் (அப்.3:16). இன்றைக்கு மனிதர்களை நாடி அங்குமிங்கும் ஓடுகிறார்கள். அங்கே சென்றால் சுகமாகாதா, இங்கே சென்றால் சுகமாகாதா என்று அலைந்து திரிகிறார்கள். நூற்றுக்கு அதிபதியின் விசுவாசம் அநேகருக்கு வருகிறதில்லை.

அவன் இயேசுவைப் பார்த்து ஆண்டவரே நீர் என் வீட்டுக்கு வர நான் பாத்திரனல்ல ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் என் வேலைக்காரன் பிழைப்பான் என்றான். இவனுடைய விசுவாசத்தைக் கர்த்தர் கண்டு தமக்குப்பின் செல்லுகிற ஜனங்களைப் பார்த்து இஸ்ரவேலுக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தை காணவில்லை என்றார். அவனுடைய விசுவாசம் அப்படிப்பட்டதாக இருந்தது. வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த கர்த்தர் எங்குமிருக்கிறார். அவர் மூலமாக நாம் வேண்டிக்கொள்ளும்போது அவர் பரமபிதாவிடம் நமக்காக வேண்டிக்கொள்வது அதிக நிச்சயமல்லவா!

முதல் நூற்றாண்டு சீஷர்கள், சபையார்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதில் மிக தீவிரமாக இருந்தனர். அப்பொழுது அவர்கள் கூடி "உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்று ஜெபித்தார்கள் (அப்.4:30). இப்படியாக கர்த்தர் அப்போஸ்தலர்கள் மூலமாக அநேக அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி அநுக்கிரகஞ்செய்தார்.

இயேசுவின் நாட்களில் அவரால் குணமாக்கப்பட்டவர்கள் அநேகர். இயேசு ஒரு கிராமத்திற்கு வருகிறார் என்று கேள்விப்பட்டால் போதும் வியாதிக்காரர்கள் அநேகர் கூட ஆரம்பித்துவிடுவார்கள். அந்தப்படியாக ஒரு முறை இயேசு கெனேசரேத்து நாட்டிற்குச் சென்றார். "அவ்விடத்து மனுஷர் அவரை இன்னார் என்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும் செய்தி அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாக வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்" என்று மத்.14:35,36 வசனங்களில் படிக்கிறோம்.



வைத்தியரை நாடினால் அவர்கள் வைத்தியம் செய்து மருந்து மாத்திரைகள் கொடுப்பார்கள். இங்கே பரமவைத்தியர் இயேசுவை தொட்ட யாவரும் சுகமானார்கள். மேலும், அப்போஸ்தனாகிய பேதுரு தமது பிரசங்கத்தில்; "அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்" என்று குறிப்பிடுகிறார் அப்.10:38-ம் வசனம்.

இந்த பூமியில் வந்த ஞானவான்கள் தேவ மனிதர்கள் என்று தங்களை சொல்லிக்கொண்டவர்கள். எல்லோரும் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்களுடைய முடிவு என்ன என்பதைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். தங்களுக்கு வேண்டிய சொகுசான வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். கஷ்டத்தின் மத்தியில் இருக்கிற ஜனங்களை கண்டுகொள்ளாமல் வாழ்ந்தனர். ஆனால், ஆண்டவர் இயேசு எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார். இன்றைக்கு நோயாளியைக் கண்டால் அந்த நோய் தனக்கு வந்துவிடும் என்று அச்சப்பட்டு ஒதுங்கிப்போகிற மக்கள் இருக்கிறார்கள். ஆனால், இயேசு அவர்களை நேசித்து தொட்டு, அவர்களுடைய காரியங்களை விசாரித்து நன்மைசெய்கிறவராய் இருந்தார்.

**இயேசுவின் நாமம் இரட்சிக்கும் நாமம்.** அவருடைய நாமத்தில் இரட்சிப்பு உண்டு. நாமம் எப்படி இரட்சிக்கும் என்று நீங்கள் கேட்கலாம். ஒரு நாட்டில் போடப்படும் சட்டம் ஒரு மனிதனை காப்பாற்றுகிறதில்லையா, பிதாவாகிய தேவன் மனிதர்களுக்குள்ளே இரட்சிக்கும் நாமத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்.4:12).

வெறி நாய் கடிக்கு ஊசி கண்டுபிடித்து இருக்கிறார்கள். அந்த ஊசியைப்போட்டால்தான் வெறிநாய் கடிபட்டவனை காப்பாற்றமுடியும். அதைப்போல ஒரு ஆத்துமாவை பாவத்திலிருந்து காப்பாற்ற, அதாவது இரட்சிக்க; இயேசுவின் நாமமே கட்டளையிடப்பட்டிருக்கிறது. வேறொரு நாமத்தை பற்றிக்கூப்பிட்டாலும் அது அந்த ஆத்துமாவை இரட்சிக்காது. வேறொரு நாமம் சொல்லப்படவும் இல்லை கட்டளையிடப்படவும் இல்லை. ஆனால் போலியான அநேக நாமங்கள் தோன்றியிருக்கிறது. அவைகள் வீணானவைகள். அவைகளால் ஒரு ஆத்துமாவையாவது காப்பாற்றமுடியாது. அவைகள் பூமிக்குரியவைகள் வானமும் பூமியும் அழியும்போது அவைகளும் அவைகளை உண்டுபண்ணினவர்களும் அழிந்துபோவார்கள். பவுல்

மனந்திரும்பும்போது அனனியா பவுலை நோக்கி; "இப்பொழுதும் நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான்" (அப்.22:16) உடனே அவன் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டான்.

கர்த்தருடைய நாமம் அவனை இரட்சித்தது. இதோ அப்போஸ்தலனாகிய பவுல் சிறைச்சாலைக்காரனுக்கும் அவன் வீட்டில் இருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப்போதிக்கும்போது அவர்கள் "இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப்.16:33).

இப்படி கர்த்தருடைய நாமத்தில் கீழ்ப்படிகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் என அப்.2:47-ல் படிக்கிறோம். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற தேவ ஜனமே வானத்திலும் பூமியிலும் ஒரே ஒரு நாமமே கட்டளையிடப்பட்டுள்ளது. அந்த நாமம் உயர்வானது, அந்த நாமம் குணமாக்கும் வல்லமையுள்ளது, அந்த நாமம் நம்மை இரட்சிக்க வல்லது. அந்த நாமத்தைப் பற்றிக்கொள்ளுங்கள். அப்பொழுது காப்பாற்றப்படுவீர்கள்.

**கேள்வி**

**இயேசுவின் நாமத்திலே சபையாக கூடிவரவேண்டுமா?**

எந்த பெயரிலும் சபை கூடிவரலாம் என்று அநேகர் நினைக்கின்றனர். அது தவறு. வேதாகமம் நமக்கு அவ்விதமாக போதிக்கவில்லை. இயேசுவின் நாமம் பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய தேவனால் முன்னறிவிக்கப்பட்டது. அவருடைய சித்தத்தின்படியே நாம் செயல்படவேண்டும். தீர்க்கதரிசிகளுடைய நாமத்தினாலும், அப்போஸ்தலருடைய நாமத்தினாலும் சபை அழைக்கப்படுகிறதை சிலர் விரும்புகின்றனர். அப்போஸ்தலர்களோ தீர்க்கதரிசிகளோ நம்முடைய பாவங்களுக்காக மரிக்கவில்லை. இயேசு ஒருவரே நமக்காக மரித்தும் எழுப்பப்பட்டுமிருக்கிறார்.

அவருடைய நாமத்தை பிதாவாகிய தேவன் வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அறிவித்துமிருக்கிறார். ஆண்டவர் இயேசு சொல்லும்போது, "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்.18:20). அவருடைய நாமத்தில் நாம் சபையாக கூடிவரும்போது



நம் மத்தியில் கர்த்தர் இருப்பார். பிதாவாகிய தேவனை கனம்பண்ணுகிறதுபோல இயேசுவையும் நாம் கனம்பண்ணவேண்டும். இயேசுவின் நாமத்தில் சபையாக கூடுங்கள் நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 33. அவருடைய நாமத்திற்காக...

## For His Name's Sake...

**அ**ப்போஸ்தலர்கள் பல பாடுகளை அநுபவித்தனர். முதல் நூற்றாண்டு காலத்தில் பிரதான ஆசாரியன் கடுமையான கட்டளைகளை பிறபித்திருந்தான். என்னவென்றால்; "நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம்பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்த வேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான்" (அப்.5:28). இதைக்கேட்ட அப்போஸ்தலர்கள் அவர்களுக்குப் பயப்படாமல்; பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்; மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது என்று சொல்லி இயேசுவைக்குறித்து பிரசங்கம் பண்ணினார்கள்.

ஆண்டவருடைய சமூகத்தில் அநேக நன்மைகளைப் பெற்ற நாம் இவ்விதமாக இருக்கிறோமா? உலக சட்டங்கள் சிலவேளைகளில் நம்மைக் கட்டுப்படுத்தி விடுகிறது. அவைகளுக்குப் பயந்துபோய் ஆண்டவருடைய சுவிசேஷத்தை அறிவிப்பதில் சற்று பயப்பட ஆரம்பித்துவிடுகிறோம். இங்கே அப்போஸ்தலர்கள் மனுஷருக்கு பயப்படவில்லை, தேவனுக்குக் கீழ்ப்படிந்து எங்குந்திரிந்து சுவிசேஷத்தை பிரசங்கம்பண்ணினார்கள். அவருடைய நாமத்திற்காக என்ன கஷ்டங்கள் வந்தபோதிலும் அதை எதிர்த்து தேவனுடைய வசனத்தை அறிவிப்பதில் கவனமாயிருந்தார்கள். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு சுவிசேஷத்தினிமித்தம் அநேக பாடுகள் வந்தது.

ஒரு முறை "அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி; அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டுபோனார்கள். சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான். அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச்

சீஷராக்கினபின்பு, லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து, சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்'' அப்.14:19-22 முடிய உள்ள வசனங்களில் வாசிக்கிறோம்.

யாராவது நம்மை அடித்துவிட்டால் போதும் எங்கில்லாத கோபம் எல்லாம் வந்துவிடும். அடுத்து என்ன நடக்கும் என்று நமக்கே தெரியாது. ஆனால் இங்கு பவுல் இயேசுவின் நாமத்திற்காக கல்லெறியுண்டு அவன் மரித்துப்போனான் என்று அவனை வெளியே இழுத்துக்கொண்டுபோனார்கள். அவனோ தேவனுடைய பெலத்தினால் பெலன் கொண்டு மற்றஇடங்களுக்குச் சென்று பர்னபாவுடனே சுவிசேஷத்தை அறிவிக்கவும், தான் இவ்வளவு கஷ்டத்தில் இருந்து கொண்டும், சீஷர்களுடைய மனதை திடப்படுத்தவும் செய்ததை நாம் நினைத்துப்பார்க்கும்போது நாமெல்லாம் கர்த்தருக்காக என்ன செய்திருக்கிறோம், எதை சாதித்திருக்கிறோம்? ஒன்றுமேயில்லை. அப்படி இருந்தபோதும் அவர் நம்மை நேசித்து நம்முடைய ஜெபத்தைக் கேட்டு நம்மை ஆசீர்வதித்துவருகிறார். நாமும் அவருக்காக பெரிய காரியங்களைச் செய்வோம்.

மேலும். அப்போஸ்தலர்கள்; ''அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்'' (அப்.5:41,42). ஒரு மனிதன் எதை வேண்டுமானாலும் தாங்கிக் கொள்ளுவான் ஆனால் அவனால் அவமானத்தை மட்டும் தாங்கிக் கொள்ள முடியாது. அப்போஸ்தலர்களோ தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால் அதை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டனர்.

ஆண்டவர் ஊழியத்திற்கு அழைக்கும்போது என்னிமித்தமாக அநேக பாடுகளை அநுபவிப்பீர்கள் என்றும், பச்சைமரமாகிய எனக்கே இப்படியென்றால் பட்டமரமாகிய உங்களுக்கு எப்படியோ என்றும் சொல்லியிருந்தார். ஆகையால் அவமானத்தை அவர்கள் சந்தோஷமாக எண்ணினர். ஒவ்வொருவரும் அவருடைய நாமத்தினிமித்தம் வரக்கூடிய பாடுகளை ஈசியாக எடுத்துக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். ஐயோ இத்தனை பாடுகளா! என்று மலைத்து நிற்போமானால், பிசாசு நம்மிலும் மேலானவனாக இருந்து நம்மை சோர்ந்துபோக செய்துவிடுவான்.



ஒருமுறை பிரதான ஆசாரியனாகிய அனனியா பவுலுக்குச் சமீபமாய் நின்றவர்களை நோக்கி: இவன் வாயில் அடியுங்கள் என்று கட்டளையிட்டான். அதற்கு தேவன் உம்மை அடிப்பார் என்று சொல்லி அமைதலோடு இருந்தான். தேவனுடைய நாமத்தை அறிந்தவர்களே தேவனுடைய சத்தியத்திற்கு எதிராய் இருந்தார்கள். இவர்கள் மத்தியிலேதான் அப்போஸ்தலர்கள் சுத்த சுவிசேஷத்தை முதலாவது அறிவிக்கும்படியாக அனுப்பப்பட்டார்கள். இயேசுவின் நாமத்திற்காக அநேக பாடுகளை அநுபவித்துக்கொண்டிருக்கும் பவுல்: ''முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலைசெய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெபஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள்பேரில் மூர்க்க வெறிகொண்டவனாய் அந்நியபட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்'' என்று சொல்லுகிறான் (அப்.26:9-11).

இப்படியிருந்த பவுல் கர்த்தராகிய இயேசுவினால் சந்திக்கப்பட்டு அந்த மார்க்கத்திற்கு இசைவாய் ஊழியஞ்செய்கிறவனாய் மாற்றப்பட்டான். அநேகரை சிறைச்சாலையில் அடைத்து துன்பப்படுத்திய அவன் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு அவர்களைப் பார்க்கிலும், அதிக துன்பத்தை இயேசுவின் நாமத்திற்காக அநுபவிக்கிறவனாக மாற்றப்பட்டான். எத்தனை ஆச்சரியமான காரியம் என்று பார்த்தீர்களா! யாராவது துன்பத்தை விலைகொடுத்து வாங்குவார்களா, உலகத்தில் இருக்கும்வரை சந்தோஷமாக பிரச்சனை இல்லாத வாழ்க்கை வாழவே விரும்புவார்கள். ஆனால் பவுல் வாழ்க்கை முழுவதும் பாடுகளும் துன்பங்களும் நிறைந்ததாக இருந்தது. உங்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது, அவருடைய நாமத்திற்காக நீங்கள் பாடுகளை அநுபவிக்கிறீர்களா, அல்லது பாடுகள் வந்தவுடன் அவரை மறுதலித்துப்போகின்றீர்களா? பவுலையும் சீலாவையும் பிடித்து அநேக அடிகள் அடித்து சிறைச்சாலையிலே உள்ள தொழுமரத்தில் கட்டிவைத்தார்கள். பவுலும் சீலாவும் அங்கே உட்கார்ந்து அழுதுகொண்டிருக்க வில்லை. தேவனை துதித்துப்பாடினார்கள்.

அப்படியானால் அவர்கள் அந்த பாடுகளை அநுபவிப்பதில் சந்தோஷமடைந்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். அந்நாட்களில் யூதர்கள் ஒரு குற்றவாளியை அடிக்க 39அடிகள் அடித்திருக்கிறார்கள். பவுல் யூதர்களால்

ஒன்று குறைய 40 அடியாக ஐந்து தரம் அடிபட்டேன் என்கிறார். அத்தனை அடிகளையும் வாங்கிக்கொண்டு ஒரு மிஷனெரியாக பணியாற்றியிருக்கிறார் என்றால், அவருடைய நம்பிக்கை எப்படிப்பட்டது, அவருடைய விசுவாசம் எப்படிப்பட்டது என்று பார்த்தீர்களா?

அப்போஸ்தலர்கள் அவருடைய நாமத்துக்காக மரிக்கவும் ஆயத்தமாக இருந்தார்கள். ஆகையினாலே மரணத்தைக்குறித்து அவர்கள் பயப்படவில்லை. பவுல் சொல்லும்போது; ''எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்'' என்கிறார் (1கொரி.4:9).

இந்த அப்போஸ்தலர்களுக்கு மேலாக எந்த அப்போஸ்தலர் களையும் கர்த்தர் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் இவர்களே அனுப்பப் பட்டவர்கள், இவர்களே இயேசுகிறிஸ்துவினால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். இன்று இப்படிப்பட்ட அப்போஸ்தலர்கள் இல்லை. அவர்கள் மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள்போல காணப்பட்டபடியால் அந்தப்படியாகவே அவர்களுக்கு நிகழ்ந்ததாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள்.

சிலரை சிலுவைகளில் தலைகீழாக வைத்து அறைந்து கொன்று போட்டதாகவும், சிலரை பட்டயத்தினால் கொன்று போட்டதாகவும் சொல்லுகிறார்கள். அப்போஸ்தலர்களுடைய முடிவு அப்படியாக முடிந்தது. ஆனால் அவர்கள் உலகமெங்கும் செய்த ஊழியம் இன்றும் பலன் கொடுத்துக்கொண்டிருக்கிறது, ஆகையினாலே நாம் கர்த்தரையும் அவருடைய மெய்யான சபையையும் அவர் கொடுக்கும் இலவசமான இரட்சிப்பையும் பெற்றுக்கொள்கிறோம்.

மேலும், பவுல் கிறிஸ்துவுக்காக... ''என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்'' என்கிறார் (அப்.20:24). இன்றைக்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விருப்பம் இருக்கிறது. ஆனால் பவுல் சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும், கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே பிரயாசப்பட்டார். கணவன் மனைவிக்கு எப்படி பிரியமாய் இருக்கலாம் என்றும் மனைவி கணவனுக்கு எப்படி பிரியமாய் இருக்கலாம் என்று விரும்புகிறார்கள். ஆனால், பவுல் கர்த்தருக்கு எப்படி பிரியமாய் இருக்கலாம் என்று விரும்பினார்.



உங்களுடைய விருப்பமும் இப்படியே இருக்கட்டும்.

அதைப்போல எப்பாப்பிரோதீத்து என்று சொல்லக்கூடிய ஊழியன் ''ஊழியத்திலே உங்கள் குறைவை நிறைவாக்கும்படிக்கு, அவன் தன் பிராணனையும் எண்ணாமல், கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்'' என பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதுகிறார் (பிலி.2:30).

இச்செய்தியை படித்துக்கொண்டிருக்கிற அன்பு தேவ ஜனமே, நீங்கள் அவருடைய நாமத்திற்காக வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? அப்போஸ்தலர்கள் அவருடைய நாமத்திற்காக வாழ்ந்து மரித்திருக்கிறார்கள். நீங்களும் நானும் அவ்விதமாக கர்த்தருடைய நாமத்திற்காக வாழ்வோமானால் அப்போஸ்தலர்களோடு கர்த்தருடைய சமூகத்தில் காணப்படுவோம். அவருடைய நாமத்திற்காக வாழுங்கள்.

**கேள்வி**

**நாம் அவரோடு பாடுகளைச் சகித்தோமானால் அவரோடு ஆளுகைசெய்வோமா?**

ஆம், ''இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில். நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூட பிழைத்துமிருப்போம். அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்'' என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம் 2-ம் அதிகாரம் 11,12 வசனங்களில் வாசிக்கின்றோம்.

இப்பூமியிலே அவருடைய நாமத்திற்காக பாடுகளை சகிக்கும்போது அல்லது பாடுபடும்போது அவரோடேகூட ஆளுகை செய்வோம் என்ற நம்பிக்கையோடு பாடுகளை ஏற்றுக்கொண்டு அவைகளை சந்தோஷமாக எண்ணுங்கள். நாங்கள் உங்களுக்காகவும் உங்களுடைய குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.

## 34. அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம்

## An Evil Heart of Unbelief

இரண்டு வகையான இருதயத்தைக் குறித்து இந்நாளில் தியானிக்கவுள்ளோம். ஒன்று சுத்த இருதயம் மற்றொன்று பொல்லாத இருதயம்.

**1.சுத்த இருதயம் - Pure Heart.** இருதயத்தில் சுத்தமாயிருக்கும்போது அதனுடைய செயல்பாடுகளும் சுத்தமாயிருக்கும். ஆண்டவர் இயேசு

தம்முடைய மலைபிரசங்கத்தில், ''இருயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்'' என்றார் (மத்.5:8).

பாக்கியவான்கள் என்றால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். இருதயத்தில் சுத்தமாய் இருக்கிறவர்கள். இவர்கள் ஆவிக்குரிய கண்களினால் தேவனை தரிசிப்பார்கள். இந்தவிதமாக இருயத்தில் சுத்தமுள்ளவர்கள் யார்? அவர்களை நாம் எப்படி அடையாளம் கண்டுகொள்ளமுடியும்? என்ற கேள்விகள் நமக்குள் எழும்புகிறதல்லவா, தேவனுடைய வசனம் மனிதனுடைய இருதயத்தை நிலத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறது. அதில், ''நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர்களா யிருக்கிறார்கள்'' என்று லூக்.8:15-ல் சொல்லப்படுகிறது. தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துக்கொள்கிறவர்களே சுத்த இருதயமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அந்த வசனம் தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. அது அவர்களை சரிசெய்கிறது. நடக்கவேண்டிய வழியைக் காண்பிக்கிறது.

''பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது'' (யாக்.3;17,18). இதைப் பெற்றுக்கொள்கிறவர்கள் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைகின்றனர். சுத்த இருதயத்தோடு கர்த்தரை ஆராதிக்கின்றனர். அவர்களுடைய செயல்பாடுகளும் சுத்தமானவைகளாகவே இருக்கிறது.

ஆகையால், ''சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும், அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்'' ஏனெனில், ''அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள்'' என்று தீத்.1:15,மற்றும் 16-ம் வசனங்களில் வாசிக்கிறோம்.

நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள்? தேவனை அறிந்திருக்கிறோம் என்று கிரியைகளினால் அவரை மறுதலிக்கிறீர்களா, வானமும் பூமியும் அவருடைய கரத்தின் கிரியைகளை அறிவிக்கிறது. நாமும்



அவரால் உண்டாக்கப்பட்டுள்ளோம். அவர் எண்ணிமுடியாத காரியங்களை செய்கிறார். அவரை நீங்கள் உங்களுடைய சுத்தமான இருதயத்திலிருந்து ஆராதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுடைய ஆராதனையை தேவன் அங்கிகரிப்பார். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; ''அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு'' என்று எழுதுகிறார் (2தீமோ.2:22).

நீங்கள் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே சேர்ந்து தொழுதுகொண்டுவருகின்றீர்களா? ஏதோ ஒரு ஆராதனைக்கு போய் வருகிறேன் என்று சொல்லுகிறீர்களா, அல்லது பக்கத்தில் உள்ள ஒரு சபைக்குப்போகிறேன் என்று சொல்லுகிறீர்களா? நீங்கள் போகக்கூடிய சபையில் சுத்தஇருதயத்தோடு கர்த்தரை தொழுதுகொள்கிறார்களா? ஏனென்றால் அப்படிப்பட்ட தொழுகையை தேவன்தான் அங்கிகரிக்கிறார். அங்கேதான் நீதியையும் விசுவாசத்தையும், அன்பையும் சமாதானத்தையும் நீங்கள் அடையமுடியும். மற்றஇடங்களுக்குச் செல்வீர்களானால் அவர்களுடைய அவிசுவாசம், அவர்களுடைய அசுத்தம் உங்களைப் பற்றிக்கொள்ளும். அவர்கள் இம்மைக்காக கிறிஸ்துவைப்பின்பற்றுகிறவர்கள்.

இவர்களைப் பற்றி யூதா சொல்லும்போது; ''இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும் தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது என்கிறார்''. ஆகையால் ''மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்'' (1தீமோ.5:22). அவனால் தான் நான் தவறான வழியில் சென்று விட்டேன் என்று சொல்லுகிறவர்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

உலகத்தில் 95 சதவிகித மக்கள் மற்றவர்களைப் பார்த்துத்தான் கெட்டுப்போகிறார்கள். நல்லவர்களை பார்க்கக்கூடியவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். ஆகையால் மற்றவர்கள் செய்யும் அக்கிரமங்களுக்கும் பாவத்திற்கும் உட்படாமல், உங்களை முதலாவது சுத்தவானாகக் காத்துக்கொண்டு சுத்த இருதயத்தோடு கர்த்தரை தொழுதுகொள்ளுகிற பரிசுத்தவான்களோடு உங்களையும் இணைத்துக்கொண்டு தேவனை

ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்கள். அப்பொழுது பிதாவாகிய தேவன் உங்களுடைய தொழுகையை ஏற்றுக்கொள்வார். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லை என்று எபிரெய புத்தகத்தில் வாசிக்கிறோம். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.

**2.பொல்லாத இருதயம் Evil Heart.** நல்ல இருதயம் நாளடைவில் பொல்லாத இருதயமாக மாற்றப்படுகிறது. பிறக்கும்போது எல்லோரும் நல்லவர்களாகவே பிறக்கிறார்கள். தீயவர்களாக எவரும் பிறப்பதில்லை. அவரவருடைய சுற்றுப்புறச் சூழல், பிறந்த குடும்பம், சிநேகம் போன்ற சூழ்நிலையின் காரணமாக அவர்களுடைய இருதயம் பொல்லாத இருதயமாக மாற்றப்படுகிறது. ஆகையால் எபிரெயர்களுக்கு எழுதின ஆசான்; “சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்” என்கிறார் (எபி.3:12,13).

பொல்லாங்கன் பொல்லாத இருதயத்தை உங்களில் உருவாக்குவான். ஆகையால் பாவத்தின் வஞ்சனை அதாவது பாவத்தினால் ஒருவனும் ஏமாந்து போய்விடாதபடி ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். ஐயோ, அவன் என்னை மோசம் போக்கிவிட்டான் என்று மோசம்போனதற்கு பின்பு கத்தி கூப்பாடு போடுவார்கள். ஆகையாலே எபிரெய ஆசான், உங்களில் ஒருவனாகிலும் என்ற ஒரு வார்த்தையை எழுதுகிறார். இன்றைக்கு அநேகர் வஞ்சிக்கப்பட்டுப்போய் விடுகிறார்கள்.

அவர்களுடைய இருதயம் பின்மாற்றமடைகிறது. அவிசுவாசம் வளர ஆரம்பிக்கிறது. வீழ்ந்துபோகிறார்கள். ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுகிறவர்களைக்குறித்து நாம் எச்சரிக்கையாயிருந்து, அப்படிப்பட்டவர்களை விட்டு நாம் முதலாவது விலகவேண்டும். அவர்களை எப்படியாவது ஆதாயம் செய்துவிடலாம் என்று நினைக்கலாம் ஆனால் அப்படிப்பட்டவர்கள் உங்களை தங்கள் வழியில் இழுத்துக் கொள்ளாதிருக்கப் பாருங்கள்.

பொல்லாத இருதயமுடையவர்கள் வழியருகே விதைக்கப்பட்ட நிலத்தைப்போன்றவர்கள். “வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்குப் பிசாசானவன் வந்து அவ்வசனத்தை அவர்கள்



இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான்” (லூக்.8:12). வழியருகே விதைக்கப்பட்டவர்கள் எல்லோரும் இப்படியே இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களில் வசனம் தங்குகிறதில்லை. பிசாசு அவ்வசனத்தை எடுத்துப்போட்டான். ஆகையால் பொல்லாத இருதயமே அவர்களுக்குள் நிலைத்திருக்கும். இப்படிப்பட்டவர்கள் “பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர் களாவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்” என்று எச்சரித்து பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதியதை 2தீமோ.3:13-ல் வாசிக்கிறோம்.

ஆகையால் மோசம்போக்குகிறவர்கள் நம்மைச் சுற்றி இருக்கிறார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதபுரட்டுகளை தந்திரமாய் நுழையப்பண்ணுவார்கள். அவர்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. மேலும், எபிரெயருக்கு எழுதும்போது; “இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று சொல்லியிருக்கிறதே, கேட்டவர்களில் கோபமூட்டினவர்கள் யார்? மோசேயினால் எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் அப்படிச் செய்தார்களல்லவா? மேலும், அவர் நாற்பது வருஷமாய் யாரை அரோசித்தார்? பாவஞ்செய்தவர்களையல்லவா? அவர்களுடைய சவங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயிற்றே” என்கிறார் (எபி.3:15-17).

பொல்லாத இருதயமுடையவர்கள் வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள் எனக் காண்கிறோம். ஆகையால் பொல்லாத இருதயமுடைய ஒருவனும் உங்களுக்குள் இராதபடி பார்த்துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்டவர்கள் இருந்தால் அவர்களை விட்டு விலகுங்கள் அல்லது அவர்களைத் தள்ளிப்போடுங்கள். கொரிந்து சபையாருக்கு பவுல் எழுதும்போதுகூட அஞ்ஞானிகளுக்குள்ளும் சொல்லப்படாத காரியத்தை ஒரு சகோதரன் செய்தால்; “அந்த பொல்லாதவனை உங்களை விட்டு தள்ளிப்போடுங்கள்” என்கிறார் (1கொரி.5:13). ஐயோ பாவம் என்று யோசிக்கவேண்டியதில்லை. கொஞ்சம் புளிப்புள்ள மாவு முழுவதையும் உப்பப்பண்ணும். ஆகையால் பொல்லாதவர்களுக்கு எச்சாரிக்கையாயிருந்து சுத்த இருதயத்தோடு கர்த்தரை தொழுது கொள்ளுங்கள்.

**கேள்வி**

**மனிதனுடைய இருதயத்தை நாம் ஆராய முடியமா?**

ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்தையும் அதே இருதயத்தையுடைய மனிதனால் ஆராயமுடியாது. அப்படி ஆராய்ந்து

அவனுடைய இருதயத்தில் உள்ளவற்றை சொல்லிவிடுவானேயானால் எல்லாம் வெளிக்குவந்துவிடும். மறைவான விஷயங்கள் ஒன்றுமிராது. நாடு அழிந்துபோய்விடும். அதை நாம் எண்ணிப்பார்க்கும்போது எத்தனை பயங்கரமாக இருக்கிறது. ஆகையால் எல்லாவற்றையும் மனிதர்களுக்கு வெளிப்படுத்தின தேவன், மனிதனுடைய இருதயத்தில் உள்ளவற்றை ஆராய்ந்து அறிகிற அறிவை தாம் ஒருவரே பெற்றவராயிருக்கிறார்.

ஆகையால், இருதயங்களை உண்டாக்கின கர்த்தர் ஒருவரே ஒவ்வொருவருடைய இருதயங்களையும் ஆராய்ந்து அறிகிறவராயிருக்கிறார் என வேதம் தெளிவாகப்போதிக்கிறது. ‘‘கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கையின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கும், இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்’’ என்கிறார் (எரே.17:10).

ஒருவனுடைய நண்பனாலும் அவனுடைய நண்பனின் இருதயத்தை அறியமுடியாது. ஒரே சரீரமாக ஜீவிக்கிற மனைவியினாலும் தன் கணவனுடைய இருதயத்தை அறியமுடியாது. உண்டாக்கின கர்த்தர் ஒருவரே அவைகளை அறிகிறார். உங்களுடைய இருதயங்களை சுத்த இருதயமாக வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 35. மேன்மை பாராட்டுதல்

## Commend

**த**ங்களைக்குறித்து மேன்மைபாராட்டுகிறவர்களையும், மற்றவர்களைக்குறித்து மேன்மைபாராட்டுகிறவர்களையும், கர்த்தரைக் குறித்து மேன்மைபாராட்டுகிறவர்களையும் நம்முடைய அநுதின ஜீவியத்தில் பார்க்கிறோம்.

**முதலாவது,** தங்களைக்குறித்து மேன்மை பாராட்டுகிறவர்களைப் பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று தியானிக்கலாம். ‘‘தங்களைத்தாங்களே மெச்சிக்கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம்; தங்களைக்கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல’’ என்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதின நிருபத்தில் வாசிக்கிறோம் (2கொ.10:12).

உண்மைதான் இன்றைய நாட்களில் பெருமையானவைகளை



பேசி தங்களைக் குறித்து மேன்மைபாராட்டுகிறவர்களை நாம் காண்கிறோம். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் என்ன பேசுகிறோம் என்ன செய்கிறோம் என்பதை அறியாது பேசுகிறார்கள். மனிதன் மேன்மைபாராட்டுவதற்கு என்ன இருக்கிறது? அவன் நிர்வாணியாய் வந்தான் நிர்வாணியாய் போவான். அவன் பிரயாசப்பட்ட ஒன்றையும் எடுத்துக்கொண்டு போகான். இது எல்லோருக்கும் உள்ள நியதியாக இருக்கிறது. இப்படி இருந்தபோதும் மனிதனுடைய மேன்மைக்கு அளவே இல்லை. பிசாசு பெருமையானவைகளைப் பேசுவான். அவன் ஆண்டவர் இயேசுவிடம், என்னைப் பணிந்துகொண்டால் இவைகள் எல்லாவற்றையும் உமக்குத் தருவேன் என்றான். அவனை கர்த்தர் பார்த்து அப்பாலே போ சாத்தானே என்றார்.

அவனைப்போல அநேகர் தங்களைக் குறித்து மேன்மையாக நினைத்துக்கொண்டு, அது வைத்திருக்கிறேன் இது வைத்திருக்கிறேன் எல்லாம் எனக்கு சொந்தமானது என்று பெருமையடித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த பூமியில் உள்ள ஒரு காரியத்தை மாற்றியமைக்க நமக்கு அதிகாரம் இல்லை. அப்படியிருக்கும்போது நம்மை உயர்த்துவதற்கு என்ன இருக்கிறது? கர்த்தர் யோபைப் பார்த்து ‘‘நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி’’ என்று கேட்டார் (யோபு 38:4). இதையெல்லாம் கேட்ட யோபு இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன் என்றான்.

அன்பானவர்களே, தேவனுக்கு முன்பாக நாம் வாயைப் பொத்திக் கொண்டு நீதிமானாகிய யோபைப்போல அமைதலோடு இருக்கவேண்டும். ஆகையால் பவுல் சொல்வதைப்போல தங்களைக்கொண்டு தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல. மேலும், ‘‘ஒருவனும் தன்னைத்தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன்’’ என்று 1 கொரி.3:18-ம் வசனத்தில் படிக்கிறோம். தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்கிறவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். அதாவது ஏமாற்றப் படுகிறார்கள். நான் ஞானமாய் செய்துவிட்டேன் என்பார்கள், நாளடைவில் தெரியவரும் அவர்களுடைய ஞானம் எப்படிப்பட்டதென்று. எல்லாம் வீணாய்போய்விடும்.

‘‘கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை’’ நீதி.15:33. தன்னைத்தான் மேன்மையாக எண்ணாமல் கர்த்தருக்குப் பயப்படக்கூடிய பயத்தில் வளரும்போது,

கர்த்தருடைய வசனம் நமக்கு ஞானத்தைப் போதிக்கும். அப்பொழுது நடக்கவேண்டிய வழியை கற்றுக்கொள்வோம். நாம் மேன்மையடையவேண்டுமானால் முதலாவது தன்னைத் தான் தாழ்த்தவேண்டும். தன்னைத்தான் தாழ்த்துகிற எவனும் உயர்த்தப்படுவான் என திருமறை நமக்குப்போதிக்கிறது. அநேகருடைய வாழ்க்கையில் தாழ்மை வருவதில்லை.

ஆகையால் அவர்களுடைய மேன்மை அவர்களை வஞ்சிக்கிறது. ''மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன் கையோடே கைகோத்தாலும் அவன் தண்டனைக்குத் தப்பான்'' என நீதி.16:5-ல் படிக்கிறோம். மனமேட்டிமை கர்த்தருக்கு அருவருப்பானது. கர்த்தருக்கு அருவருப்பான ஒன்றை நாம் பிடித்துக்கொண்டிருக்கலாமா? கர்த்தருக்கு பிரியமானதை நாம் செய்யும்போது, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவோம். என்னுடைய பிறவியிலே வந்த பழக்கம் என்று அநேகர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் ஒருவருக்கும் தலை வணங்கமாட்டேன். என்னை யாரும் மதிக்காவிட்டால் அவர்களுடைய தலைவாசலையும் மிதிக்கமாட்டேன் என்று தங்களைக் குறித்து மேன்மையாக பேசிக்கொண்டு நாட்களை கழிக்கிறவர்களைக் காண்கிறோம்.

உன்னதத்தின் தேவகுமாரன் நம்மை மீட்கும்படியாக தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் சிலுவை பரியந்தமும் தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆகையால் பிதாவாகிய தேவன் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார் என காண்கிறோம். இன்று கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருக்கிற நீங்கள். கர்த்தருடைய சமுகத்தில் உங்களை தாழ்த்தி அவரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் மேன்மையாக எண்ணுங்கள் அப்பொழுது உயர்த்தப்படுவீர்கள்.

**இரண்டாவது,** மற்றவர்களைக் குறித்து மேன்மை பாராட்டுகிறவர்களை நாம் பார்க்கிறோம். ஒரு மனிதன் மற்றொரு மனிதனை மேன்மையாக எண்ணுவதற்கு என்ன இருக்கிறது. அவனும் ஒருநாளில் மண்ணுக்கு திரும்புவான், இவனும் ஒருநாளில் மண்ணுக்குத் திரும்புவான். இப்படியிருக்கிற மனிதனை குறித்து மற்றொரு மனிதன் பேசுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் இவ்வுலகத்திலே அப்படிபட்ட மக்கள் அதிகமாக காணப்படுகிறார்கள். முதல் நூற்றாண்டு காலத்தில் கர்த்தருடைய மார்க்கம் வளர்ந்தைப்போல ஒரு சில தவறான கோட்பாடுகளும் தலைதூக்க முயற்சித்தன. ''தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப்



பாராட்டினான்; ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி, அவமாய்ப்போனார்கள்'' (அப்.5:36).

இந்த நானூறுபேர் அவனை தூக்கிக்கொண்டு ஆடினார்கள். முடிவில் என்னவானது? அவனும் அவனைச் சேர்ந்தவர்களும் மடிந்துபோனார்கள், பின்பு சிதறி அவமாய்ப்போனார்கள் என்று காண்கிறோம். இப்படி மனிதனை தூக்கிக்கொண்டு செல்லுகிறவர்கள் எல்லோரும் ஒரு நாளில் அவமாய்ப்போவார்கள். இன்றைய நாட்களில் பணம் இருக்கிறவர்களிடம் அநேகர் சென்று ஒட்டிக்கொண்டு அவர்களுக்கு ஏற்றார்போல பேசி அவர்களை உயர்த்திக்கொண்டும், மேன்மையாக எண்ணிக்கொண்டும் இருக்கின்றனர். அவர்களிடம் பணமும் பலமும் குறைந்தவுடன் அவர்களை பின்பற்றுவதை விட்டுவிட்டு வேறே நபரிடம் ஒட்டிக்கொள்வார்கள். இப்படியே பணம் எங்கே இருக்கிறதோ அங்கே இருந்து கொண்டு அவர்களை மேன்மையாக எண்ணுவார்கள்.

இந்தவிதமாக முதல் நூற்றாண்டு காலத்தில் தெயுதாஸ் உருவாக்கின வழி அவனோடு ஒன்றுமில்லாமற்போயிற்று. அவனைத் தொடர்ந்து யூதாஸ் என்பவன் எழும்பினான். ''தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்துபோனான் அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள்'' என அப்.5:37-ல் படிக்கிறோம். இப்படியே இன்றும் அநேக மனிதர்களை பினபற்றுகிற மார்க்கங்கள் தோன்றுகிறது. அவர்ளுக்குப் பின்பு அவைகள் அழிந்துபோகின்றன. ஆனால் ஆண்டவர் உருவாக்கிய ஜீவனுள்ள மார்க்கம் இன்றும் நிலைத்திருக்கிறது என காண்கிறோம்.

''ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான், அப்பொழுது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாத படியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான், அவன் புழுப்புழுத்து இறந்தான்'' (அப்.12:21-23). தேவனுக்குச் சமமாக ஏரோது ஜனங்களாலே உயர்த்தப்பட்டான். இதை ஏற்றுக்கொண்ட ஏரோது சிலநொடிகளில் தேவதூதனால் அடிக்கப்பட்டான் எனக் காண்கிறோம்.

மகிமையானவரை உயர்த்தாமல் தன்னை உயர்வாக ஜனங்கள் எண்ணுவதை ஏற்றுக்கொண்டபடியால் புழுப்புழுத்து இறந்தான். நீங்கள் மற்றவர்களை உயர்வாக அல்லது மேன்மையாக எண்ணிக்

கொண்டிருக்கிறீர்களா? உங்களுடைய எண்ணத்தை மாற்றுங்கள். ‘‘ஒருவனும் மனுஷரைக்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பானாக; எல்லாம் உங்களுடையதே’’ என்று பவுல் குறிப்பிடுகிறார் (1கொரி.3:21).

**மூன்றாவது, கர்த்தரைக்குறித்து மேன்மை பாராட்டுகிறவர்கள்.** அப்போஸ்தலர்கள் கர்த்தரையே மேன்மையாக எண்ணினார்கள். பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்கு போகும் வழியில் ஒரு சப்பாணியின் கைகளைபிடித்துத் தூக்கிவிட்டார்கள். அவன் குதித்தெழுந்து நடந்து அவர்களோடே தேவாலயத்திற்குச் சென்றான். இதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். ‘‘பேதுரு அதைக் கண்டு ஜனங்களை நோக்கி; இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன? என்று கேட்டார்கள்.

மேலும் அவர்களைப் பார்த்து ‘‘அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக, இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது’’ என்றார்கள் அப்.3:12,16 வசனங்கள். இங்கே அப்போஸ்தலர்கள் தங்களை உயர்த்தவில்லை. அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது என்றார்கள். கர்த்தருக்கு மகிமையை செலுத்தினார்கள். இவர் ஜெபித்ததால் இவன் சுகமானான் அவர் ஜெபித்ததால் அவன் சுகமானான் என்று சொல்ல கேள்விப்படுகிறோம். ஆனால் அப்போஸ்தலர்கள் தங்களை அல்ல கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

அதைப்போல பவுலுக்கும் பர்னபாவுக்கும் பூமாலைகளையும் எருதுகளையும் பலியிடும்படி பூஜாசாரி கொண்டு வருகையில் அவர்கள் கூட்டத்திற்குள்ளே ஓடி, தங்களுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு ‘‘மனுஷரே. ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்’’ என்றார்கள் (அப்.14:15). அவர்கள் மனுஷரால் வரும் மகிமையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால் ‘‘மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்’’ என்ற 2கொரி.10:17-ன்படி கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டுங்கள்.



**கேள்வி**

**நமக்குள் எழும்பும் மேன்மைபாராட்டலை நம்மை விட்டு எடுத்துப்போட முடியுமா?**

நாம் நினைத்தால் முடியும். பவுல் சொல்லுகிறார். ‘‘நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்’’ என்கிறார் (2கொரி.10:5). அதைப்போல நீங்களும் தேவனுக்கு விரோதமாக உங்களில் எழும்புகிற மேட்டிமையான எண்ணத்தை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய சிறைப்படுத்த வேண்டும். செய்வீர்களா? உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 36. தேவனுடைய சந்ததி

## Offspring of God

பரிசுத்த சந்ததியைப் பற்றி வேதாகமம் பேசுகிறது. அது எப்படிப்பட்டது? எங்கிருந்து வந்தது? அது யாரைப்பற்றியது? போன்ற கேள்விகளை எழுப்புவோமானால். அதற்கான பதிலை வேதாகமத்தின் துணைகொண்டு அறியலாம்.

**முதலாவது அந்த சந்ததி எப்படிப்பட்டது என்று நாம் பார்க்கும்போது,** ‘‘தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்’’ என திருமறை அதாவது பரிசுத்த வேதாகமம் போதிக்கிறது (ஆதி.1:27). இந்த வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவன் எப்படியிருக்கிறாரோ அந்த சாயலாகவே மனுஷனை சிருஷ்டித்தார் என காண்கிறோம். அவருக்கு ஒரு உருவத்தை நாம் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. ஏனெனில் தேவன் ஆவியாயிருக்கிறார் என வேதத்தில் படிக்கிறோம். அவர் எப்படியிருக்கிறாரோ அப்படியே மனுஷனை தமது சாயலின்படி சிருஷ்டித்தார். இங்கே மனிதர்கள் பலர் பலவிதமாக நினைக்கின்றனர். மனிதன் குரங்கிலிருந்து வந்தான் அல்லது வேறொரு வகையில் வந்தான் என்று சொல்லிக்கொண்டே போகின்றனர். பலநூற்றாண்டுகளாக மனிதன் வாழ்ந்துகொண்டே இருக்கிறான் என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். ஒவ்வொரு ஜந்துக்களும் அதனதனுடைய இனத்தை ஒருபுறம் பெருக்கிக்கொண்டே போதுகிறது இன்னொரு புறம் அழிந்துகொண்டே போகிறது.

அவ்வாறே மனிதனுடைய சந்ததியும் பெருகிக்கொண்டே போகிறது

ஒருபுறம் மனிதனுக்கு அழிவும் வந்துகொண்டே இருக்கிறது. ‘‘தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டுமிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று கண்டார்’’ என வேதம் போதிக்கிறது (ஆதி.1:25). பூமியிலே தேவனால் உண்டாக்கப்பட்ட எல்லாமே நலமான நோக்கத்தோடே உண்டாக்கப்பட்டுள்ளது. பூமியிலே வேண்டாதவைகள் என்று ஒன்றுமில்லை. ஏனெனில் அது நல்லது என்று தேவன் கண்டார் எனக் காண்கிறோம்.

பாருங்கள் எல்லாமே அதனதன் வேலையை செய்கிறது. பறவைகளைப் பாருங்கள் காலை எழுந்தவுடன் கர்த்தரைத் துதிக்கிறது. தேவன் என்ன நோக்கத்திற்காக அவைகளை சிருஷ்டித்தாரோ அந்த வேலையை தவறாமல் செய்கிறது. இன்றைக்கு மரங்கள் காடுகளில் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு மூல காரணம் பறவைகளுடைய எச்சங்கள் மூலமாக விதைகள் விழுந்து மரங்களாக வளர்ந்திருக்கின்றன இதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் தேவனால் அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்ட மனுஷன் மட்டும் தேவசித்தத்தை நிறைவேற்றாமல் வாழ்ந்துகொண்டு இருக்கிறான். ஆகையால் ‘‘தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது’’ (ஆதி.6:6).

நாம் சிலவேளைகளில் நம்முடைய பிரச்சனைகள் பெரிது என்று எண்ணுகிறோம். ஒருநாளாவது தேவனுடைய சித்தம் செய்யும்படியாக நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறோமா? என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். முதலாவது உண்டாக்கப்பட்ட ஆதாம் பாவம் செய்து தேவசமுகத்தைவிட்டு அனுப்பப்பட்டான். அவனுடைய பாவத்தின் விளைவால் பாவம் செய்யாதவர்களையும் பாவம் ஆண்டுகொண்டது. இப்படி பாவத்திற்கு அடிமைப்பட்ட மனுஷனை மீட்கும்படியாக பரிசுத்த சந்ததியாக உருவாக்கும்படி இயேசுவை தேவன் இவ்வுலகிற்கு அனுப்பினார். பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்.

‘‘ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்’’ என்று பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறதை 1 கொரிந்தியர் 15:22-ல் படிக்கிறோம். மேலும் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின எனக் காண்கிறோம். நீங்கள் புதுசிருஷ்டியாயிருக்க பாவத்துக்குச் செத்து நீதிக்குப்பிழைக்கும்படி உங்களை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுங்கள்.



**இரண்டாவது தேவனுடைய சந்ததி எங்கிருந்து வந்தது என்ற கேள்வி எல்லோருக்கும் ஏற்படுகிறது.** முதன் முதலில் ஏதேன் தோட்டத்தில் மனுஷனை சிருஷ்டித்து அவன் அதை பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் என படிக்கிறோம். அங்கே தான் முதல் சந்ததி உருவானது. ஆனபடியால் பவுல் சொல்கிறார் ‘‘நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது’’ என்கிறார் (அப்.17:29).

இன்றைய மானிட வர்க்கம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனை மறந்து அவருக்கு ஒப்பாக வெள்ளியினாலும் பொன்னினாலும் உருவங்களை செய்து இதுதான் நம்மை உண்டாக்கின கடவுள் என்று மனுஷனை வழி வழியாக நம்ப செய்து வருகிறது. இதை அநேகர் சிந்திக்காமல் அவைகளை வழிபட்டுக்கொண்டு அதற்காக பண்டிகைகளை ஏற்படுத்திக்கொண்டு ஆடிப்பாடி மகிழ்ந்து கொண்டாடு கிறார்கள். இதை தேவன் எதிர்பார்க்கிறாரா? என்ற கேள்வி அவர்களுக்குள்ளாக எழும்புகிறதில்லை.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே! ‘‘நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?’’ (கலா.4:9). பெலனற்ற வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உங்களுடைய ஆத்துமாக்களை கெடுத்துக்கொள்ளாதிருங்கள்.

நோவா காலத்தில் என்ன நடந்ததோ அதே காரியம் இன்றும் நடந்துகொண்டிருக்கிறது. மோசேயினுடைய காலத்தில் மோசே கர்த்தரை சந்திக்கவும், கட்டளைகளைப் பெறவும், மலைக்கு கடந்து சென்றிருந்தபோது ஆரோன் ஜனங்களை வழிநடத்தினான். அப்பொழுது ஜனங்கள் மோசே வர தாமதித்தபோது; எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும் என்று சொல்லி ஆரோனை துரிதப்படுத்தினார்கள். அவனோ ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றான். அவர்கள் அதைப்பணிந்துகொண்டார்கள். வனாந்தரத்தில் தங்களை வழிநடத்திக்கொண்டு வந்த உன்னதமான தேவனை மறந்தார்கள். இப்படி அநேக முற்பிதாக்கள் ஜீவனுள்ள தேவனை மறந்து தங்களுக்கு கேடு உண்டாக தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள்.

அப்படியே ராகேலுடைய தகப்பன் லாபான் தன் தெய்வங்களை யாக்கோபு திருடிக்கொண்டு சென்றுவிட்டான் என்று அவனைபின் தொடர்ந்தான். அப்பொழுது "ராகேல் அந்தச் சுரூபங்களை எடுத்து, ஒட்டகச் சேணத்தின்கீழ்வைத்து, அதின்மேல் உட்கார்ந்திருந்தாள். லாபான் கூடாரம் எங்கும் தடவிப்பார்த்தும், அவைகளைக் கண்டுபிடிக்கவில்லை" (ஆதி.31:34). பின்பு நடந்தது என்ன, அந்த சுருபங்களை யாக்கோபு வாங்கி ஒரு கர்வாலி மரத்தின்கீழே புதைத்துப்போட்டான். அவைகள் வீணானவைகள் என்பதை யாக்கோபு நன்கு அறிந்திருந்தான் ஆனால் அவனுடைய மனைவியோ அவைகள் வீணானவைகள் என்பதை அம்மட்டும் அறியாதிருந்தாள். அன்பான சகோதரனே, சகோதரியே நீ இந்த ராகேலைப்போல வாழ்ந்து கொண்டிருக்கின்றாயா? உன் தகப்பனுடைய விக்கிரகத்தை விட்டுவிடாதிருக்கிறாயா? அவைகள் உன்னை இரட்சிப்பதில்லை, உன் குடும்பத்தையும் இரட்சிப்பதில்லை. அவைகளால் ஒன்றும் செய்ய முடியாது. அவைகள் உண்டாக்கப்பட்டபடியே இருக்கும்.

நம்முடைய பூர்வீகம் நம்மை காப்பதில்லை. ஆகையால் யோவான்ஸ்நானன் சொல்லும்போது; "மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்.3:9,10). நாம் மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுக்கவேண்டுமே தவிர நான் இன்னாரின் குமாரன் என்று சொல்லிக்கொள்வதிலோ அல்லது இந்த பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதிலோ பயன் ஒன்றுமில்லை. நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என திருமறை நமக்குப்போதிக்கிறது.

**மூன்றாவதாக, அந்த சந்ததி யாரைப்பற்றியது என பார்க்கும்போது;** வேதம் இவ்விதமாக போதிக்கிறது. "ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்குமாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படிவருகிறது" (ரோம.4:16). ஆபிரகாமுடைய விசுவாசத்தை பெற்றுக்கொள்கிற ஒவ்வொருவரும் இந்தச் சந்ததியில் அங்கமாகின்றனர். மேலும், "மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள்



தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்" என காண்கிறோம் (ரோம.9:8). இதினாலே மாம்சத்தின்படி யூதனானாலும் அவன் மேன்மைபாராட்ட இடமில்லை என அறிகிறோம்.

"அல்லாமலும் ஏசாயா முன்னே சொன்னபடி; சேனைகளின் கர்த்தர் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்காதிருந்தாரானால் நாம் சோதோமைப் போலாகி கொமோராவுக்கு ஒத்திருப்போம்" (ரோம.9:29). அந்த சந்ததி விசுவாசத்தின் சந்ததி என காண்கிறோம். ஆகையினாலே, நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், **உன் சந்ததிக்குள்** பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் ஆபிரகாமைப்பார்த்துச் சொன்னார். "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல் உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்த சந்ததி கிறிஸ்துவே" என பவுல் நமக்குத் தெளிவுபடுத்துகிறார் (கலா.3:16).

நீங்கள் அந்த சந்ததியை சார்ந்தவர்களாயிருக்கிறீர்களா? "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1பேது.2:4,5). இந்தவிதமான நம்பிக்கையில் வளர்ந்துபெருகுங்கள்.

**கேள்வி**

**கிறிஸ்தவம் என்பது தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியா?**

ஆம். தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததிதான். இது குறித்து பேதுரு தமது நிருபத்தில் எழுதியிருக்கிறார். "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும் இருக்கிறீர்கள்" என்கிறார் (1பேது.2:9).

நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியில் உங்களை அங்கமாக்கிக்கொள்ள இன்றே தீர்மானம் செய்யுங்கள். மனிதன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை

நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என திருமறை கேள்வி எழுப்புகிறது. நீங்கள் உங்களுடைய ஆத்துமாக்களை நல்வழிபடுத்த விசுவாச சந்ததியில் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 37. எங்களுடைய போராயுதங்கள்

## The Weapons of Our Warfare

**இ**ன்றைக்கு ஒரு மனிதனுடைய போராயுதமும், ஒரு நாட்டினுடைய போராயுதமும் என்னவாயிருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஒரு கிறிஸ்தவனின் போராயுதம் என்னவாயிருக்கிறது என்பதைப் பற்றி பரிசுத்த வேதாகமத்தில் காண்கிறோம். ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கற்றுக்கொடுத்த போராயுதம் எப்படிப்பட்டதாயிருந்தது என்பதைக்குறித்து இச்செய்தியில் நாம் தியானிக்கவுள்ளோம். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது" என்கிறார் (2கொரி.10:4).

உங்களுடைய போராயுதங்கள் எப்படிப்பட்டவைகளாயிருக்கிறது? அவைகள் மாம்சத்துக்கேற்றவைகளாயிருக்கிறதா? "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" என திருமறை நமக்குப்போதிக்கிறது (ரோம.8:13). மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் கடைசியில் தோல்வியைத்தான் சந்திக்கிறார்கள். "கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" என காண்கிறோம் (ரோம.8:1).

பாவசரீரத்தில் பாவம் ஆளஇடமளிக்காதிருங்கள். உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தில் கிறிஸ்து ஆளும்படி இடம்கொடுங்கள். அப்பொழுது ஆவிக்குரியவர்களாக மாற்றப்படுவீர்கள். ஏனெனில் ஆவின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" (ரோம.8:9).

இன்றைக்கு பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டோம் என்று தங்களை தாங்களே ஏமாற்றிக்கொள்ளக்கூடிய கூட்டம் ஒருபுறம் இருக்கிறது. இங்கே வசனத்தில், தேவனுடைய ஆவி உங்களில், வாசமாயிருந்தால் நீங்கள்



மாம்சத்துக்குட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள் என்று தெளிவாகப் படிக்கிறோம். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால் தேவனுடைய ஆவியானவர் உங்களில் வாசமாயிருக்கும்படி கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். ஆவியை அடக்காதவன் மதில் இடிந்த பட்டணத்தைப்போல இருப்பான். உங்களில் இருக்கிற ஆவியானவர் சந்தோஷப்படும்படியாக பரிசுத்த வாழ்க்கையை தேர்ந்தெடுங்கள். அப்பொழுது கிறிஸ்து உங்களில் இருப்பார். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருக்கமுடியும்.

**கிறிஸ்தவர்களுடைய போராயுதங்கள் பிசாசோடு எதிர்த்துநிற்கக்கூடியதாயிருக்கிறது;** "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்... சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணபத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்" (எபே.6:11-18).

ஆண்டவர் இயேசு இவ்வுலகிற்கு கடந்துவந்தபோது சத்திய சொரூபியாக கடந்துவந்தார். அவருடைய போதனைகள் அன்பு நிறைந்ததாகவும், நோயாளிக்கு ஏற்றமருந்தாகவும் இருந்தது. ஆகையினாலே அவருடைய சீஷர்களில் ஒருவனாகிய அப்.பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; ஒரு யுத்தவீரன் அணிந்துகொள்ளுகிற உடைக்கு ஒப்பிட்டு சொல்லுகிறார்; சத்தியத்தை உடுப்பாகவும், நீதியை மார்க்கவசமாகவும், சுவிசேஷத்தை பாதரட்சையாகவும், விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்தவர்களாகவும், இரட்சிப்பை தலைச்சீராவாகவும், வேதாகமத்தை பட்டயமாகவும், எப்பொழுதும் ஜெபத்தோடும் மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்திருங்கள் என்று எழுதுகிறார்.

இப்படிப்பட்ட ஆயுதத்தை ஒவ்வொரு கிறிஸ்தவ சகோதரனும்

சகோதரியும் தரித்தவர்களாயிருக்கும்போது பிசாசு கொண்டுவரும் அனைத்தையும் நாம் வெற்றிகொள்ளமுடியும். கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். அப்பொழுது பவுல் சொல்வதைப்போல; ‘‘அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கும்’’. உங்களுடைய மாம்சத்தின் முயற்சியினால் இவைகளை மேற்கொள்ளமுடியாது. தேவபெலத்தோடு போராடுங்கள். இஸ்ரவேலர்கள் எரிகோவை விசுவாசத்தினாலே சுற்றி வந்து மேற்கொண்டார்கள் ‘‘விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது’’ என எபிரெய ஆசான் எழுதுகிறார் (எபி.11:30).

ஏழுநாளும் எதற்கு சுற்றிவரவேண்டும் ஒருமுறை சுற்றிவந்தால் போதாதா? என்று பெலவீனமானவர்கள் நினைக்கக்கூடும். ஆனால் அவர்கள் கர்த்தர் சொன்னபடி ஆறுநாளும் ஒவ்வொருமுறை சுற்றிவந்து, ஏழாம் நாளில் ஏழுமுறை சுற்றிவந்து எக்காளங்களை ஊதினார்கள். அப்பொழுது அலங்கம் இடிந்துவிழுந்தது. அவர்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாயிருந்தது என்று பார்த்தீர்களா? அவர்கள் தங்களுடைய பெலத்தோடு போராடியிருப்பார் களேயானால் எரிகோவை அவர்களால் ஜெயித்திருக்கமுடியாது. கர்த்தருடைய ஆலோசனையின்படி அதை மேற்கொண்டார்கள். அந்த விதமான நம்பிக்கையோடும், தேவபெலத்தோடும் போராடும்போது வெற்றி கொள்ளுவோம்.

ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு எவ்விதமாக இவ்வுலகத்திலே போராடவேண்டும் என்பதைக் குறித்துக் கற்றுக்கொடுத்தார்? ஒரு முறை இயேசுவின் மீது கைபோடும்போது பேதுரு பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான். இதைப் பார்த்த ஆண்டவர் இயேசு ‘‘அவனை நோக்கி: உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்துபோவார்கள்’’ என்றார் (மத்.26:52).

இந்த இடத்தில் மற்ற தலைவர்களை வைத்துப்பாருங்கள். அவர்களாக இருந்தால் என்ன சொல்லியிருப்பார்கள். ஆனால் ஆண்டவர் இயேசு அவ்விதமாக அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவில்லை. பேதுருவின் துரிதமான முடிவை அவர் பாராட்டாமல் உன் பட்டயத்தை அதின் உறையிலே போடு என்று சொல்லி காது அறுபட்டவனை கர்த்தர் தொட்டு சுகமாக்கினார். அங்கே இருந்த அனைவரும் அவரை வியப்புடன் பார்த்திருக்கக்கூடும்.

ஆண்டவர் அவ்வப்போது உவமைகளினாலே அவர்களோடு



பேசிவந்தார். குறிப்பாக தம்முடைய ஊழியநாட்களில் தம்மோடு இருந்த சீஷர்களுக்கு செல்லக்கூடிய எல்லா இடங்களிலும் கற்றுக்கொடுத்தார். ‘‘கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு’’ என்ற போதனையைக் கொடுத்தார் (மத்.5:38,39). பூர்வத்தில் பதிலுக்கு பதில் செய்யப்பட்டது. ஆனால் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு காலத்தில் அவர் புதிதும் ஜீவனுமான பிரமாணத்தை நமக்குக் கொடுத்துள்ளார் என்பதை நாம் ஒவ்வொருவரும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

தீமையோடு எதிர்த்து நிற்காமல் நாம் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியால் நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கக் கற்றுக்கொள்ளுவோம். மேலும் சொல்லுகிறார்; ‘‘உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர் களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள் இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்’’ என்றார் (மத்.5:44,45). நீங்கள் பரலோக பிதாவின் பிள்ளைகளாயிருப்பீர் களானால் நன்மை செய்வதில் சோர்ந்துபோகாதிருங்கள். ஏற்ற காலத்தில் அறுவடைசெய்வீர்கள்.

இந்தவிதமான போதனைகளைக் கற்று தேர்ந்துவந்த யாக்கோபும் யோவானும் ஒரு முறை சமாரியர் அவரை ஏற்றுக்கொள்ளாத சமயத்தில் ‘‘ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். அவர் திரும்பிப்பார்த்து; நீங்கள் இன்ன ஆவியுள்ளவர் களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்’’ (லூக்.9:54-56).

ஆண்டவரோடு உண்டு உறங்கி வந்த சீஷர்களே சில வேளைகளில் தேவனுடைய சித்தத்தை அறியாமல் அவசரப்பட்டு சில முடிவுகளை எடுக்கும்போது ஆண்டவர் அவர்களுடைய தவறான முடிவை தம்முடைய வல்லமையுள்ள போதனைகள் மூலம் அவர்களை சரியான

பாதையில் நடத்தி, அதாவது தேவ மனுஷனுடைய போராயுதங்கள் எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும் என்பதை அவ்வப்போது உணர்த்துகிறதை நாம் படிக்கிறோம். நாமும் சிலவேளைகளில் கோபப்பட்டு இவ்விதமாக சிலரை சபிக்கிறோம் அல்லது அவர்களை துன்பப்படுத்துகிறோம் அல்லவா! அன்பு வாசகரே உங்களுடைய ஆயுதங்கள் தேவ சித்தத்திற்கு ஏற்றதாக இருக்கட்டும்.

**கேள்வி**

**நமக்கு விரோதமாக எழும்புகிற தவறான சிந்தனைகளை மேற்கொள்வது எப்படி?**

இதற்கு பவுலின் ஒரு ஆலோசனை என்னவென்றால்; ''நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்'' என்கிறார் (2கொரி.10:5). தேவனை அறிகிற அறிவுக்கு நாம் திரும்புவோமேயானால் அவைகளை மேற்கொள்ளலாம். தவறான சிந்தையிலும், தவறான உறவு முறைகளையும், தவறான நன்பர்களையும் சதா நாடுவோமானால் நிச்சயம் தவறான எண்ணத்திற்கு தள்ளப்படுவோம். நம்முடைய எண்ணங்களும் சிந்தனைகளும் தேவனுக்கு ஏற்றவைகளாக இருக்கிறதா என்று ஒவ்வொருநாளும் நம்மைக்குறித்தே நாம் ஆராய்ந்து நிதானிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஒருவேளை தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாக நம்மிலே எண்ணங்கள் தோன்றுமானால் அவைகளை கிறிஸ்துவுக்கு கீழாக்கிப்போட ஆயத்தமாயிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக ஞாயிறு தொழுகையானது மிக முக்கியமானது அதை ஒருவன் தவிர்த்துவிட்டு, வா ஒரு இடத்திற்கு போகலாம் என்று சொல்லுவானேயானால் அப்படிப்பட்டவனுடைய ஆலோசனையை தள்ளிவிட்டு, நாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து சபைகூடிவருதலை விட்டுவிடாதிருக்க வேண்டும். இப்படியே நமக்கு விரோதமாக எழும்புகிற தவறான சிந்தனைகளை மேற்கொள்ளமுடியும். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"என் கட்டளைகளையும் என் போதகத்தையும்**
**உன் கண்மணியைப்போல் காத்துக்கொள்,**
**அப்பொழுது பிழைப்பாய்" நீதி. 7:2**



# 38. உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்

## Examine Yourselves

**ஒ**ரு மனிதனுடைய வாழ்வில் தற்சோதனை அவசியம். **நம்மை நாமே முதலாவது சோதித்து அறியவேண்டும்.** எந்த ஒரு பயிற்சிக்கும் தற்சோதனை செய்துகொள்கிறோம். அப்போதுதான் தேர்வில் வெற்றிபெறமுடியும். தற்சோதனை செய்யாமல் தேர்வில் வெற்றியடைவது என்பது கூடாதகாரியம். ஆகையால் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும் கடிதத்தில் ''நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்'' என்று எழுதுகிறார் (2கொரி.13:5).

ஒரு மனிதனுடைய விசுவாச வாழ்க்கை அவனை இரட்சிப்புக்கு நேரே வழிநடத்துகிறது. ஆகையால் ஒவ்வொருவருக்கும் விசுவாசம் என்பது அவசியம். இந்த விசுவாசத்தை நாம் கிரியைகளின் மூலமாக காண்பிக்க முடியும். கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது. ''ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது'' எனக் காண்கிறோம் (கலா.3:6). காணாதவைகளை நம்புவதே விசுவாசம். இந்த விசுவாசம் ஆபிரகாமிடம் இருந்தது. அது நமக்குள்ளும் இருக்கும்போது நாமும் ஆபிரகாமின் பிள்ளைகளாக இருப்போம்.

நம்முடைய முற்பிதாக்கள் ''விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்'' என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி.11:33,34). இவர்கள் எல்லோரும் விசுவாசத்தினாலே எல்லாவற்றையும் முறியடித்தார்கள்.

இன்றைக்கு நமக்குள் அந்தவிதமான விசுவாசம் இருக்குமேயானால் நாமும் ராஜ்யங்களை ஜெயிக்கமுடியும். மிகவும் சாதாரண விஷயங்களை நம்மால் மேற்கொள்ளமுடியாவிட்டால் பின்பு எப்படி நம் முற்பிதாக்களைப்போல அக்கினியின் உக்கிரத்தை அவிக்கப்போகிறோம்.

இச்செய்தியை படித்துக்கொண்டிருக்கிற அன்பு நண்பரே! உன்னை நீயே சோதித்துப்பார். பெரும்பாடுள்ள ஸ்திரீயைப் பற்றி படித்திருப்பீர்கள். அவள்

தன் உள்ளத்தின் ஆழத்தில் ஆண்டவர் இயேசுவை விசுவாசித்தான். எப்படியென்றால் அவரால் கூடாதது ஒன்றுமில்லை அவருடைய வஸ்தீரத்தின் ஓரத்தையாகிலும், தான் எப்படியாவது தொட்டு இந்த பெரும்பாடிலிருந்து விடுதலையாகவேண்டும் என்ற எண்ணம் அவளுக்குள் இருந்தது. அவ்வளவு திரளான கூட்டத்தின் மத்தியில் இருந்த இயேசுவை தொட்டு பரிபூரண சுகமானாள். ஆகையால் ஆண்டவர் இயேசு அவளைப் பார்த்து; ‘‘மகளே, திடன்கொள் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது; சமாதானத்தோடே போ என்றார்’’ (லூக்.8:48). அவளுடைய விசுவாசம் அவளுக்கு சுகத்தைக் கொடுத்தது. உங்களுக்குள்ளும் அந்தவிதமான நம்பிக்கை இருக்குமேயானால் நீங்களும் குணமாக்கப்படுவீர்கள். உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதென்று முதலாவது சோதித்து அறியுங்கள்.

**இரண்டாவது, ‘‘கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்துப்பாருங்கள்’’ (எபே.5:10).** நாம் யாருக்குப் பிரியமாய் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? நமக்காகவே வாழாமல் கர்த்தருக்குப் பிரியமானது எது என்பதை வேதாகமத்தின் துணைகொண்டு அறிந்து செயல்படுவோமானால் நாம் அதிகமாக ஆசீர்வதிக்கப்படுவோம். பொதுவாக ‘‘விவாகம்பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்... அதுபோல, விவாகம்பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்’’ என்று பவுல் குறிப்பிடுகிறார் (1கொரி.7:33,34).

இந்தவிதமான கவலை உலகத்தில் உள்ள எல்லா குடும்பங்களிலும் இருக்கிறது. இருவரும் சேர்ந்து கர்த்தருக்கு எப்படிப்பிரியமாயிருக்கலாம் என்ற முடிவுக்கு வரவேண்டும். அப்பொழுது தான் அக்குடும்பங்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ந்துபெருக முடியும். கர்த்தருக்குப் பிரியமானதையும் செய்யமுடியும். நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள். நாம் நம்முடையவர்கள் அல்ல என்பதை முதலாவது நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். ‘‘கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்’’ என்கிறார் பவுல் (1கொரி.6:20).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்டுக் கொள்ளப்பட்டவர்களாக இருக்கிறோம். பிதாவாகிய தேவன் இருளின் அதிகாரத்தினின்று நம்மை மீட்டு தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கப்பண்ணியிருக்கிறார். ஆகையால் தேவனுக்குச் சொந்தமான இந்த சரீரத்தினாலும் ஆவியினாலும் நாம் தேவனை



மகிமைப்படுத்தவேண்டும். இது கர்த்தருக்குப்பிரியமானது. தேவன் மனிதனுடைய கைகளில் பணிவிடைகளை ஏற்றுக்கொள்ளார் என்பதை அறிவீர்களா?

ஆனால் மனிதனுடைய எண்ணமெல்லாம் அவருக்காக ஏதாவது ஒன்றைசெய்யவேண்டும். கைநிறைய காணிக்கை போடவேண்டும். அல்லது விலையேறப்பெற்ற ஒரு கட்டிடத்தை அவருக்குக் கட்டவேண்டுமென்பதே. அன்பு வாசகரே, அந்த இடத்தில் தேவன் வந்து வாசம் செய்வாரா? அவர் உங்கள் உள்ளத்தில் வந்து வாசம் செய்யவிரும்புகிறார். நீங்களே தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் செய்கிறதில்லை. உங்களுடையதையல்ல உங்களையே முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள்.

**நம்மை நாமே சோதித்து அறியவேண்டிய பகுதியில் மற்றொன்று; கர்த்தருடைய பந்தி:** பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதிய நிருபத்தில் இதை தெரியப்படுத்துகிறார். ‘‘எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்’’ என்கிறார் (1கொரி.11:28). நாம் எதற்காக கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்கிறோம் என நாம் நிதானித்து அறியவேண்டும். சிலர் எதற்காக பந்தியில் பங்குகொள்கிறோம் என்று அறியாது அதை ஒரு புனிதமாகவும், பாரம்பரிய சடங்காகவும் அநுசரிக்கின்றனர்.

நாம் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்போது; ஆண்டவர் எனக்காக இரத்தம் சிந்தி என்னை பாவத்திலிருந்து மீட்டு எடுத்துள்ளார். நான் அவருக்குப் பிரியமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறேனா? என்னுடைய சரீரத்தை வேசியின் சரீரமாக வைத்துள்ளேனா? நான் குற்றமற்ற மனச்சாட்சியுடையவனாக வாழ்ந்து கொண்டு வருகின்றேனா? இப்படி அநேக கேள்விகளை நமக்குள் கேட்டு, நம்மை நாமே சோதித்து அறிந்தவர்களாக அதில் பங்குகொள்ள வேண்டும்.

அநேகர் அதில் பங்குகொள்ள எனக்குத் தகுதியில்லை என்று கர்த்தருடைய பந்தி சமயத்தில் வெளியே எழுந்துபோய் விடுகிறார்கள். அதுவும் தவறான ஒன்றாகவே இருக்கிறது. ஏனெனில்; ‘‘என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனில் நிலைத்திருக்கிறேன்’’ என்கிறார் (யோவா.6:56). நாம் மீண்டும் மீண்டும் பாவம் செய்வோமானால் அவரை மீண்டும் மீண்டும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறோம் என்று தான் பொருளாகிவிடும்.

ஆகையால், பவுல் சொல்வதைப்போல; ‘‘நீங்கள் சரீர

இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்'' (ரோம.6:13). நீங்கள் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கும்போது முழுமையாக ஒப்புக்கொடுக்கப் பழகுங்கள்.

இன்றைக்கு அநேகர் பாதியை உலகத்திற்கும், பாதியை தேவனுக்கும் ஒப்புக்கொடுக்கிறார்கள். உன் அதிபதிக்கு ஒரு பழத்தில் பாதியை கொடுத்துப்பார், அப்பொழுது அவன் அதை ஏற்றுக்கொள்வானா? உலக அதிபதிக்கு நாம் நலமான காரியத்தை கொடுக்க அறிந்திருக்கும்போது நம்மை உண்டாக்கின தேவனுக்கு நம்மை முழுவதுமாக அர்ப்பணிக்க வேண்டாமா? ''நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்'' (ரோ.6:6).

ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின என்று சொல்லப்பட்ட வசனத்தின்படி புதுசிருஷ்டியாயிருக்கிறான். நீங்கள் புதுசிருஷ்டியாயிருக்கிறீர்கள் ஆகையால், உங்களுடைய செய்கைகள் எல்லாம் புதியவைகளாகவே இருக்கட்டும். ''என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்'' எனக் காண்கிறோம் (1கொரி.11:29).

நாம் நம்மை முதலாவது சோதித்து பார்க்கவேண்டிய மூன்று காரியங்களை இச்செய்தியின் வாயிலாக தியானித்தோம். **ஒன்று நாம் விசுவாசமுள்ளவர்களோவென்று நம்மை நாமே சோதித்து அறியவேண்டும். இரண்டாவது கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்து அறியவேண்டும். மூன்றாவது தன்னைத்தானே சோதித்து அறிந்து கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளவேண்டும்.**

இந்த மூன்று காரியங்களில் நீங்கள் உங்களை சோதித்து அறியுங்கள். எதில் நாம் குறைவாக இருக்கின்றோமோ அதை நம்முடைய வாழ்க்கையில் சரிசெய்து கொள்ளவேண்டும். பூமியில் நமக்கு சரிசெய்துகொள்வதற்கான காலஅவகாசம் அதிகமாக இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்டு கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்ய நாடுங்கள்.



**கேள்வி**

**நாம் நியாயந்தீர்க்கப்படாதிருக்க என்ன செய்யவேண்டும்?**

நியாயத்தீர்ப்பு என்பது கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது. நாமெல்லாரும் ஒரு நாளில் நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நிறுத்தப்படுவோம். கர்த்தர் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே நம்மை நியாயந்தீர்ப்பார். பவுல் சொல்கிறார்; ''நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்'' என்கிறார் (1கொரி.11:31). நாம் எப்படி ஜீவித்துக் கொண்டிருக்கிறோம்? நம்மிடத்தில் ஆவிக்குரிய கனிகள் காணப்படுகிறதா? வேதவசனத்தின்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோமா? போன்ற கேள்விகளை நம்மில் எழுப்பி அதற்கேற்றார்போல நம்மை மாற்றியமைத்துக்கொண்டு வாழ்வோமேயானால் நியாயத்தீர்ப்புக்கு தப்புவிக்கப்படுவோம்.

ஏனெனில் ''சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'' என்கிறார் பவுல் (2கொரி.5:10). இந்த போதனை நியாயத்தீர்ப்புக்கு முன்பாக அனைவரும் நிற்போம் என்பதை உறுதிப்படுத்துகிறது. இதற்கு தப்பிக்கொள்பவன் ஒருவனும் இல்லை.

ஆகையால் நாம் நம்மை முதலாவது நிதானித்து அறிந்து மற்றவர்களைக் குற்றப்படுத்தாது, நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற தாலந்துகளை பெருக்கிக் காட்டி கர்த்தருடைய சமுகத்தில் நற்பெயர் பெற பிரயாசப்படுவோம். நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதிருக்க உங்களை முதலாவது சோதித்து அறியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 39. ஊக்கமான ஜெபம்

## Constant Prayer

**மு**தல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள், ஊழியக்காரர்கள் மற்றும் பழையஏற்பாட்டு தேவ ஜனங்கள் ஊக்கமாக கர்த்தரை நோக்கி ஜெபித்திருக்கிறதை நாம் பரிசுத்த வேதாகமத்தின் துணைகொண்டு அறிகிறோம். ''பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்'' என்று அப்போஸ்தல நடபடிகள் 12:5-ம் வசனத்தில் படிக்கிறோம். அக்காலத்தில் ஏரோது, சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி; யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபை பட்டயத்தினாலே கொலை செய்தான். அது

யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று கண்டு, பேதுருவையும் பிடித்து சிறைச்சாலையிலே போட்டான்.

இதை அறிந்த சபையார் ஏரோதின் கைக்கு பேதுருவை விடுவிக்கும்படிக்கு ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள். கர்த்தர் சபையாரின் ஜெபத்தைக் கேட்டு பேதுருவை விடுவித்தார். எப்படியென்றால்; "ஏரோது அவனை வெளியே கொண்டுவரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக்கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது. தூதன் அவனை நோக்கி: உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள் என்றான். அவன் அந்தப்படியே செய்தான்.

தூதன் பின்னும் அவனை நோக்கி: உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே வா என்றான். அந்தப்படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனங் காண்கிறதாக நினைத்தான். அவர்கள் முதலாங்காவலையும் இரண்டாங்காவலையும் கடந்து, நகரத்திற்குப் போகிற இருப்புக்கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது; அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்துபோனார்கள்; உடனே தூதன் அவனை விட்டுப்போய்விட்டான். பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது; ஏரோதின் கைக்கும் யூதஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்" (அப்.12:6-11).

எத்தனை அற்புதமான காரியம் பார்த்தீர்களா? சபையாரின் வேண்டுதல் வீண்போகவில்லை. இன்றைக்கும் நாம் சபையின் ஊழியருக்காக ஜெபிக்கத் தவறாதிருக்கவேண்டும். அவர்கள் நமக்கு நன்மை உண்டாயிருக்கும்படி கர்த்தருடைய ஊழியக்காரராயிருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொரு நாளும் சில மணித்துளி நேரமாவது நாம் அவர்களுக்காக ஜெபிக்கவேண்டும். தேவ தூதனாலே விடுவிக்கப்பட்ட பேதுரு; "மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்" (அப்.12:12). பேதுருவை பார்த்தவுடன் சபையாருக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று.



கர்த்தர் தம்மை விடுவித்த விதத்தைக்குறித்து அவர்களோடு பேசி பகிர்ந்துகொண்டார்.

சபையார் பேதுருவுக்காக ஜெபித்ததைப்போல கர்த்தருடைய ஊழியக்காரனாகிய எப்பாப்பிரா சபைக்காக ஊக்கமாக ஜெபித்திருக்கிறதை நாம் கொலோ.4:12-ம் வசனத்தில் படிக்கிறோம். "எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்".

இவ்விதமாக போராடி ஜெபிக்கக்கூடிய ஊழியர்கள் இன்றும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தேவன் கொடுத்த மந்தையின் மீது அதிக கவனமுள்ளவர்களாக இருந்து சபையின் ஆடுகளுக்காக போராடி ஜெபிக்கிறார்கள். சபையார் தேவசித்தத்தை அறிந்து, அதில் நிலைத்திருக்க வேண்டுமென்பதுவே ஒரு நல்ல மேய்ப்பனுக்குரிய ஜெபமாகயிருக்கிறது. அதற்காகவே அவன் இரவுபகலாக சபைக்காக உழைக்கிறான். அந்த வகையில் எப்பாப்பிரா மிகவும் தேறின ஊழியக்காரனாக விளங்கியிருப்பதை பவுல் நமக்கு மாதிரியாக காட்டுகிறார். மேலும் இந்த எப்பாபிரவைக்குறித்து பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதிய கடிதத்தில்; "அவன் வியாதிப்பட்டு மரணத்திற்கு சமீபமாயிருந்தது மெய்தான். ஆகிலும், தேவன் அவனுக்கு இரங்கினார்; அவனுக்கு இரங்கினதுமல்லாமல், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடி எனக்கும் இரங்கினார்" என்று எழுதுகிறார் (பிலி.2:27).

கர்த்தருடைய ஊழியர் என்றால் அவருக்கு மரணம் வராது, வியாதி வராது என்பதல்ல. எல்லாமே எல்லோருக்கும் வரும். ஆனால் அப்படிப்பட்ட காரியங்களிலிருந்து கர்த்தர் தம்முடைய தாசர்களை விடுவிக்க வல்லவராயிருக்கிறார் என்பதை அறிகிறோம். அந்தப்படியாக எப்பாப்பிராவுக்கு இரங்கினார். "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்.5:16). சபையாருக்காக ஊழியரும், ஊழியருக்காக சபையாரும் ஜெபிக்கவேண்டும். அப்பொழுது பரலோகத்தில் வீற்றிருந்து மனுமக்களை கண்நோக்கி பார்க்கிற பிதாதாமே அவர்களுக்கு இரங்குவார்.

உங்களுடைய ஊழியருக்காக ஜெபிக்கிறீர்களா? நீங்கள் ஒரு

சபைபோதகராயிருந்தால் உங்களுடைய மந்தைக்காக ஜெபியுங்கள். பவுல் தெசலோனிக்கேய சபைக்கு எழுதும்போது; ''எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக் குறித்து விண்ணப்பம்பண்ணி உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்'' என்று எழுதுகிறார் (1தெச.1:4).

பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த தேவ மனுஷிகளில் குறிப்பாக எஸ்தர் என்ற பெண்மணி மிகவும் போற்றத்தகுந்தவள். அவள் மொர்தெகாய்க்கு சொல்லச்சொன்ன செய்தி என்னவென்றால்; ''நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம் இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள்'' (எஸ்தர் 4:16).

தன் யூத ஜனத்திற்காக பக்திவைராக்கியம் கொண்டு செத்தாலும் சாகிறேன் என்று துணிந்து ராஜாவிடம் சென்றாள். அவளுடைய மன்றாட்டு தம் ஜனத்தைப் பற்றியதாக இருந்தது. பொதுவாக நமக்கேன் வம்பு என்று ஒதுங்கி விடுவார்கள். ஆனால் எஸ்தரோ, ஆமான் நிமித்தமாக வந்த காரியத்தினிமித்தம் யூதஜனங்கள் மாண்டுபோய்விடக்கூடாது என்பதற்காக. சட்டத்தை மீறி ராஜாவிடம் சென்று தன் மன்றாட்டை வைத்தாள்.

ஊக்கமாக உபவாசம் செய்து, ஊக்கமாக ஜெபித்த ஜெபத்திற்கு பலன் கிடைத்தது. இவ்விதமாய் யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று. அன்று அவர்கள் செய்த உபவாச ஜெபத்தின் பலன் இந்து தேசமுதல் எத்தியோப்பியா தேசம்வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளிலும் இருந்த யூதர்களுக்கு களிப்பான நாளாயிருந்தது.

ஆண்டவர் இயேசு, பாவத்தில் அடிமைகளாக இருந்த நம்மை மீட்கும்படியாக இவ்வுலகிற்கு கடந்துவந்தார். அவர் இப்பூமியில் பிறந்தது முதல் மரணம் வரை அவருக்குப் போராட்டம் இருந்தது. அத்தனை போராட்டங்களிலும் அவர் தம்முடைய பிதாவாகிய தேவனை நோக்கி ஊக்கமாக ஜெபித்தார். அவர் முப்பதாம் வயதில் ஞானஸ்நானம் பெற்று கரையேறியவுடன் பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். அவர் இரவு பகல் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தார். அப்பொழுது உங்களுக்காகவும் எனக்காகவும் மன்றாடி ஜெபித்தார். பிசாசையும் அவன் கொண்டுவந்த ஆசைகளையும் ஜெயித்தார். அதினாலே அவனை ஜெயித்தார். அப்பாலே போ சாத்தானே என்று அவனை விரட்டியடித்தார்.



பவுல் சொல்லும்போது; ''பாவிகளை இரட்சிக்க கிறிஸ்துஇயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான் என்கிறார்'' (1தீமோ.1:15). மேலும் பவுல் அகிரிப்பா ராஜாவிடம் பேசும்போது; ''அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன் என்றான். அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான். அதற்குப் பவுல்; நீர்மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்'' (அப்.26:27-29).

பவுலுடைய வேண்டுதலைப் பார்த்தீர்களா? கொஞ்சங்குறைய இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் என்றார். நாம் மற்றவர்களைப் பார்க்கும்போதெல்லாம் அவரைப்பற்றியும் அவருடைய அன்பைப் பற்றியும் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். அது யாராக இருந்தாலும் சரி, பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி அவர்களுக்கு ஆண்டவர் இயேசுவைப் பற்றியும் அவர்கொடுக்கும் பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பற்றியும் சொல்லி அவர்களுக்காக வேண்டிக்கொள்ள வேண்டும்.

மேலும் பவுலுடைய மேலான புத்திமதி என்னவென்றால்; ''எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது'' என்கிறார் (1தீமோ.2:1-3).

**கேள்வி**

**இடைவிடாமல் ஜெபிக்கவேண்டுமா?**

இது ஒரு நல்லகேள்விதான். ஆனால் சிந்திக்கவேண்டிய கேள்வியும் கூட. எப்படியென்றால்; இடைவிடாமல் என்றால் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்,.... என்று சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும் என்றல்ல. அநேகர் அவ்விதமாக சொன்னால் தான் இடைவிடாமல் ஜெபிப்பதாக அர்த்தம் என்று எண்ணுகின்றனர். இடைவிடாமல் என்றால் தொடர்ந்து என்று

அர்த்தம். ஒரு நாளைக்கு மூன்று முறை ஜெபித்துவந்தார் தானியேல் என்ற தேவதாசன். அதைப்போல தொடர்ந்து இடைவிடாது ஜெபிக்க வேண்டும். மாததிற்கு ஒரு முறை அல்ல, அல்லது வருடத்திற்கு ஒரு முறை அல்ல. சிலர் மாதத்திற்கு ஒரு முறை மட்டுமே சபைக்கு செல்வார்கள். அல்லது வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே சபைக்குச் செல்வார்கள்.

அம்மாதிரியாக இல்லாமல் இடைவிடாமல் தொடர்ச்சியாக சென்றுஜெபிக்கவேண்டும். நாம் இச்செய்தியில் தியானித்தபடி ஊழியக்காரருக்காக, சபையாக கூடிய ஜெபிக்கலாம். ஊழிக்காரர்கள் சபையின் ஆடுகளுக்காக ஜெபிக்கலாம். பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்னதைப்போல எல்லா மனுஷருக்காகவும் ஜெபிக்கலாம். நம்நாட்டிற்காக, வீட்டிற்காக, சபைக்காக, குறிப்புகளை வைத்துக்கொண்டு கிடைக்கக்கூடிய நேரத்திலெல்லாம் ஜெபிக்கலாம். ஆண்டவரும் அவ்வப்போது ஒலிவமலைக்கு சென்று ஜெபித்துவந்தார் என்று சுவிசேஷபுத்தகங்களில் படிக்கிறோம். அவ்விதமாக நீங்களும் இடைவிடாமல் ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 40. வலது மற்றும் இடது

## Right & Left

**வ**லது இடது என்றவுடன் நம்முடைய ஞாபகத்திற்கு வருவது வலது இடதுபுறம் பார்த்து இடப்புறமாக வாகனத்தை ஓட்டவேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் வரும். இங்கே நான் வலது இடது புறத்தை குறித்துபேசுவது எதுவென்றால்; ''செபெதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரரோடுகூட இயேசுவினிடத்தில் வந்து, அவரைப் பணிந்துகொண்டு; உம்மிடத்தில் ஒரு விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றாள். அவர் அவளைநோக்கி: உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவள்; உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்யவேண்டும் என்றாள்'' (மத்.20:20,21).

ஆண்டவருடைய வலது புறத்திலும் இடதுபுறத்திலும் உட்கார யாருக்குத்தான் ஆசையில்லாமல் இருக்கும். உங்களுக்கும் எனக்கும்கூட அப்படிப்பட்ட ஆசை வருவது இயல்பானதே. அவளுடைய விருப்பம் தவறு என்று நாம் சொல்லிவிடமுடியாது. அவள் தன்னுடைய பிள்ளைகள் ஆண்டவருடைய வலது இடது புறத்தில் வீற்றிருந்து ராஜ்யத்தில் ஆளுகைசெய்ய வேண்டும் என்ற விருப்பத்தோடு அதைக் கேட்டாள்.



அதற்கு ஆண்டவர் இயேசுவின் பதில் என்னவென்றால்; ''நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள் கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும் என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்'' (மத்.20:22-23). அவர்கள் தங்களுடைய விருப்பத்தை தெரியப் படுத்தினார்கள். ஆண்டவர் அதற்கான சிறப்பான பதிலை அங்கே அவர்களுக்குக் கொடுத்தார்.

நாமும் கூட சிலவேளைகளில் இப்படித்தான் நினைக்கிறோம். அது நம்முடைய விருப்பமாயிருக்கிறது. ஆனால் இறுதியில் பிதாவின் சித்தமே நிறைவேறும். அவர் தமது சித்தத்தின்படியே சகலத்தையும் செய்கிறார். யோவானுடைய தாயார் கேட்டதை கேட்டுக்கொண்டிருந்த மற்ற அப்போஸ்தலர்கள் பத்துப்பேரும் யோவான் மேலும் யாக்கோபு மேலும் எரிச்சலானார்கள். இதற்கு பவுல் ஒரு நல்ல ஆலோசனையை நமக்குக் கொடுக்கிறார். ''நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்'' என்கிறார் (கொலோ.3:1,2). நாம் ஞானஸ்நானத்திலே அவரோடு கூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அவரோடு கூட உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறோம்.

ஆனபடியால், ஆண்டவரோடு நீங்கள் எழுந்ததுண்டானால் அவர் எப்படி உயிர்த்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறாரோ அப்படியே நீங்களும் மேலானவைகளை தேடுங்கள் என்கிறார். இன்றைக்கு பூமியில் பதவிக்கு அடித்துக்கொண்டு போராடுகிற கூட்டம் ஒருபுறம் இருக்கிறது. பல வருடங்களாக கிறிஸ்தவர்களாக இருக்கிறவர்கள்கூட சபைகளில் பதவிக்கு போட்டிபோடுகிறார்கள். இப்படி போட்டி போடாமல் கர்த்தருடைய சித்தத்திற்கு உங்களை ஒப்புக் கொடுங்கள்.

வலது இடதுபுறத்தைக்குறித்து நாம் தியானிக்கும்போது, கடைசி நாட்களில் மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை ஆண்டவர் இயேசு பிரிப்பார் என்று காண்கிறோம். எப்படியென்றால்; ''செம்மறியாடுகளைத் தமது

வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார், அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து; வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார்... எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்.

அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்; சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; அந்நியனாயிருந்தேன் நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை....

அப்பொழுது அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், காவலிலடைக்கப்பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு, உமக்கு உதவி செய்யாதிருந்தோம் என்பார்கள். அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியரவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்'' (மத்.25:33--45). நாம் கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் ஒருவருக்கு எதைச் செய்கிறோமோ அதை அவருக்கேச் செய்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

''ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்'' என்கிறார் சாலொமோன் ஞானி (நீதி.19:17). ஆண்டவருக்கு செய்ய ஆயிரம்பேர் ஆயத்தமாயிருக்கிறார்கள். ஆனால், ஆண்டவர் நாமத்தின் நிமித்தம் இந்தசிறியருக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுக்க யோசனை பண்ணுவார்கள்.



இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு நண்பரே, நீ வலது புறத்தில் நிற்க பிரயாசப்படு, மேய்ப்பனின் சத்தம் கேட்கும் செம்மறியாடுகளைப்போல, உன் தேவனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து அவருடைய கட்டளைகளை நிறைவேற்றப் பிரயாசப்படு; அப்பொழுது வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்பார்.

இடது புறத்தில் நிற்பவர்களின் முடிவு எண்ணமாயிருக்கும்? பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கும் இடத்தில் பங்கடைவார்கள். ஆம், ''அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்'' (மத்.25:46). நீங்கள் எப்பக்கம் என்பதை முடிவு செய்துகொள்ளுங்கள்.

ஆண்டவராகிய இயேசு ஆதியிலே தேவனோடு இருந்தார் என யோவான் தமது சுவிசேஷபுத்தகத்தில் எழுதியிருக்கிறார். மேலும் ''சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை'' எனக் காண்கிறோம் (யோவா.1:3). இந்த ஜீவனுள்ள ஆண்டவர் இயேசுவைக்குறித்து முதல் நூற்றாண்டு காலத்தில் கர்த்தருடைய ஊழியத்தை செய்துகொண்டு வந்த ஸ்தேவான்; ஆலோசனை சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவருக்கும் பிரசங்கித்தான்.

ஆபிரகாம் துவங்கி சாலொமோன் மட்டும் பிரசங்கித்த அந்த ஸ்தேவானுடைய பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த அனைவரும் ''உரத்த சத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்'' (அப்.7:57-60). ஏன் இப்படிச் செய்தார்கள்? என்ற ஒரு கேள்வி நமக்கு எழும்புகிறது அல்லவா! பவுலும் கூட சத்தியத்தை நான் உங்களுக்குச் சொன்னதினாலே சத்துருவானேனோ என்று எழுதியதைப்போல; இங்கே ஸ்தேவானை சத்துருவாக என்ன ஆரம்பித்தார்கள்.

அவனோ, ''வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள்... அவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டு. அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்'' (அப்.7:51-56).

நீதியுள்ள வார்த்தைகளையும், நம்முடைய முற்பிதாக்களைக் குறித்தும் பிரசங்கித்த ஸ்தேவானுக்கு ஜனங்கள் கொடுத்த வெகுமதியைப் பார்த்தீர்களா? இப்படி அவருடைய நாமத்திற்காக பாடுகளை அநுபவித்தவர்களை அவர் கைவிடுகிறதில்லை என்பதை நாம் இங்கு நினைத்துப்பார்க்கவேண்டும்; வேதம் சொல்கிறது ‘‘நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்’’ என்கிறார் (வெளி.3:21).

என் அன்பு சகோதரனே, சகோதரியே நீ ஆண்டவரோடு வலது புறமாவது இடதுபுறமாவது உட்காரும்படி விரும்புகிறாயா? இந்த ஸ்தேவானைப்போல போராடு, ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குத்தான் இந்தவிதமான வாக்குத்தத்தத்தை செய்திருக்கிறார். செபதேயுவின் குமாரர்களைப்போல ஆசைப்படுவதைப் பார்க்கிலும். உண்மையும், உத்தமும் உள்ளவர்களாய் அவருக்கு ஊழியம் செய்யும்போது இவ்விதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம்.

**கேள்வி**

**ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மட்டுமே வலது இடது புறம் அருளப்படுமா?**

ஆம், ‘‘ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்’’ என்கிறார் (வெளி.21:7). மேலும் பவுல் சொல்லும்போது; ‘‘பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத் தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம் என்கிறார்’’ (1கொரி.9:24,25).

நீங்கள் இப்பூமியில் இச்சையடக்கத்தோடு இருந்து, கர்த்தருடைய சித்தத்தை ஒவ்வொருநாளும் நிறைவேற்றப் பிரயாசப்படும்போது, நீங்கள் பிசாசு கொண்டு வரும் அனைத்தையும் ஜெயிக்க முடியும். பந்தய சாலையில் அநேகர் ஓடினாலும் ஒருவனுக்கே பந்தயப் பொருள் கிடைக்கும்.

நீங்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும், வாடாத ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும் ஓடுங்கள். நீங்கள் ஜெயங்கொண்டு ஆண்டவருடைய வலது இடது புறத்தில் உட்கார உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.



## 41. ஐசுவரியவான்கள்

## Rich Men

**உ**லகத்தில் பொதுவாக ஐசுவரியவான்களாக வேண்டுமென்று விரும்புகின்றனர். ஆனால் ஐசுவரியம் என்பது நிலையான ஒன்றல்ல என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். யாக்கோபு தம்முடைய நிருபத்தில் ஐசுவரியவான்களைப் பற்றி எழுதுகிறார். என்னவென்றால் ‘‘ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள்’’ என்கிறார் (யாக்.5:1). ஐசுவரியவான்களாக இருப்பது ஒருவனுடைய வாழ்க்கையில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுக்காது. அநேகர் நினைக்கின்றனர். பணத்தினால் எதையும் சாதித்துவிடலாம் என்று. அது தவறான கருத்து. ஐசுவரியவான்களாக இருப்பதால் பலவிதமான சோதனைகள் வரும். ஆகையால் உங்கள்மேல் வரும் நிர்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள் என்கிறார். ஐசுவரியத்தின்மேல் தங்களுடைய நம்பிக்கையை வைக்காதவர்களுக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. ஏனெனில்; வேதம் நமக்குப்போதிக்கிறது; ‘‘உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்’’ என்று (1தீமோ.6:8).

இன்றைக்கு இந்தவிதமான வாழ்க்கையை விரும்புகிறவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். மற்றவர்களுக்கு முன்பாக உயர்ந்த ஸ்தானத்தில் வாழவேண்டும் என்று சொல்லி ஐசுவரியவான்களாக வாழ பிரயாசம் கொள்ளுகின்றனர். மனிதன் பிறக்கும் போது என்ன கொண்டுவந்தான்? ஒன்றுமில்லை. அதைப்போல, போகும்போது என்ன கொண்டு செல்வான்? ஒன்றுமில்லை. இதை எல்லோரும் நன்கு அறிவோம். இருந்தபோதும் மனிதன் படும்பிரயாசத்திற்கு அளவே இல்லை. ஒரு மனிதனுக்குத் தேவையான இரண்டைக் குறித்து வேதாகமம் மிகத் தெளிவாக போதிக்கிறது. ஒன்று உண்ணுவதற்கு உணவு மற்றொன்று உடுப்பதற்கு உடை. இவை இரண்டும் ஒவ்வொரு மனிதனுக்கும் போதுமானதாக இருக்கிறது. இதற்கு மிஞ்சி ஒருவன் எண்ணுவானேயானால், அவன் பலவிதமான உபாய தந்திரங்களில் மாட்டிக்கொண்டு அல்லோலப்படுவான்.

ஆகையால், அன்பானவர்களே, வேதாகமத்தின் ஆலோசனைக்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். கொஞ்ச சத்தியங்களை அறிந்தவர்கள் அந்த சத்தியத்திலும் நிலைத்திராமல் பின்வாங்கிப் போகிறார்கள். ஏனென்றால் அவர்கள் வழியருகே விதைக்கப்பட்டவர்கள். அவர்களால்

நிலைத்திருக்க முடியாதபடி விதைக்கப்பட்ட வசனத்தை பிசாசு எடுத்துப்போடுகிறான். அதைப்போல தேமா என்று சொல்லக்கூடிய மனிதன் பவுலுக்கு உதவியாக ஊழியத்தில் இருந்தவன். அவன், ''இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப்பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்; கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள்'' என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (2தீமோ.4:10).

இந்தவிதமாக பாதியில் கர்த்தரைவிட்டும், ஒப்புக்கொடுக்கப்பட்ட ஊழியத்தை விட்டும், வழிவிலகிப்போகிறவர்கள் உண்டு. நீங்கள் இந்தவிதமாக ஐசுவரியத்தின் மீது உங்களுடைய நம்பிக்கையை வைத்து பின்னிட்டுப்போய்க் கொண்டிருக்கிறீர்களா? அன்பு நேயரே, உங்களுக்காக, எனக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்த ஆண்டவர் இயேசுவுக்கு தொடர்ந்து பணியாற்றுங்கள். இப்பூமியில் கிடைக்கப்பட்ட இந்த அற்புதமான வேலையை விட்டுவிடாதிருங்கள்.

ஒரு மதிகேடனை பற்றி லூக்கா 12-ம் அதிகாரத்தில் படிக்கிறோம். அந்த மதிகேடன் நிலம் நன்றாய் விளைந்தது அப்பொழுது அவன்; நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்டி எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, ஆத்துமாவே, உனக்காக அநேக பொருள் சேர்த்துவைக்கப்பட்டுள்ளது நீ இளைப்பாறி, புசித்து குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்றான். தேவனோ அவனை நோக்கி; மதிகேடனே உன் ஆத்துமா இன்று இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படியாக ஆண்டவர் இயேசு இந்த உவமையை ஜனங்களுக்குப் போதித்தார்.

மேலும் யாக்கோபு நிருபத்தில், ''உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாக சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும் கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்'' என்கிறார் (யாக்.5:3). துருப்பிடித்துப்போகும் அளவு பணத்தை சேர்த்துவைக்கிறவனே ஐசுவரியவான். அப்படிச் சேர்த்துவைத்து என்ன செய்யப்போகிறோம் என்று அவன் சற்றும் நினைப்பதில்லை. அப்படிப்பட்டவர்கள் சேர்த்துவைத்த பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்து அவைகளிலுள்ள துருவே அவர்களுக்கு விரோதமாக சாட்சியாக வந்து நிற்கும் என வேதம் மிகத் தெளிவாக



போதிக்கிறது. வானமும் பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கிறது. இக்கடைசி நாட்களில் அதாவது அழிவின் நாட்களில் பொருட்களை சேர்த்து வைக்கிறவர்களுக்கு ஐயோ, அழிவு சடுதியில் ஏற்படும். ''பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள்'' (யாக்.5:5).

தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட எத்தனையோபேர் அனுதின ஆகாரமில்லாலும், உடுத்த உடையில்லாமலும் கஷ்டப்படுகிறதை நம்முடைய வாழ்க்கையில் காண்கிறோம். அவர்களை ஒவ்வொரு நாளும் எண்ணிப்பார்க்க தவறிவிட்டு, கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல ஒவ்வொருநாளும் தங்களுடைய இருதயங்களைப் போஷித்து வருகிறவர்கள் சிந்திக்கவேண்டும்.

''ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?'' (யாக்.2:15,16) . மேலும் ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும் எனவும் போதிக்கிறது.

எனக்கென்ன குறைவு எனக்கு எல்லாம் இருக்கிறது என்று தனக்காகவே சேர்த்த ஐசுவரியவானைப்போல இருப்பீர்கள் என்றால் அது பாவமாகும். நமக்கு போதுமானதற்கு மிஞ்சியிருக்கும்போது அவைகளில் பகிர்ந்துகொடுத்து, இல்லாதவர்களை நினைத்து பார்க்க வேண்டும். நம்மால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்யும்படியாக போதிக்கப்படுகிறோம். உங்களுடைய பொன்னும் பொருளும் உங்களை இரட்சிக்காது. உங்களுடைய நற்கிரியைகள் உங்களை இரட்சிப்பின் வழிநடத்தும். ஏனென்றால்; ''பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே'' என பிரசங்கி சொல்லுகிறான் (பிர.5:10).

பணம் எல்லாவற்றிற்கும் உதவும் என்று பணத்தை மையமாகவும், கடவுளாகவும் கண்களில் ஒத்திக்கொண்டு வாழ்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பணத்தினால் திருப்தியடைய முடியாது. ஒருவேளை செல்வப்பெருக்கினால் திருப்தியடையலாம் என்று நினைத்தாலும், அதினாலும் திருப்தியடைய முடியாது எனக் காண்கிறோம். ஆனபடியால் நாம் செய்ய வேண்டுவதென்ன?

“ஐசுவரியமும், கனமும், நிலையான பொருளும், நீதியும் என்னிடத்தில் உண்டு. பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் என் வருமானம் நல்லது என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும் படிக்கும் அவர்களை நீதியின் வழியிலும், நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்” என்கிறார் (நீதி.8:18-21).

அவரிடத்தில் ஐசுவரியம் இருக்கிறது. அது நிலையான ஐசுவரியம். அவரிடத்தில் கனமும், நிலையான பொன், பொருட்களும் இருக்கிறது. அவரை நாம் சிநேகிக்கும்போது, அவர் மெய்ப்பொருளை, அதாவது பரலோகத்தில் இருக்கிற நித்தியவாழ்வை சுதந்தரித்துக்கொள்ளும்படி செய்வார். ஆகையால் அன்பு நண்பரே, வீணான ஐசுவரியம் நிறைந்த வாழ்வை விட்டு மெய்யான வாழ்க்கைக்கு திரும்புங்கள்.

மேலும் யாக்கோபு தமது நிருபத்தில்: கடைசி நாட்களில் பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள் என்கிறார். ஆம், இது கடைசி காலமாக இருக்கிறது. “இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது” என்கிறார் பேதுரு (2பேது.3:7). ஆகையால் இது கடைசி காலம் என்று அறிகிறோம்.

இக்கடைசி நாட்களில் பொக்கிஷத்தை சேர்க்காமல். வேலைக்காரர்களுக்கு நியாயமானபடி கூலி கொடுங்கள். ஏனென்றால்; “இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது” என்கிறார் (யாக்.5:4).

வானமும் பூமியும் கர்த்தருடையது என்பதை நாம் முதலாவது நினைவில் கொள்ளவேண்டும். அவர் இப்பூமியிலே சிலருக்கு நிலங்களையும் ஐசுவரியத்தையும் கொடுத்திருக்கிறார். அதை சரியாக பாதுகாத்து பராமரிக்கவேண்டிய பொறுப்பு இருக்கிறது. என்னை தேவன் ஐசுவரியவானாக வைத்திருக்கிறார் என்று நீங்கள் சொல்வதைக் காட்டிலும், அநேகரை பராமரிக்க வேண்டிய பொறுப்பில் என்னை வைத்திருக்கிறார் என்று சொல்லுங்கள், அது சிறந்த பதிலாக இருக்கும். ஆகையால் வேலைக்காரருக்கு இரக்கம் செய்யுங்கள். அவர்களுடைய கூக்குரல் தேவசமுகத்தில் கேட்கப்படும்.

கேயாசி என்ற வேலைக்காரனைப் பார்த்து எலிசா சொன்ன வார்த்தை என்னவென்றால் “பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும்



ஒலிவத் தோப்புகளையும் திராட்சத் தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?” என்றார் (2இரா.5:26).

எனவே கடைசி காலத்தில் இருக்கிற நாம் வேதம் சொல்லுகிற எச்சரிப்பின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஐசுவரியத்தின்மீது நம்முடைய கவனத்தை செலுத்தாமல், உள்ளவைகள் போதுமென்றிருக்கக் கடவோம். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொல்லியிருக்கிறாரே!

**கேள்வி**

**ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதா?**

ஆம், ஆண்டவர் இயேசுவின் போதனைகளைக் கேட்டு மிகவும் துக்கப்பட்ட ஐசுவரியவானைக் கண்டு; ஆண்டவர், “ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்” (லூக்.18:25). அநேக ஐசுவரியவான்கள் தாங்கள் சம்பாதித்தவைகளை இழக்க மனமில்லாமல் வேதாகம போதனைகளை புறம்பாக்கிப் போடுகிறார்கள். ஆனபடியினாலே ஒட்டகம் ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்.

எப்படியென்றால்; எருசலேமின் நுழை வாயில் பூட்டபட்ட பின்பு அதன் அருகே உள்ள ஊசி நுழைவாயிலே ஒட்டகமானது கடினப்பட்டு நுழைந்து சென்றுவிடும். ஆனால் ஐசுவரியவான் பிரவேசிப்பது மிகக்கடினமாயிருக்கும் என்றுதாகச் சொல்லுகிறார். நீங்கள் ஒரு ஐசுவரியவானாக இருப்பீர்கள் என்றால் வேதாகம போதனைக்கு திரும்புங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 42. சாமுவேல்
## Samuel

**சா**முவேல் தீர்க்கதரிசியைக் குறித்து இந்நாளின் செய்திவேளையில் தியானிப்போம். ‘சொல்லும் அடியேன் கேட்கிறேன்’ என்று தன்னை தேவனுடைய சமுகத்தில் அர்ப்பணித்தவன் சாமுவேல் (1சாமு.3:10). இப்படி தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகின்ற ஊழியர்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இந்த தீர்க்கனோடு கர்த்தர் இருந்தார். இவருடைய தாய் அன்னாள். இவனை பால் குடி மறந்தவுடன் தேவசமுகத்தில் ஒப்புக்கொடுத்தாள்.

இன்றைக்கு இந்தவிதமான தாய்களை பார்ப்பது அரிதாயிருக்கிறது. தங்கள் பிள்ளைகள் ஆண்டவருக்கு ஊழியம் செய்யப்போகிறேன் என்று சொன்னால் கூட அதற்கு அவர்கள் தடையாகத்தான் இருப்பார்கள். அப்படிப்பட்ட

தாய்மார்களைத்தான் இன்று பார்க்கமுடிகிறது. இந்த அன்னாளோ; ''அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள்; அவன் அங்கே கர்த்தரைப் பணிந்துகொண்டான்'' (1சாமு.1:28).

அவளுடைய வார்த்தையை இங்கே கவனித்தீர்களா? அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் என்று சொல்லுகிறாள் அவளுடைய பொருத்தனை எவ்வளவு முக்கியம் வாய்ந்தது என்று பாருங்கள். பொருத்தனை பண்ணுவார்கள். ஆனால் அந்த பொருத்தனையில் நிலைத்திருக்கமாட்டார்கள். பின்பு கஷ்டங்கள் வந்தவுடன் மாறிவிடுவார்கள். இவளுக்கும் வாழ்க்கையில் சோதனைகள் பல வந்திருக்கும். ஆனால் அவள், தான் தேவனோடு செய்த பொருத்தனையில் தன்னை மாற்றிக்கொள்ளாமல் சாமுவேலை தேவசமுகத்திற்கு ஒப்புக்கொடுத்தாள். அவன் கர்த்தருடைய ஆலயத்தில் வளர்ந்தான். அவன் தன்னைக்குறித்துச் சொல்லும்போது; ''இதோ, இருக்கிறேன்; கர்த்தரின் சந்நிதியிலும் அவர் அபிஷேகம்பண்ணிவைத்தவருக்கு முன்பாகவும் என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுங்கள்; நான் யாருடைய எருதை எடுத்துக்கொண்டேன்? யாருடைய கழுதையை எடுத்துக்கொண்டேன்? யாருக்கு அநியாயஞ்செய்தேன்? யாருக்கு இடுக்கண்செய்தேன்? யார் கையில் பரிதானம் வாங்கிக்கொண்டு கண்சாடையாயிருந்தேன்? சொல்லுங்கள்; அப்படியுண்டானால் அதை உங்களுக்குத் திரும்பக் கொடுப்பேன் என்றான்'' (1சாமு.12:3).

இப்படி தன்னைக்குறித்து யாராவது பகிரங்கமாக சொல்ல முடியுமா? சாமுவேலோ தன்னுடைய வாழ்க்கையில் உண்மையுள்ள மனுஷனாகவும், தேவனுக்குப் பயந்து வாழ்கின்ற மனுஷனாகவும் இருந்தான். ஆகையால், சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண்முதல் பெயர்செபாமட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது. ஆனால் இவனுடைய பிள்ளைகள் அந்த விதமாக இல்லை என்பது மிகவும் வருந்த வேண்டிய ஒரு செயலாக இருக்கிறது. இவனுடைய தாயின் பக்தி இவனிடத்தில் அதிகம் காணப்பட்டது. சாமுவேலின் பிள்ளைகளுடைய பக்தி மிகவும் மோசமானதாக இருந்தது. ''அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள்'' (1சாமு.8:3).

ஆகையால் இஸ்ரவேலின் மூப்பர் எல்லாரும் கூட்டங்கூடி எங்களை நியாயம் விசாரிப்பதற்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்க ஆரம்பித்தனர். அதினாலே சாமுவேல் சவுலை இஸ்ரவேலின்மேல் முதல் ராஜாவாக அபிஷேகம் செய்துவைத்தான். பிறனுடைய எந்த ஒரு பொருளையும்



இச்சிக்காத சாமுவேலுக்கு, பிறந்த பிள்ளைகள் பொருளாசைக்கு சாய்ந்து பரிதானம் வாங்கும் பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள். இது எத்தனை வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது.

அன்பு நண்பரே, உங்களுடைய பிள்ளைகளை எந்த அளவுக்கு வளர்த்திருக்கிறீர்கள்? நாம் சாமுவேலைப்போல் தானே இருக்கிறோம் என்று நீங்கள் நினைக்கலாம் நல்லதுதான். ஆனால் உங்களுடைய பிள்ளைகள் சாமுவேலின் பிள்ளைகளைப்போல வளர்ந்துவிடக்கூடாது. சகேயு என்ற மனிதன் ஆண்டவர் இயேசுவிடம் என்ன சொன்னான்? ''நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்'' (லூக்.19:8). எப்படிப்பட்ட மனமாறுதல் பார்த்தீர்களா? இதைக்கேட்ட ஆண்டவர் இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்றார்.

மேலும், சாமுவேல் ''இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரையும் நோக்கி: நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புகிறவர்களானால், அந்நிய தேவர்களையும் அஸ்தரோத்தையும் உங்கள் நடுவிலிருந்து விலக்கி, உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்யுங்கள்; அப்பொழுது அவர் உங்களைப் பெலிஸ்தருடைய கைக்கு நீங்கலாக்கிவிடுவார் என்றான்'' (1சாமு.7:3). இஸ்ரவேலின் சகல ஜனங்களையும் நல்வழிப்படுத்தினான். அநேகர் கர்த்தரை பின்பற்றுகிறார்கள். ஆனால் அவர்களில் எத்தனைபேர் அந்நிய தேவர்களை நாடிக்கொண்டு போகிறார்கள் அல்லது தங்களுடைய இருதயத்திலிருந்து அதை எடுத்துப் போடாதிருக்கிறார்கள் என்பதை அறியவேண்டும்.

அதிகமான தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய முழு இருதயத்தை கர்த்தருக்கு கொடாமலிருந்துகொண்டு அதுவும் வேண்டும் இதுவும் வேண்டும் என்று வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எலியா ஒரு முறை சகல ஜனத்தண்டைக்கும் வந்து; நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான்.

அன்பு நண்பரே! நீங்கள் யாரைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறீர்கள்? கர்த்தரையா அல்லது அந்நிய தேவனையா? யாரை நாடிப்போய்க் கொண்டிருக்கிறீர்கள்? சாமுவேல் சொல்வதைப்போல அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள் அப்பொழுது அவர் உங்களை காப்பார். யாத்திராகம புத்தகத்தில் கட்டளையாக சொல்லப்பட்டதை வாசித்திருக்கிறீர்களா? ''மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு

விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்'' என்கிறார் (யாத்.20:3,4).

இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்ற சாமுவேல் ஒரு இஸ்ரவேலன் ஆகையால் கர்த்தருக்கு நேராக ஜனங்களை வழிநடத்தினான். நீங்கள் வேதாகமத்தின் போதனைக்குச் செவிகொடுங்கள். பாரம்பரியங்கள் நம்மை பாதாளத்திற்குக் கொண்டு செல்லும். ஜீவனுள்ள மார்க்கம் நம்மை ஜீவனுள்ள தேவனுடைய சமுகத்திற்கு வழிநடத்தும். முதல் ராஜாவாகிய சவுலும் தவறு செய்துவிட்டார். அவர் சாமுவேலால் அபிஷேகம் பெற்றவர். புத்தியீனமாய் செய்தார். எப்படியென்றால்; ''கில்காலில் பெலிஸ்தர் எனக்கு விரோதமாக வந்துவிடுவார்கள் என்றும், நான் இன்னும் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணவில்லை என்றும், எண்ணித் துணிந்து, சர்வாங்க தகனபலியைச் செலுத்தினேன் என்றான். சாமுவேல் சவுலைப் பார்த்து; புத்தியீனமாய்ச் செய்தீர்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர்; மற்றப்படி கர்த்தர் இஸ்ரவேலின்மேல் உம்முடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் ஸ்திரப்படுத்துவார் என்றான்'' (1சாமு.13:12,13).

அவசரப்பட்டு சவுல் செய்த காரியம் கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமான செயல். ஆகையால் அவனுடைய ராஜ்யபாரம் பிடுங்கப்பட்டது. இன்னும் இதைப்போல பல தவறுகளை செய்தான். அன்பானவர்களே, தேவன் நம்மை விட்டுவிட்டால் நாம் எங்கே போவோம்? இந்த உலகத்தில் நிலைதவறி அழைகிறவர்களாக இருப்போம். முடிவில் மரணம் நம்மைப் பற்றிக்கொள்ளும். அதைபோல மரணம் சவுலைப் பின்தொடர்ந்தது. ''உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது (உபா.5:11). கர்த்தர் என்ன செய்வார் பார்க்கலாம் என்று அநேகர் துணிந்து பாவம் செய்கின்றனர்.

பாவம் பூரணமாகும்போது மரணம் சம்பவிக்கும். ஆகையால் மனுஷருடைய கற்பனைகளையும் உபதேசங்களையும் விட்டு கர்த்தருடைய உபதேசத்திற்குத் திரும்புங்கள். அவருடைய உபதேசத்தில் நிலைத்திருங்கள். ''மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய் சொல்லியிருக்கிறான்'' என்று ஆண்டவர் குறிப்பிடுகிறார் (மத்.15:9).



ஆகையால் கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருங்கள். மற்றும் மனுஷருடைய வீணான ஆராதனைக்குச் செவிகொடாமல், முழு இருதயத்தோடும் முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும் முழுபெலத்தோடும் பிதாவாகிய தேவனை தொழுதுகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள்.

மேலும் சாமுவேலுக்கு கர்த்தர் ஒரு ஆலோசனை கொடுத்தார்; அது என்னவென்றால்; ''நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்'' (1சாமு.16:7).

தாவீதை தெரிந்து கொள்ளும் முன்பு தாவீதின் தகப்பன் தன்னுடைய பிள்ளைகள் ஒவ்வொருவராய் வரவழைத்தான் அப்பொழுது இந்த வார்த்தைகளைச் சொன்னார். நாமும் சிலவேளைகளில் மனிதனுடைய முகத்தைப் பார்த்து தீர்ப்புசெய்கிறோம். ஆனால் தேவனுடைய தேர்வு அப்படியல்ல, அவர் இருதயத்தைப் பார்க்கிறார். ஆகையால்தான் ஆண்டவர் மலைபிரசங்கத்தில் ''இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள் என்றார்'' (மத்.5:8).

''நான் (கர்த்தர்) இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்'' என்கிறார் (எரே.17:10). அவர் ஒருவரால் மட்டுமே இருதயத்தை ஆராய்ந்து அறியமுடியும். சிலர் சொல்கிறார்கள் நாம் என்ன நினைக்கிறோமோ அதை அப்படியே அந்த மந்திரவாதி சொல்லிவிடுவார் என்ற சொல்லி மாந்திரிகம் பண்ணும் மனிதர்களை நம்பிப்போகிறார்கள். அது உண்மையல்ல. கர்த்தர் ஒருவரே சகலத்தையும் அறிகிறார்.

**கேள்வி**

**தேவன் பலியைஏற்றுக்கொள்கிறாரா அல்லது கீழ்ப்படிதலை ஏற்றுக்கொள்கிறாரா?**

சாமுவேல் சொல்லுகிறார்; ''கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்'' என்கிறார் (1சாமு.15:22). ஆகையினாலே கர்த்தர் சாமுவேலோடு பேசும்போது சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொல்லி கீழ்ப்படிந்திருந்தார்.

நீங்கள் தேவனுடைய வார்த்தைகளைப் படிக்கிறீர்கள், சபைக்கு செல்கிறீர்கள், காணிக்கை கொடுக்கிறீர்கள், ஏழைகளுக்கு உதவி செய்கிறீர்கள்

இப்படி அநேக காரியங்களைச் செய்கிறீர்கள் நல்லதுதான். ஆனால் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறீர்களா? தேவனுடைய சத்தத்திற்குச் செவி கொடுக்கிறீர்களா? என்பதுதான் மிக முக்கியம். மற்றபடி உங்களுடைய பலிகளும் காணிக்கைகளும் என்னத்திற்கு? அவைகளை தேவன் ஏற்றுக்கொள்ளார். மனுஷர் கைகளினாலே அவர் பணிவிடைகளை ஏற்றுக்கொள்கிறதில்லை. வானம் எனக்கு சிங்காசனம் பூமி எனக்குப் பாதபடியுமாயிருக்கிறது என்கிறார். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஆசீர்வதிக்கப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 43. எங்களுக்கு என்ன கிடைக்கும்?
## What Shall We Have?

மற்றவர்களிடமிருந்து எதிர்பார்க்கிற அனைவரும் இந்தக் கேள்வியை கேட்பார்கள். ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றிய சீஷர்களில் ஒருவனாகிய பேதுரு என்பவன் இந்தக் கேள்வியைக் கேட்டான். ‘‘இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே; எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றான்’’ (மத்.19:27). இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்று இயேசு சொல்லும்போது அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள் ஆகையால் அவன் இந்தவிதமான கேள்வியைக் கேட்டான்.

நம்மில் அநேகர் தேவனை நோக்கி கதறுகிறோம். ஆண்டவரே, நான் உமக்காக இவைகளையெல்லாம் விட்டு வந்தேனே, இப்பொழுது எல்லாம் போய்விட்டதே, எங்களுக்கு என்ன கொடுப்பீர்கள் என்று முறையிடுகிறோம். அதைப்போல ஆண்டவர் இயேசுவைப் பார்த்து பேதுரு கேட்டான். அதற்கு ஆண்டவருடைய பதில்; ‘‘மறுஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்’’ (மத்.19:28).

பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை கர்த்தர் தெரிந்துகொண்டு அவர்களுக்கு அநேக வரங்களைக் கொடுத்தார். மேலும் உலகமெங்கும் சென்று எனக்குச் சாட்சிகளாயிருங்கள் என்றார். அந்தப்படியாக உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்து, சிலர் இரத்த சாட்சிகளாகவும் மரித்தனர். எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்பற்றின அவர்களை இப்பூமியிலே சிறப்பான இடத்தில் வைத்திருக்கும்போது, நித்தியத்தில் அவரோடு அவர்கள்



ஆளுகைசெய்வது அதிக நிச்சயமல்லவா? அவர்கள் அனைவரும் ஆண்டவர் இயேசுவின் நிமித்தமாக தங்களுடைய தகப்பனையும், மற்ற உடைமைகளையும் விட்டு விட்டு ஆண்டவரின் பின்னே சென்று அவருக்கு ஊழியம் செய்தவர்கள். அவர்களை கர்த்தர் கைவிடுவாரா?

‘‘என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்’’ என்றார் (மத்.19:29). நீங்கள் இயேசுவின் நிமித்தமாக இவைகளை இழந்தவர்களாக இருக்கிறீர்களா? உங்களுக்கு நூறத்தனையான ஆசீர்வாதங்களை இப்பூமியிலே கொடுக்க கர்த்தர் வல்லவராயிருக்கிறார். சோர்ந்துபோகாமல் எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று கேட்பதைவிட கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதத்திற்கு நன்றியுள்ளவர்களாக, சாட்சியுள்ள மக்களாக வாழுங்கள். முடிவில் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வீர்கள்.

வெளிப்படுத்தின விசேஷபுத்தகத்திற்கு உங்களுடைய கவனத்தை திருப்பும்படி கேட்டுக்கொள்கிறேன். அதில் எபேசு சபைக்கு எழுதும்போது; ‘‘ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன்’’ என்றார் (வெளி.2:7). எந்த கனியை ஆதாமும் ஏவாளும் இழந்தார்களோ, அதே கனியை புசிக்கக்கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நாம் உலகத்தில் கர்த்தருடைய பிள்ளைகளாக நடந்து வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக வாழும்போது பரதீசின் மத்தியில் இருக்கிற கனியைப் பெற்றுக்கொள்வோம். நமக்கு எவ்வளவு அருமையான வாக்குத்தத்தங்கள் செய்திருக்கிறார் என்று பாருங்கள்.

பந்தயப்பொருள் வைக்கப்பட்டுள்ளது என்றால் போராடுகிறவர்கள் எவ்விதமாக அதற்காக போராடி பரிசை பெறுகிறார்கள். நாம் இவ்வுலகத்தில் அவருடைய நாமத்திற்காக போராடவேண்டியது அவசியமாயிருக்கிறது. ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குத்தான் அந்த கனி வைக்கப்பட்டிருக்கிறது. மேலும், சிமிர்னா சபைக்கு எழுதும்போது; ‘‘நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில்போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்’’ என்கிறார் (வெளி.2:10).

ஒவ்வொருநாளும் பாடுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நமக்கு வரக்கூடிய பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாமல் இருக்கவேண்டும். ஏனெனில் உலகத்தில் இருப்பவனிலும் நம்மில் இருப்பவர் பெரியவர். அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடார். நாம் மரணபரியந்தமும் உண்மையாயிருக்கும்போது ஆண்டவருடைய சமுகத்தில் ஜீவகிரீடத்தை பெறுவோம். இக்கடைசி நாட்களில் இருக்கிற சபைகள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய வேண்டும். பிசாசு கொண்டுவரும் அனைத்து காரியங்களிலும் போராடி ஜெயிக்கிறவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய விசுவசாமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் என்று 1யோவான் 5:4-ல் வாசிக்கிறோம்.

உங்களுக்கு அந்தவிதமான நம்பிக்கையிருக்கிறதா? நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். மேலும், பெர்கமு சபைக்கு எழுதும்போது; ''ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன்'' என்கிறார் (வெளி.2:17).

மன்னாவை இஸ்ரவேலர் நாற்பது வருஷம் வனாந்திர பயணத்தின்போது சாப்பிட்டார்கள். அவைகள் தேவதூதர்கள் சாப்பிடும் மன்னா என்று வேதம் சொல்லுகிறது. கானானுக்குள் பிரவேசித்தவுடன் அது நிறுத்தப்பட்டது. அந்த மறைவான மன்னாவை கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்கிறார். புதிய நாமத்தையும் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறோம். பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகிறோம். ராஜரீகமான ஆசாரியக்கூட்டம் என்று அழைக்கப்படுகிறோம். இப்படி பலவிதமான நாமத்தில் அழைக்கப்படுகிற நாம், வேறொருவரும் அறியக்கூடாததுமாகிய நாமம் என்று இதைக் குறித்துச் சொல்கிறார்.

ஒரு மனிதன் எடிஎம் பயன்படுத்துவதற்கு வங்கி ஒரு பாஸ்வேர்டு கொடுக்கிறது. அந்த எண் அவர்களுக்கு மட்டுமே தெரியும் அதைப்போல வேறொருவரும் அறியாத நாமம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த புதிய நாமத்தை பெறுவோம். புதிதும் ஜீவனுமானவர்களுக்கு புதிய நாமம் கொடுக்கப்படும். அவர்கள் புதிய நகரமாகிய பரலோகத்தில் பிரவேசிப்பார்கள். அங்கே இராக்காலம் இருக்காது சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை. தேவனுடைய மகிமையே அதை பிரகாசிப்பிக்கும், ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு என்றெல்லாம் காண்கிறோம்.



மேலும், தியத்தீரா சபைக்கு எழுதும்போது; ''ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள். விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக் கொடுப்பேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக் கடவன் என்றார்'' (வெளி.2:26-29).

ஒவ்வொரு சபைக்கும் எழுதும்போது; ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ என்று எழுதுகிறார். நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் வெற்றியடையும்போது தான் அவர் கொடுக்கிற ஆசீர்வாதங்களைப் பெறமுடியும். அவர் பிதாவிடம் அதிகாரம் பெற்றதைப்போல நமக்கும் கொடுப்பார். விடிவெள்ளி என்பது நாம் வாழும் பூமியைப்போல பல மடங்கு பெரியது. அவ்வளவு பெரிய நட்சத்திரத்தையே நம்முடைய ஆளுகைக்குக் கொடுக்கிறார் என்றார். அந்த ஆசீர்வாதம் எத்தகையது என்பதை எண்ணிப்பாருங்கள். ஆதாமையும் ஏவாளையும் பூமியில் வைத்தபோது வேறொருவரும் இல்லை. அவர்கள் இருவர் மட்டுமே பூமிக்குச் சொந்தக்காரராயிருந்தனர். அதைப்போல நீங்கள் ஜெயங்கொள்ளும்போது விடிவெள்ளி நட்சத்திரத்தையே உங்களுக்குக் கொடுக்க கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

மேலும், சர்தை சபைக்கு எழுதும்போது; ''ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன் என்கிறார்'' (வெளி.3:5). பரிசுத்தவான்களுக்கு பரிசுத்த வஸ்திரம் கொடுக்கப்படும். ஏனெனில் பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிப்பதில்லையே என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார். என்னை அறிக்கையிடுகிறவர்களை நானும் பிதாவின் முன்பாக அறிக்கையிடுகிறேன் என்கிறார்.

மேலும், பிலதெல்பியா சபைக்கு எழுதும்போது; ''உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்'' என்கிறார் (வெளி.3:8). ஒரு பெரிய ஆசீர்வாதம் என்னவென்றால் திறந்தவாசல் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது. அதை

ஒருவனும் பூட்டமுடியாது. ஏனெனில் அவர் ஒருவரே திறவுகோலை உடையவராயிருக்கிறார்.

கடைசியாக லவோதிக்கேயா சபைக்கு எழுதும்போது; "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்தில் அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" என்கிறார் (வெளி.3:21).

யாக்கோபும் யோவானும் வலது இடது புறமாக உட்காரும்படி அருள் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இங்கு ஜெயங்கொள்ளுகிறவர்கள் அவரோடு உட்காரும்படிக்கு ஆசீர்வதிக்கப் படுகிறார்கள். நீங்கள் கர்த்தரோடு என்றென்றும் நிலைத்திருந்தால் ஏழு சபைகளுக்கும் சொல்லப்பட்ட நிலையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள்.

**கேள்வி**

**யாரெல்லாம் இரட்சிக்கப்படுவார்கள்?**

"கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" என்று திருமறை நமக்குப்போதிக்கிறது (ரோம.10:13). நீங்கள் கர்த்தருடைய நாமத்தை மட்டும் இப்பூமியில் தொழுதுகொண்டு வருகின்றீர்களா? அப்படித்தொழுது கொள்ளுவீர்களானால் நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாயிருக்கும்.

சமாரியா பெண்ணிடம் கர்த்தர் பேசும்போது; "நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர் களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்" என்றார் (யோவா.4:23,24).

உங்களுடைய தொழுகை எப்படிப்பட்டதாயிருக்கிறது? நீங்கள் இவ்வசனத்தின்படி தேவனைத் தொழுதுகொண்டால் இரட்சிக்கப்படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# 44. சகல அதிகாரம்

## All Authority

இந்த அதிகாரத்தை பிதாவாகிய தேவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருவருக்குத்தான் கொடுத்திருக்கிறார். உலகத்தில் அதிகாரம் பெற்ற அநேகரை நாம் பார்க்கிறோம், கேள்விப்படுகிறோம். ஆனால் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்தவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருவரே. அவர் தம்முடைய சீஷர்களுக்கு பிரதான கட்டளையைக் கொடுக்கும்போது; "இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்" (மத்.28:18-20).

பிதாவாகிய தேவன் அவருக்கு இந்த அதிகாரத்தை கொடுத்திருந்தபடியால், தம்முடைய சீஷர்களிடத்தில் இவைகளை சொல்லி நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்றார். இந்த அதிகாரத்தை கர்த்தர் பெற்றவர் என்பதற்கு ஒரு சில சம்பவங்களை நாம் தியானிக்கலாம். ஒருமுறை தம்முடைய சீஷர்களோடு படவில் சென்று கொண்டிருந்தபோது; "கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி; போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து; இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். அவர்கள் மிகவும் பயந்து; இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று, ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்" (மாற்.4:38-41).

ஒரு நாயை பார்த்து தோ, தோ, என்று கூப்பிட்டால் அல்லது வேறொரு வார்த்தையில் கூப்பிட்டால் வந்துவிடும். அதைப்போல ஒரு பொருளை இங்கிருந்து மற்ற இடத்திற்கு ஒருவனால் எடுத்துச்செல்ல முடியும்.

ஆனால் வானத்தில் அடித்துக்கொண்டிருக்கும் பெரும் காற்றையும், கொந்தளித்துக்கொண்டிருக்கும், கடலையும் ஒரு மனிதனால் கட்டுப்படுத்த முடியுமா? ஆண்டவர் இயேசு; இவை இரண்டையும் தம்முடைய வார்த்தையினாலே கட்டுப்படுத்தினார். இதை பார்த்த சீஷர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆகையால் அவருக்குப் பயப்பட்டார்கள்.

மற்றொரு சம்பவத்தைக்குறித்து பேதுரு எழுதும்போது; ''ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க்காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்;'' (1பேது.3:18-20). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் என்று சொல்லும்போது அவருக்கு மறைவான ஒன்று என்பது இல்லை. அவருடைய அதிகாரத்தின் கீழ் சகலமும் இருக்கிறது.

ஆகையால் ''மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்'' என்று திருவுளம்பற்றுகிறார் (வெளி.1:18). மரணத்திலிருந்து ஒருவனை விடுவிக்கவும், பாதாளத்திற்கு ஒப்புக்கொடுக்கவும் அவர் அதிகாரம் பெற்றவராயிருக்கிறார்.

**இரண்டாவது அவர் பாவங்களை மன்னிக்க அதிகாரமுடைய வராயிருந்தார்.** இதை அப்பொழுதிருந்த ஜனங்களில் சிலர் நம்பவில்லை. ஆகையால், ''பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப்போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்குமுன்பாகப் போனான். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்'' (மாற்.2:10-12).

மற்றொரு சம்பவத்தில் அவர் கட்டளையிட அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மிகுந்த சத்தமிட்டு, அவனைவிட்டுப் போய்விட்டது. ''எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன? இந்தப் புதிய உபதேசம்



எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்'' (மாற்.1:27). இதினாலே ஆண்டவருடைய கீர்த்தி எருசலேமைச் சுற்றியுள்ள தேசங்களிலும் மற்ற நாடுகளிலும் பரவ ஆரம்பித்தது. அநேகர் இயேசுவில் விசுவாசம் கொண்டனர். அநேகர் பிசாசின் பிடியிலிருந்தும் நோயிலிருந்தும் சுகமாக்கப்பட்டனர். தம்மிடம் வந்த அனைவரையும் அவர் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு நன்மை செய்தார்.

அவர் தம்முடைய முப்பதாம் வயது தொடங்கி மூன்றரை ஆண்டுகள் தேவனுடைய வார்த்தைகளை தம்முடைய ஜனங்களுக்கு கொடுத்துக்கொண்டு வந்தார். அநேக பாவிகளை மன்னித்து இனி பாவம் செய்யாதே என்றார். அவருடைய சிலுவை பாடுகளிலும் தம்மைநோக்கி வேண்டிக்கொண்ட ஒரு கள்ளனை மன்னித்தார். எப்படியென்றால்; ''அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்; நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட் பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (லூக்.23:39-43).

எத்தனை அருமையான பாக்கியம் என்று பார்த்தீர்களா? உடனே அவனுடைய பாவங்களை கர்த்தர் மன்னித்தார். எதினாலே அவனுடைய குற்றத்தை மன்னித்தார். அவன் மற்றவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று சொல்லி அவரை கடைசி வேளையில் விசுவாசித்தான். ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். ஆகையால் அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு ஆண்டவரோடு பரதீசுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்.

**மூன்றாவதாக, உண்டாயிருக்கிற அதிகாரங்கள் அனைத்தும் தேவனாலே உண்டாயிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.** வேதமும் அவ்வாறே நமக்குப் போதிக்கிறது. ‘‘எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது’’ என பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (ரோம.13:1). உலகத்தில் உள்ள அதிகாரங்கள் அனைத்தும் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அவைகளுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். அதற்கு கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்போமானால் நாம் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்களாயிருப்போம்.

அவர் இராஜ்யங்களைத் தள்ளி ராஜாக்களை ஏற்படுத்துகிறவர். இவைகள் எல்லாம் அவருடைய கரத்தின் கீழ் இருக்கிறது. அவைகளை நீர்கால்களைப்போல திருப்பிவிடுகிறார் என்று அறிகிறோம். நாம் பூமியிலே அந்த அதிகாரத்தின் கீழ் இருப்பதினாலே, அந்த அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டவர்களாயிருந்து வரி போன்றவற்றை செலுத்துகிறவர்களாயிருக்கிறோம். நான் தேவனுடைய பிள்ளை வரி செலுத்தமுடியாது என்று சொல்ல முடியாது. கர்த்தர் தம்முடைய சீஷர்களைப் பார்த்து சொல்லும்போது; ‘‘இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் யாருடையது என்று கேட்டார். இராயனுடையது என்றார்கள், அதற்கு அவர் அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்’’ (மத்.22:20,21).

எவ்வளவு நேர்த்தியான பதில் என்று பார்த்தீர்களா? ஒரு அதிகாரத்தின் கீழிருக்கும்போது அந்த அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாகவே இருக்க வேண்டும். ஏனென்றால் அவைகள் தேவனாலே ஏற்படுத்தப்பட்டவைகள். ஆண்டவரே வரி செலுத்தியிருக்கிறார் என்று காண்கிறோம். ‘‘பேதுருவினிடத்தில் வந்து; உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா என்று கேட்டார்கள்; செலுத்துகிறார் என்றான்’’ (மத்.17:24).

நம்முடைய கர்த்தராகிய இயேசுவானவர் சகல அதிகாரமும் உடையவராயிருந்த போதும் அவர் வாழ்ந்த நாட்களில் அதிகாரத்திற்கு கீழ்ப்படிந்திருந்தார் எனக் காண்கிறோம். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்த ஆண்டவருக்கு உன்னை ஒப்புக்கொடு, அவர் உன் பாவங்களை மன்னிக்கிறவர். புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை



நமக்கு ஏற்படுத்தியவர். அவரோடு நித்தியத்தில் வாழும் பாக்கியத்தை நாம் பெறமுடியும்.

**கேள்வி**

**தாம் பிதாவிடம் பெற்ற அதிகாரத்தை நமக்கும் ஆண்டவர் இயேசு கொடுப்பாரா?**

கொடுப்பார். எப்பொழுது? எப்படி? என்ற கேள்வியோடு நாம் அதை தியானிக்கவேண்டும். கொஞ்ச வரங்களைக் கொடுத்தவுடன். சமாரியர்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளாதிருக்கும்போது அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும், ஆண்டவரே, எலியா செய்ததுபோல வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். கொஞ்சம் விட்டால் உலகத்தையே அழிக்கவும் செய்வார்கள். மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தேன் என்றார். ஆகையால் அவர் எப்பொழுது அந்த அதிகாரத்தை நமக்குக் கொடுப்பார்.

‘‘உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக் கொண்டிருங்கள். ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன். அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்; அவர்கள் மண்பாண்டங்களைப்போல நொறுக்கப்படுவார்கள்’’ என்றார் (வெளி.2:25-27). எப்படிப்பட்டவர்களுக்கு கொடுப்பார் என்று பார்த்தீர்களா? அவர் வரும்வரை நமக்குள்ளதை பற்றிக் கொண்டிருக்கும்போது, மேலும் வெற்றியுள்ள கிறிஸ்தவனாக வாழ்ந்து, முடிவு பரியந்தமும் அவருடைய கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கே அதைக் கொடுப்பார்.

அவருடைய வார்த்தைகள் சத்தியம். எப்படியென்றால்; அவர் சத்தியபரர் பொய்யுரையாத தேவன். சகல அதிகாரம் படைத்தவர். அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். அவரையும் அவருடைய வல்லமையுள்ள வசனத்தையும் பற்றிக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 45. தேவனுடைய ராஜ்யம்
## The Kingdom of Heaven

**தே**வனுடைய ராஜ்யம் என்பது அவருடைய ஆளுகையைக் குறிக்கும். இன்று தேவனுடைய ராஜ்யம் இருக்கிறதா என்று கேட்டால் அநேகர்

இன்னும் வரவில்லை என்பார்கள். ஆனால் உண்மையென்னவென்றால், தேவனுடைய ராஜ்யம் இப்போது நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. அதுவே அவருடைய சபையாக இருக்கிறது. இந்த உண்மையைக் குறித்து இந்நாளில் நாம் தியானிக்கவுள்ளோம். தேவனுடைய ராஜ்யம் என்பது அழியாத ஒரு ராஜ்யமாகும். உலகத்தில் அநேக ராஜ்யங்கள் தோன்றி அழிந்துபோயின ஆனால் ஆண்டவருடைய ராஜ்யம் என்றென்றும் அழியாதது.

இந்த ராஜ்யத்தைக்குறித்து தானியேல் புத்தகத்தில் படிக்கிறோம். ‘‘அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்திற்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானே என்றென்றைக்கும் நிற்கும்’’ (தானி.2:44).

பரலோகத்தின் தேவன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் காலத்தில் இந்த சொப்பனத்தை வெளிப்படுத்தினார். அதற்கான விளக்கத்தை தேவமனிதனாகிய தானியேல் கொடுத்தார். ஆம், அன்பான சகோதர, சகோதரிகளே! பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஸ்தாபித்தார். முற்பிதாக்களின் காலத்தில் பரலோகத்தின் தேவனே ராஜாவாக இருந்தும். சாமுவேல் தீர்க்கதரிசியின் காலத்தில் ஜனங்கள் உலக மக்களைப் பார்த்து எங்களுக்கும் ஒரு ராஜா வேண்டும் என்று கேட்டபடியினாலே சாமுவேல் தீர்க்கதரிசியிடம் ஜனங்கள் உம்மை தள்ளவில்லை நான் ராஜாவாயிராதபடி என்னைத்தான் தள்ளினார்கள். ஆகையால் அவர்களுக்கு ராஜாவை ஏற்படுத்து என்று சொல்லி சவுலை ராஜாவாக ஏற்படுத்தினார்.

பின்பு அநேக ராஜாக்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். இக்கடைசி நாட்களில் தேவன் என்றென்றும் அழியாத ராஜ்யத்தையும், அழியாத ராஜாவையும் நமக்கு ஏற்படுத்தியிருக்கிறார். ஆகையினாலே இயேசுவின் பிறப்பின்போது; கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் ‘‘யூதருக்கு ராஜாவாகப்பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்’’ என்றார்கள் (மத்.2:2).

ராஜாக்களின் நாட்களிலே தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஒரு நிலையான ராஜாவை ஏற்படுத்தினார். ஆகையினாலே பெத்லகேம் என்னும் சிறிய ஊரிலே இயேசு பிதாவின் சித்தத்தின்படி, அவருடைய திட்டத்தின்படி



பிறந்தார். அவர் பிறந்து வளர்ந்து தேவனுடையப் பணியை செய்து கொண்டு வந்த நாட்களிலே அவரை ஜனங்கள்; ‘‘கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்’’ என்று லூக்.19:38-ல் வாசிக்கிறோம்.

தேவன் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தவில்லையென்றால், அல்லது ஆண்டவராகிய இயேசு தேவனால் ஏற்படுத்தப்பட்ட ராஜாவாக இல்லையென்றால் ஜனங்களுடைய வரவேற்பை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார் அல்லவா! அவர் இராஜாதி ராஜாவாக இருந்தபடியால் அதை ஏற்றுக்கொண்டார். ஜனங்கள் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டபடி தேவனால் அனுப்பப்பட்ட ராஜாவாகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினர். மேலும், ஆண்டவர் இயேசு ராஜ்யத்தைக்குறித்து பேசும்போது, ‘‘என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்’’ (யோவா.18:36).

ஒரு ராஜ்யம் என்றால் படைபலம் இருக்கும். அந்த ராஜ்யத்திற்குரிய ஊழியர்கள் இருப்பார்கள். அந்த ராஜ்யத்திற்கு ஒரு பிரச்சனை என்றால் உடனே போராடுவார்கள். ஆனால் ஆண்டவர் இயேசுவின் ராஜ்யம் அல்லது தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டதல்ல என்பதை இவ்வசனத்தில் விளக்குகிறதை பார்க்கிறோம். ஜனங்கள் உலகப்பிரகாரமாக நினைத்தனர். ஆகையால் அவர்களுக்கு இவ்விதமான பதிலைக் கொடுத்தார்.

முதலாவது, இந்த ராஜ்யத்தை நாம் முதலாவது தேடவேண்டும். வேதமும் அவ்வாறே நமக்குப் போதிக்கிறது. உலகத்தில் மனிதன் எதையெதையோ தேடுகிறான். முடிவில் சோர்ந்துபோய் வருத்தப்பட்டு, நம்பிக்கையற்றவனாகிறான். தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டதல்ல; ‘‘முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்’’ (மத்.6:33). முதலாவது தேடவேண்டிய இந்த ராஜ்யத்தை அதாவது, அவருடைய சபையை ஒருவன் தேடும்போது அவன் எதிர்பார்க்கிற எல்லாம் கூடக் கொடுக்கப்படும். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசிப்பீர்கள் என்றால் முதலாவது அவருடைய ராஜ்யத்தையும் நீதியையும் தேடுங்கள். ஆண்டவருடைய ஊழியத்தின் நாட்களில் ஆசாரியரும், ஜனத்தின்

மூப்பரும் இயேசுவிடம் வந்து எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர் என்று கேள்வி எழுப்பினார்கள். அதற்கு அவர் அநேக உவமைகளினாலே பதில் அளித்தார். மேலும் அப்படிப்பட்டவர்களைப் பார்த்து: ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (மத்.21:31).

ராஜ்யத்தின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் தேவையற்ற கேள்விகளைக் கேட்டு தேவனால் அனுப்பப்பட்ட ஆண்டவர் இயேசுவை விசுவாசியாமல் இருந்தபடியால் இப்படிச்சொன்னார். ஆம், அன்பானவர்களே! பாவிகளை இரட்சிக்க மனுஷகுமாரன் இப்பூமிக்கு வந்தார். அவரை நீ ஏற்றுக்கொண்டால் உனக்கு இரட்சிப்பைக் கொடுக்க அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். நீ தேவனுடைய ராஜ்யத்தில் பிரஜையாகலாம். தேவனுடைய ராஜ்யம் என்பது இனிவரக்கூடிய ஒன்று என்று அநேகர் நினைக்கின்றனர் அது தவறு. லூக்கா 17:21-ல் வாசிக்கிறோம் ''இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுவதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறதே என்றார்''.

ஆம், அது நமக்குள்ளே இருக்கிறது. அவருடைய நாமத்தினாலே எங்கே இரண்டு மூன்றுபேர் கூடுகிறார்களோ அங்கே அவருடைய பிரசன்னம் இருக்கும். அவர்கள் மத்தியில் அவர் இருக்கிறார். ஏனெனில்; இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் அந்தப்படியே நம்மத்தியில் இருக்கிறார்.

அவருடைய ராஜ்யத்தின் பிள்ளைகள் பல இடங்களில் கூடி ஜெபிக்கின்றனர். அந்த ராஜ்யத்தை அடையாளம் கண்டுகொண்டு கர்த்தரை துதியுங்கள். தேவனை ஆவியோடும் உண்மையோடும் அவர்களோடு சேர்ந்து தொழுதுகொள்ளுங்கள். அவருடைய ராஜ்யத்தை இயேசுவின் நாட்களில் அநேகர் அறிந்திருந்தார்கள். குறிப்பாக சிலுவையில் தொங்கிய கள்ளன் அறிந்திருந்தான். எப்படியென்றால் அவன் இயேசுவை நோக்கி: ''ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்'' (லூக்.23:42).

அவனுக்குள் இருந்த நம்பிக்கையை பார்த்தீர்களா? அவனுடைய விசுவாசத்தின்படி பரதீசுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். உன்னதமான பாக்கியத்தை பெற்றான். எப்படியெனில், இயேசுவோடு பரதீசுவில்



காணப்பட்டான். அன்பானவர்களே, தேவனுடைய ராஜ்யத்தை முதலாவது தேடுங்கள் அப்பொழுது நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

தேவனுடைய ராஜ்யத்திற்கு காத்திருந்தவர்களைப் பற்றி நாம் வேதத்தில் படிக்கிறோம். யோசேப்பு என்னும் பேர்கொண்ட ஒரு ஆலோசனைக்காரன் இருந்தான்; அவன் உத்தமனும் நீதிமானுமாயிருந்தான். அவன் யூதருடைய பட்டணங்களிலொன்றாகிய அரிமத்தியாவிலிருந்து வந்தவனாயிருந்தான். அவன் தேவனுடைய ராஜ்யத்திற்கு காத்திருந்தவனாயிருந்தான் என்று லூக்.23:51-ம் வசனத்தில் படிக்கிறோம்.

உலகராஜ்யத்தின் கீழ் இருந்தும் தேவனுடைய ராஜ்யத்திற்கு காத்திருந்தவனாயிருந்திருக்கிறான் இந்த யோசேப்பு. இவன் இயேசுவின் சரீரத்தை அந்நாட்களில் இருந்த ராஜ்யத்தினிடம் சென்று கேட்டு அவருடைய சரீரத்தைப்பெற்று தன்னுடைய கல்லறையிலே வைத்தான். அதைப்போல சிமியோன் என்று சொல்லக்கூடிய ஒரு மனுஷன் எருசலேமிலே இருந்தான் ''அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல்வரக்காத்திருக்கிறவனாயும் இருந்தான்'' என்று லூக்.2:25-ம் வசனத்தில் வாசிக்கிறோம்.

இவனுடைய எதிர்பார்ப்பு எப்படிப்பட்டதாயிருந்திருக்கும். ''புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்'' (லூக்.2:30-32). மேலும், ''நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்'' என்று அப்.1:5-ல் கட்டளையிட்டபடி அப்போஸ்தலர்கள் அவருடைய வாக்குதத்ததின்படி காத்திருந்தார்கள்.

இவர்கள் எல்லோரும் தேவனுடைய ராஜ்யத்திற்குக் காத்திருந்து வல்லமைகளையும், கர்த்தருடைய இரக்கங்களையும் பெற்றுக் கொண்டார்கள். நீங்களும் தேவனுடைய ராஜ்யத்தில் அங்கமாகவும், ஆசீர்வதிக்கப்படவும், இன்றே அவருடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு தேவனுடைய ராஜ்யமாகிய கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுங்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்க்கிறார்.

**கேள்வி**

**தேவனுடைய ராஜ்யமாகிய சபையின் முடிவு எப்படியிருக்கும்?**

ராஜ்யத்தின் பிள்ளைகள் தேவனோடு என்றென்றும் நிலைத்திருப்பார்கள். பரலோகத்தில் அவரோடு நித்திய நித்தியகாலமாக ஜீவிப்பார்கள். உலகத்தின் முடிவிலே இரண்டு கூட்டமாக பிரிக்கப்படும். ஒரு கூட்டத்தார் ஆண்டவர் இயேசுவோடு நித்திய ஜீவனை சுதந்தரிப்பார்கள். ஒரு கூட்டத்தார் நித்தியமான அழிவை சுதந்தரிப்பார்கள். அப்போஸ்தலனாகி பவுல் சொல்லும்போது; "அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனங்களையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும் அவர் ஆளுகைசெய்யவேண்டியது" என்று 1கொரி.15:24-26 வசனங்களில் வாசிக்கிறோம்.

அவருடைய ராஜ்யத்தின் ஆளுகையின் கீழ் நாம் இருக்கிறோம். அவர் இனிவந்து ஆயிரம் வருடம் நம்மை அரசாளுவார் என்று ஜனங்களில் அநேகர் தவறான கருத்தோடும், தவறான போதனைகளைக் கேட்டும் நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

அவருக்கு ஒரு நாள் ஆயிரம் வருடம்போலவும் ஆயிரவருடம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். அவர் இப்போதும் நம்மை சபையின் மூலமாக ஆண்டு வருகிறார். ஆகையால் அவர் சபையாகிய சரீரத்திற்கு தலையாயிருக்கிறார், ராஜாதி ராஜாவாக இருக்கிறார். அவருடைய ஆளுகைக்குள்ளாக வந்து ஆசீர்வதிக்கப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 46. ஒரு கிறிஸ்தவன் எப்படியிருக்கவேண்டும்?

## How Should Be A Christian?

**கு**டும்பத்தின் மத்தியிலும், சபையின் மத்தியிலும், சமுதாயத்தின் மத்தியிலும் ஒரு கிறிஸ்தவன் எப்படியிருக்கவேண்டும் என்று தியானிப்போம்.

**முதலாவது குடும்பத்தின் மத்தியில் ஒரு கிறிஸ்தவன் எப்படியிருக்க வேண்டும்** என்று தியானிப்போம். அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்" (1தீமோ.3:5-7).



இது மூப்பர்களுக்குரிய தகுதிகளில் சில என நாம் அறிகிறோம். ஒரு மூப்பனானவன் சபையின் முன்மாதிரி கிறிஸ்தவனாயிருக்கிறான். அவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருப்பானேயானால் அவன் தேவனுடைய சபையை விசாரிப்பது அரிதான காரியம். முதலாவது அவன் தன் சொந்தக் குடும்பத்தை அறிந்தவனாயிருக்க வேண்டும். இல்லையேல் பார்ப்பவர்கள் என்னசொல்லுவார்கள். தன் குடும்பத்தை சரியாக நடத்த தெரியவில்லை. பின்பு எப்படி இவன் சபையை நடத்துவான் என்று ஜனங்கள் கேலியாக பேசுவதற்கு இடம் உண்டாகும். புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயும் இருக்கவேண்டும் எனக் காண்கிறோம்.

ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்தவனாகவே இருப்பானேயானால் இன்று உலகில் உள்ள எல்லோரும் கிறிஸ்தவர்களாக மாறியிருப்பார்கள். அவனுடைய ஜீவியம் சில வேளைகளில் ஜனங்கள் மத்தியில் இடையூறாகவே இருக்கிறது. நற்சாட்சி இல்லை, கர்த்தருக்குப் பயப்படும் பயமில்லை. தேவன், முதலாவது ஒரு கிறிஸ்தவன் குடும்பத்தின் மத்தியில் நற்சாட்சியுள்ளவனாயிருக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார். ஆகையால், ஆவியானவர் பவுலைக்கொண்டு எழுதும்போது; "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" என எழுதுகிறார் (1தீமோ.5:8). ஒரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்தில் அவன் தன் சொந்த ஜனங்களை விசாரிக்கிறவனாயும், விசேஷமாகத் தன்வீட்டாரை விசாரிக்கிறவனாயுமிருக்கவேண்டும்.

பொதுவாக பாருங்கள், மற்றவர்களை நன்கு விசாரிப்பார்கள். தன் குடும்பத்தாரை விசாரியாமல் எப்பொழுது பார்த்தாலும் எங்களுடைய வீட்டில் அப்படித்தான் என்று சொல்லி சலித்துக்கொள்வார்கள். அப்படியில்லாது தன் குடும்பத்தாரை முதலாவது நேசிக்கிறவர்களாயிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக பாருங்கள். வேதாகமம் நமக்கு கொர்நேலியுவை மாதிரியாக காட்டுகிறது. இவன் இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாக இருந்தான். இவன் தேவபக்தியுள்ளவனாயும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான் என்று அப்.10:1,2 வசனங்களில் வாசிக்கிறோம்.

பட்டாளத்தில் பலவிதமான வேளைகள் இருந்திருக்கும். ஒருவேளை ஜெபிப்பதற்கு கூட நேரமில்லாமல் இருந்திருக்கும். எந்த நேரம் யுத்தம் வருமோ

என்ற அச்சத்தோடு இருக்கநேரிடும். ஆனால் கொர்நேலியுவோ அப்படியல்ல அவன் முதலாவது தேவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து தன் வீட்டாரோடு தேவனுக்கு பயந்தவனாயிருந்திருக்கிறான். நாம் நம்முடைய குடும்பங்களை பக்திக்குள்ளாக வளர்த்திடுவோமானால் குடும்பமாக தேவனுக்கு பணியாற்றுவது சுலபமாகிவிடும்.

இதைச் செய்ய அநேகர் தவறிவிடுகின்றனர். ஆனபடியால் குடும்பத்தார் அநேக வேளையில் கர்த்தருடைய காரியங்களுக்கு இடையூறாகவே இருப்பார்கள். கொர்நேலியு தன் குடும்பத்தை முதலாவது ஆதாயம் செய்தபடியால் அநேக தானதருமங்களை கூட செய்யமுடிந்தது. தன் குடும்பத்தை அவர் ஒருவேளை ஆதாயப்படுத்தாதிருந்திருந்தால் என்ன நடந்திருக்கும். அவருடைய குடும்பமே அவர் செய்ய விரும்பும் தானதருமங்களுக்கு எதிராக செயல்பட்டிருப்பார்கள். அவராலும் தானதருமங்களைச் செய்யமுடியாமற்போயிருக்கும்.

நாம் ஒரு நல்ல கிறிஸ்தவனாயிருக்க வேண்டுமானால் முதலாவது நம்முடைய குடும்பத்தை ஆதாயம் செய்யவும், அவர்களை பக்திக்குள்ளாக வளர்க்கவும் பிரயாசப்படவேண்டும்.

**இரண்டாவது, சபையின் மத்தியில். ஒரு கிறிஸ்தவன் எப்படியிருக்கவேண்டும்** என நாம் தியானிக்கும்போது; வேதம்; ‘‘நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்’’ என்று போதிக்கிறது (எபே.4:1-3). ஒரு கிறிஸ்தவன் தான் எதற்கு அழைக்கப் பட்டிருக்கிறோம் என்பதை ஒருபோதும் மறந்துபோய்விடக்கூடாது.

அந்த அழைப்புக்குப் பாத்திரவான்களாய் எப்பொழுதும் நடக்க பிரயாசப்படவேண்டும். இப்போது எனக்கு மூடு சரியில்லை என்று சொல்வதோ, நேரம் சரியில்லை என்று சொல்வதோ தவறு. பாத்திரவான்களாய் நடந்து மிகுந்த மனத்தாழ்மையை காண்பிக்கவேண்டும். நம் ஆண்டவர் இயேசு தம்மை தாமே வெறுத்து அடிமையின் சாயலானார் எனக் காண்கிறோம். அதைப்போல நான் ஒன்றுமில்லை என் இயேசுவுக்கு முன்பாக நான் எம்மாத்திரம், அவர் எனக்காக என்னவெல்லாம் செய்திருக்கிறார். நான் அவருக்காக வாழுவேன் என்ற தீர்மானத்தோடு நம்மை முழுவதுமாக அவருடைய சமூகத்தில் தாழ்த்தும்போது கர்த்தர் நம்மையும் எடுத்து அவருடைய காரியங்களினிமித்தமாக பயன்படுத்துவார்.



நீடிய பொறுமை மிகவும் அவசியம். அதைப்போல ஒருவரையொருவர் தாங்கவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் தோள்கொடுத்தார்கள். அதைப்போல நாமும் மற்றவர்களைத் தாங்கி ஒருவர்பேரில் ஒருவருக்கு குறை இருக்குமானால் கிறிஸ்து நம்மை மன்னித்ததுபோல அவர்களை நாம் மன்னிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்யும்போது நாம் சபையின் மத்தியில் ஒரு நல்ல கிறிஸ்தவனாயிருக்க முடியும்.

மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது; ‘‘கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்’’ என்கிறார் (2கொரி.5:14,15).

கிறிஸ்துவினுடைய அன்பு ஆகாப்பே அன்பாக இருக்கிறது. இந்த அன்பு சபையில் உள்ள எல்லாரிடமும் காணப்படவேண்டும். அப்பொழுது சபையில் தேவனுடைய ஆசீர்வாதங்கள் நிறைந்து காணப்படும். யூதாஸை போல சிலர் இருப்பதால் சபையானது பாழாக்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்களோடு கலவாதிருங்கள்.

**மூன்றாவது, சமுதாயத்தின் மத்தியில் ஒரு கிறிஸ்தவன் எப்படியிருக்கவேண்டும்** என நாம் தியானிக்கும்போது; கர்த்தர் தம்முடைய மலைப்பிரசங்கத்தில், ‘‘நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது’’ என்று குறிப்பிட்டிருக்கிறார் (மத்.5:14). நம்மை உலகத்துக்கே வெளிச்சமாக வைத்திருக்கிறார். உலகத்துக்கு வெளிச்சங்கொடுக்கக்கூடிய நாம் இருளாயிருந்தால் உலகம் எதைப்பார்க்கும்? இங்கே நாம் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். உலகத்திற்கே ஒளியாக இயேசு வந்தார்.

இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசைகளிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தில் சொல்லப்பட்டபடியாக இருளின் அதிகாரத்திலிருந்தவர்களுக்கு ஆண்டவருடைய வெளிச்சம் கிடைத்தது. அந்த ஒளியை வாங்கி பிரதிபலிக்கிறவர்களாக நாம் இருக்கிறோம். நீங்கள் இருளிலுள்ள ஜனங்களுக்கு வெளிச்சமாக இருக்கிறீர்களா? உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு! விளக்கைக் கொளுத்தி

மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.

இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. ஒவ்வொரு நாளும் புறஜாதிமக்கள் கிறிஸ்தவர்களை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். புறஜாதிகளில் ஆயிரம் தவறுகள் நடந்தாலும் அதை அவர்கள் கண்டுகொள்ளமாட்டார்கள். ஆனால் ஒரு கிறிஸ்தவன் தவறுசெய்யும்போது, அதை உற்றுநோக்குவார்கள். இவனெல்லாம் ஒரு கிறிஸ்தவனாம் இவன் இப்படிச் செய்யலாமா? எனக் கேள்வி எழுப்புவார்கள்.

ஆகையால் இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே, தேவனுடைய ஜனங்களே, உன் மூலமாக கிறிஸ்துவினுடைய நாமம் மகிமை குறைச்சல் அடையும்படியாக இடம்கொடாதே. மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாகப் பிரகாசமாயிருக்கப் பிரயாசப்படுங்கள். அதற்காக உங்களை ஒவ்வொரு நாளும் ஆயத்தப்படுத்துங்கள்.

உங்களிலிருக்கிற தீமைகளை உங்களை விட்டு அகற்றுங்கள் ஒவ்வொரு நாளும் தேவசித்தம் செய்ய நாடுங்கள். தபீத்தாள் என்ற பெண் முதல் நூற்றாண்டு காலத்தில் "அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள்" என அப்.9:36-ம் வசனத்தில் வாசிக்கிறோம். அந்த உத்தம சீஷியைப்போல மாறுங்கள். ஒரு நல்ல கிறிஸ்தவராக குடும்பத்தின் மத்தியிலும், சபையின் மத்தியிலும், சமுதாயத்தின் மத்தியிலும் இருக்கப்பிரயாசப்படுங்கள்.

**கேள்வி**

**நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருந்தால் யாருடைய சந்ததியாயிருக்கிறீர்கள்?**

நாம் பலவேளைகளில் நாங்கள் இந்த பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வதுண்டு. பரிசுத்த வேதாகமம் ஒரு பரிசுத்த சந்ததியை, வாக்குத்தத்த சந்ததியை அடையாளம் காட்டுகிறது. அது எதுவென்றால் ஆபிரகாமின் சந்ததி. இந்த சந்ததியில் இயேசு வந்தார். இது விசுவாச சந்ததி என்றும் அழைக்கப்படுகிறது. "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்கிறார் பவுல் (கலா.3:29).



யூதனென்றும் இல்லை புறஜாதியானென்றும் இல்லை நாமெல்லாரும் கிறிஸ்துஇயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறோம். இன்று அநேகர் இந்த உண்மையை புரிந்துகொள்ளாமல், நான் அவனைச் சேர்ந்தவன் என்றும் இவனைச் சேர்ந்தவனென்றும் சொல்வதைக்கேட்கிறோம். நாம் கிறிஸ்து இயேசுவைப் பின்பற்றும் ஒரு கிறிஸ்தவனாயிருப்போமானால் நாம் ஆபிரகாமின் சந்ததியாய் இருப்போம். தேவன் வாக்குத்தத்தம் செய்தபடி சுதந்தரவாளிகளாகவும் இருப்போம். சுதந்தரவாளிகள் என்றால் உரிமையாளர்கள். பரலோகத்திற்குச் சொந்தக்காரர்கள். இப்படிப்பட்ட ஆசீர்வாதம் நிறைந்த வாழ்க்கையை நழுவவிடாதீர்கள்.

இந்த சந்ததியில் நிலைத்திருந்து நித்திய ஆசீர்வாதத்தைப் பெற காத்திருங்கள். உங்களுடைய நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக்கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 47. கள்வனின் அறிக்கை
## Confess of Thief

**சி**லுவையில் இயேசுவின் வலது புறத்தில் ஒரு கள்வனும் இடது புறத்தில் ஒரு கள்வனுமாகிய இரண்டு கள்வர்களை அறைந்தார்கள். அதில் ஒருவன் ஆண்டவர் இயேசுவை நோக்கி: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். தம்மோடு கூட அறையப்பட்ட ஆண்டவர் இயேசுவை அறிந்ததிருந்தபோதும் அவருக்குப் பயப்படாமல், நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று சொல்லி அவரை இகழ்ந்திருக்கிறான். ஆனால் "மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்டபட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?" என்றான் (லூக்.23:40).

இவர்களோ குற்றம் செய்து அறைப்பட்டிருக்கிறார்கள் ஆனால் ஆண்டவர் இயேசு ஒரு குற்றமும் செய்யாமல் கள்வர்களோடு ஒரு கள்வனைப்போல சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார் என்பதை நினைத்த மற்றவன் அவனுக்குப் போதனை செய்வதை சற்று கவனியுங்கள். சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறான் என்றால் அவனுக்கு எத்தனை வேதனையிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் மரணத்தை நோக்கி அவனுடைய ஜீவன் போய்கொண்டிருக்கும் அந்த வேளையிலும் அவன் மற்ற கள்வனை நோக்கி நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனை விசுவாசிக்கிறதில்லையா என்றான்,

அவன் முன்னமே இயேசுவை விசுவாசித்திருக்கிறான் என்பது இதிலிருந்து நமக்கு தெரிய வருகிறது. மற்றவன் இயேசுவை விசுவாசிக்காதவனாகவே இருந்து சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான் என்பதும் நமக்குப் புரிகிறது. தேவனுடைய இரக்கத்தைப் பற்றி நாம் சங்கீத புஸ்தகத்தில் வாசிக்கிறோம். என்னவென்றால்; ''பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரியதாயிருக்கிறது'' (சங்.103:11).

அந்தப்படியாக நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா என்று சொன்ன அந்த கள்வனுக்கு கர்த்தர் இரங்கினார். அவனோ குற்றம் செய்து அறையப்பட்டவன். ஆனாலும் அவனுடைய குற்றத்தை கர்த்தர் மன்னித்து ஏற்றுக்கொண்டார். சங்கீதத்தில் நாம் படித்தபடி அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபை அவ்வளவு பெரியதாயிருக்கிறது. அது யாராக இருந்தாலும் எப்பேர்பட்ட பாவியாக இருந்தாலும் முதலாவது அவர்களுக்குள் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருக்கும்போது கர்த்தர் அவர்களுக்கு இரங்குகிறார். அதுவும் பூமிக்கும் வானத்திற்கும் உள்ள தூரத்தைப்போல அவருடைய கிருபை இருக்கிறது.

சிலுவையில் தொங்கிய கள்வன் அத்தோடு நிறுத்திவிடவில்லை; மேலும் அவனை நோக்கி: ''நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்கபலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டான்'' (லூக்.23:41). கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானமுள்ளது என்று நீதிமொழிகள் புத்தகத்தில் படிக்கிறோம். அந்தப்படியாக இவன் அவனை நோக்கி கடிந்துகொண்டு போதிக்க ஆரம்பித்தான்.

நாமாக இருந்தால் இந்த அளவு பாடுபட்டுக்கொண்டு போதித்திருப்போமா என்று எண்ணிப்பாருங்கள். இந்த கள்வன் சலித்துப்போகாமல், தன்னுடைய வீட்டைப் பற்றியோ அல்லது உறவினர்களைப் பற்றியோ கவலைப்படாமல் சிலுவையில் தொங்கிய மற்ற கள்வனின் வார்த்தையை கேட்டு அதை ஏற்றுக்கொள்ள முடியாமல், நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், ஆண்டவர் இயேசு என்ன குற்றம் செய்தார் என்று அவனை நோக்கி கேட்க ஆரம்பித்தான். இதிலிருந்தே தெரிகிறது இவன் தேவனுடைய ராஜ்யத்திற்குத் தூரமானவன் அல்லவென்று.

விசுவாசம் சிலருடைய வார்த்தையிலிருந்தே வெளிப்படும். அதைப்போல சிலுவையில் தொங்கிய கள்வர்களில் ஒருவனுடைய விசுவாசம் வெளிப்பட ஆரம்பித்தது. இவர்கள் இருவரும்பேசுகிறதை இயேசுவானவர்



கேட்டுக்கொண்டிருந்தார். யோபு புஸ்தகத்தில் படிக்கிறோம்; ''சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்? தேவன்பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன்'' (யோபு 40:2). இவ்வசனத்தை அறியாத அநேகர் தேவன் பேரில் குற்றம் சொல்லிக்கொண்டிருக்கவும், வழக்காடவும் செய்கிறார்கள். இந்த கள்வர்களில் ஒருவனைப்போல. தேவனோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் ஒருவனும் இல்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

ஆகையால் யோபுவைப்போல நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன் என்று சொல்லி, அமைதலோடு மாணவர்கள் பள்ளியில் கற்றுக்கொள்வதைப்போல தேவனுடைய வசனங்களைக் கற்றுக்கொண்டு, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தில் வளர்ச்சியடைய வேண்டும். பிதாவாகிய தேவன் 2கொரி.5:21-ம் வசனத்தின்படி ''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்''. அவர் பாவம் செய்யவில்லை அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவும் இல்லை. ஆனாலும் அவரை குற்றவாளிகளில் ஒரு குற்றவாளியைப்போல சிலுவையில் அறைந்து அவரைக் கொன்றார்கள். இதை தேவன் ஏன் அனுமதித்தார் என்று நீங்கள் நினைக்கலாம்.

ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகரை நீதிமான்களாக மாற்றும்படியாக தேவன் தம்முடைய அநாதி தீர்மானத்தின்படி அவரை பாடுகளுக்கு உட்படுத்தினார். ஆகையினால் ஆண்டவரும் ஜெபிக்கும்போது பிதாவே என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று சொன்னார்.

மேலும் சிலுவையில் தொங்கிய அந்த கள்வன்; இயேசுவை நோக்கி: ''ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்'' (லூக்.23:42). பலருடைய கடைசி ஆசை என்னவாக இருக்கும். அடுத்த ஜென்மத்திலாவது நான் பணக்காரனாக பிறக்க வேண்டும் அல்லது என்னை சிலுவையில் அறைந்தவர்களை நான் அறைய வேண்டும் அல்லது என்னுடைய குடும்பமாவது காப்பாற்றபட வேண்டும். இப்படி பல ஆசைகளை கொண்டிருப்பார்கள். ஆனால் இந்த கள்வனின் ஆசை இயேசுவின் ராஜ்யத்தைக்குறித்து அவன் கேள்விப்பட்டபடியால் நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.

ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு தம்முடைய ஊழியத்தின் நாட்களில் போதித்தபோது; ''அன்றியும் அவர்

அவர்களை நோக்கி: இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (மாற்.9:1). இந்த போதகத்தைக் குறித்து அவன் கேள்விப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவன் ஆண்டவர் போதித்த இடத்தில் இருந்திருக்கவேண்டும்.

ஆகையால் அவன் ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். அவனுடைய வேண்டுதல் கர்த்தருடைய சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கேளுங்கள் உங்களுக்கு கொடுக்கப்படும் என்று சொன்ன கர்த்தர் அவனுடைய வேண்டுதலைக் கேட்டு, கர்த்தர் உடனே அவனுக்கு மறுமொழியாக ''இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்'' எத்தனை ஆசீர்வாதமான வார்த்தை என்று பார்த்தீர்களா? அந்த கள்வனுக்கு கிடைக்கப்பெற்ற மாபெரும் பாக்கியம் அல்லவா! அந்த பாக்கியத்திற்கு அவன் தகுதியுள்ளவனாயிருந்தான்.

இன்று நீங்களும் நானும் இந்தவிதமான பாக்கியத்திற்கு தகுதியுள்ளவர்களாக மாற நம்முடைய சூழ்நிலைகளையும், சந்தர்ப்பங்களையும் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. சமயம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கர்த்தருடைய வார்த்தையை எடுத்துச்சொல்வதில் தயக்கமின்றி சொல்லவேண்டும். மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவர்களை நானும் பரலோகத்தில் இருக்கிற பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

ஆகையால் இந்த கள்வனைப்போல அறிக்கையிடுங்கள். கணக்கில்லா ஆசீர்வாதங்களை கர்த்தருடைய சமுகத்தில் பெற்றுக்கொள்வீர்கள். பவுல்: ''என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்'' (ரோ.10:9,10) என்று சொல்லுகிறார்.

ஒரு முறை பிசாசு ஆண்டவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்று கேட்டதைப்போல, அந்தக் கள்வன் நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்ளும் என்று அவரை இகழ்ந்தான். நடந்தது என்ன? இயேசுவைக் குறித்து அறிக்கையிட்டவன் இரட்சிக்கப்பட்டான். அவரை இகழ்ந்தவன் கைவிடப்பட்டான்.



இச்செய்தியைப் படித்துக்கொண்டிருக்கிற அன்பு வாசகரே, நீங்கள் உங்களுடைய அறிக்கையை உறுதியாக பற்றிக்கொண்டிருங்கள். உங்களுக்குள்ளாக அவிசுவாசமான எண்ணங்கள் வந்துவிட இடங்கொடாதிருங்கள். எந்த சூழ்நிலையிலும் கர்த்தரைப் பற்றிக் கொண்டிருங்கள். இதோ சதாகாலங்களிலும் உங்களோடு இருக்கிறேன் என்று வாக்கு பண்ணியிருக்கிறார். அவர் நம்மோடு இருப்பார். அவருடைய நாமத்தில் நாம் கேட்டுக்கொள்வதெதுவோ அதை பிதாவாகிய தேவன் நமக்கு தந்தருளுவார்.

**கேள்வி**

**ஒருவனை கர்த்தர் கைவிட்டதன் காரணம் என்ன?**

ஒன்று அவன் கர்த்தரை விசுவாசிக்கவில்லை, மற்றொன்று தேவனுக்குப் பயப்படும் பயம் அவனிடத்தில் இல்லை. இப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கர்த்தர் இரட்சிக்கமாட்டார். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் என்று வேதத்தில் படிக்கிறோம். அடிப்படை அஸ்திவாரம் விசுவாசம். இது ஒரு மனிதனுக்கு அவசியம் வேண்டும். பிசாசுகள் கூட விசுவாசித்து நடுங்குகின்றன என படிக்கிறோம். அப்படியிருக்கும்போது தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனுக்கு விசுவாசம் எத்தனை அவசியம்.

வேதம் போதிக்கிறது; ''வயலிலிருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான் மற்றவன் கைவிடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (லூக்.17:36). அப்படியென்றால் இரண்டுபேரில் ஒருவனை கர்த்தர் கைவிட்டுவிடுவார் என்பது அர்த்தமல்ல. இருவரில் ஒருவன் ஆண்டவரையும் அவருடைய உபதேசங்களையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவனாக இருப்பான். ஆகையால் கர்த்தர் அவனை இரட்சிப்பார். இருவரும் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருந்தால் இருவரையுமே இரட்சிப்பார். அதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை.

செபதேயுவின் குமாரர்கள் இருவரையும் தம்முடைய ஊழியத்தில் கர்த்தர் சேர்த்துக்கொள்ளவில்லையா, அவர்கள் இருவரும் ஊழியம் செய்தார்கள். யாரெல்லாம் அவரை ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களை கர்த்தரும் ஏற்றுக்கொள்வார். ஒருவரும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தமல்ல. எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்றும் நம்மில் நீடிய பொறுமையோடிருக்கிறார் என திருமறை நமக்குப் போதிக்கிறது.

ஆகையால் அன்பு நண்பனே, காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுடைய நன்பர்களுக்கும், உறவினர்களுக்கும்

கர்த்தருடைய வார்த்தையை எடுத்துச்சொல்லுங்கள். சிலுவையில் தொங்கிய கள்வன் மற்ற கள்வனுக்கு கடிந்துகொண்டு புத்திசொன்னதைப்போல சொல்லுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## 48. இச்சையடக்கம்

## Self - Control

இச்சையடக்கம் நம்முடைய வாழ்வில் நலமான காரியங்களை ஏற்படுத்தும். நம்முடைய ஆதித்தாய் இச்சையடக்கம் இல்லாதபடியால், தேவன் விலக்கி வைத்திருந்த கனியை இச்சித்து அதைப் பறித்து புசித்து பாவிகளாக மாற்றப்பட்டனர். இச்சையடக்கத்தைக் குறித்து தேவன் ஆதிமுதலாகவே போதித்துக்கொண்டு வந்தார். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபைக்கு எழுதும்போது; ''ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை'' என்கிறார் (கலா.5:22,23). இந்த ஆவியின் கனிகளில் ஒன்றுதான் இச்சையடக்கம்.

ஆவிக்குரியவர்கள் இவைகளை ஏற்றுக்கொண்டு கர்த்தருக்குப் பிரியமாய் வாழ பிரயாசம் கொள்ளுகின்றனர். நீங்கள் ஆவிக்குரியவர்களா அல்லது மாம்சத்திற்குரியவர்களா? ''மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (கலா.5:19-21). ஆவியின் கனிகள் ஒன்பது என்று பார்த்தோம்.

ஆனால் மாம்சத்தின் கிரியைகள் பதினேழு என்று பார்க்கிறோம். ஆவியின் கனிகளைக் காட்டிலும் மாம்சத்தின் கிரியைகள் அதிகமாக இருக்கிறது. அதைப்போல உலகத்தில் பாவம் பெருகி இருக்கிறது. ஆனால் பாவம் பெருகின இடத்தில் கிருபை பெருகியுள்ளது என்பது மிகவும் ஆசீர்வாதமான ஒன்றாக இருக்கிறது. இந்த கிருபையைப் போக்கடிக்கக்கூடியவர்கள் பெருகி இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய விஷயமாக இருக்கிறது. மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாக செயல்படுகிறது என்று வேதம்



போதிக்கிறது. ''மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது'' (கலா.5;17).

ஆம், இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. நாம் நலமான காரியங்களைச் செய்ய விரும்புகிறோம். அப்படிப்பட்ட சமயங்களில் மாம்சம் ஒத்துழைக்காமற்போகிறது. பின்பு மனஸ்தாபப்படுகிறோம் அல்லது வேதனை அடைகிறோம். அந்த சமயத்தில் அதை செய்திருந்தால் எவ்வளவோ நன்மை கிடைத்திருக்கும் என்று நினைக்கிறோம். அது ஆவிக்குரிய சிந்தையாக இருக்கிறது. அதைசெய்யாதபடி மாம்சம் தடையாக இருக்கிறது. ஒரு கிறிஸ்தவன் மாம்ச பிரகாரமாகவும், ஆவிக்குரியபிரகாரமாகவும் நடக்கமுடியாது. அப்படி நடந்தால் அவன் ஒரு கிறிஸ்தவனாக இருக்கமுடியாது. அவன் வெறும் பெயர் கிறிஸ்தவனாகவே இருக்கமுடியும்.

ஏனெனில் ''கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்'' என திருமறை அவர்களைக்குறித்து சாட்சிகொடுக்கிறது (கலா.5:24). நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருப்பீர்கள் என்றால் உங்களில் இச்சையடக்கம் இருக்கவேண்டும். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். அப்பொழுது உங்களுடைய ஆத்துமா காக்கப்படும்.

மேலும், இச்சையடக்கத்தைக்குறித்து பவுல் போதிக்கும்போது; ''அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்'' (அப்.24:25). அநேகருக்கு இச்சையடக்கத்தைக் குறித்து போதித்தால் பயஉணர்வு உண்டாகிறது. உண்மைதான்! நாம் எப்படி தேவனுடைய பார்வையில் நிற்கப்போகிறோம் என்ற பயஉணர்வு. தேவன் நன்மையானாலும் தீமையானாலும் நியாயத்தீர்ப்பிலே கொண்டுவந்து நிறுத்துவார் என பிரசங்கி சொல்கிறான். தேவனுக்கு மறைவானவைகள் ஒன்றுமில்லை.

ஆகையால், இச்சையடக்கத்தைக்குறித்து பேசும்போது அநேகர் அந்தப்போதனையில் நிலைத்திருக்கமுடியாமல், தங்களுக்கு ஏற்ற போதகர்களை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். மேலும் யாக்கோபு சொல்கிறார்; ''உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினாலல்லவா? நீங்கள்

இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குக் சித்திக்கிறதில்லை. நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்'' என்கிறார் (யாக்.4:1-3).

யூதாஸ் இந்தவிதமான இச்சையுடையவனாக இயேசுவின் சீஷர்களில் ஒருவனாயிருந்தான். ஆகையால் பிசாசு அவனுக்குள் புகுந்தான். பின்பு இயேசுவைக் காட்டிக்கொடுக்கும்படி சமயம் தேடிக்கொண்டிருந்தான் என்று லூக்.22:6ல் படிக்கிறோம்.

இச்சையடக்கம் நம்முடைய வாழ்வில் வெற்றியைக் கொண்டுவரும். ஆகையால் பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; ''பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பர்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்'' (1கொரி.9:24,25).

உலகத்திலே அநேக ஓட்டப்பந்தைய வீரர்களை நாம் அறிகிறோம். அவர்கள் எப்படியாவது ஓட்டப்பந்தயத்தில் ஓடி பரிசை பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு ஓடி பரிசை பெற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படி ஓடக்கூடிய ஒரு பெண்மணியை எப்படியாவது இந்த ஓட்டப்பந்தையத்தில் இருந்து தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அதை பார்த்துக்கொண்டிருந்த பார்வையாளர்கள் தங்கமுலாம் பூசப்பட்ட ஆப்பிள் பழங்களை அவள் ஓடிவரும் வழியில் உருட்டி விட்டார்களாம். அதைப் பார்த்த அந்த வீராங்கனை பார்வையாளர்கள் நமக்கு நல்ல வெகுமதி கொடுக்கிறார்கள் என நினைத்து அவைகளை இச்சித்து எடுக்க ஆரம்பித்தாள். அவளுடைய எண்ணம் பந்தயத்தில் கொடுக்கும் பரிசை காட்டிலும் இது விலையேறப்பெற்றது என எண்ணினாள் அவளுடைய இச்சை அவளுடைய பந்தயப் பொருளை இழக்கச் செய்தது. மற்ற வீராங்கனை பரிசை பெற்றாள்.

அன்பானவர்களே, நாமும் கூட சிலவேளைகளில் பிசாசு நமக்கு முன்பாக வைத்திருக்கிற சில ஆசைகளுக்கு அடிமையாக அவைகளை இச்சிக்க



ஆரம்பிக்கிறோம். முடிவில் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற்றமடையாமல் பின்னோக்கி தள்ளப்படுகிறோம். இதற்கு நாமே பொறுப்பாளியாகிறோம். உலகத்தில் அநேகர் இவ்விதமாக இச்சைகளுக்கு தங்களை ஒப்புவித்து வழி விலகிப்போகிறார்கள். ''நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களில் பெலன்செய்தது. இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்'' (ரோம.7:5,6).

மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் மரணத்துக்கு ஏதுவான கனிகளை கொடுத்துக்கொண்டிருந்தோம். ஆனால் இப்பொழுது அவைகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டு புதுமையான ஆவியின்படி ஊழியம் செய்யும்படி, அதாவது நம்மைக்கட்டியிருந்த நியாயப்பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு புதிதும் ஜீவனுமான மார்க்கத்திற்குத் திருப்பப்பட்டுள்ளோம். நாம் இனி அவைகளுக்கு அடிமையானவர்களல்ல அதினின்று விடுதலையாக்கப் பட்டவர்களாயிருக்கிறோம்.

''ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது'' (ரோம.6:12-14).

இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள், ஞானஸ்நானத்திலே அவரோடு எழுப்பப்பட்டவர்கள் மத்தியில் பாவம் ஆட்சிசெய்ய இடம்கொடுக்கக்கூடாது. உங்களுடைய சரீரம் கிறிஸ்துவின் அவயவங்களாயிருக்கிறபடியால் அவைகளை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். நாம் இப்பொழுது நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்கள் அல்ல கிருபைக்குக் கீழானவர்களாக இருக்கிறோம். இப்படியிருக்கும்போது பாவம் நம்மைமேற்கொள்ளாது. இன்று அநேகர் பாவத்தை ஜெயிக்க முடியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் தவறான

எண்ணங்கள் என்னுடைய நினைவில் வந்துகொண்டேயிருக்கிறது அதை என்னால் மேற்கொள்ளமுடியவில்லை என்று சொல்லுகிறார்கள்.

அன்பு நண்பரே, நீங்கள் இயேசுவின் மூலம் மீட்கப்பட்டவர்களாயிருந்தால் பாவத்திற்கு இடமில்லை. பாவம் உங்களை மேற்கொள்ளமுடியாது. உங்களுடைய அஸ்திபாரம் சரியில்லையென்றால் பாவம் உங்களை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது. போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுவின் மீது உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை துவக்குங்கள், மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாய்போய்விடும். ''ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது'' என்கிறார் (வெளி.2:7). இச்சையடக்கத்தோடு இருந்து போராடும் அனைவருக்கும் இக்கனியைக் கொடுப்பார். நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாக நிலைத்திருந்து போராடுங்கள்.

**கேள்வி**

**இச்சையோடு இருக்கிறவன் முடிவில் காப்பாற்றப்படுவானா?**

''உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்'' (1யோவா.2:17). ஆம், உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். ஏனென்றால் இவைகள் பிசாசினால் உண்டானவைகள். மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.

ஆகையால் அவைகள் அழிக்கப்படும். மாம்சத்தின் இச்சையை ஒருவன் விட்டுவிடாதிருப்பானேயானால் அவனும் அழிக்கப்படுவான். அவனோடு சேர்ந்தவர்களும் அழிக்கப்படுவார்கள். அதுவரை இந்த வானமும் பூமியும் காக்கப்பட்டிருக்கிறது. இந்த அழிவுக்கு தப்பிக்கொள்ள ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவனாக மாறுங்கள். அதற்கு நீங்கள் செய்யவேண்டியது தேவனுடைய வசனத்தை ஏற்று, அதன்படி உங்களை மாற்றியமைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்;**
**அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்;..."** பிரசங்கி 7:29



# 49. ஞானம் மற்றும் புத்தி
## Wisdom and Understanding

**ஒ**வ்வொரு மனிதனுக்கும் ஞானமும் புத்தியும் மிகவும் அவசியம். இவைகள் எங்களுக்கு வேண்டாம் என்று ஒருவன் சொல்வானேயாகில் அவன் மதிகெட்டவனாயிருப்பான். இவைகள் எங்கே கிடைக்கும்? அது விளைகிற இடம் எது? அதனுடைய வழியை யார் அறிவார்? என்ற கேள்விகள் நமக்குள் எழும்புகிறது அல்லவா, இதற்கான பதிலை நாம் வேதாகமத்தின் துணைகொண்டு அறியலாம். யோபு என்ற தேவனுடைய தாசன் தன்னுடைய பிரசங்க வாக்கியத்தில் சொல்கிறார்; **''ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே?''** (யோபு 28:12) என்று.

இன்றைக்கு மனிதன் எதை எதையோ கண்டுபிடிக்கிறான். அவைகளை ஆராய்ந்து கண்டுகொள்கிறான். ஆனால் ஞானத்தை எங்கே கண்டெடுக்கிறான். அது கடையில் விற்கப்படும் ஒரு பொருளா? அப்படி கடையில் விற்கப்படும் பொருளாயிருந்தால் அநேகர் வாங்கி பயனடைந்திருப்பார்கள். அதற்கு என்ன விலை என்பதும் மனுஷனுக்குத் தெரியாது. ''அதின்விலை மனுஷனுக்குத் தெரியாது; அது ஜீவனுள்ளோருடைய தேசத்திலே அகப்படுகிறதில்லை'' (யோபு28:13).

பின்பு எங்கே தான் இருக்கிறது என்ற கேள்வி எழும்புகிறது அல்லவா! தொடந்து தியானிப்போம். சாலொமோன் என்ற ராஜாவை தெரியாதவர்கள் இருக்க வாய்ப்பில்லை என்று எண்ணுகிறேன். அவன் தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாகும்போது; அவன் கர்த்தரை நோக்கி; ''நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன். நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமதுஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன். ஆகையால் உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மைதீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்; ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்'' (1இரா.3:7-9).

சாலொமோன் பொன்னையும், பொருட்களையும் கேட்காமல், ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டான். அவரிடமே அவைகள் இருக்கிறபடியால் பிதாவாகிய தேவனை நோக்கி கேட்டான். நீங்களாக இருந்திருந்தால் என்ன

கேட்டிருப்பீர்கள் என்பதை இங்கே யோசித்துப்பாருங்கள். பொதுவாக ராஜ சிம்மாசனத்தில் உட்கார்ந்தவுடன் கர்வம் வந்துவிடும். நாட்டைப்பிடிக்க வேண்டும். சுகபோகமாக வாழவேண்டும். தனக்கானவைகளை நாடவேண்டும் என்றும் நினைப்பார்கள். ஆனால் சாலொமோனோ ஞானமுள்ள இருதயத்தை கர்த்தரிடம் கேட்டான். அவனுடைய கோரிக்கையை கர்த்தர் நிறைவேற்றி அவனுக்கு ஞானமுள்ள இருதயத்தைக் கொடுத்தார். அவனைப்போல ஞானத்தைப்பெற்ற ஒருவனும் அவனுக்குப் பின்பு எழும்பினதில்லை.

அப்படிப்பட்ட ஞானத்தை அவனுக்குக் கர்த்தர் கொடுத்தார். அவனுடைய ஞானத்தை கண்டடைய அநேகர் அவனை நோக்கி வந்தார்கள். அவனுடைய ஞானத்தை பரிசோதித்து பார்த்து அவர்கள் கேள்விப்பட்ட ஞானத்தைக் காட்டிலும் அவனுக்கு அதிகமாக கர்த்தர் கொடுத்திருப்பதைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். அவனுடைய ராஜ்யபாரத்தை கர்த்தர் ஸ்திரப்படுத்தினார்.

**''புத்தி விளைகிற இடம் எது?''** என்று யோபு 28:12-ல் படிக்கிறோம். அதை அறிந்தவன் யார்? தங்கம் விளைகிற இடத்தை மனுஷன் கண்டு கொள்கிறான். வெள்ளியைக் கண்டுகொள்ளுகிறான். இன்னும் இப்படி எத்தனையோ காரியங்களை அடையாளம் கண்டுகொள்கிறான். ஆனால் புத்தி விளையக்கூடிய இடத்தை அவனால் கண்டுகொள்ளமுடியவில்லை. ஏனெனில்; யோபு சொல்கிறார்; ''அது ஒரு பட்சிக்கும் தெரியாது; வல்லூறின் கண்ணும் அதைக் கண்டதில்லை'' (யோபு28:7) என்று.

யாருடைய கண்களுக்கு வேண்டுமானாலும் தப்பிக் கொள்ளலாம் ஆனால் வல்லூறின் கண்களுக்குத் தப்பிக்கொள்ள முடியுமா? முடியாதே. வானத்தின் உயரத்திலிருந்து இறையை பார்த்து சடுதியில் இரங்கி கவ்விக்கொள்ளும். அதனுடைய கண்களும் அவைகளைப் பார்த்ததில்லை. அது விலையேறப்பெற்றது. அதை விலைகொடுத்து வாங்கும் அளவிற்கு அது விற்கப்படுவதுமில்லை. அதனுடைய விலையை சொல்லால் சொல்லவேண்டுமானால்; ''முத்துக்களைப் பார்க்கிலும அது விலையேறப்பெற்றது; நீ இச்சிக்கத்தக்கதொன்றும் அதற்கு நிகரல்ல'' (நீதி.3:15). இவ்வளவு விலையேறப்பெற்ற புத்தியை பெற்றுக்கொள்ள நாம் செய்யவேண்டுவதென்ன? சங்கீதக்காரன் சொல்கிறான்; ''உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்'' (சங்.119:104).



முதலாவது, எல்லா பொய்வழிகளையும் வெறுக்க வேண்டும். அப்பொழுது புத்தியை தேவனுடைய சமூகத்தில் பெற்றுக்கொள்வீர்கள். அது எப்படிமுடியும். என்னுடைய மூதாதையர் வழிகளை விட்டு விட்டு புதிய வழி செல்வதா, முன்பின் அறியாத ஒரு வழியில் நடப்பதா? என்ற கேள்வி எழும்பி உங்களை குழப்பத்திற்குள்ளாக்கிவிடும். மேலும் இவ்வளவு காலம் நான் வந்த வழி தவறான வழியா, ஐயோ, நான் என்ன செய்வேன்? என்னை யார் மெய்யான வழியில் வழிநடத்துவார்கள் என்ற ஏக்கம் உங்களுக்கு ஏற்படும். நீங்கள் கலங்கவேண்டிய அவசியம் இல்லை. உங்களை நேசிக்கும் பிதாவாகிய தேவன் ஒரே ஒரு வழியை மட்டுமே ஏற்படுத்தியுள்ளார். அது ஜீவனுக்குப் போகும் வழி.

அந்த வழியைக்குறித்து ஆண்டவர் இயேசு குறிப்பிடும்போது ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார்'' இந்த ஜீவவழியை கண்டுகொள்ளுங்கள். அப்பொழுது புத்தியடைவீர்கள். சிலர் வழி மாறிசென்றுவிட்டு பின்பு யோசிப்பார்கள். புத்தியில்லாமல் இந்த வழியில் வந்துவிட்டேன் என்று. அதைபோல உங்களுடைய வாழ்க்கையை வீணாக்கிவிடாதீர்கள். ஞானத்தையும் புத்தியையும் தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த இரண்டு வழிகளையும் கர்த்தர் அறிவார் என்கிறார் யோபு. ''தேவனோ அதின் வழியை அறிவார், அதின் ஸ்தானம் அவருக்கே தெரியும்'' (யோபு28:23). உங்களுக்கும் எனக்கும் சில காரியங்களை கர்த்தர் மறைத்து வைத்திருக்கிறார். அவைகளை நலமென்று நமக்கு மறைத்து வைத்திருக்கிறார்.

ஆகையால், ''மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தபட்டவைகளோ இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்'' (உபா.29:29). தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவு சமீபம். ஆனால் அவருடைய ஞானத்திற்கும் மனிதனுடைய அறிவுக்கும் வெகுதூரம். ''அவர் பூமியின் கடையாந்தரங்களைப் பார்த்து, வானங்களின் கீழ் இருக்கிறதையெல்லாம் காண்கிறார்'' என்கிறார் (யோபு28:24).

மேலும் சாலொமோன் குறிப்பிடும்போது; ''கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார்'' என்கிறார் (நீதி.3:19). இதைப்போல மனுஷனால் முடியுமா? அவரால் உண்டாக்கப்பட்ட பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். உருண்டையான

பந்துபோன்ற மேற்பரப்பில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஈக்களைப்போல வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அவர் இந்த பூமியை உலுக்கினால் என்ன ஆவோம் என்று நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை. அவருடைய கரத்தின் கீழாக அனைத்தும் செயல்படுகிறது. பொதுவாக நாம் என்ன சொல்கிறோம் ''முதியோரிடத்தில் ஞானமும் வயதுசென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே. அவரிடத்தில் ஞானமும் வல்லமையும் எத்தனை அதிகமாய் இருக்கும்? அவருக்குத்தான் ஆலோசனையும் புத்தியும் உண்டு. இதோ, அவர் இடித்தால் கட்ட முடியாது; அவர் மனுஷனை அடைத்தால் விடுவிக்கமுடியாது'' (யோபு12:12-14).

அன்பானவர்களே, நம்முடைய தேவனாகிய கர்த்தர் வல்லமையில் மகத்துவமானவர். அவர் ஒருவரே ஞானத்தில் சிறந்தவர். நாமெல்லாம் மண்ணாயிருக்கிறோம். மண்ணிலிருந்து எடுக்கப்பட்டோம் மண்ணுக்குத் திரும்புவோம். நாம் மண்ணாயிருக்கிறோம் என்பதை கர்த்தர் அறிகிறார். ஆகையால் நாம் ஞானத்தையும் புத்தியையும் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொள்ள அவரிடம் திரும்பும்போது ''கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்'' அவைகளை நாம் பெற்றுக்கொள்வோம் (நீதி.2:6).

கடைசியாக யோபு சொல்லும்போது; ''மனுஷனை நோக்கி: **இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்; பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்றார் என்று சொன்னான்''** (யோபு28:28). ஆம், அன்பான வாசகரே, முதலாவது ஆண்டவருக்குப் பயப்படும் பயம் உண்டாகவேண்டும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம் என்கிறார் சாலொமோன் ஞானி. உலகத்தில் நடக்கிறவைகளை கர்த்தர் பாரார், கர்த்தர் கவனியார் என்று சொல்லாதே! அநேகர் தங்களுக்கு வந்த கஷ்டங்களை நினைத்து கர்த்தரை தூஷிக்க ஆரம்பித்துவிடுகின்றனர்.

யோபு என்ற தாசன் அனைத்தையும் இழந்தபோதும் பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை என்று காண்கிறோம். காதை உண்டாக்கினவர் கேளாரோ, கண்ணை உண்டாக்கினவர் காணாரோ சிந்தித்துப்பார். ஆண்டவருக்குப் பயந்து பொல்லாப்பை விட்டு விலகு. உனக்கு வேண்டிய ஞானத்தையும், புத்தியையும் கர்த்தர் ஏற்ற வேளையில் கொடுத்து உன்னை ஆதரிப்பார். இஸ்ரவேலைக் காக்கிறவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை. கர்த்தர் சதாகாலங்களிலும் நம்மோடிருக்கிறவர். அவர் உங்களுக்கு வேண்டிய ஞானத்தையும் புத்தியையும் தந்தருளுவாராக!



**கேள்வி**

**ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும் புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் எப்படிப்பட்டவன்?**

உலகத்தில் பணக்காரர்களைப் பார்த்து ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்று உலகம் போற்றுகிறது. உண்மை அதுவல்ல. பணம் இருந்தால் எல்லாம் வந்துவிடும் என்பதல்ல. மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என வேதம் கேள்வி எழுப்புகிறது. ஜீவனுக்கு ஈடாக மனுஷன் என்னத்தைக்கொடுப்பான்? அதற்கு ஈடாக இயேசுவின் இரத்தத்தையல்லாமல் ஒன்றையும் கொடுக்க முடியாது.

மனுஷன் உலகத்தில் எதை வேண்டுமானாலும் சம்பாதித்துவிடலாம். ஆனால் ஞானத்தையும் புத்தியையும் சம்பாதிக்க ஆண்டவரிடம் செல்லவேண்டும். கர்த்தருக்குப் பயப்படும்போது இவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். அப்படியானால் கர்த்தரிடம் வராதவர்கள் எல்லாம் புத்திமான்கள் இல்லையா என்ற கேள்வி எழும்புகிறது.

ஆம், உலகத்தில் உள்ள அனைத்தையும் புத்தியாய் சம்பாதித்தார்கள் ஆனால் அவைகள் எல்லாம் மாயையான காரியங்கள். மறைந்தேபோகும். நிலையான கர்த்தரையும், அவருடைய அழியாத வசனங்களையும் அவர்கள் பற்றிக்கொள்ளவில்லையே, ஆனபடியால் அவர்கள் புத்திமான்கள் அல்ல என்றே சொல்ல வேண்டும்.

கர்த்தருடைய வசனம் சொல்கிறது; ''ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்'' என்று (நீதி.3:13). நீங்கள் ஞானத்தையும் புத்தியையும் கண்டடைந்து சம்பாதித்து விட்டீர்களா? நாம் செய்தியில் தியானித்தோம். அவைகளை கர்த்தர் ஒருவரே அறிகிறார். அவருடைய வாயினின்று அறிவும் புத்தியும் வரும். அவருக்குப் பயந்து நடக்கும்போது இவைகளைப் பெற்றுக்கொள்வோம். நீங்கள் பாக்கியவான்களாக மாற ஞானத்தையும் புத்தியையும் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"கிருபையினாலும் சத்தியத்தினாலும் பாவம் நிவர்த்தியாகும்;<br>கர்த்தருக்குப் பயப்படுகிறதினால் மனுஷர்<br>தீமையை விட்டு விலகுவார்கள்" நீதி. 16:6**

# 50. கிறிஸ்துவுக்குள் சுதந்தரம்

## Freedom In Christ

**சு**தந்தரம் மனுஷனுக்குக் கிடைக்கும்போது அவன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகின்றான். நாமும் கூட சுதந்தர நாட்டில் இருக்கிறோம். சுதந்தரமாக எங்கும் கடந்துசெல்கிறோம். நமக்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் சுதந்தரத்தின் வாயிலாக அனுபவிக்கிறோம். அதைப்போல பாவத்திலிருந்து நமக்கு விடுதலை வேண்டும். அப்பொழுதே மெய்யான ஆவிக்குரிய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வோம். இதை கொடுக்க வல்லவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய பவுல் எழுதும்போது; "தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம்" என்கிறார் (எபே.1:12).

ஒருவர் உயர்வான பதவிக்கு தெரிந்துகொள்ளப்படுகிறார் என்றால் அவருக்கு எத்தனை சந்தோஷம் இருக்கும். அதைப்போல அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டார்கள். நீங்களும் நானும்கூட கிறிஸ்து இயேசுவுக்குள் தெரிந்துகொள்ளப்படவேண்டும். அழைக்கப்பட்டவர்கள் அநேகர் ஆனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என வேதத்தில் வாசிக்கிறோம். அந்த சிலரில் ஒருவராக நீங்கள் இருக்கவேண்டும்.

மேலும் பவுல் கொலோசெயர் சபைக்கு எழுதும்போது; "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ.1:12-14). இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை பிதாவாகிய தேவன் மீட்டு தமது குமாரனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கச் செய்திருக்கிறார். இதுவே மெய்யான சுதந்தரமாக இருக்கிறது. இருளின் அதிகாரம் என்பது பாவத்தின் அதிகாரத்தை அதாவது பிசாசின் ஆதிக்கத்தை குறிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த மரணஇருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டோம்.



ஆகையால் "கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான்" (1கொரி.7:22). சுயாதீனனாய் அழைக்கப்பட்ட நீங்கள் மனுஷர்களுக்கு அடிமைகளாகாதிருங்கள். கர்த்தர் ஒருவருக்கே அடிமைகளாயிருங்கள். அவர் உங்களை ஆள இடம்கொடுங்கள். பாவம் ஒருக்காலும் உங்களை ஆள இடம்கொடாதிருங்கள்.

பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார். இந்த பரிசுத்த ஆவியானவரைப்பற்றி அநேகர் பேசக்கேள்விப்பட்டிருப்பீர்கள். பலர் பலவிதமாக பரிசுத்த ஆவியானவரைப் பற்றி சொல்லிவருகிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமம் அவரைப் பற்றி என்ன சொல்கிறது என்று பார்க்கலாம். "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (எபே.1:13,14).

நாம் என்றைக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்கிறோமோ அன்றே பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரையிடப்படுகிறோம். ராணுவத்திற்கு ஆள் சேர்க்கும்போது எல்லாவிதமான டெஸ்டும் முடிந்துவிட்டால் தகுதியான நபர் மார்பில் ஒரு முத்திரையிடுவார்கள். அது எதைக்குறிக்கிறது என்றால் இவர் இராணுவத்திற்கு தேர்ச்சிபெற்றவர் என்பதை குறிக்கும். அதைப்போல கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்படுகிறார்கள். மேலும், கர்த்தருடைய ஜனங்கள் மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் அச்சாரமாயிருக்கிறார் எனக் காண்கிறோம். "ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" என்று கலா.4:7-ல் வாசிக்கிறோம்.

பாவத்திற்கு அடிமைகளாக இருந்த நம்மை கர்த்தர் மீட்டு தம்முடைய புத்திரர்களாக மாற்றியிருக்கிறார். இது தேவனுடைய ஈவாக இருக்கிறது. நாம் தேவனுடைய புத்திரர்களாக இருப்போமானால் கிறிஸ்துமூலமாய் சுதந்தரர்களாகவும் இருக்கிறோம். இந்த சுதந்தரத்தை ஆண்டவர் இயேசுவின் மூலம் பெற்று இருக்கிறோம். ஆனபடியால், "ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்" (கலா.4;28). தேவன் ஆபிரகாமுக்கு வாக்கு பண்ணியபடி ஈசாக்கை கொடுத்தார். மேலும்,

கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணும்போது வானத்து நட்சத்திரங்களைப் போல உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன் என்றார்.

அந்த சந்ததி கிறிஸ்துவைக்குறிக்கும். கிறிஸ்துவுக்குள் இருக்கிற நாம் அந்த சந்ததிகளாகவும், சுதந்தரவாளிகளாகவும், தேவனுடைய புத்திரர்களாகவும் எண்ணப்படுகிறோம். இந்த மெய்யான சுதந்தரத்தை காத்துக்கொள்ளுங்கள். பாவத்திலிருந்து விடுதலையில்லாமல் அநேகர் அவதிப்படுகின்றனர். அவர்களை மீட்கவந்த ஆண்டவர் இயேசுவை அநேகர் கண்டுகொள்ளாமலிருக்கின்றனர். ஏற்றுக்கொள்ளுகிற ஜனங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிற சுதந்தரத்தை அநுபவித்துக்கொண்டு கர்த்தரை துதிக்கின்றனர்.

கிறிஸ்துவுக்குள் கிடைக்கப்பெற்ற இந்த சுதந்தரத்தைக்குறித்து மேலும் பவுல் எழுதும்போது; "தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்" (எபே.1:18,19) என்றான்.

ஏனெனில் இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் சிலருடைய கண்களை குருடாக்கி வைத்திருக்கிறான். ஆகையால் பவுல் இவ்விதமாக எழுதுகிறார். அநேகர் இந்த சுதந்தரத்தை அறியாதவர்களாகவும். கர்த்தர் எங்களுக்கு என்ன செய்தார் என்று சொல்லுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். கர்த்தர் நமக்குச் செய்த காரியங்களை எண்ணிப்பார்க்கும்படி நமக்கு அவர் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டும். ஒரு அடிமை விடுதலையாகும்போது அவனுக்கு எத்தனை மகிழ்ச்சியுண்டாகும். அதைப்போல பண்மடங்கு மகிழ்ச்சியை கர்த்தர் நமக்கு உண்டு பண்ணியிருக்கிறார். ஆகையால் கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்.

மூப்பர்களுக்கு பேதுரு ஆலோசனை சொல்லும்போது "சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" என்கிறார் (1பேது.5:3,4). சபையில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று



நினைத்து மூப்பர்கள் அந்த சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆண்டுவிடக்கூடாது என்பதற்கு மந்தைக்கு மாதிரிகளாக கண்காணிப்பு செய்யுங்கள் என்று எழுதுகிறார். இன்று உள்ள சபை மூப்பர்கள் இவ்விதமாக மந்தையை வழிநடத்துகிறார்களா? அப்படி வழிநடத்தும்போது பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது அவரிடம் வாடாத கிரீடத்தை அந்த மூப்பர்கள் பெற்றுக்கொள்வார்கள்.

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் ஏழு சபைகளுக்குச் சொல்லும்போது அதில் குறிப்பாக சிமிர்னா சபைக்கு சொல்லும்போது "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன் என்கிறார்" வாக்குதத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் அப்படியே செய்வார். ஆகையால் நாம் சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆண்டுவிடாதபடி எச்சரிக்கையாயிருப்போம். மந்தைக்கு மாதிரிகளாக கண்காணிப்பு செய்வோம்.

மேலும், பவுல் எழுதும்போது; "இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களை தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்" என்கிறார் (2கொரி.6:3). உக்கிராண உத்தியோகம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உக்கிராண விசாரிப்பை மிகுந்த ஜாக்கிரதையுடன் கையாளவேண்டும். குற்றப்படுத்தும் ஜனங்கள் மிகுந்து காணப்படுகிறார்கள். பிசாசு எப்படி எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறானோ அதைப்போல எந்த விஷயத்தில் இவனைக் குற்றப்படுத்தலாம் என சிலர் கண்காணித்து வருகிறார்கள். ஆகையால் பவுல் எழுதும்போது; நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல் எவ்விதத்தினாலேயும் எங்களை தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம் என்று சொல்லுகிறார்.

ஆகையால் தான் வேதம் சொல்கிறது ஊழியம் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும் நிலைத்திருக்கக்கடவன். இதை மாற்றி செய்யும்போது. அந்த ஊழியம் குற்றப்படுத்தப்படும். தேவன் அவனவனுக்கு கொடுத்த வேலையில் நிலைத்திருந்து கர்த்தருடைய ராஜ்யம் பரம்பி மகிமைப்பட பாடுபடவேண்டும். உங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த சுதந்தரத்தை சரியானபடி பயன்படுத்துங்கள். இந்த சுதந்தரத்தை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

**கேள்வி**

**பரலோகத்தில் நிலையான ஒரு சுதந்தரம் வைக்கப்பட்டிருக்கிறதா?**

ஆம், கிறிஸ்துவுக்குள் சுதந்தரத்தை பெற்றுக்கொண்ட

ஒவ்வொருவருக்கும் பரலோகத்தில் நிலையான சுதந்தரம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சுதந்தரத்தைக்குறித்து பேதுரு சொல்லும்போது; ''கடைசி காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது'' என்கிறார் (1பேது.1:5).

இந்த சுதந்தரத்தை கர்த்தர் அந்நாளிலே நமக்குத் தந்தருளுவார். இந்த சுதந்தரம் முடிவுபரியந்தம் நிலைத்திருக்கிறவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். பாதிவழியில் பக்தியற்று போகிறவர்கள் பாதாளத்தைதான் பெற்றுக்கொள்ளமுடியும் பரலோகத்தையல்ல. அநேகர் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் விசுவாசத்திற்கு சோதனை வந்தவுடன் சோர்ந்துபோய், விசுவாசத்தை மறுதலித்தும், அதைவிட்டுவிட்டும் போய்விடுகிறார்கள். சிலர் உலகக் கவலைகளினால் நெருக்கப்பட்டு வளர்ச்சியடைய முடியாமல் பின்வாங்கிப் போய்விடுகிறார்கள். நாம் நம்முடைய சுயபெலத்தினால் நிலைநிற்க முடியாது என்பதே உண்மை. தேவனுடைய பெலத்தோடு நிற்கவேண்டும். பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சொல்லப்பட்ட வசனத்தை இங்கே நினைவு கூர்ந்துபாருங்கள்.

பேதுரு எழுதும்போது; தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்கிறார். நீங்கள் கர்த்தருடைய மந்தையின் ஆடுகளாக இருந்தீர்கள் என்றால் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவீர்கள். இவ்வுலகத்திலே பாவத்தின் அடிமைதனத்திலிருந்து விடுவித்து, உங்களை சுதந்தரத்தை கொடுத்த கர்த்தர் பரலோகத்தில் வைத்திருக்கிற சுதந்தரத்தையும் கொடுப்பாராக!

## 51. மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?

## What Will A Man Give In Exchange For His Soul?

உலகத்திலே மனுஷன் பிறக்கிறான் பின்பு மரிக்கிறான். ஒரு ஜீவனை உருவாக்குகிறவர்கள் அந்த ஜீவனை இரட்சிக்க முடியவில்லை. ஏனெனில்; அது மனுஷனால் கூடாதது. அந்த ஜீவனை உண்டாக்கின தேவனுக்கு மட்டுமே அந்த அதிகாரம் இருக்கிறது. ஆகையால் மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? ஒரு பொருளை வாங்கும்போது



பணமோ, பொருளோ கொடுத்து வாங்குகிறோம். அதைப்போல தன் ஜீவனுக்காக என்னத்தைக் கொடுக்க முடியும், ஒன்றையும் கொடுக்க முடியாது. ஆனால் பரிசுத்த வேதாகமம் அதற்கான வழியை போதிக்கிறது.

**முதலாவது** ''தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?'' என்று மாற்.8:35-37ல் வாசிக்கிறோம். எவன் ஒருவன் தன் உயிரை காக்க நினைக்கிறானோ, அவன் தன் உயிரை இழந்துபோவான். இதுவரை உலகத்தில் அதிக நாட்கள் உயிரோடு இருக்க வேண்டும் என்று தன் உயிரை காக்க நினைத்த ஏராளமானோர் இதில் தோல்வியடைந்தார்கள்.

மனுஷனுடைய நாட்கள் மிகவும் குறுகினதாயிருக்கிறது. 969 வருடம் உயிரோடிருந்த மெத்துசலாவை குறித்து வேதாகமம் போதிக்கிறது. அவனே அதிக வருடம் உயிரோடிருந்தவன். அவனும் அதற்குப்பின்பு மரித்தான் என வேதத்தில் படிக்கிறோம். இந்த ஜீவன் அதாவது உயிரை காக்க நினைக்கிறவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்கள் அதை இழந்துபோவார்கள். ஆண்டவர் இயேசு கூறும் ஒரு உவமையிலே ஒரு ஐசுவரியவானைப் பற்றி படிக்கிறோம். அவன் தன் ஜீவனை காக்க; ''ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து,பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்'' (லூக்.12:19,20).

தனக்காகவே சேர்த்து வைத்தவனுடைய நிலைமையைப் பார்த்தீர்களா? நான் எதற்காக இவ்வளவு சேர்த்து வைக்கிறேன் என்று கடுகளவும் சிந்திக்காமல் தன் ஆத்துமாவை நேசித்து சேர்த்தான். ஆனால் அவனால் அவனுடைய ஆத்துமாவை தப்புவிக்க முடியவில்லை. அவனுடைய கனவு எல்லாம் மாயையாக போய்விட்டது. அதைப்போல சிலுவையில் தொங்கிய கள்வர்களில் ஒருவன் தங்களுடைய ஜீவனை இரட்சிக்க விரும்பி; ''நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்'' (லூக்.23:39). மற்ற கள்ளனுக்கு கிடைத்த பாக்கியம் இவனுக்குக்

கிடைக்கவில்லை. எவன் ஒருவன் தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறானோ அவன் அதை இழந்துபோவான். அப்படியானால் நம் ஜீவனை இரட்சிக்க நாம் என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் கேட்கலாம்.

அந்த வசனத்தின் பிற்பகுதியில் வாசிக்கிறோம். "என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்" என்றார். ஆண்டவர் நிமித்தமாக ஜீவனை இழக்கும்போது அதை திரும்பவும் பெற்றுக்கொள்வோம். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! ஆம், சுவிசேஷத்தினிமித்தமாக தங்களுடைய ஜீவனை இழந்தவர்கள் அதை அடைந்தார்கள். ஸ்தேவான் என்ற தேவமனுஷனை கல்லால் அடித்துக்கொன்று போட்டார்கள். அவனோ "அதோ, வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்" (அப்.7:56).

என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று ஆண்டவர் இயேசு சொன்ன வசனத்தை இங்கே நினைவுகூருங்கள். மேலும், ஆண்டவர் இயேசு சொல்வதை கவனியுங்கள்: "என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மாற்.10:29,30).

ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையை நம்பி தன் தேசத்தையும், இனத்தையும், தன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு விட்ட ஆபிரகாமை தேவன் கைவிட்டரா? கடல்கரை மணலத்தனையான பிள்ளைகளையும், தேசத்தையும் சுதந்தரித்துக்கொண்டான். அன்று ஆபிரகாமை ஆசீர்வதித்த கர்த்தர் இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக நம்மையும் ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். அவருடைய வார்த்தையின்படி ஆண்டவர் நிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் ஜீவனை இழக்கும்போது அதை இரட்சித்துக் கொள்வோம். ஏனெனில் நம்முடைய தேவன் மரித்தோரை உயிரோடு எழுப்புகிற தேவன். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். நீங்கள் சோர்ந்துபோகாமல் புதியஏற்பாட்டு கிறிஸ்தவர்களை நோக்கிப்பாருங்கள். அவர்களுடைய சரித்திரத்தை அப்போஸ்தல நடபடிகளில் படியுங்கள்.



இந்த ஜீவனுக்கு ஈடாக மனுஷன் என்னத்தைக் கொடுப்பான். பழைய ஏற்பாட்டில் ஜீவனுக்கு, ஜீவன் கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்று படிக்கிறோம். பழைய பிரமாணம் ஜீவனுக்கு ஈடாக அந்த ஜீவனை கொடுக்கவில்லை மாறாக அந்த ஜீவனை எடுத்தது. ஆகையால் அது நீக்கப்பட்டது. ஆனால் இயேசுவோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கும்படி வந்தேன் என்கிறார். "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்" (யோவா.10:10,11). இந்த வசனத்தின்படி இயேசுவானவர் தன் ஜீவனை கொடுத்து ஜீவன்களை இரட்சிக்கிறார்.

ஒரு மனுஷனுடைய ஜீவனை இரட்சிக்கும் ஈடாக இயேசுவின் இரத்தம் செலுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய நற்செயல்கள் மூலமாக அல்ல. நம்முடைய புண்ணித்தினாலும் அல்ல. பலர் தானதர்மங்கள் செய்தால் போதும், நம்முடைய பாவகருமங்கள் எல்லாம் மாறிவிடும், நம்முடைய ஆத்துமா காப்பாற்றப்படும் என்று நினைக்கின்றனர். நாம் நம்முடைய பாவங்களை கழுவமுடியாது. எந்தவிதமான தானதருமங்கள் நம்முடைய பாவத்தை கழுவாது. நாம் நம்முடைய அன்றாட அழுக்குகளை கழுவுவதுபோல பாவத்தை கழுவிவிடலாம் என நினைக்கின்றனர். உள்ளத்தின் பாவகறையை கழுவ இயேசுவின் இரத்தம் தேவை. அந்த இரத்தமே பரிசுத்த இரத்தம். ஆடு மாடு கோழி இவைகளின் இரத்தம் பாவங்களைக் கழுவாது.

அதன் மீது நம்பிக்கை வைக்கிறவர்கள் பிறகு ஏமாற்றம் அடைவார்கள். ஆடு மாடு கோழிகளை மனிதன் தன்னுடைய உணவுக்காக அன்றாடம் பயன்படுத்துகிறான். அந்த ஆடு, மாடு, கோழி எப்படி ஒரு மனுஷனுடைய ஜீவனை காப்பாற்றும்? சிந்திக்க வேண்டுகிறேன். மனுஷனுடைய போதனைகளை தள்ளிவிட்டு தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுங்கள்.

"கிருபையினாலே விசவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடி இது கிரியைகளினால் உண்டானதல்ல;" (எபே.2:7,8). ஒரு மனிதன் ஒரு காரியத்தை செய்துவிட்டால் பெருமை கொள்வான். அது அவனுடைய இயல்பாக இருக்கிறது. நாம் நம்முடைய ஜீவனை காப்பது நம்முடைய கிரியைகளினால் அல்ல. அது தேவனுடைய ஈவாக இருக்கிறது. பிதாவாகிய தேவன் நம்மை இரட்சிக்கும்படியாக; "ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை

அடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா.3:16).

நம்முடைய பிள்ளைகளுக்கு இவ்வசனத்தை மனப்பாட வசனமாக சொல்லிக்கொடுக்கிறோம். அனைத்து திருச்சபைகளிலும் இதை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கின்றார்கள். ஆம், தேவன் நம்மீது அன்பு கொண்டு தம்முடைய ஒரேபேறான குமாரனையே நமக்காக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அது அவருடைய தயவாக இருக்கிறது. இந்த ஜீவனை உங்களுக்காகவும் எனக்காகவும் ஒப்புக்கொடுத்த ஆண்டவர் இயேசுவுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம். ஆண்டவர் நாமத்திற்காகப் பாடுபடுவோம். அவருடைய சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுவோம். சுவிசேஷத்தை எடுத்துச்சொல்லும் திருச்சபையோடு சேர்ந்து ஒத்துழைப்போம். இதுவே நீங்கள் உங்கள் ஜீவனை ஆதாயப்படுத்திக்கொள்ள வழியாக அமையும்.

அவர் உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, மரித்தோரை எழுப்பும் கர்த்தர் மீது உங்களுடைய நம்பிக்கையை வையுங்கள். உங்களுடைய ஜீவனை இரட்சிக்க உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது உங்களுடைய ஜீவன் காக்கப்படும்.

**கேள்வி**

**தேவன் மனுஷனுக்குச் செய்த காரியங்கள் எத்தனை?**

இதை நாம் எண்ணிக்கையில் சொல்லிவிடவும் முடியாது. எழுத்தால் எழுதிவிடவும் முடியாது, சொல்லால் சொல்லிவிடவும் முடியாது. அத்தனை நன்மைகளை நமக்குச் செய்திருக்கிறார். ஆகையால் பவுல் எழுதும்போது; "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" என்றார் (2கொ.9:15). சொல்லிமுடியாத ஈவு எனக் காண்கிறோம்.

ஒரு மனுஷனுக்கு வியாதி வந்துவிட்டால், பல விதமான பிரச்சனைகள் இருப்பதாக டாக்டர்கள் சொல்லிவிடுகிறார்கள். அது உண்மையாகவே இருக்கிறது. சரீரத்தில் உள்ள ஒரு உறுப்பு செயல் இழந்துவிட்டால் அதை சரி செய்வது எவ்வளவு கடினமாகிவிடுகிறது. அப்பொழுதுதான் நாம் தேவனுடைய ஈவுகளை நினைக்கிறோம். மரணம் வரை இயங்கிக்கொண்டிருக்கும் இயந்திரத்தை மாம்சத்தில் உருவாக்கி யிருக்கிறார். இரும்பினால் செய்த இயந்திரங்கள் தேய்ந்துபோய் பழுதாகி



நின்றுவிடுகிறது. பிறந்ததுமுதல் அதன் வளர்ச்சிக்கு ஏற்ப மாம்சத்தில் வளர்சியடையக்கூடிய இயந்திரத்தை நம் இருதயத்தில் பதித்துள்ளார் எத்தனை ஆச்சரியமான காரியம்! தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்கு அவருக்கு ஸ்தோத்திரம்.

மேலும், "தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோம.8:32). தேவன் எவ்வளவு நல்லவர் என்று பார்த்தீர்களா! அவர் மனுஷனுக்கு செய்த காரியங்களை நினைத்தால் நாள்போவது தெரியாது. அவருடைய மகிமை அற்புதமானது. அதைக்குறித்து பேசுங்கள் அதைக்குறித்து தியானியுங்கள். எங்களோடு கடிதத்தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காகவும் உங்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.

## 52. சரீரம்
## Body

**நா**ம் இவ்வுலகத்தில் சரீரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இந்த சரீரத்தை பிதாவாகிய தேவன் ஆதியிலே மண்ணினாலே உருவாக்கினார். இந்த சரீரம் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டபடியால் மண்ணுக்கே திரும்பும். நாம் உயிரோடிருக்கும் நாட்களில் உண்டாக்கினவரை நினைக்கின்றோமா? இந்த சரீரம் கர்த்தருக்கு உரியது. ஏனெனில் தேவன் இந்த சரீரத்தை உருவாக்கியவர். இதை ஏற்றுக்கொள்ள பலர் மறுக்கக்கூடும். தேவன் மனிதனை உண்டாக்கவில்லை. குரங்கிலிருந்து வந்தான் என்றும், சிலர் ஒரு அமீபா மூலமாக வந்தான் என்றும் பலர் பலவிதமான கற்பனைகளைக் கொண்டு வர்ணிக்கின்றனர். ஆனால் மனிதன் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டான் என திருமறை தெளிவாக நமக்குப்போதிக்கிறது. இதை தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட அனைவரும் ஏற்று சந்தோஷமாக இவ்வுலகில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது; "வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்" என்கிறார் (1கொரி.6:13). நம்முடைய சரீரம் கர்த்தருக்குச் சொந்தமானது என்பதை நாம் அநேக நேரங்களில் மறந்துபோய்விடுகிறோம். நாம் நம்முடையவர்கள் அல்ல. கர்த்தருக்கு உரியவர்கள். ஆகையால் கர்த்தருக்கு

விரோதமாக நம்முடைய சரீரத்தை நாம் பயன்படுத்தக்கூடாது. சரீரம் வேசித்தனத்திற்கல்ல, தேவனை ஆராதிப்பதற்கும், தேவனுடைய கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் நிறைவேற்றுவதற்கு, இந்த சரீரத்தில் இருந்துகொண்டு நாம் கர்த்தருக்குப் பிரியமானதை செய்யவேண்டும். சரீரத்தில் இருக்கக்கூடிய நாட்களில் நாம் நல்ல பல காரியங்களைச் செய்ய நம்மை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். ஒரு காலத்தில் மிகவும் மோசமான சூழ்நிலையில் தள்ளப்பட்டு, பாவத்திற்கு அடிமைப்பட்டுக்கிடந்த இந்த சரீரத்தை தேவன் சம்பாதித்துக்கொண்டார். எப்படியெனில்; ''உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்'' என அப்.20:28-ல் படிக்கிறபடி இது தேவன் தம்முடைய சுயரத்தத்தை சிந்தி சம்பாதித்துக்கொண்ட சரீரம் என்று காண்கிறோம்.

மூதாதையார் சொல்லக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இரத்தம் சிந்தி நாங்கள் சம்பாதித்த சொத்து என்று சொல்வார்கள். அந்த அளவு கஷ்டப்பட்டு நெற்றிவியர்வை நிலத்தில் சிந்தபாடுப்பட்டு அதைப் பெற்று இருப்பார்கள். கர்த்தரும் பாவத்திற்கு அடிமைப்பட்டு கிடந்த நம்மை, விடுவிக்கும்படி மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தம்முடைய மரணத்தினாலே ஜெயித்து நம்மை விடுவித்தார். இப்பொழுது நாம் ''அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்'' (எபே.5:30).

நாம் அவருடைய சரீரத்திற்கும் எலும்புகளுக்கும் உரியவர்கள் என்றால் அது எவ்வளவு சந்தோஷத்தை நமக்குக் கொடுக்கிறது. தகப்பனைப்போல பிள்ளை என்றவுடன் அந்த தகப்பனுக்கு எத்தனை சந்தோஷம் ஏற்படுகிறது. நாமே கிறிஸ்துவின் சரீரமாக செயல்படவேண்டுமல்லவா, அநேகர் நம்மிலே கிறிஸ்துவைக் காண வேண்டும். ஆகையினாலே பவுல் சொல்லும்போது கிறிஸ்துவின் அச்சடையாளங்களைத் தரித்துக்கொண்டேன் என்று எழுதுகிறார். அவர் கிறிஸ்து இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் தன்மீது தரித்தவராயிருந்து ஜனங்கள் மத்தியில் உபதேசம் பண்ணினார்.

மேலும், ''நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள் கிறிஸ்து தேவனுடையவர்'' (1கொரி.3:23). நம்முடைய சரீரம் கிறிஸ்துவுக்கு சொந்தமானபடியால் நாம் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறோம். ஆகையினாலே முதன்முதலில் அந்தியோகியாவிலே ஒரு வருடமாக கூடிவந்த சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என பெயர் வழங்கப்பட்டது. ஆதி



முற்பிதாக்களுக்கு அவ்விதமான பெயர் இல்லை. இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டார்கள். யாக்கோபை இஸ்ரவேல் என்று கர்த்தர் அழைத்தார் அந்தப்படியாக அழைக்கப்பட்டார்கள். நாம் புதிய ஏற்பாட்டு, கிறிஸ்தவர்களானபடியால் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறோம். இதற்கு காரணம்; ''கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்'' (எபே.5:23).

சிலர் இயேசுவே இவ்வீட்டின் தலைவர் என்ற வாசகத்தை வைத்திருக்கிறார்கள். அது தவறு. கிறிஸ்துவானவர் ஒரு வீட்டின் தலைவர் அல்ல கிறிஸ்துவானவர் சபைக்குத் தலையாயிருக்கிறார் என்று தான் படிக்கிறோம். ஒவ்வொரு புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். ஆனால் இருவருடைய சரீரத்திற்கும் இரட்சகர் இயேசுவாக இருக்கிறார். சரீரம் கர்த்தருக்கு உரியது. ஆனபடியால் அதைக் காக்கிறவரும், போஷிக்கிறவரும் கர்த்தரே என அறிகிறோம்.

இந்த சரீரம் கர்த்தருக்கு உரியதைப்போல, பரிசுத்த ஆவியின் ஆலயமாகவும் இருக்கிறது. ''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?'' (1கொரி.6:19). பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கிறார் என்றால் அந்த இடம் எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும். பொய்யின் ஆவி நமக்குள் இருக்குமானால் ஆவியானவர் நமக்குள் தங்கியிருப்பாரா? ஆவியைப் பெற்று இருக்கிறோம், அனலாயிருக்கிறோம் என்று சொல்லுகிறவர்கள். தங்களுடைய பொய்யைக் களைந்து போடாமலிருக்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்கள் மத்தியில் பரிசுத்த ஆவியானவர் குடிகொள்ளுவதெப்படி? ''நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்'' (எபே.1;13). இப்படி அவரால் முத்திரை செய்யப்பட்ட நாம் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தலாமா? அப்படி துக்கப்படுத்தும்போது சவுலை விட்டு நீங்கின ஆவியானவர் உங்களையும் விட்டு நீங்குவார். ஆகையால் ''நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்'' (எபே.4:30).

பரிசுத்தமாக வாழும்போது பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசமாயிருப்பார். அவர் அவருடைய வசனங்கள் மூலமாக நம்மோடு இருக்கிறார். மேலும், ''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர் களென்றும்,

தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்'' (1 கொரி.3:16,17). சரீரத்தை தவறான இடத்திற்கு ஒருவன் கொண்டு செல்கிறான் என்றால் அவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுக்கிறான் என்று பொருள். அவனை தேவன் கெடுப்பார் அல்லது கேடான சிந்தைக்கு அவனை ஒப்புக்கொடுப்பார். அப்படிப்பட்டவனைவிட்டு கர்த்தர் விலகிவிடுவார். ஏனெனில் தேவனுடைய ஆலயம் பரிசுத்தமானது. உலக மக்கள் ஆலயத்தை எவ்விதமாக பராமரித்து வருகிறார்கள். உன்னதமானவர் தங்கும் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயம் எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும்?

அழிந்துபோகிற இந்த சரீரத்தை கர்த்தர் வல்லமையுள்ள, மகிமையுள்ள சரீரமாக முடிவிலே மாற்றுவார். இதுகுறித்து 1கொரி.6:14-ல் படிக்கிறோம். தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார். இயேசுவைக் கொலைசெய்து போட்டவர்கள் இத்தோடு அவருடைய கதை முடிந்துவிட்டது என்று எண்ணினர். ஆனால் பிதாவாகிய தேவன் அவரை மரித்தோரிலிருந்து மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினார். அது சரித்திர உண்மையாக வரலாற்றில் பொறிக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. அதனாலே கி.மு என்றும் கி.பி என்றும் வந்தது. இயேசு சொல்கிறார்; ''நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'' என்றார் (யோவா.11:25).

மரித்து நான்கு நாட்கள் ஆன லாசருவை கல்லறையிலிருந்து உயிருள்ளவனாக எழுப்பினார். அங்கே கூடியிருந்த எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். அது முதல் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். நீங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறீர்களா? அப்படி உங்களுக்கு விசுவாசம் இருக்கும்போது கர்த்தரால் நிச்சயமாக எழுப்பப்படுவீர்கள். இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் இந்த நம்பிக்கையை இழந்தவர்களாக இருக்கிறார்கள். எப்படியென்றால், மரித்தவர்களுக்காக அநேகர் துக்கிக்கிறவர்களாயிருக்கிறார்கள். இயேசுவானவர் தம்முடைய மகிமையிலே வரும்போது முதலாவது அவர்கள் உயிர்த்தெழுந்திருப்பார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்குள்ளே எழும்புவதில்லை. ''ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு'' (1கொரி.15:44).

ஜென்மசரீரம் நாம் உயிரோடு இருக்கிற சரீரம். மரித்தவுடன் ஒரு விதையை மண்ணிலே போட்டு மூடிவிடுவதைப்போல மூடிவிடுகிறோம். அது விதைக்கப்படுகிறது, பின்பு நடப்பது என்ன இயேசுவின் வருகையின்போது



ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். அப்பொழுது நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இந்த சரீரம் அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இந்த சரீரம் சாவாமையையும் தரித்துக்கொள்ளும். மரணம் ஜெயமாக விழுங்கப்படும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**கேள்வி**

**இந்த சரீரத்தை தேவன் வாங்கியுள்ளார் ஆனபடியால் நாம் செய்யவேண்டுவதென்ன?**

''கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்'' (1கொரி.6:20). சரீரமும் ஆவியும் தேவனுக்கு உடையவைகள் என்று படிக்கிறோம். ஆகையால் இந்த சரீரத்தில் நாம் தேவனை மகிமைப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். சபைகளில் யாராவது பாட்டு பாடட்டும் என்று நாம் அமைதலோடு இருந்தால் நாம் தேவனை மகிமைப்படுத்தவில்லை என்று பொருள்படும். ஆராதனையில் ஐந்து பகுதியிலும் நம்முடைய உடன்பாடு இருக்கவேண்டும். மகிமைப்படுத்துவது என்றால் நம் மூலமாக தேவனுடைய மகத்துவங்கள் வெளிப்படவேண்டும்.

தேவாலயத்திலே பிச்சை கேட்டுக்கொண்டிருந்த சப்பாணியை யோவானும் பேதுருவும் சந்தித்து எங்களிடத்தில் ஒன்றுமில்லை நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் எழுந்து நட என்று சொல்லி அவனைத் தூக்கிவிட்டார்கள். நடந்தது என்ன, அவன் குதித்தெழுந்து நடந்து அவர்களோடு தேவாலயத்தில் பிரவேசித்து கர்த்தரை துதித்தான். அவன் அப்படியே வீட்டிற்குப் போய்விடவில்லை. அவர்களோடு தேவாலயத்திற்குச் சென்று கர்த்தரை துதித்தான்.

நமக்கு தேவன் எவ்வளவோ நன்மைகளை வழங்கியிருக்கிறார். அதற்கு சாட்சியுள்ள மக்களாக இந்த சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். சரீரம் தேவனுடைய கரத்தின் கிரியையாக இருக்கிறது. அதை தமது சித்தத்தின்படி நேர்த்தியாக அமைத்திருக்கிறார். அதினால் நாம் பல காரியங்களைச் செய்கிறோம். சிந்திக்கிறோம், பாடுகிறோம், மற்றவர்களுக்கு உதவி செய்கிறோம். இன்னும் இதுபோல் எத்தனை எத்தனையோ! ஒரு காரியத்தை நாம் மறந்துபோய்விடக்கூடாது. சரீரத்தில் இருக்கும்மட்டுமே நாம் நலமான காரியங்களைச் செய்ய முடியும். ஏனெனில் மரித்தோரும் மவுனத்தில் இறங்குகிறவர்களும் கர்த்தரை துதியார்கள் எனக் காண்கிறோம். உயிரோடிருக்கிற நாளெல்லாம் கர்த்தருக்குச் சாட்சியுள்ள மக்களாக வாழுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.